ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 ஜூன் 1938 கதிர் 11

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
உலகத்திலே என்ன நடக்கிறது ?	(கார்ட்டூன்கள்)	13
இந்திய வும் தற்கால ஜன சங்கியையும்	சி. முத்துவீரப்பன் B.A, LL.B.,	16
ஞானக்களஞ்சியம்	—	22
இபன் அஹமத் அல்லது காதலும் சமயப் பற்றும்	ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யா	25
ஜோசப மாஜினி	ச. முனிஸ்வாமி பிள்ளை	35
பர்மிய ஜாதியினர்	கு. கோ. கிருஷ்ணன் B. Sc (Hons.)	38
ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர்	ரா. வேங்கடராமன் B. A.,	44
ஆஸ்திரியா எப்படி விழுங்கப்பட்டது ?	"அரசியல் மாணாக்கன்"	46
ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா	டாக்டர் ஹ. பெய்தான்	49
நேபாள தேசம்	"ஒரு யாத்திரிகன்"	54
ஒப்படி—ஒரு சிறு கதை	"தேசிகன்"	57
ஜெக்கோ-ஸ்லோவேகியாவில் ஜெர்மானியர்கள்	எமிலி சோபோடா	62

ஜெக்கோ-ஸ்லோவேகியா படை யெடுக்கப் பட்டால்—?	பி. டி. ஜே.	64
ரஹிமதுல்லா முகம்மத் ஸயானி	"ஒரு காங்கிரஸ் வாதி"	67
கடல்	வித்வான் எஸ். உமைதாணுப் பிள்ளை	70
பத்திரிகா லட்சணம்	ஆ. திருச்சிற்றம்பலம்	71
துலாக்கோல்	(புஸ்தக விமரிசனம்)	72
இருப்பதுதான் யாது?	(கபீர்தாஸ்)	74
மின்சாரம் என்ருல் என்ன?	"விஞ்ஞான போதகர்"	75
நமது நிருபர்களுடன்—	—	85
கல்வி கற்பிப்பதன் லட்சியமென்ன?	ரவீந்திரநாத் டாகூர்	87
லெனினும் காந்தியும்	"சரித்திரக்காரன்"	90
ஓய்வு கொள்வதா?	வ. பார்த்தசாரதி	95
சமாதான தேவதையின் உலக யாத்திரை	வி. எம். ராமதாஸ்	98
நன்ருகச் சாகிருர்கள்!	இ. எச்.	104
நட்புக்காகப் பன்னிரண்டரை லட்சம் ஏகராக்கள்	தி. வேங்கடாசலம்	107
எதற்கெடுத்தாலும் சத்தியாக்கிரகமா?	"மும்முனித் தோன்றல்"	109
உபதேசம்—ஒரு சிறு கதை	"புதுமைப்பித்தன்"	112
அன்ருட உலகம்	—	115
நாணய மாற்று விகிதம்	ரா. பத்மநாப ராஜு	121

ஒரு பர்மிய நடன மாது.

ஜோதி

சுடர் 1 ஜூன் 1938 கதிர் 11

யார்?

வெற்றியோ, தோல்வியோ, அதைப் பற்றி நாம் எப்பொழுதுமே கவலைப்படுவதில்லை. போராட்டந்தான் நமக்குப் பெரிது! அதிலேதான் மனிதனுடைய சக்திகளெல்லாம் விகாசமடைகின்றன வென்பது நமது நம்பிக்கை; இந்த மனப்பான்மையோடுதான் இன்று நமது எழுதுகோலை எடுக்கிறோம்.

சரித்திரத்திலே இடம் பெறுகிறவர்களை மூன்று பகுதியினராகப் பிரிக்க நாம் விரும்புகிறோம். சரித்திர நாயகர், சரித்திர புருஷர், சரித்திரத்திலே வருவோர் என்பதுவே இந்தப் பிரிவினை. இவரில் சரித்திர நாயகர் யார்?

எவனொருவனுடைய இதயம் இறந்த காலத்திலும், உடலம் நிகழ் காலத்திலும், ஆத்மா எதிர் காலத்திலும் பரவி நிற்கிறதோ அவன்தான் சரித்திர நாயகன். இறந்த காலத்திற்கு நாம் எவ்வளவு தூரம் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, நிகழ் காலத்தோடு தன்னை ஒன்று படுத்திக் கொண்டு, எதிர் காலத்தில் தன்னுடைய பொறுப்புக்கள் என்ன வென்பதை அறிந்து நடப்பதுதான் இந்தச் சரித்திர நாயகனுடைய லட்சணம்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று சக்திகளும் இவனிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. சில சமயங்களில் இவன் சிருஷ்டி கர்த்தனாகப் பொது ஜனங்களுக்குத் தோன்றலாம். பிறிதொரு சமயத்தில் இவனே சம்ஹார மூர்த்தியாகவும் தாண்டவம் செய்யலாம். ஒரே மனிதனிடத்தில் முரண்பட்ட இந்த இரண்டு சக்திகள் மாறி மாறித் தோன்றுவது, அவனை எட்ட நின்று பார்ப்பவர்களுக்கு விபரீதமாகப் படும். ஆனால் இவன் சிருஷ்டிக்கவே சம்ஹரிக்கிறான். அப்படிச் சிருஷ்டிக்கப் பட்டதை அழியாமல் காப்பதுதான் இவன் லட்சியம்.

தவிர, இந்தச் சரித்திர நாயகன், ஒரு நாட்டுக்கென்றோ, ஒரு மதத்திற்கென்றோ, ஒரு காலத்திற்கென்றோ ஒன்றைப் படைப்பதுமில்லை; அதனை வைத்துக் காப்பதுமில்லை. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இவனுடைய விசாலமான இதயத்திலே இடமுண்டு. அவர்களுடைய

நல்வாழ்வுக்காக இவன் தன்னையே அவர்களுக்கு ஒப்புக் கொடுத்துவிடுகிறான். மலை போன்ற துன்பங்கள் வரினும், அவற்றைத் துரும்புபோல் ஒதுக்கித் தள்ளிவிட்டு, கால பேதத்தினாலோ இட பேதத்தினாலோ கீழே குப்புற விழுந்து கிடக்கிற மக்களைக் கை தூக்கிவிடுகிறான். இது விஷயத்தில் இவன் ஓய்வே கொள்வது கிடையாது.

இந்தச் சரித்திர நாயகன், எந்த நாட்டிலே, எந்த மதத்திலே பிறந்தானோ, அந்த நாட்டையும், அந்த மதத்தையும் தனது யுத்த க்ஷேத்திரமாக வைத்துக் கொள்ளலாம். இவனுடைய போர் முறைகளும், அந்த மண்ணைப் பொறுத்ததாய் அமையலாம். ஆனால் இவனுடைய லட்சியமெல்லாம் பிரபஞ்ச சாம்ராஜ்யத்தைக் காண்பதுதான். அகில ஜனங்களும், தான் தோண்டுகிற அமிர்த ஊற்றிலே பானம் செய்ய வேண்டுமென்பதே இவனது பேரவா. நல்ல ஜலம் வேண்டுமானால் மண்ணைப் பறிக்க வேண்டுவது அவசியமில்லையா? மண் பறித்தால், பூமிக்கு நோகுமே யென்று தண்ணீர் குடிக்காமலிருந்துவிடுவதா? கோடிக் கணக்கான மக்களின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் வர்ஷிக்கச் செய்வதற்காக ஒரு சிலர் துக்கக்கண்ணீர் விட்டால் அதை இவன் பொருட் படுத்தவே மாட்டான்.

தவிர, இந்தச் சரித்திர நாயகன் நிரந்தரமான ஒரு நன்மைக்காக, நித்திய சரித்திரத்திலே உழன்று கொண்டிருப்பான். தற்காலிக நன்மைக்காகத் தன் லட்சியத்தை விட்டுக் கொடுத்துவிட மாட்டான். சிறைவாசத்தை இறையோடுவாசமென இவன் ஏற்றுக் கொள்வான். தூக்கு மேடையிலே இவனை ஏற்றி நிறுத்திய காலத்திலும், 'ஐயோ, மக்களின் துன்ப நிவாரணத்திற்கு வழி யென்ன?' என்று இவன் அறிவு கேட்டுக் கொண்டிருக்கும்; உலகத்தைச் சுற்றிச் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டிருக்கும் இவனுடைய ஆத்மா.

மதப் போராட்டங்களிலே ஈடுபட்ட மகான்களிடத்தில் பக்தியும் தியாகமும் இருப்பதைக் காண்கிறோம். சமர்க்களத்திலே, அமரரை விரட்டியடித்த சேனாதிபதிகளிடத்தில் வீரம் முன்னணியில் வந்து நிற்கின்றது. உலகத்தை யெல்லாம் கட்டி யாளவேண்டு மென்ற ஆசை கொண்ட அரசர்களிடத்தில் 'போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சிய தகலமும், வலியும், தெறலும், அளியும்' சூழ்ந்து கிடப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இந்தத் தன்மைகளை யெல்லாம் ஒருங்கே பெற்று, கலங்கரை விளக்கம் போல் சத்திய சிகரத்தில் நின்று, உலக திருஷ்டியிலே காரியங்களைச் செய்கிற ஒரு சிலர்தான் சரித்திர நாயகர்கள்.

பல்லாயிரம் வருஷ வயதுடைய உலக சரித்திரத்தில் எத்தனையோ பேர் வந்து போயிருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலோர் இவர்களுடைய ஜீவிய காலத்திலேயே மறக்கப்பட்டு விடுகிறார்கள். இவர்களைச் 'சரித்திரத்தில் வருவோர்' என்ற பிரிவினையில் ஒதுக்க விரும்புகிறோம். உதாரணமாக ஐந்து வருஷத்திற்கொரு முறை இந்தியாவுக்குக் கவர்னர்—ஜெனரல்களாக வருகிறவர்கள் இந்த வர்க்கத்தில் சேர்க்கப் படவேண்டியவர்கள் தானே.

சரித்திர புருஷர்கள் யார்? பிரபஞ்ச இதிகாசத்தில் எத்த

ளையோ சரித்திர புருஷர்கள் தோன்றி, அவர்கள் வசித்த நிகழ் காலத்தில் மட்டும் தங்கள் முத்திரையை யிட்டு விட்டுச் சென்றார்கள். இவர்கள் பிற்காலத்தில், கற்சிலைகளிலேயும், பூமியில் புதைந்து போன பொருள்களிலேயும் காணப்படுகிறார்கள். பாபிலோனிய ஏகாதிபத்தியத்தின் நெபு சட் நெஸ்ஸார் இருந்தான்; ரோமாபுரியின் ஜூலியஸ் சீஸர் ஐரோப்பாவையே ஒரு கலக்கு கலக்கி விட்டான்; கிரீஸ் தேசத்து மஹா அலெக்ஸாந்தருடைய படைகளின் அடிச்சுவடுகளைக்கண்டு ஆசியா கண்டமெல்லாம் பயந்த காலம் ஒன்றுண்டு. நந்த வமிசத்தைக் கருவறுத்து, பாரத நாடு முழுவதையும் தன் ஒரு குடைக்கீழ் அகப்படுத்தி ஆண்டான் சந்திரகுப்தமௌரியன். இவர்களெல்லோரும் இப்பொழுது எங்கே? மண்ணிலே புதைந்து கிடக்கிறார்கள்; பழைய ஏடுகளிலே செல்லரிக்கப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

ஆனால் சரித்திர நாயகர்களோ—இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தோன்றியவர்கள் கூட—இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இவர்கள் அநேக நூற்றாண்டுகளுக்கு ஒருவராகத்தான் தோன்றுவார்கள். கீதை யருளிய கண்ணன் இன்னும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்க வில்லையா? புத்தர் பிரான், இயேசுநாதர், முகம்மது நபி இவர்களெல்லாரும் சரித்திர நாயகர்கள். இவர்களின் வாழ்க்கை, உலக மக்களின் வாழ்க்கையோடு இணைந்து விட்டது. இவர்களுடைய திருநாமங்களைக் கேட்ட மாத்திரத்தில் எத்தனையோ சிரங்கள் வணங்குகின்றன. எத்தனையோ கைகள் குவிகின்றன. இவர்களையே நாம் சரித்திர நாயகர்களென்று கூறுகிறோம்.

அப்படியானால் இந்த இருபதாவது நூற்றாண்டிலே சரித்திர நாயகர்களாகப் போற்றப்படவேண்டியவர்கள் யார்? இதுதான் நாம் இங்கே எடுத்துக் கொண்ட விஷயம். நாம் காந்தியையும் லெனினையும் சரித்திர நாயகர்கள் என்று கூறுகிறோம். ஒருவர் இருந்து வாழ்கிறார். இன்னொருவர் இறந்து வாழ்கிறார். இரண்டு பேருடைய லட்சியமும் பிரபஞ்ச சாம்ராஜ்யத்தைக் காண்பது தான். தங்களுடைய லட்சியத்தின் பரிசோதனை ஸ்தலமாக இருவரும் முறையே இந்தியாவையும் ருஷ்யாவையும் வைத்துக்கொண்டார்களே தவிர, இந்தப் பரிசோதனையின் பயனை மனித சமூகம் நுகர வேண்டுமென்பதுவே இவர்கள் நோக்கம்.

ஒரு சில நூற்றாண்டுகளாக மனித சமூகம் கண்டு வந்த கனவுகளை, இந்த இரண்டு மகான்களும் நனவு உலகத்திற்குக் கொண்டுவந்து நடை முறையில் காட்டினார்கள். இந்த இரண்டு பேருடைய வாழ்க்கைகளையும் நாம் சிறிது பரிசீலனை செய்து பார்த்தோமானால், முதலில் நாம் கூறிய சரித்திர நாயகருக்குரிய லட்சணங்கள் எல்லாம் இவர்களிடத்தில் பிரகாசிப்பதைக்காணலாம். அஹிம்சைத் தத்துவமும், பொது வுடமைத் தத்துவமும் முறையே டால்ஸ்டாயிடமிருந்தும் மார்க்ஸிடமிருந்தும் தோன்றியவையாக இருக்கலாம். இவ்விருவருக்கும் நாம் உரிய மதிப்பைக் கொடுக்க விரும்புகிறோம். இந்தத் தத்துவங்களின் பூர்வோத்திரத்தை நாம் இங்கே பரிசீலனை செய்து பார்க்க விரும்ப வில்லை. ஆனால் இந்த இரண்டு தத்துவங்களையும் நூல்களிலே வைத்

து போற்றாமல், அநுஷ்டானத்திலே கொண்டு வந்து, இவைகளினால்தான் மானிட சமூகம் உஜ்ஜீவிக்க முடியும் என்பதை நிர்த்தாரணம் செய்து காட்டிய பெருமை காந்தியினுடையதும் லெனினுடையது மல்லவா?

இந்த இரண்டு பேரிடத்திலும் தன்னம்பிக்கை நிறைய இருந்திருக்கிறது. தங்கள் தங்கள் நாட்டின் மூலமாகவே உலகத்தைக் காப்பாற்ற முடியும் என்ற திடநம்பிக்கை தான், இந்த சிருஷ்டி செய்திருக்கிறார்கள். வணங்காமுடி ஏகாதிபத்தியங்கள் இரண்டு, இவர்கள் எதிரே தலைவணங்கி நின்றன. இருவருடைய பார்வையும் ஜனங்களுடைய ஆத்மாவைப் பரிசோதனை செய்வது போல் பிரகாசித்தன. ஆனால் இருவருடைய முகத்திலும் அழகில்லை. இருவருடைய பேச்சிலும் ஆவேசமில்லை; சொல்லடுக்குகள் இல்லை. ஆனால் உணர்ச்சி இருக்கிறது; பேச்சைக்கேட்டு ஜனங்கள்

காந்தியைப்பற்றி ஜவஹர்

உடலிலே வலிமை இல்லை; ஆனால் எஃகு போன்ற உறுதி. எப்படிப்பட்ட பௌதிக சக்திகளுக்கு முன்னாலும் தலை வணங்காத பாறை போன்ற மனோதிடம். பிறரை வசீகரிக்கக் கூடிய உருவமும் இல்லை. இடுப்பிலே ஒற்றை வேஷ்டி. திறந்த தேகம். ஆனால் எல்லோரையும் அன்புடன் வணங்குமாறு தூண்டும் ஒரு ராஜகளை முகத்திலே. மனப்பூர்வமாக, வேண்டுமென்றே அவர் அடக்க ஒடுக்கமாக இருக்கிறார். ஆனால் அவரிடத்தில் அதிகார மிடுக்கு நிரம்பியிருக்கிறது. இஃது அவருக்கு நன்றாகத் தெரியும். சில சமயங்களில், கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டும் என்கிறமாதிரி நமக்கு உத்திரவு போடுவார். அவருடைய ஆழ்ந்த அமைதியான கண்கள் நம்மை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்து மெதுவாக நம் இதயத்தில் என்ன இருக்கிறதென்று ஊடுருவிப் பார்க்கும். தெளிவான அவருடைய பேச்சு நம் இதயத்திலுள்ள ஜீவ நாடியைத் தட்டிக் கொடுக்கும். அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர் ஒருவரா யிருக்கலாம்; ஆயிரக்கணக்கான பேராயிருக்கலாம். ஆனால் அவருடைய வசீகர சக்தி, கேட்டுக்கொண்டிருக்கப்பட்ட அத்தனை பேருடைய இதயத்திலும் புகுந்து, அவருடன் நேரான சம்பந்தத்தை ஏற்படுத்தும். அவர்தான் காந்தி.

இரண்டு பேரையும் ஒரு மகத்தான பரிசோதனையில் இறங்கும்படி செய்தது. ஹா! ஹா! இவர்கள் இந்தப் பரிசோதனையில் இறங்குவதற்கு முன்னர், தங்களை எவ்வளவு தூரம் பக்குவப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைமுறை 'அக்கினிப் பிரவேசம்' செய்திருக்கிறார்கள்?

இரண்டு பேரும் சம்ஹார கர்த்தர்களாகத் தான் தங்கள் பரிசோதனைகளைத் தொடங்கினார்கள். பின்னர் தங்களைப் பரிசோதனை செய்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள்; தங்கள் நிலையை உணர்கிறார்கள்; இவர்களுடைய வாக்கை வேத வாக்கெனப் பின்பற்ற வேண்டுமென்று உறுதியும் கொள்கிறார்கள்.

காந்தியும் லெனினும் இருபதாவது நூற்றாண்டின் துவார பாலகர்கள் போல் நம் கண் முன்னே காட்சியளிக்கிறார்கள்; இனி ஏற்படப்போகிற நவயுகத்திற்கு மூல புருஷர்களாய்

நிற்கிறார்கள். இருவரிடத்திலும் எவ்வளவு தன்னடக்கம்! தங்களைச் சாதாரண குடியானவர்கள் என்று சொல்லிக் கொள்வதிலே எவ்வளவு பெருமை! ஏழை ஜனங்களுடைய வாழ்க்கையிலே இவர்கள் தங்களை ஐக்கியப் படுத்திக் கொண்டு விட்டார்கள்.

ஆனால் இருவரும், தங்கள் லட்சியத்தை யடையக் கையாண்ட முறைகள் வேறு வேறு. ஏன்? ஒன்றுக்கொன்று முரண் பட்டவை கூட. பிரபஞ்ச சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமானால் பலாத்காரத்தை (தற்காலிகமாக)க் கையாள வேண்டியது அவசியம் என்று லெனின் கருதினார். ஆனால் காந்தியோ, அஹிம்சா தர்மத்தின் மூலமாகத்தான் அந்தச் சாம்ராஜ்யத்தைக் காண முடியுமென்ற உறுதியான நம்பிக்கை கொண்டு அந்த வழியே செல்கிறார். யந்திரங்கள் மூலமாகத்தான் மனித சமூகத்தை விடுதலை செய்ய முடியும் என்பது லெனின் முடிபு. யந்திரங்கள் மனிதனை அடிமைப் படுத்துகின்றன என்பது காந்தியின் துணிபு.

இங்ஙனம் இருவருக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் இரண்டு பேருடைய வாழ்க்கைகளையும் பொருத்திப் பார்த்தால், அடிப்படையான நீரோட்டம் ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். இதனாலேயே இரண்டு பேரையும் சரித்திர நாயகர்கள் என்று நாம் அழைக்கிறோம். இவர்கள் இருந்தாலும் இறந்தாலும் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டுதானிருப்பார்கள். ஏனென்றால் இருவரும் சரித்திரத்தை உண்டு பண்ணியவர்களல்லவா?

லெனினைப் பற்றி ஜேம்ஸ் மாக்ஸ்டன்

யுத்த களத்திலே பிரமாதமாகப் போர் புரிந்து பெரிய வீரன் என்று புகழ் பெற்றவனுமல்ல. கத்தியோ, துப்பாக்கியோ அவன் கையில் வைத்துக் கொண்டது கிடையாது. வாசாலகமாகப் பேசியும், அரசியல் சூழ்ச்சிகள் செய்தும், அவன் பார்லிமெண்டிலோ, மற்ற ஸ்தாபனத்திலோ பெயரெடுத்தவனு மல்ல. மனிதர்களுடைய இருதயத்தைத் தாக்கக்கூடியமாதிரி திறமையாக எழுதக்கூடிய ஒரு நூலாசிரியனு மல்ல. சாமர்த்தியமாக வாதிக்கக்கூடிய ஒரு வக்கீல் என்று கூட அவன் பெயரெடுக்கவில்லை. அவன் ஒரு சாதாரண மனிதன். ஆனால் பதினைந்து கோடி ஜனங்களின் தேவையைப் பூர்த்தி செய்யத் தோன்றியவன். அவன்தான் லெனின்.

ஸ்ரீ சாம்பமூர்த்தி

ஒரு பெரிய போராட்டம் நடைபெறுகிறபோது, சில முணுமுணுப்புகளும், சில சலசலப்புகளும் ஏற்படுவது

சகஜந்தான். இதற்காகப் போர் வீரர்கள் ஊக்கங் குன்ற மாட்டார்கள்; அவர்கள் முன்னேறிச் செல்வதும் நின்று விடாது. இதைப் போல, நாம் சுயராஜ்யப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டு, அரசாங்க நிருவாகத்தை நடத்துகின்றனர் என்று சொன்னால், அது, யுத்தத்திலே வெற்றி பெற்று விட்டு அதன் பலனை அநுபவிக்கிறார்கள் என்பதாகாது. அப்படிச் சொல்வதும் தவறு. பதவியேற்றுக் கொண்டது, போராட்டத்தின் ஒரு பகுதி. ஆகையால் இந்தப் போராட்டத்திற்கு எதிரியாயமைந்திருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கை என்கிற பகிரங்க சத்துருவோடு எதிர்த்து நிற்பது ஒரு புறமிருக்க, உட் பகைகள் பலவற்றையும் சமாளித்துக் கொண்டு போக வேண்டுவதும் அவசியமாயிருக்கிறது. ஒரு சிலர் காங்கிரஸ் கட்சியிலேயே இருந்து கொண்டு, அதற்கு விரோதமாகக் காரியங்களைச் செய்கிறார்கள். இவர்களைக் கட்சியின் ஒழுங்கு முறைப்படி விலக்கி விட்டால் பெரிய கூக்குரல் ஏற்படுகிறது. இதைப்பற்றி யாருமே கவலைப்பட வேண்டுவதில்லை. இன்னுஞ் சிலர், போராட்டத்தின் போது தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை ஏற்று நடத்தி வருகையில், திடீரென்று சலிப்பு ஏற்பட்டோ, அல்லது பொறுப்புக்களினால் ஏற்படுகிற கட்டுப் பாட்டினின்று விலகிக் கொள்ள வேண்டுமென்று கருதியோ, யுத்த களத்திலிருந்தே ஒதுங்கி விட விரும்புகின்றனர். இது ஒரு போர் வீரனுக்குரிய லட்சணமல்ல.

சென்னை அசெம்ப்ளி தலைவர் ஸ்ரீ சாம்பமூர்த்தியினிடத்தில் நமக்கு நிரம்ப மதிப்பு உண்டு. இவருடைய தியாகம், சலியாத உழைப்பு, தன் மதிப்புணர்ச்சி முதலியன, ஆந்திர தேச மக்களிடத்திலே ஒரு புத்துயிரை அளித்திருக்கின்றன. ஆனால், சமீபத்தில் இவர் தமது அசெம்ப்ளி தலைவர் பதவியை ராஜீநாமா செய்ய விரும்பியதும், பிறகு காங்கிரஸ் காரியக் கமிட்டியாருடைய விருப்பத்திற்கிணங்க அதனை வாபீஸ் பெற்றுக் கொண்டதும், இதைப் பற்றிப் பத்திரிகைகளில் பிரமாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டதும், காங்கிரஸ் கட்சியின் கட்டுப் பாட்டில் எங்கேனும் ஆட்டம் கொடுத்திருக்கிறதோ என்ற சந்தேகத்தைப் பொது ஜனங்களிடத்திலே உண்டாக்கி விட்டன. இந்த மாதிரியான சந்தேகங்களும் ஊகங்களும் பொது ஜனங்கள் மத்தியிலே தோன்றுவதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் கொஞ்சங் கூட இடங் கொடுக்கக் கூடாது. பொது ஜனங்களுக்குக் காங்கிரஸினிடத்தில் அபார மதிப்பும், அதன் தலைவர்களிடத்தில் குன்றாத நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, காங்கிரஸ் கட்சிக்குள் கொஞ்சம் புரசல் ஏற்பட்டால் கூட, அது பொதுஜன அபிப்பிராயத்தின் இருதய நாடியை நன்றாக அசைத்துக் கொடுத்து விடுகிறது.

யுத்த சமயத்தில் இன்னின்னார் இன்னின்ன வேலையைச் செய்ய வேண்டுமென்று திட்டப்படுத்தப் படுகின்றனர். அவரவருடைய மனப்பான்மைக்குத் தக்கபடி இந்த வேலையில்லாமலிருக்கலாம். அதற்காக அந்த யுத்த வீரன் முணகிக் கொண்டிருக்கக் கூடாது. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் கூட இதை நாம் நிதரிசனமாகப் பார்க்க வில்லையா? பெரிய படிப்பாளி; ஆனால் சாதா

ரனை போர் வீரனைத் தான் உழைத்தான். அவனுக்கு மேலதிகாரியாக வாய்த்த தளபதியோ, எழுத்தறிவிக்கப்பட வேண்டியவனுயிருந்தான்; ஆனால் யுத்த தந்திரம் நன்கு தெரிந்தவன். இதற்காக ஒருவரை யொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால், யுத்தம் நடை பெறுவதுதான் எப்படி?

ஒரு போர் வீரனுக்கு இன்று, காவல் செய்யும் வேலை கொடுக்கப்படலாம்; நாளை மூட்டை தூக்கும் பணி ஒப்படைக்கப் படலாம். தனக்கிட்ட தொண்டைச் செய்யத்தான் அவனுக்கு உரிமையுண்டே தவிர, தன் அறிவுக்கோ, திறமைக்கோ இது சரியான வேலையில்லை யென்று சொல்ல உரிமையில்லை. ஏன்? போர் வீரனுக்குத் தன் கடமையைச் செய்யத்தான் உரிமையுண்டு; வேறு உரிமை யே கிடையாது. சாகக் கூட அவனுக்கு உரிமையில்லை. மார்பிலே குண்டு பட்டோ, துப்பாக்கி முனை பட்டோ அவன் சாகலாமே தவிர, வேறுவிதமாக அவன் சாக முடியாது. இந்தக் கண்டிப்பு, இந்த ஒழுங்கு இல்லாவிட்டால் யுத்தமே நடைபெறாது. இப்படிக் கண்டிப்பா யிருப்பது உரிமைப் பறிமுதலு மாகாது.

ஸ்ரீ சாம்ப மூர்த்தி ராஜீநாமா செய்ய விரும்பியதற்கு என்னென்னவோ காரணங்கள் கூறப் பட்டன. இவற்றில் அநேகம், பத்திரிகை நிருபர்களுடைய ' சரடு ' களாயிருக்கலாம். ஆனால், ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் இவர் ராஜீநாமா செய்ததைப் பாராட்டி ஒரு சிலர் பேசுகையில், அஸெம்ப்ளி தலைவர் பதவியில் அதிகமான வேலை யில்லையென்றும், வருஷத்தில் அநேக மாத காலம் சும்மா யிருக்கவேண்டி யிருக்கிறதென்றும், தவிர பொது வேலைகளில் ஈடுபட முடியாமல் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டி யிருக்கிறதென்றும், இவையெல்லாம் அவருக்குப் பிடித்தமில்லை யென்றும் கூறினார்கள். இந்தக் காரணங்கள் நமது மனதில் பதியவே யில்லை. ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கூடாரத்தை ஒரு போர் வீரன் காவல் செய்யுமாறு உத்திர விடப் படுகிறான். இதற்கு முன்னர் அவன் எதிர்தரப்புச் சைன்னியங்களோடு சதா போராடிக் கொண்டு வந்தவனாயிருக்கலாம். ஓய்வென்பதைக் காணாதவனாக இருக்கலாம். அதற்காக? காவலனாக இருக்கமுடியாதென்று சொல்ல அவனுக் கென்ன உரிமையிருக்கிறது? இட்ட பணியைச் செய்து, அதற்கு மேல் என்ன உத்திரவு என்று எதிர் பார்க்க வேண்டியவன் தான், அவன். இந்த நிலையில் ஸ்ரீ சாம்ப மூர்த்தி தம்மை வைத்துப்பார்க்குமாறு விரும்புகிறோம். எப்படியும், அவர் தமது ராஜீநாமாவை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டது பாராட்டத் தக்கது. இனி இத்தகைய சம்பவங்கள் ஏற்படக் கூடாதென்பது தான் நமது விருப்பம்.

ஸ்ரீ ஷரீப்

'காங்கிரஸ் சேனாதிபதிகள்' விருப்பத்திற்கிணங்க, மத்திய மாகாண மந்திரிகளுள் ஒருவரான ஸ்ரீ ஷரீப் தமது பதவியை உடனே ராஜீநாமா செய்து விட்டதற்காக அவரைப் பாராட்டுகிறோம். இவரால் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்குள்ள பெருமை அதிகமாகிறது.

ஒரு கவளமும் ஒரு சாணும்

உலகத்திலே அமெரிக்காதான்

அதிக நாகரிகமுடைய தென்றும், இங்குள்ள ஜனங்கள் அதிகமான உடைகளை உபயோகிக்கிறார்களென்றும் சொல்லப்படுவதுண்டு. இஃது உண்மையா இல்லையா வென்பதைப் பற்றி நாம் ஆராய விரும்பவில்லை. ஆனால் ஹ்யூபர்மான் என்ற ஒருவர், அமெரிக்காவிலுள்ள உடைகளைக் கணக்குப் போட்டுப் பார்த்து, சராசரி ஒவ்வொரு மனிதனுக்கும் 'அரை சூட்' வருகிற தென்றும், 'ஓவர்கோட்' ஆறு பேருக்கு ஒன்றாக வருகிற தென்றும் கூறுகிறார். நாகரிகமுள்ள—பூரண சுதந்திரம் பெற்றுள்ள—அமெரிக்காவிலேயே ஆளுக்குப் பாதி உடைதான்! இந்தியாவில்? சொல்ல வேண்டுமோ? உண்ண ஒரு கவள அன்னமும், உடுக்க ஒரு சாண் கந்தலும் கிடைக்காமல் ஏங்கி மரிக்கிறவர் எத்தனை பேர் இந்தியாவில்?

ஏகாதிபத்திய நாள்.

மே மாதம் இருபத்து நான்காந் தேதி பிரிட்டிஷ் கொடி பறக்கிற இடங்களில் 'ஏகாதிபத்திய தினம்' கொண்டாடப் பட்டது. ஆனால் ஏகாதிபத்தியத்தில் வசிக்கிற எல்லா ஜனங்களும் இதனை எவ்வளவு மனப்பூர்வமாகக் கொண்டாடினார்கள் என்பது நமக்குத் தெரியாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அன்று விடுமுறை கிடைத்தது. 1819ம் வருஷம் மே மாதம் 24ந் தேதி விக்டோரியா மகாராணி பிறந்த தினம். அந்த தினத்தைத்தான் ஏகாதிபத்திய தினமென்று 1902ம் வருஷத்திலிருந்து கொண்டாடப் பட்டு வருகிறது. தற்போதைய பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் ஒரு காரியத்தைச் செய்தால் நன்றாயிருக்கும். அதாவது இந்த ஏகாதிபத்திய தினம் 35 வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டபோது, பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கட்டுப்பாடு, ஒழுங்கு, உலக வல்லரசுகளின் மத்தியில் அதற்கு இருந்த செல்வாக்கு முதலியன வெல்லாம் இப்பொழுது எப்படி இருக்கிறதென்று ஒரு முறை 'ஸ்டாக்' எடுத்து உலகத்திற்கு வெளியிட்டால் எவ்வளவு விஷயங்கள் வெளியாகும்!

என்ன பரிகாசம்!

'நமது பாஷையின் மூலமாகக் கல்வி கற்பிப்பதை விட்டு, நம்மவரோடு ஒப்பிடக் கூடியமாதிரி எந்த விஷயத்தைப் பற்றியும் எவ்விதமான புஸ்தகமுமே யில்லாத பாஷைகளிலே (இந்தியாவில்) பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதா? ஐரோப்பிய பதார்த்த விஞ்ஞான சாஸ்திரத்தைப் போதிக்காமல், நம்மோடு மாறுபடுகிற சாஸ்திரங்களைப் போதிப்பதா? நல்ல தத்துவங்களையும் உண்மையான சரித்திரங்களையும் நாம் போதிக்காமல், பொதுஜனப் பணத்தைக் கொண்டு குதிரைக்கு லாடம் அடிப்பதோடு அதற்கு வைத்தியமும் செய்கிற ஆங்கிலேயன் கூட வெட்கப்படக் கூடிய வைத்திய சாஸ்திரத்தைப் போதிப்பதா? இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறு பெண்கள் நகைக்கக் கூடிய வான சாஸ்திரத்தையும், முப்பதடி உயரமுள்ள அரசர்களைப் பற்றியும், முப்பதினாயிரம் வருஷம் ஆண்ட அரசர்களைப் பற்றியும் கூறும் சரித்திரத்தையும், விஷ சமுத்திரத்தைப் பற்றியும் வெண்ணெய் சமுத்திரத்தைப் பற்றியும் கூறும் பூகோள சாஸ்திரத்தையும் சொல்லிக்கொடுப்பதா?'

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி முறைக்கு அடிகோலிய மஹானுபாவன் லார்ட் மெக்காலே, இப்படி, நமது புராதன கிரந்தங்களைப் பற்றிப் பரிகசித்திருக்கிறான். நமது நாட்டு ஆங்கிலம் பயின்ற இந்திய மேதாவிகளுக்கு இவன்தான் தீட்சா குரு. இதற்கு மேல் வியாக்கியானஞ் செய்து கொண்டுபோக நமது அறிவு, நமது எழுது கோலைத் தகைந்து நிற்கிறது.

உபதேசம்

வால்டேர் என்ற பிரெஞ்சு அறிஞன், அவன் காலத்தில் ஏற்படவிருந்த ஒரு யுத்தத்திற்கு முன்னர், யுத்தவெறி பிடித்திருந்த ஒருவரைக் கேட்டான், 'யுத்தம் முடிந்த பிறகு நீங்கள் சமாதானம் செய்து கொள்ள மாட்டீர்களா?' என்று. அதற்கு 'ஆம்' என்று பதில் வந்தது. 'அப்படியானால் அந்தச் சமாதானத்தை இப்பொழுதே செய்து கொள்வது தானே' என்றான் வால்டேர். இதே உபதேசத்தை, ஐரோப்பிய வல்லரசுகளுக்கு நாம் திருப்பிச் சொல்ல விரும்புகிறோம். இப்பொழுது ஐரோப்பாவிலே செய்யப்பட்டு வருகிற யுத்த முஸ்தீப்புகள், எந்தச் சமயத்திலும் உலக யுத்தமாகத் திரும்பலாம். சர்வாதிகாரிகள், தங்களுடைய ஆயுதங்களைப் பெருக்கிக்கொள்வதோடு இப்பொழுது திருப்தியடையவில்லை. பிறருக்குத் தங்கள் பலத்தைக் காட்டவும் விரும்புகின்றனர். இந்த மார்தட்டிப் பேசுகிற தோரணையைக் கண்டு பயந்து ஜனநாயக அரசாங்கங்கள் தங்களுடைய ஆயுத பலத்தைப் பெருக்கி வருகின்றன. எல்லாரும் சேர்ந்து சர்வதேச சங்கத்திற்குப் போய், சமாதானக் கண்ணீர்விட்டு, அதில் தங்கள் பரஸ்பர அவநம்பிக்கையையும், ஆயுதப்பெருக்கத்தையும் மறைத்துக் கொள்ளப் பார்க்கின்றனர். இவர்கள், வால்டேரின் உபதேசத்தைச் சிறிது செவிசாய்த்துக் கேட்க மாட்டார்களா?

காங்கிரஸில்

ஐரோப்பியக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சிலர் இப்பொழுது காங்கிரஸில் நான்கு அணா அங்கத்தினர்களாகச் சேர்ந்து வருகிறார்கள். இன்னுஞ்சில ஐரோப்பியர், காங்கிரஸின் சார்பாக ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தலில் கலந்து வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். இவர்களுடைய மனப்பான்மை உண்மையிலேயே மாறியிருக்கிறதென்று நாம் நம்புகிறோம். அப்படியானால் இவர்களை நாம் பாராட்டவும் செய்கிறோம். ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்கும் மதப் பிரசாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அப்படிப்பட்ட மதப் பிரசாரகர்களே, ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்துப் போராடுகிற காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள் என்றால், அஃது ஆச்சரியப்படத்தக்க விஷயம் மட்டுமல்ல; பாராட்டத்தக்க விஷயமுங்கூட. உலகத்திலே தோன்றிய எந்த மதமும் சுதந்திரத்திற்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடக் கூறியதில்லை. மதத்தின் லட்சியமே விடுதலைதான். இந்த விடுதலைக்குத்தான் காங்கிரஸ் போராடிக் கொண்டுவருகிறது. இந்தப் போராட்டங்கூட உலக நன்மைக்குத்தான். ஏனென்றால், இந்தியாவின் விடுதலை உலக விடுதலையல்லவா? ஆகவே, ஐரோப்பியக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேர்வது, சமய சேவையே. எல்லாப் பாதிரிமார்களும் காங்கிரஸில் சேர்ந்து

இந்தியாவின் விடுதலைக்கு உழைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பிளவா?

இந்தியாவில் சில மாதங்களுக்கு முன் சுற்றுப்பிரயாணஞ் செய்து திரும்பிய லார்ட் சாமியல், லண்டனிலுள்ள கிழக்கிந்திய சங்கத்தின் முன்னிலையில் 9-5-38ல் பேசுகிறபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:—

> காங்கிரஸுக்குள், மிதவாதிகளுக்கும் தீவிர வாதிகளுக்கும் ஒரு பிளவு ஏற்படுமென்று சிறந்த அரசியல் நிபுணர்கள் எதிர்பார்த்தார்கள். இதனால் கட்சிகளின் பலம் சம நிலையில் இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால் இந்தப் பிளவு, தங்கள் கட்சிக்குப் பலஹீனம் என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்து நடந்து கொண்டார்கள்.

இதனையும், "ஜோதி" யின் மார்ச் மாத இதழில் 'நமது நியாய சபை' யில் குறிப்பிடப்பெற்ற கீழ்க்கண்ட வாசகங்களையும் நேயர்கள் ஒப்பு நோக்கிப்பார்க்க வேண்டுகிறோம்:—

> 1. ஹரிபுராவில், காங்கிரஸின் பழைய நம்பர்களாகிய காந்தி, பட்டேல் முதலியவர்களுக்கும் அபேதவாதிகளுக்கும் பெரிய ரகளை நடக்குமென்று;
>
> ஃ ஃ ஃ
>
> 2. பீஹார்—ஐக்கிய மாகாண மந்திரி சபைகள் ராஜீநாமா செய்துவிட வேண்டுமா, வேண்டாமாவென்பதைப் பற்றி அபிப்பிராய வேற்றுமை ஏற்பட்டு, காங்கிரஸ் இரண்டு கட்சிகளாகப்பிரிந்து விடுமென்று * * * (ஏகாதிபத்திய தாசர்கள் எதிர்பார்த்தார்கள்.)
>
> ஃ ஃ ஃ

ஆனால் ஹரிபுராவில் இந்த ஏகாதிபத்திய உபாசகர்களுடைய எண்ணத்திற்கு மாறாகவே எல்லாம் நடைபெற்றன. 'பழைய பசலி'களுக்கும் 'புதிய வருஷங்க'ளுக்கும் எவ்வித தகராறும் உண்டாகவில்லை. ஒன்றிலே மற்றொன்று—தற்காலிகமாகவாவது—ஐக்கியமாகி விட்டது.

ஐக்கியமா?

ஜெர்மனியோடு மற்றொரு நாடும் வெகு சீக்கிரத்தில் ஐக்கியமாகி விடுமென்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அடுத்தது ஜெக்கோ-ஸ்லோவேகியா என்பது இவர்களுடைய ஹேஷ்யம். ஏற்கனவே, இரண்டு நாடுகளுக்குமிடையே யுள்ள எல்லைப் புறத்தில் படைகள் திரட்டப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டுப் படை மற்றொரு நாட்டு எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக இரு நாடுகளும் பரஸ்பரம் குறைகூறிக் கொள்ள ஆரம்பித்து விட்டன. அபிசீனிய யுத்தத்திற்கு, வால் வால் எல்லைப் புறச் சம்பவம் எப்படி ஒரு காரணமாகக் கூறப்பட்டதோ அப்படித் தான் இந்த எல்லைப்புறச் சம்பவங்கள், ஒரு யுத்தத்திற்கு முன்னதாகக் கூறப்படுவது வழக்கம். உலகத்திலே நாடுகளும், அந்த நாடுகளைப் பரிபாலிக்கிற அரசாங்கங்களும் இருக்கிறவரை இந்த எல்லைப்புறச் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். சாதாரண காலங்களில்—அதாவது ஒரு நாடும் மற்றொரு நாடும் சிநேகப் பான்மையுடன் இருக்கிற காலங்களில்—இந்தச் சம்பவங்கள் பிரமாத

மாகக் கருதப்பட மாட்டா. ஆனால் 'வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம்; கால் பட்டால் குற்றம்' என்கிற மனப் பான்மை ஏற்பட்டு விடுகிற போழ்து, எந்த ஒரு சிறிய பொறியும் காலாக் கினியாக மாறலா மல்லவா? ஏற்கனவே, ஜெர்மன் பத்திரிகைகள், இந்த எல்லைப் புறச் சம்பவங்களைப்பற்றி யுத்த தோரணையில் எழுத ஆரம்பித்து விட்டன. ஜெக்கோ—ஸ்லோவேகியாவும், ஜெர்மனியின் பயமுறுத்தலுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் இணங்கி விடாதென்று கருத வேண்டியிருக்கிறது. ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் பிரதம மந்திரி, ஹோட்ஸா ஓரிடத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—

> நம்மை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய போராட்டத்திற்காக, நாம் எப்பொழுதும் நிரந்தரமான ஒரு தயாரிப்பிலேயே இருக்க வேண்டும். எந்த நிலைமை ஏற்பட்டாலும், நமதுநாட்டை நாம் காப்பாற்றுவோம். நாம் நிலைத்து வாழ்வதற்கும், நமது கொடியைக் காப்பதற்கும் போராடுவது நமது பரம்பரைத் தருமம். நமது நாட்டில் ஒருமனிதன் உயிர் வாழ்ந்திருக்கிறவரையில் நாம் போராடியே தீர்வோம்.

ஹோட்ஸாவை நாம், இந்தத் தைரியப் பேச்சுக்காகப் பாராட்டவே செய்கிறோம். ஆனால் இவருடைய நாட்டுக்கு எதிரிடையான சக்திகள் மிகவும் பலங் கொண்டல்லவோ நிற்கின்றன? வல்லரசுகள் என்று சொல்லிக் கொள்பவைகள் என்ன செய்யப் போகின்றனவோ பார்ப்போம். ஜூன் மாதம் பன்னிரண்டாந் தேதிக்குப் பிறகு ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் எதிர் கால வாழ்வு இப்படித்தான் இருக்குமென்று ஒருவாறு கூற முடியும். ஏனென்றால் அன்றுதான் ஜெக்கோ—ஸ்லோவேகியாவில் நகர சபைத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஸ்பெயின் யுத்தத்திற்குக் கூட, 1931ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12ந் தேதிநடைபெற்ற இந்த நகர சபைத் தேர்தல்கள் தான் மூல காரணமாயிருந்தன வென்பதை அன்பர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

காந்தீயம்

சர்தார் பிருத்வி சிங் என்பவர் பலாத்காரத்தினால்தான் இந்தியா விமோசனம் பெற முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தவர் ஒரு காலத்தில். அந்தமான் சிறைக் கூடத்தையும் கண்டவர். 1922ம் வருஷம் ராஜ மஹேந்திரபுரம் சிறையிலிருந்து தப்பியோடி விட்டார். அது முதல் சென்ற மாதம் வரை, போலீஸாருக்கு அகப்படாமல் தலை மறைவாகத் தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். கடைசியில் காந்தியடிகளிடத்தில் தாமே வலிய வந்து சரணாகதி அடைந்து விட்டார். ஆனால் காந்தியடிகள், இவரைப் போலீஸாரிடத்தில் சரண் புகுமாறு கூறி, இவருடைய விடுதலைக்காகத் தாம் உழைப்பதாக உறுதி கூறினார். சர்தார் பிருத்வி சிங், தமக்கு இனிப் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லையென்றும், அஹிம்சா தர்மத்தின் மூலமாகவே இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கமுடியுமென்றும் பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறார். தம்மைப்போன்று, பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டிருந்த பல இளைஞர்கள் இப்பொழுது மனம் மாறியிருக்கின்றனர் என்று இந்த சர்தார் பிருத்வி சிங் கூறியிருப்பது, காந்தீயத்தின் சிறப்பை அதிகப்

படுத்துகிறது. உலக மனைத்தும் காந்தியத்தைப் பின்பற்றும்நாள் எந்நாள்?

மத்திய மாகாணத்தில்.

மத்திய மாகாணத்திலுள்ள சில மந்திரிகள், பிரதம மந்திரியுடன் அபிப்பிராய வேற்றுமை கொண்டு ராஜீநாமா செய்யத் துணிந்து பின்னர் சமரசம் ஏற்பட்டு விட்டதைக் குறித்து நாம் மகிழ்கிறோம். மத்திய மாகாணத்தின் சாபக்கேடு போல் நீண்ட நாட்களாக இருந்துவருகிற ஹிந்துஸ்தானி—மஹாராஷ்டிரப் பிரச்னையே, இந்த அசந்தர்ப்பத்திற்குக் காரணம் என்று அறிய நாம் ஆச்சரியப் படுகிறோம். போர் வீரர்கள் பரஸ்பரம் முன்பின் அறியாதவர்களா யிருக்கலாம். ஒருவர்க் கொருவர் மீது பகைமை கூட இருக்கலாம். ஆனால் யுத்த களத்தில் எல்லாரும் போர் வீரர்களல்லவா! தங்களுக் கேற்பட்ட பொறுப்பை நிறைவேற்ற வேண்டுவது இவர்கள் கடமை யல்லவா? இதை மத்திய மாகாண மந்திரிகள் உணர்ந்து கொண்டது பாராட்டத் தக்கது.

ஸ்பெயினில் ஜவஹர்

பண்டித ஜவஹர்லால் நேரு ஐரோப்பா கண்டத்திலே தங்குகிறபோது, ஸ்பெயினைச் சுற்றிப் பார்ப்பா ரென்று தெரிகிறது. ஸ்பெயினில் இவருக்கு உற்சாகமான வரவேற்பு காத்துக் கொண் டிருக்கிற தென்று, குடியரசு அரசாங்கத்தின் சார்பாக சென்னர் அல்வாரெஸ் டி வாயோ உறுதி கூறுகிறார். ஸ்பெயின் யுத்தம், அடுத்த உலக யுத்தத்தின் ஒரு சிறு பொறி என்று பண்டித ஜவஹர், பெய்ஸ்பூர் காங்கிரஸ் தலைமை யுரையில் குறிப்பிட்டார். ஜவஹரின் ஸ்பெயின் பிரயாணத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எவ்வித ஆட்சேபமும் இரா தென்றே நம்புகிறோம்.

மதம் என்ன கற்பிக்கிறது?

சகோதரர்களே! சகோதரிகளே! மதம் நமக்கு அன்பைக் கற்பிக்கிறது. சுதந்திரமே அதன் சாரம். மதமானது, மனிதனை உயரத்தூக்கி விடுகிறது. அவனை, மேலே சொன்ன சுதந்திர லட்சியத்துக்குக் கொண்டு விடுகிறது. அப்படி யிருக்க, மதங் காரணமாக ஏன் ஒருவரை யொருவர் பகைத்துக் கொள்ள வேண்டும்? நமது நாடு சுதந்திரமடையும் பொருட்டு, நாம் அஞ்சாமையுடன் தோளோடு தோள் சேர்ந்து ஒன்ருக முன் செல்வோம். இந்தச் சுதந்திர லட்சியத்திற்காக எவனொருவன் சாகிருனே அவன்தான் உண்மையில் வாழ்ந்தவனுகிருன். ஹிந்துக்களும் முஸ்லீம்களுமாகிய நாம், இந்த நாட்டை நமது தாய் நாடாகக் கொண் டிருக்கிறோம். சத்தியம், நாணயம், நம்பிக்கை இவற்றைத் துணையாகக்கொண்டு பிறருடைய ஆசைத்தூண்டுதல்களுக்கு உட்படாமல், சுதந்திர பாதையில் செல்வோம்.

—மகாத்மா காந்தி

உலகத்திலே என்ன நடக்கிறது?

ஹிட்லரும் முஸோலினியும் ஒரு காலத்தில் இப்படிக் கூடச் சந்திப்பார்களோ?

எதியோப்பியாவின் இத்தாலிய ஆக்ரமிப்பை ஏறக்குறைய எல்லா வல்லரசுகளும் அங்கீகரித்துக் கொண்டு விட்டன. ஆனால் எதியோப்பியாவில் மேலே காணப்படுகிற நிலைமைதான். எதியோப்பியர்களும் இத்தாலியர்களும் இந்தநிலைமையில் தான் வாழ்கிறார்கள்!



ஹிட்லர்: ஜெர்மனி, ஆயுத பலத்தின் துணை கொண்டு தனது மானத்தையும் வாழ்வையும் காப்பாற்றிக் கொள்ள எப்பொழுதும் தயார்.

பிரிட்டிஷ் ராஜதந்திரி: எங்களுடைய நேசக் கட்சியாரின் மானத்தைக் காப்பாற்ற எப்பொழுதும் நாங்கள் நீண்ட பிரசங்கங்கள் செய்யத்தயார்.



சர்வாதிகாரிகளின் ஆவல் இந்தக் கோலத்துடன் தான் நமக்குக் காட்சியளிக்கிறது !

மூம் மூர்த்திகள் !

(அச்சமில்லை, அச்சமில்லை யென்ற மெட்டு)

—வி. சொ.

அவனி யெல்லாம் ஒருத டைக்கீழ்
ஆள்வ தென்றே ஹிட்லர் தான்
அவல மான பஃஸி ஸத்தை
ஆர்வ மாய்ப் பரப்பு றான்;
கவன மாய்மு ஸோலி னீயும்
கர்வ மிக்க ஜப்பா னும்
கவலை யோடு ஹிட்லர் பின்னே
கண்கள் மூடிச் செல்லு றார்.

ஜினீ வாவி லுள்ள சமா
தான தேவ தையு டைச்
சிரசி னைமு ஸோலி னீ
சீவி விட்டே நோக்கு றான்
தனிமை யாகக் கையை வெட்டித்
தறித்து ஜப்பான் நிற்கு றான்
சமா தான மேடை ஹிட்லர்
தாபித் தான்பி ரங்கி யால்.

இந்த வீரர் மூவ ரும்இ
ணைந்து கூடி அவனி யில்
எதிரி யின்றி வெல்வ தென்
றெழுந்து கச்சை கட்டு நர்
விந்தை யான பாஸி ஸம்
மேவி டின்இப் பூமியே
நைந்து நைந் துழல்வ தன்றி
நன்மை யேதும் கிட்டு மோ?

இந்தியாவும் தற்கால ஜன சங்கியையும்

—சி. முத்துவீரப்பன்
B. A., LL. B.,

மனித சிருஷ்டி

மதங்கள் சிருஷ்டியைப் பலவாறாக வர்ணித்திருக்கின்றன. நவீன சாஸ்திர நிபுணர்களின் ஆராய்ச்சி, இப்பூமண்டல சிருஷ்டிக்குப் பின்னரே தொடங்கி பலதரப்பட்ட அறிவுகள் எவ்வாறு விருத்தியாயிற்றென்பதையே விஸ்தரிப்பதாயிருக்கிறது. ஆகவே இறைவன் இப் பிருதிவியையும், ஆரம்ப மனித வர்க்கத்தையும் ஒரு க்ஷணத்திலோ, ஒரு வாரத்திலோ அல்லது வேறு எவ்வித மாயா ஜாலத்தினாலோ சிருஷ்டித்தாரென வைத்துக் கொள்ளுவதில் எவ்வித ஆக்ஷேபமுமில்லை. சாதாரணமான ஒரு மனிதன் அவன் கர்ப்பத்திலிருந்த நிலையையும், அதன் பின் சில வருஷங்கள் வரை நடத்திய செயலையுமே அறிய முடியாத நிலையில் அவன் ஆரம்ப மனித சிருஷ்டியின் சரித்திரத்தை அறிவது அசம்பாவிதமென்று சொல்லவும் வேண்டுமோ? மனித சிருஷ்டியே இவ்வாறிருக்க, அதற்கும் தாயாக உள்ள பூமி தேவியின் சிருஷ்டிக் கிரமத்தை சொற்பனத்திலாவது மனிதன் எண்ண முடியுமா?

சிருஷ்டியின் ரகசியத்தை அறிவது அசம்பாவிதமென்பது ஒருபுறமிருக்க அந்தந்தக் கால மனித வர்க்கத்திற்கு ஓர் திருப்தி உண்டாகும் பொருட்டு ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஒரு நான்குக்குள் வரையறுத்து ஓர் திட்டப்படுத்தி அதன் ஆதி அந்தங்களைத் தீர்மானித்துவிடுவது உலக தர்மமாக இருக்கிறது. ஓர் புதிய அறிவாளி வந்து அத் தீர்மானத்தை நிராகரிக்கும் வரை அது உண்மையாகவே கொள்ளுவதும் சகஜமாக இருக்கிறது. இவ்விதத் தீர்மான அஸ்திவாரங்களையே ஆதாரமாகக் கொண்டு ஏறக்குறைய எல்லா ஆராய்ச்சிகளும் தங்கள் தங்கள் சிஷ்ய வர்க்கத்திற்குத் திருப்தியை அளித்து உலக சமுதாயத்தை நடத்திக் கொண்டு போகின்றன. மனித வர்க்க உற்பத்தியின் ஆராய்ச்சியை எடுத்துக் கொள்ளும் போது எல்லாம் வல்ல இறைவன், ஆதமா—ஹவ்யவதி என்ற ஆண்—பெண் இருவரைச் சிருஷ்டித்து ஓர் ரம்மியமான தோட்டத்தில் வைத்ததாக ஹிந்து மத புராணம் சொல்லுகிறது. இதற்கும் விருத்தமின்றி ஆதம்—ஏவாள் என்ற இருவரை முதலில் சிருஷ்டித்ததாக கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது. இஸ்லாமிய தர்மமும், இக் கிறிஸ்தவ தர்மத்திற்கு விரோதமின்றி பல் துறைகளிலும் அனுசரித்தே நிற்கிறது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் முதலில் சிருஷ்டித்த தம்பதிகளின் சந்தானங்கள் எந்தக் கொள்கையை அனுசரித்து விவாஹம் செய்துகொண்டார்களென்ற, அல்லது புத்திரர்களைப் பெற்றார்களென்ற கேள்விகளில் நாம் பிரவேசிக்க வேண்டாம். தற்கால நாகரீக ஆராய்ச்சியில் முதல் முதலில் மனித வர்க்க சிருஷ்டிக்கு இமயமலையாகிய கைலையங்கிரிக்கு வடக்கில் அதாவது மத்திய ஆசியா பிரதேசத்தில்தான், பிள்ளையார் சுழி போடப்பட்டதாகவும், பின்பு அவ்விடத்திலேயே மிகு விரைவில் விர்த்தி

யாகி கும்பல் கும்பலாக பிருதிவியின் நாலா திசையிலும் மனிதர்கள் பரவி ஞர்கள், என்றும் இதனுலேயே ஐரோப்பியர்களும் கூட ஆரியர்க ளென்றும், தற்கால ஜெர்மனியின் சின்னமான ஸ்வஸ்திகா உருவமும் நமக்குச் சொந்தமென்றும் பல அறி வாளிகளும் எண்ணுகிருர்கள். இமய கிரிக்கு வட மேற்கில் இருக்கும் ஓர் தீவு போன்ற சிறிய சமூகத்தினர் தற் சமயம் பேசும் பாஷை தமிழ் சமஸ்கிருதத்தை அனுசரித் திருப்ப தாகவும் ஆராய்ச்சியாளர்கள் காண்கி ருர்கள். இதற்கு திருஷ்டாந்தம் 'ஆப் கானிஸ்தான்' என்பது ஆரம்பத்தில் 'அவகவனஸ்தான்' அதாவது வரப் போக உள்ள ஓர் வழி எனவும்— 'பலுச்சிஸ்தான்' என்பது 'பல் உச் சஸ்தான்' அதாவது பலம் உன்னத நிலையில் உள்ள க்ஷத்திரியர்கள் வாசஸ் தலம் என்ற பொருளை அனுசரித்தே இருப்பதாகவும் நம்புகிருர்கள். எவ் விதமோ மனித வர்க்கம் சிருஷ்டியு மாகி எல்லா நாடுகளிலும் பரவியும் விட்டது. இனி முற் காலத்தை விட்டு தற்கால பிரச்சினைகளே நம் முன் னிற்க வேண்டும்.

ஜனங்களின் குடியேற்றம்

எந்த ஓர் தேசத்திலும் நிலவளம், நீர்வளம் பொருந்திய இடம் மரம் செடிகளால் அடர்ந்து நிற்கும். புதி தாய் அத் தேசத்திற்கு வரும் ஜனங் கள் அந்த இடங்களை முதலில் கைப் பற்று வார்க ளென்ற ஒரு கொள்கை யும் இதற்கு மாருக ஒரு கொள்கை யும் இருக்கிறது. அதாவது முதலில் ஜன சமூகம் ஒரு புது தேசத்திற்குப் போனவுடன் மிகச் செழிப்பான இடம், தண்ணீர், மரம், செடி கொடி களால் நிறைந் திருக்கு மாதலால் அவைகளை வெட்டிச் சுத்தப் படுத்து வது சற்று, கடுமையான காரியமான தால் மற்ற காலி இடங்களை முதலில் இலகுவாகக் கைப்பற்றி அவைகளை பண்படுத்துவார்க ளென்றும் பின் ஜனத் தொகை தினேதினே அதிக மாக, உணவுப் பொருள் தேவை அதிகத்தினுலும் அதிக ஜனத்தொகை யின் உழைப்பின் உதவியாலும் மரம் செடிகளை வெட்டிப் பண்படுத்தி நிலத் தைச் சீராக்குவார்க ளென்ற பிரதிக் கொள்கையையும் ஆமோதிக்கிருர்கள். இவ்வாறு ஜனத் தொகை விர்த்தியா கிக் கொண்டு போகும் போது அவர் களின் உழைப்பால் வருமானங்களும் விர்த்தியாகி சுபிக்ஷம் நிறைகிறது. எந்த ஓர் எல்லைக்கு மேல், மேல்கண்ட விதம் வருமானம் விர்த்தியாகாதோ அல்லது குறைய ஆரம்பித்து ஜனங் கள் சாதாரண ஜீவியத்திற்கும் கஷ் டம் உண்டாக ஆரம்ப மாகுமோ, அந்த எல்லைதான் அத் தேசத்தின் ஜன சங்கியை எல்லை. அதற்கு மேல் ஜனத் தொகை விர்த்தியால் ஜனங் கள் தகுந்த ஸ்திதியில் ஜீவிக்க முடியா தென்றும் சிசுக்களின் ஜனனமும், மரணமும் அத் தேசத்தில் அதிக மாகு மென்றும், அத் தேசம்தான் காப்பாற்ற முடியாத அளவு ஜனத் தொகையை விர்த்தி செய்து விட்ட தென்றும், ஜனங்களின் உற்பத்தி யைப்பல வகைகளிலும் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டு மென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள். மற்றொரு புறத்தில் சுயராஜ்யம் பெற்ற நாட்டார்களோ சேனைக்கு ஆள் வேணுமே, எதிர்பாராத சண் டைகள் வந்து விட்டால் பலியிட என் செய்வோம்? ஜனத்தொகையை ஒரு நாளும் கட்டுப் படுத்தக் கூடவே கூடாதெனக் கூச்சலிடுகிருர்கள். அந் நாட்டில் கர்ப்பத் தடையை விரும்பு பவர்கள் அதிக கர்ப்பத்தால் அழுகு

குன்றி விடுமே என்ற கவலையைக் கருதியே கர்ப்பத் தடையை உபயோகிக்கிறார்கள். எது எவ்விதமோ போகட்டும். நமது இந்தியா இந்த அதிக ஜனத்தொகை எல்லையைத் தாண்டி விட்டதா என்பதும் அப்படியானால் உற்பத்தியைத் தடுக்க வேண்டுவது அவசியமா என்பதும் எவ்விதம் தடுப்பதென்பதுமே இந்த வியாசத்தில் நம் ஆராய்ச்சியாக இருக்கும்.

இந்தியாவில் ஜனத்தொகை அளவு கடந்து நெடுந் தூரம் போய் விட்டது. நாங்கள் என் செய்வோம் என்று ராஜாங்கத்தார் தங்கள் கடனைக் கழிக்கக் கருதுகிறார்கள். இவர்கள் சாட்டும் இக் குற்றம் முழுவதும் உண்மையெனக் கருதுவதற்கில்லை. மூக்கியக் கைத் தொழில்கள் எல்லாம் தேசத்திலேயே இருந்தால் தற்சமய ஜனத்தொகை இந்தியாவிற்கு அளவு கடந்ததல்ல. ஆனாலும் ஜனத்தொகை உற்பத்தியின் வேகமும் அவ்விதமே மரணத்தின் வேகமும் அதிகமாயிருப்பதாலும், சராசரி தலை வருமானம் ஏறக்குறைய அணா இரண்டில் இருப்பதாலும் தற்கால அடிமை நிலைக்கு ஜனத்தொகை இந்தியாவில் அதிகமென்றே சொல்ல வேண்டும். இப்பொழுது அதிகமில்லா விட்டாலும் தற்பொழுதுள்ள உற்பத்தி வேகத்தைக் கடைப்பிடித்தால் கூடிய விரைவில் ஓர் பயங்கரமான நிலையை தேசம் அடைந்து விடுமென்பதில் சற்றும் ஐயமில்லை. ஒரு தம்பதிகளும் அவர்களின் சந்ததிகளும் இயற்கை முறையில் சந்தான விர்த்தி செய்ய ஆரம்பிப்பார்களானால் சுமார் 1500 வருஷங்களில் தற்கால உலக ஜனத்தொகையாகிய 200 கோடி ஜனங்களும் அந்த ஒரு தம்பதிகளின் வாரிசுகளாவார்களென்றால், ஈசன் ஆரம்பத்தில் ஓர் தம்பதியை மட்டும் சிருஷ்டித்ததற்கு அவன் புத்தி கூர்மையை நாம் மெச்ச வேண்டாமா? எனவே இந்தியாவில் ஜனத் தொகை அதிகமாகி விட்டதால் அதிக ஜனனமும் அவ்வித ஜனனத்தில் பத்து வயதிற்குள் அதிக மரணமும் இருக்கிறது. சாதாரண ஜனங்கள் ஆழ்ந்து கவனியாது சந்தானங்களை ஈசுவரன் கொடுத்தார். கொடுத்ததைப்பின் எடுத்துக் கொண்டார் என்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்கள் அவர்கள் காப்பாற்ற முடியாத அளவு தேவையில்லாத பிரஜைகளை உற்பத்தி செய்வதினால் போதுமான அளவு உணவு வசதி இல்லாமல் நாளடைவில் பலஹீனமாகி வியாதியால் பீடிக்கப் பட்டு தகுந்த சிகிச்சைக்கும் பொருளுதவி யில்லாமல் தடுக்க முடியாத விதமாய் மரணத்திற்குள்ளாகிறார்கள். சிசுக்களை—அவ்விதம் அக்குழந்தைகள் எல்லாம் உயிருடனிருந்தாலும் தகுந்த கல்வி கொடுத்து சீர்திருத்த முடியாமல் சாதாரணக் கூலி வேலையாட்களாகவே தன் சந்ததிகளையும் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க தேவையின்றி பிரஜா உற்பத்தி செய்வதிலும் அவைகளைத் தடுக்க முடியாமல் மரணத்திற்குள்ளாக்குவதிலும் ஒவ்வொரு தாய்க்குரிய சரீர கஷ்டமும் தகப்பனுக்குரிய தன நஷ்டமும் எவ்வளவென்பதை யாரும் சிந்திக்கிறதே யில்லை. இந்த அனாவசிய ஜனன மரணச் செலவை ஏற்கனவே யுள்ள பிள்ளைகளின் நன்மைக்குச் செல விட்டால் அக்குடும்பம் எவ்வித முன்னேற்றம் அடையு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? இவ்விதம் யோசனையின்றித் தம்பதிகள் தங்களின் சுக போகங்களையே பிரதானமாகக்

கொண்டு அளவின்றிய பிரஜைகளை உற்பத்தி செய்வதும் பின் அவர்களைக் கொல்லுவதும் பாபமில்லை யென யாரும் சொல்ல முடியுமா? நேரில் கொன்றால்தானு பாபம்? அதற்குரிய சாமக்கிரியைகளைச் சேகரம் செய்து காரியத்தை ஆரம்பித்து விட்டு மரணத்தைப்பார்த்துக் கொண்டிருந்தால் பாபமில்லையா?

அப்படியானால் ஒரு மனிதனுக்கு எத்தனை குழந்தைகள் தான் இருக்க வேண்டும் என்ற பிரச்சினை எழும்புகிறது. இந்த எண்ணிக்கையை ஒப்புக் கொண்டால் மிருந்த தனவந்தர்கள் அநேக பெண்களை மணந்து எண்ணிறந்த ஜனங்களை விர்த்தி செய்வதும் மிருந்த நியாயமும் அத்யாவசியமுமென்றே வாதிப்பதும் விரும்பத் தக்கதாகும். ஆனால் இவ்விதச் செயலை எச் சமூகமும் விரும்புவதில்லை. ஆகவே சந்ததிகள் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையையே முக்கிய நோக்கமாக வைத்துச் சங்கதியை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. இக் கொள்கையின்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் போதுமானதாயிருந்தாலும் அநேக எதிர்பாராத விஷயங்களையும் பெற்றோர்களின் வயதையும் கருதி ஒரு சாதாரண குடும்பத்திற்கு நாலு குழந்தைகளுக்கு மேலிருந்தால் அதிக மெனக் கருதுகிறார்கள். சாதாரண விவசாயிகளின் நிலைக்கு இந்த நான்கு என்ற எண்ணிக்கையும் அதிகமென்றுதோன்றலாம். சில தம்பதிகளுக்கு ஆரம்ப முதல் பெண் பிரஜைகளே பிறக்க ஆரம்பித்து, பெற்றோர்கள் நம் சந்திக்கு ஓர் ஆணுவது வேண்டாமா என எண்ணி இந்த கர்ப்பத்திலாவது ஓர் ஆண் பிறந்து விடாதா என முயற்சித்து ஒவ்வொரு பிரசவத்திலும் முன் போலவே அதிருப்தி அடைந்து தங்களின் வயோதிகத்தில் ஆசீர்வாத சுலோகத்திற்கிணங்கப் பதினாறும் பெண்களாகச் சூழ்ந்து நின்றழ நாம் பார்க்க வில்லையா? இவ்வித மின்றிக் கடைசியில் ஓர் ஆண் தான் பிறந்து விட்டதாக வைத்துக் கொள்ளுவோமே. அப்பொழுதாவது யாருக்கும் சுகமுண்டோ? மயானத்தில் ஒரு கையில் தன் விளையாட்டுப் பொம்மையுடன் மற்றோர் கையில் தன் பெற்றோர்க் கிடும் கொள்ளிக் கோலைத் தாங்கி நிற்கிறான் அப்பாலகன். அவ்விதம் விட்டுச் செல்லும் மகனைக் கவனிப்பார் யாரும் உண்டா? இது அகாலத்தில் புத்திரர்களைப் பெறுவதினால் உண்டாகும் தோஷமாகும். சில பெரியார்கள், 60வது வயது சாந்தி நடக்கும் பரியந்தம் புத்திரோற்பத்தி செய்யலாமென்றும் அதன் மேல்தான் சாந்திரூபம் தாரணம் செய்ய வேண்டுமெனச் சொல்வதையும் கேட்டு நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில் தற்கால உலகில் 70 வயது மணமகனையும் 15வயதுயுவதியையும்மணப் பந்தலில் ஒருங்கே காண்கிறோம். இவ்வித நடன மேடையான உலகில் புத்திர உற்பத்தியின் தடை எவ்விதம் தான் விர்த்தியடையுமோ? இவைகளை ஆராயும் போது ஒருவன் சுமார் 45 வயதுக்கு மேல் புத்திர உற்பத்தி செய்யக் கூடாதென்பது யோசனைக்குப் பொருத்தமாக இருக்கிறது. இதை ஒப்புக் கொண்டால் அதற்கு மேல் கல்யாணம் செய்வது முற்றிலும் வெறுக்கத்தக்கதே. அடுத்தபடி அளவின்றிய ஜனன மரணத்தை விர்த்தி செய்வதினின்றும் வேண்டிய அளவுடன் புத்திர உற்பத்தியை நிறுத்திக் கொள்ள எந்தெந்த முறையில் தடையை உபயோகிக்கலா

மென்ற பிரச்சினை எழும்புகிறது. இதுவே நமது வியாசத்தின் சிக்கலான பாகம். இதில்தான் எல்லா அபிப்பிராய பேதமும். ஜன உற்பத்தியை மட்டுப் படுத்த பல முறைகளுண்டு. அவைகளில் தற்கால ஜனங்களுக்குப் பொருத்தமாகத் தோற்றுபவைகள் சில. அதாவது:—

1. பாலிய விவாஹங்களை அறவே ஒழித்தல்.

2. தம்பதிகள் மனோ அடக்கத்தினால் கட்டுப் பாட்டிற்குள் நிற்றல்.

3. தம்பதிகள் இடையிடையே விலகி யிருத்தல்.

4. கர்ப்பத்தடைக் கருவிகளை உபயோகித்தல்.

5. உலகம் எப்படியோ போகிறது என ஈசன்மேல் பாரத்தைப் போட்டு உற்பத்திசெய்து அவைகளைத் தானகவே மேற்கண்ட தடைகளில் அழிந்து போக விடுதல்.

மேற்கண்ட தடைகளில்எந்த தடைகளை உபயோகிப்பதென்பதில் தான் வாதம். ஆக தற்சமயமுள்ள நிலையில் இந்தியாவில் ஜனத்தொகை அதிகமென்பதிலும், அதைக் கட்டுப்படுத்த வேணுமென்பதிலும், உள்ள ஜனங்களின் ஸ்திதியை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்பதிலும் அபிப்பிராய பேதமே இல்லை. மத கர்த்தர்களாக உள்ளவர்கள் பாலிய விவாஹம் அவசியமென்றும், இல்லாவிடில் நரகம் சம்பவிக்கு மென்றும், கர்ப்பத்தடைக் கருவிகள் இயற்கைக்கு விரோதமென்றும், கூடுமானவரை மன அடக்கத்துடனிருக்கலாம்; இல்லாவிடில் நமது ஐந்தாம் நம்பர் திட்டமான ஈசன் மேலேயே பாரத்தைப்போட்டு விடுவது சரியெனவும் ஆமோதிக்கிறார்கள். சற்று ஆத்மத்துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் பாலிய விவாஹத்தடையும், விவாஹத்திற்குப் பின் மனோ அடக்கத்தின் வாயிலான தடையுமே நலமெனக் கருதுகிறார்கள். இவர்கள் திட்டம் மிக நன்மை என்பதை மறுப்பதற்கில்லை. மனோ அடக்கம் எவ்வளவு தூரம் சாத்திய மென்பதும் விரும்பிய பலனளிக்குமா என்பதும் தான் சந்தேகம். இக்கொள்கையினரின் வாதமாவது அனுசரிப்பதற்குச் சிரமமா யிருப்ப தென்ற ஒரு காரணத்தைக் கொண்டு மட்டும் உன்னத லட்சியத்தையே குறைத்து கீழே தள்ளி விடக்கூடாதென்றும், பிரஜைகளை உற்பத்தி செய்வது ஆத்மாவின் சுய தர்மமானதால் அதைச் செயற்கைக்கருவிகளினால் கட்டுப்படுத்துவது கூடாதெனவும் கருதுகிறார்கள். மருந்தின் சக்தி யின்மையாலோ, கடுமையான பத்தியச் சடங்கு வழுவாலோ நோய் சொஸ்தமாகா விட்டால் வியாதியஸ்தனுக்கு ஏதும் பலனுண்டா? யாருடைய வழுவானாலும் சரி, நோய் போகா விட்டால் நோயாளி மாண்டுபோவது நிச்சயமே. தம்பதிகள் அனுஷ்டிக்கும் நீண்ட கால மனோ நிக்ரஹத்தால் சிகிச்சை, வியாதியினின்றும் கொடியதாகி மன நிலையில் சில விபரீதங்களையும் கூட உண்டுபண்ணலாமெனச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இனி நாம் கவனிக்க வேண்டிய விஷயம் கர்ப்பத்தடைக் கருவிகள் தான். இதை ஆக்ஷேபிப்பவர்கள் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். ஆதரிப்பவர்கள் பின்வருமாறு அதற்குத் தகுந்த சமாதானங்களையும் சொல்லுகிறார்கள்.

1. கர்ப்பத்தடைக்கருவிகள் இயற்கைக்கு விரோதமானதெனக் கருது

கிறார்கள். இதற்கு எதிரியின் சமாதானமாவது, இயற்கைக்கு விரோதமான எத்தனை வழியில் நம் நடை, உடை முதலானவைகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்ளும் போது இதில் மட்டும் ஏன் இவ்வளவு கவனம் என்றும், ஜனத்தொகை அதிகமாவதும் இயற்கைக்குக் கொடிய விரோதமாயிற்றே எனவும் முறையிடுகிறார்கள்.

2. இந்தப் பிரசாரம் கர்ப்பத்தடையே தேவையில்லாதவர்களிலும் பரவி, ஆண் பெண்ணிடம் ஒழுக்க வீனத்தை உண்டாக்குமென வாதிக்கிறார்கள். சமாதானக்காரர்களோ ஒவ்வொரு வஸ்துவுக்கும் யதார்த்த பிரயோகமும், துஷ் பிரயோகமுமிருக்கிறது; துஷ்பிரயோகம் பண்ணுபவர்களைக் கண்டிப்பதை விட்டு அதற்காக யாருமே உபயோகிக்கக்கூடாதெனச் செய்வது நியாயமில்லை எனச் சொல்லுகிறார்கள். நஞ்சு கொல்லக்கூடியது; ஆனால் வியாதியைச் சொஸ்தப்படுத்துகிறது. சிலர், வாங்கி உட்கொண்டு மாண்டு விடுகிறார்களானதால் நஞ்சே விற்கக் கூடாதெனச் சொல்லலாமா என்பதே அவர்களின் எதிர்ப்பிரசாரம். அநேகம் ஒழுக்க வீனமுள்ளவர்கள் எவ்விதப் பிரசாரமின்றியே ஒழுக்க வீனர்களாகி விடுகிறார்களென்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

3. கருவிகளை உபயோகிப்பதற்கு அதிக பொருள் செலவும் சற்று அறிவும் வேண்டும். இது நடுத்தரப் பட்டவர்களால் தான் ஆகும். ஆனால் கீழேயுள்ள கூலிக்காரர்களுக்கும் விவசாயிகளுக்குமே கர்ப்பத்தடை மிக அவசியமாகத் தேவை. அவர்களோ ஏழைகள். போதிய அறிவற்றவர்கள். இதனால் அவர்களுக்குப் பிரயோஜனமில்லை என வாதிப்பவர்களுக்குச் சமாதானமோ, அதிக குழந்தைகளைப் பெறுவதினாலேயே பணம் செலவாகி மற்றக் குழந்தைகளும் படிப்பின்றி ஏழையாகி விடுகிறார்களென்றும், அதைப் போக்கவே இது முயற்சிப்பதால் அவர்களிடையில் ராஜாங்கமும் பிரசாரம் செய்து மிக சகாய விலைக்குக் கருவிகளை விற்பனை செய்ய வேண்டுமென்றும், ஒரு குழந்தையின் ஜனன மரணச் செலவினின்றும் அதைத்தடுப்பதற்குக் கருவிகளின் செலவுமிகச் சொற்பமென்றும் சொல்லுகிறார்கள்.

4. கர்ப்பத்தடை பிரசாரத்தினால் உயர்தர அறிவுள்ளவர்களும் கருவிகளை உபயோகிப்பதின் மூலம் மிகுந்த அறிவாளிகள் உற்பத்தியே தடைப்பட்டுவிடுமென்றும், சாதாரண கூலி ஜனங்களினால் உலக விவகாரங்களையும் ராஜாங்க விவகாரங்களையும் நடத்தமுடியாதென்றும் சொல்லுகிறவர்களுக்கு, அறிவென்பது கல்வியினால் உண்டாகிறதென்றும் கீழ் ஜனங்களும் பணமிருந்தால் கல்வி கற்று முன்னணிக்கு வந்துவிடலாமென்றும் எந்த அறிவாளிகளும் தம் வம்ச விருத்தியைத் தடுக்கமாட்டார்களென்றும் தேவையின்றிய அதிக உற்பத்தியைப்பற்றித்தான் நம் பிரச்சினையேயென்றும் சமாதானம் சொல்லுகிறார்கள்.

மேற் கூறிய ஆக்ஷேபங்களையும் அவைகளின்சமாதானங்களையும்உற்று நோக்கும் போது ஒவ்வொருவரும் தம் மனோ நிக்கிரகத்தால் தேவையின்றிய உற்பத்தியை மட்டுப் படுத்துவது அதி சிரேஷ்ட மென்றும், கருவியினால் மட்டுப் படுத்துவது மத்தியமென்றும், ஒன்றும்செய்யாது நடந்தபடி நடக்கட்டுமென ஜன சங்கி

ஞானக்களஞ்சியம்

கடவுள் நம்பிக்கை கொள்ளாத நாடு பலமற்ற நாடு.

—பிளாடோ

ஃ ஃ ஃ

பாலை வனத்திலே காணப் படுகிற புஷ்பம்மாதிரி வாழ்க்கையிலே அன்பு.

—ஹாக்கார்டு

ஃ ஃ ஃ

ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கி விட்டால் அதைத் தடுக்க யாராலுமே முடியாது.

—வால்டேர்

ஃ ஃ ஃ

குழந்தைகள், கடவுள் என்று நினைத்துக் கொண்டு எந்தப் பெயரை உச்சரிக்கின்றன? தாய்.

—தாக்கரே

வாழ்க்கை எவ்வளவு சுருங்கியது என்பது, நீண்ட காலம் வாழ்ந்தால் தான் தெரியும்.

—ஷோபேன்ஹார்

ஃ ஃ ஃ

புத்திசாலி என்றால் என்ன அர்த்தம்? மன அடக்கம் பெற்றவன் என்பது தான்.

—ஜேம்ஸ் ஆலன்

ஐ ஃ ஃ

ஆத்மாவின் உண்டியல் ஆனந்தம்.

—இங்கர்ஸால்

ஃ ஃ ஃ

எனக் கொன்றுதான் தெரியும். அதுதான் எனக் கொன்றும் தெரியாதென்பது. ஆகையால் உன்னையே நீ அறி.

—சாக்ரடீஸ்

யையை அதிகமாக்குவது அதமமென்றுமே நாம் சொல்லலாம். எவ்விதமும் நோய் சொஸ்தப்பட வேணும். சேனைகளுக்கு, ஆட்களுக்கு என்ன செய்வோமென்ற பிரச்சினை, நாமும் ஒரு சுயேச்சை நாட்டாரென உலகத்தாரால் கருதப்பட்ட பின்னரே. எந்த வழியில் பிரஜா உற்பத்தியைக் கட்டுப் படுத்துவதென்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்தது. தேவையில்லாத பிரஜைகளின் உற்பத்தியை ஓர் கட்டுக்குள் கொண்டு வரவேண்டியது இந்தியர்கள் எல்லோருக்கு முள்ள ஓர் பொதுப் பிரச்சினை என்பதையும் மற்றக் காரணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது இது நியாயமென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டித்தானே இருக்கிறது.

மற்றவர்கள் வாழ்வதற்காக ஒருவன் மரிக்கலாம். ஆனால் அவன் தனக்காகவே வாழ்வதா யிருந்தால், அதைப் பற்றி யாருக்குக் கவலை?

—இப்ஸென்

ஃ ஃ ஃ

உன்னிடத்திலே என்ன இருக்கிறதோ அதைக் கொண்டு நீ நன்மையைச் செய்யலாமே. இல்லாததை நீ ஏன் எதிர் பார்க்கிறாய்?

—வில்லியம் பேன்

ஃ ஃ ஃ

உன்னிடத்திலே அறிவு இருக்கிறதா? அப்படியானால் அதில் ஒரு சிலராவது விளக்கேற்றிக் கொள்ளட்டுமே.

—புல்லர்

ஃ ஃ ஃ

தீமை யென்று நாம் புறக்கணிக்கிற பொருள்களில் கூட நல்ல ஆத்மா ஒன்று இருக்கிறது. பொய்யில் கூட ஓர் உண்மை இருக்கிறது.

—ஸ்பென்ஸர்

ஃ ஃ ஃ

பெரிய மனிதர்கள் உச்சஸ்தானத்தை யடைந்தார்கள் என்று சொன்னால் எப்படி? திடீரென்று தாவிக் குதித்தார்களா? இல்லை. மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இவர்கள் உழைத்து மேலேறினார்கள்.

—லாங் பெல்லோ

ஃ ஃ ஃ

சரித்திரம் என்பது என்ன? எதிர் காலத்திலே கேட்கிற இறந்த காலத்தின் எதிரொலி. எதிர் காலத்தை இறந்த காலத்திலே பிரதி பலிக்கச் செய்கிற ஒரு கண்ணாடி.

—விக்டர் ஹியூகோ

உலகத்திலே வாழ்கிறவர்கள், துரதிருஷ்டத்தைக் கண்டு தலை தொங்கப் போடுவார்கள்; ஆனால் உலகத்திற்காக வாழ்கிறவர்கள் அப்பொழுது தலை தூக்கி நிற்பார்கள்.

—வாஷிங்டன் இர்விங்

ஃ ஃ ஃ

உலகத்திலே பிறந்த ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏதோ ஒரு நல்ல விஷயம் இருக்கலாம். அவனிடத்திலிருந்து அதைக் கற்றுக் கொள்கிற முறையில் அவனுடைய மாணாக்கன் தானே நான்?

—எமர்ஸன்

ஃ ஃ ஃ

வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்கள் தான், கடவுட் கோயிலின் கற்சுவர்கள். ஒரு கோயிலின் 'அழகு, அதன் சித்திர வேலை நிறைந்த சுவர்களைக் காட்டிலும், அங்கே பிரதிபலிக்கிற நல்ல குணங்களைப் பொறுத்தே அதிகப்படுகிறது.

—செயிண்ட் ஹாயி

ஃ ஃ ஃ

நாம் முதலிலே அடைய வேண்டிய வெற்றி—அதிலும் முக்கியமாக அடைய வேண்டியது, தான் என்பதை அழிப்பது. தான் என்பதற்கு அடிமையாகி விடுவதைப் போன்றதொரு அவமானகரமான செயல் ஒன்றுமில்லை.

—ப்ளாட்டோ

ஃ ஃ ஃ

மகான்கள் என்று சொல்லப்படுகிறவர்களை நாம் எப்பொழுது மதிக்கிறோம்? அவர்களுடைய குற்றங்களை அறிந்துகொள்கிறபோதுதான். ஆனால் அவர்கள் ஒரு குற்றமுமில்லாதவராக

நம் முன்னர்த் தோன்றுகிற போது, அவரைச் சந்தேகமும் வெறுப்பும் கட்டிய பார்வையுடன்தான் பார்க்கிறோம்.

—வில் ட்யூரண்ட்

ஃ ஃ ஃ

அரசர்களும் பிரபுக்களும் சிறப்புற வாழலாம்; அல்லது தேய்ந்தும் போகலாம். ஒரு மூச்சினால் இவர்கள் சிருஷ்டிக்கப் பட்டார்கள். அந்த மூச்சினால் இவர்கள் மரித்துவடலாம், ஆனால் ஒரு நாட்டுக்குப் பெருமையைத் தருகிற குடியானவர்களை அழித்துவிட்டால், பிறகு அந்த ஸ்தானத்தை யாருமே பூர்த்தி செய்ய முடியாது.

—பாப் டெய்லர்

ஃ ஃ ஃ

பூலோகத்திலே மனிதனாகப் பிறந்த ஒருவன் தன்னுடைய கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிற பூஷணம் எது? கோபதாபமில்லாமல், பாரபட்ச மில்லாமல், நண்பன்—சத்துரு, உறவினன்—அந்நியன் என்ற வேற்றுமை யில்லாமல் தன் கடமையைச் செய்வதைத்தான் கடவுள் புன் சிரிப்போடு ஏற்றுக் கொள்கிறார்.

—அக்பர்

ஃ ஃ ஃ

அன்பு என்பது என்ன? கரு மேகங்கள் நிறைந்த மனித வாழ்க்கையிலே தோன்றுகிற ஒருவான வில்; இதுதான் உதய தாரகை. குழந்தை மீதும், சமாதிக் கட்டிடத்தின் மீதும் ஒரே மாதிரியாகத்தான் இது பிரதிபலிக்கிறது. சித்திரக்காரன், தேசாபிமானி, தத்துவ ஞானி எல்லாரையும் எல்லாரையும் ஊக்குவிப்பது இந்த அன்புதான். வீட்டிலே காற்றாகவும், அடுப்பிலே அனலாகவும் இந்தக் அன்புதான் வீசுகிறது. இதுவே அமரத் துவத்திற்கு அடிப்படை. அன்பின் குரல்தானே சங்கீதம்! அன்பில்லாத மனிதர்கள் மிருகங்கள்; அன்புள்ளவர்கள் தேவர்கள்.

—ராபர்ட் இங்கர் ஸால்

ஜெக்கோ — ஸ்லோவேகியாவில் பாடா பூட்ஸ் தொழிற்சாலை யென்றொரு பெரிய தொழிற் சாலை இருப்பதை நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். இதன் சொந்தக்காரர் ஜே. ஏ. பாடா என்பவர், உலகத்துப் பணக்காரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் ‘ஜிலின்’ என்றொரு பத்திரிகை கூட நடத்துகிறார். அதில் இவர் குறிப்பிடுவதாவது:—

ஒரு மனிதன் திறமையாக வேலை செய்ய வேண்டுமானால் அறுபது வயதுக்குமேல் வேலை செய்யக் கூடாது. அதற்கு மேல் அவர்கள் தங்கள் முக்கியத்துவத்தை அதிகப் படுத்திக்கொண்டு போவார்களானால் அதுதான் ஆபத்து. இவர்களால் தொடங்கப் பெறுகிற எந்தக் காரியமும் முன்னேற்றத்தை யடையாது.

ஃ ஃ ஃ

மகாத்மா காந்தி, ஹிட்லர் டி. இ. லாரென்ஸ் ஆகிய மூவரும்தான் உலகத்திலே பரிசுத்தமானவர்கள் என்று தளபதி ஈட்ஸ் ப்ரௌன் என்பவர் கூறுகிறார்.

இபன் அஹமத் அல்லது காதலும் சமயப் பற்றும்

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யா

௫

மூன்று முறை திரும்பி வந்த போது அவன் ப்ளான்காவைக் கடற்கரையில் காணவில்லை. கடிதம் ஒன்று அவள் எழுதி யனுப்பினாள். தந்தை மாட்ரிட் சென்ற தாகவும், ஏழு வருஷம் பிரிந் திருந்த தன் தமயன் ஒரு ப்ரெஞ்சு நண்பரோடு வீட்டில் வந்திருப்ப தாகவும், அவர்களைத் தனியாக விட்டு வர இயல வில்லை என்றும், தாமே நேராக க்ரனடா வரும்படியாகவும் அதில் எழுதியிருந்தது. அவள் வராததற்கு இவ்வளவு காரணங்கள் இருந்தாலும் இபன் அஹமத் அதை ஒரு தீய சகுனமாகவே கருதினான். அதனால் க்ரனடா விரைந்து வந்து சேர்ந்தான்.

ப்ளான்கா அவனை எதிர்பார்த்திருந்தாளானாலும் அவன் அங்கு வந்த போது தன் மனக்களிப்பையும் ஆச்சரியத்தையும் காட்ட தன்னையறியாமலே ஹா! என்றலறினாள். 'என் வீர நண்பர்களே, நான் உங்களோடு அவ்வளவு பேசியது இந்தப் புறச் சமயத்தாரைப் பற்றித்தான். இவரிடத்தில் ஜாக்கிரதை! உங்களையும் இவர் வெல்லக் கூடும். இவரிடத்தில் இபன்ஸி ராஜ்களிடம் இருந்த விநயம், விசுவாசம், வீரத் தன்மை யாவும் காணப்படுகின்றன!' என்றாள்.

இவளுடைய தமயன் கார்லோஸுக்கு, தாய்நாட்டின் விரோதிக்கூட்டத்து ஒருவனைப் பற்றி இவள் இப்படிப் பேசியது பிடிக்கவில்லை. அவன் ஸ்பானியரின் தைரியத்தையும் செருக்கையும் பூரணமாகப் பெற்றிருந்தான். அமெரிக்காவில் நடந்த கொடுமையில் பழகியதனால் அவன் முகத்தில் ஓர் பயங்கரத் தோற்றமும் கிறிஸ்தவமதத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்டிருந்தான். 'ஸித்' வம்சத்தவன் என்ற பெருமையினால் மூர்களிடம் பெரும் பகையும் பூண்டிருந்தான்.

அவன் நண்பன் லோத்ரெக் ஒரு உயர்ந்த ப்ரென்சு குடும்பத்தைச் சேர்ந்தவன். அதில் பரம்பரையாகப் பெண்கள் அழகிலும் ஆண்கள் வீரத்திலும் பெயர் பெற்றிருந்தார்கள். 'பாவியா' போர்க்களத்தில் ப்ரென்சு அரசன் பக்கத்தில் அவர் நின்று வெகு துணிகரமாகச் சண்டை செய்ததை கார்லோஸ் கண்டான். அதனால் அவனிடம் நட்புப் பூண்டு அவனைத் தன்னுடன் அழைத்து வந்தான்.

இபன் அஹமத் ப்ளான்காவின் மாளிகையில் முன் கூறிய மாதிரி வரவேற்கப்பட்டபோது அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. தன் காதலியின் காலடியில் கார்லோஸ் நண்பன் உட்கார்ந்திருந்தான். அவன், அவளுடைய சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவள் முகத்தை மவுனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தோல் சல்லடமும் அதே வர்ணச் சட்டையும் அணிந்திருந்தான். இடைக்கக்கத்தில் அல்லி மலர் * பொறித்த நீண்ட வாள் தொங்கிற்று.

* அல்லி மலர் பழைய பிரெஞ்சு அரசாங்கச் சின்னம்.

தோள்மேல் ஒருபட்டு அங்கவஸ்திரம் வழிந்து கிடந்தது. நீண்ட சிறகுகள் பொருந்திய தொப்பி தலையிலும், மார்பில் துவண்ட ஜரிகை வலைத் துண்டு அவன் திறந்த கழுத்திலும் விளங்கின. இரு புறத்திலும் நீண்டிருந்த மீசை அவனது சாந்த முகத்துக்கு ஒரு ஆண்மையை அளித்தது. குதிரை வீரர்களுக்குரிய பொன் அங்குசங்கள் பெற்ற பாதரட்சைகளை அவன் அணிந்திருந்தான்.

கார்லோஸ் சற்று விலகி நின்றிருந்தான். தன் நீண்ட வாளைத் தரையில் ஊன்றி வைத்து அதன் கைப்பிடியிலுள்ள சிலுவைமேல் சாய்ந்திருந்தான். முன்னவனைப் போலவே உடைகள் தரித்திருந்தான். அவனிலும் வயது இவனுக்கு அதிகம். முகத்தில் ஒருவித கண்டிப்பும் தீவிர நோக்கும் இருந்ததால் பார்ப்பவர்களுக்கு அவை இவனிடத்தில் கண்ணியத்தையும் அச்சத்தையும் உண்டாக்கின. 'கலத்ரவா' துறவிக் கூட்டத்தின் செஞ்சிலுவை உடையை தரித்திருந்தான். மார்பு புறத்தில் 'அவளும் என் அரசனும்' என்ற பிருது மொழி வரையப்பட்டிருந்தது.

கார்லோஸ் இபன் அஹமத் முன் சென்று, 'ஐயா மூர், என் தந்தையும் சகோதரியும் உம்மைப்பற்றி வெகு தூரம் சொல்லி யிருக்கிறார்கள். தீரமும் உயர் பிறப்பு முடையவராகவே நீர் கருதப்படுகிறீர். உமது விநயம் வெளிப்படையாகவே காணப்படுகிறது. எங்கள் அரசர் பிரானாகிய ஐந்தாம் சார்லஸ் உங்கள் டுனிஸ் ராஜ்யத்தைத் தாக்கப் போகிறார். அங்குப் போர்க்களத்தில் நாமிருவரும் சந்திக்க நேரும்' என்றான்.

இபன் அஹமத் பதிலொன்றும் கூறவில்லை. மார்பில் கை வைத்து ப்ளான்காவையும் லோத்ரெக்கையும் பார்த்த வண்ணமாய் அவர்கள் முன் தரையி லுட்கார்ந்தான். இவனுடைய விநோத உடைகளும் கம்பீரமும் லோத்ரெக் கவனத்தைக் கவர்ந்தன. ப்ளான்கா என்றும் போல சாதாரணமாகவே நடந்து கொண்டாள். அவள் தன் மனதிலுள்ளதை மறைக்கவில்லை; தன் நாட்டம் முழுவதையும் அம்மூர் பேரிலேயே செலுத்தி வந்தாள். சற்று நேரம் கழிந்ததும் இபன் அஹமத், அவள் முன் சென்று தலை குனிந்து ஸலாம் செய்துவிட்டு மௌனமாகத் தன் விடுதி திரும்பினான். லோத்ரெக் இவ்விருவர் நடத்தையைக்கண்டு சந்தேகம் கொண்டு தானும் எழுந்து வெளியே சென்றான்.

தனியாகச் சகோதரியும் தானும் இருப்பதைக் கண்ட கார்லோஸ் அவளிடம் சென்று,

'ப்ளான்கா, அம்மூரைக் கண்டதும் உன் மனம் குழம்பிற்றே அதேன்?' என்றான்.

'அண்ணா, இபன் அஹமதை நான் காதலிக்கிறேன். அவன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவும் பட்சத்தில் அவனையே நான் மணப்பேன்' என்று, ப்ளான்கா அதில் எதுவும் விபரீதமில்லாதது போலக் கபடற்றுச் சொன்னாள்.

'என்ன! இபன் அஹமதை நீ காதலிக்கிறாயா? நாம் அடித்துத் துரத்திய மத விரோதியை, மூர் ஜாதியைச் சேர்ந்தவனை, பிவார் வம்சப் பெண்ணாகிய நீ காதலிக்கிறாயா?' என்று திடுக்கிட்டுக் கேட்டான் கார்லோஸ்.

'அண்ணா, இபன் அஹமதை நான் காதலிக்கிறேன். என்னை இபன்

அஹமத் காதலிக்கிறான். சென்ற மூன்று வருஷங்களாகத் தன் மதத்தை விடமாட்டாமல் என்னைத் துறந்து வருகிறான். பெருந்தன்மை, கண்ணியம், தயாள குணம் முதலியன அவனிடம் குடி கொண்டிருக்கின்றன. என் கடைசி மூச்சு வரை அவனையே தொழுவேன்' என்று உறுதியாகக் கூறினாள் ப்ளான்கா.

பொய் மதத்தில் இபன் அஹமத் ஈடுபடுவதற்காகக் கார்லோஸ் வருந்தினான்? என்றாலும், அவனுடைய குலைவிலாத மதப்பற்றை மெச்சாமலிருக்க முடியவில்லை. ப்ளான்காவைப் பார்த்து, 'ஐயோ, துரதிருஷ்டப் பெண்ணே! இக்காதல் உன்னை எங்கு கொண்டுவிடும் தெரியுமா? லோத்ரெக் நம் வீட்டு மாப்பிள்ளையாகக் கூடும் என்று தான் அவனை இங்கு அழைத்து வந்தேன்' என்றான்.

'அதற்கு நான் என்ன செய்வேன்? இவனை என்னால் காதலிக்க முடியாது. இபன் அஹமத் விஷயத்தில் எனக்குள்ள பற்றுதலைக் குறை கூற யாருக்கும் அதிகாரமில்லை. நீ இல்லறம் துறந்து அதில் வழுவாதிருப்பது போல நானும் என் காதலில் வழுவமாட்டேன். ஆனால் இதை உனக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். நமது மதத்திற்கு விரோதியாக உள்ளவனை நான் ஒருபோதும் மணக்க மாட்டேன்' என்று தன் உட்கருத்து முழுவதையும் வெளியிட்டாள்.

'அப்படியானால் இவ்வுலகில் நம் குடும்பமே அற்றுப் போகுமே!' என்று வருந்திக் கூறினான் கார்லோஸ்.

'வேண்டியிருந்தால் அதை நீடிக்க நீயே செய்யலாம். நிற்க; அண்ணா, நாம் காண முடியாத சந்ததிகளைப் பெற்று உன் உயர் குணங்களைக் கெடுப்பதில் என்ன பயன்? நம் குடும்பத்திற்கு நீயும் நானுமே கடைசி என்றுதான் எனக்குப்படுகிறது. மற்றவர்களை விட வெகு உயர்ந்து நிற்கிறோமாகையால் நமக்குப் பின் நம் சந்ததி அதிகமாக ஓங்காது. 'ஸித்' நமது மூல புருஷராயிருப்பது போல அவரே நமது சந்ததியுமாவார்' என்று சொல்லி விட்டு ப்ளான்கா வெளியேறி விட்டாள்.

கார்லோஸ் இபன் அஹமதிடம் உடனே ஓடினான். 'ஓ மூர்', என் தங்கையை நீ கை விடுகிறாயா? அல்லது என்னோடு வாட்போர் புரிகிறாயா?' என்று கோபாவேசத்தோடு கேட்டான்.

'உன் தங்கை உன்னை அனுப்பினாளா என்ன? தான் செய்த உறுதிமொழிகளைத் திரும்பப்பெற வேண்டுமென்கிறாளா?' என்று இபன் அஹமத் அவனைக் கேட்டான்.

'இல்லை; அவள் உன்மேல் அதிக காதல் கொண்டுதானிருக்கிறாள்.'

'ப்ளான்காவுக் கேற்ற சகோதரன் நீ! என் பாக்கியம் எல்லாம் உங்கள் குடும்பத்திலே தான் இருக்கிறது. என்னைப் போன்ற அதிருஷ்டசாலி யார் இருக்கிறான்! இந்த தினமே சுதினம்! அந்த ப்ரென்சுக்காரன் பொருட்டு எனக்குத் துரோகம் செய்ய எண்ணுகிறான் என்று பயந்தேன். அப்படிக் கொன்றுமில்லை' என்று மனமுவந்து சொன்னான்.

'இதில் தான் இருக்கிறது உனது துர்ப்பாக்கியம்! எனது நண்பன் லோத்ரெக், நீ குறுக்கிட்டிரா விட்டால் என் வீட்டு மாப்பிள்ளையாகி யிருப்பான்.

இப்போது எங்கள் குடும்பம் சந்ததியற்று வருந்துவதற்கு நீ பதில் சொல்லியாக வேண்டும்' என்று கார்லோஸ் அடக்கவொண்ணாத ஆத்திரத்தோடு பேசினான்.

'உனக்குப் பதில் சொல்ல எனக்குத் தடையில்லை. நான் போருக்குத் தயார். உன் குடும்பத்தாரோடு போராடினவர் குடும்பத்தைச் சேர்ந்தவன் தான் நானும். இருந்தாலும் உனக்கெதிரியாக நிற்க நானோ* குதிரை வீரன் பதவி பெறவில்லையே என்று தான் வருந்துகிறேன். அப்பதவியை எனக்குக் கொடுக்க இங்கு யாரையும் காணோம். அதில்லாமல் என்னோடு நீ போர் செய்வதனால் உன் கௌரவத்திற்குக் குறைவு உண்டாகுமே என்று தான் தயங்குகிறேன்' என்றான் இபன் அஹமத்.

தன் எதிரி சொல்வது உண்மை தான் என்று அறிந்த கார்லோஸ், அவன் பெருந்தன்மையில் வியப்பும், போர் செய்வதற்கில்லையே என்பதில் கோபமும் கொண்டான். பிறகு திடீரென்று, 'நானே உன்னைக் குதிரை வீரனாக்குகிறேன். அதற்கு நீ தகுதியுடையவனே' என்று கார்லோஸ் கூறவே இபன் அஹமத் அதற்கிசைந்து அவன் முன் முழந்தாளிட்டான். கார்லோஸ் தன் உயர்ந்த வாளையுருவி அதன் அகன்ற புறத்தால் மும்முறை அவன் தோளைத் தட்டினான். பிறகு அதே வாளை அவன் இடையில் கட்டினான். இதுதான் குதிரை வீரனாக்கும் முறை. கார்லோஸ் கட்டிய அதே வாள் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மார்பையே துளைக்கக் கூடும். இருந்தாலும் அவன் தன் முறையைச் சரிவரச் செய்தான். இத் தொன்மை வழக்கின் கௌரவம் அவ்வளவு பெரிது.

இச்சடங்கு முடிந்ததும் உடனே இருவரும் தத்தம் குதிரை மேலேறி துவந்தப்போர் நடக்கும் களத்திற்குச் சென்றார்கள். இபன் அஹமதுக்குக் கார்லோஸை விடப் போர்த்திறன் குறைவு. ஆனால் அவனுடைய வாள் தமாஸ் நகரில் வடித்த உயர்ந்த எஃகு. அவன் குதிரையும் துடியான அராபிய இனத்தைச் சேர்ந்தது. இருவரும் தத்தம்குதிரைகளிலேறினார்கள். ஒருவரோடொருவர் மோதிக் கொள்ள அவைகளை எதிரெதிராக நிறுத்தி வேகமாகச் செலுத்தினார்கள். இபன் அஹமத் தனது அகன்ற அங்குபடியால் எதிரியின் குதிரைக் காலை ஆழமாகக் காயப் படுத்தினான். குதிரை சாய்ந்தது. கார்லோஸ் தரையில் குதித்தான். வாளை ஓங்கிப் பிடித்து விரோதியைத் தாக்க அதை வீசினான். இபன் அஹமத் திடீரென்று தானும் குதித்துத் தன் வாளால் அதைத் தடுத்தான். தமாஸ் எஃகு, அதன் மேன்மையைக் காட்டிற்று. எதிரி வாள் முறிந்து இரண்டு துண்டாயிற்று. குதிரையை இழந்து வாளிழந்த கார்லோஸ், உதிரக் கண்ணீர் சிந்திக் கோபத்தோடு,

'ஓ மூர்! நீ இரங்க வேண்டாம். என்னை அடித்து வீழ்த்து. எங்கள் மத துரோகிகளாகிய உங்களை நான் இங்

* ஐரோப்பாவில் மத்திய காலங்களில் தனிக்குதிரை வீரர்கள் நைட்ஸ் (Knights) என்ற ஒரு கூட்டத்தில் சேர்க்கப் படுவதுண்டு. அவர்கள் தனிச் சண்டைகளிலும் பெரும் போர்களிலும் கலந்து கொள்வார்கள். எளியவரை வலியார் நலிக்காதபடி காப்பது அவர்கள் விருதம். தம்போன்ற பதவியுள்ளவர்களோடு போராடி வென்றால் அவர்களுக்குக் கீர்த்தி. பெறாதவர்களோடு போராடி வென்றால் கீர்த்தியில்லை. தோற்றால் பெரிய அவமானம்.

நிலையிலும் எதிர்த்தே தீருவேன்' என்று இரைந்தான்.

'என்னை வேண்டி யிருந்தால் நீ சொல். உனக்கொரு சிறு காயம் கூடச் செய்ய நான் எண்ணமாட்டேன். உன் குடும்ப மாப்பிள்ளையாகும் தகுதி எனக்குண்டு என்பதை உனக்கு நிரூபித்து நீ என்னை இகழாதிருக்க வேண்டுமென்பதுதான் என் கருத்து.'

அச்சமயத்தில் அடுத்த பாதையில் பெருந் தூசி கிளம்பிற்று. ப்ளான்காவும் லோத்ரெக்கும் குதிரை யேறி வெகு வேகமாக அங்கு வந்து சேர்ந்தார்கள்.

'நான் தோல்வி யடைந்தேன். அக் குதிரை வீரர் எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தார். லோத்ரெக், நீ என்னை விட ஒரு வேளை அதிருஷ்டசாலியாகலாம்' என்றான் கார்லோஸ்.

பெருந்தன்மையும் நயமும் நிறைந்த குரலில் லோத்ரெக், 'இக் குதிரை வீரர் நல்ல விநயமுள்ளவர். என் உடலிலுள்ள காயங்கள் இன்னும் ஆற வில்லை. அதோடு உங்கள் சண்டையில் நான் தலையிட்டு, அதன் ரகசியத்தை அறிவதனால் என் நெஞ்சே புண்படவும் கூடும். நான் இங்கிருந்து போய் விட்டாலே உங்களுக்குள் சமாதானம் ஏற்படும். ப்ளான்கா என்னைத் தன் காலடியிலிருக்கும்படி கட்டளையிட்டாலன்றி நான் இங்குத் தங்கப்போவதில்லை,' என்றான்.

'வீரரே, என் தமயனோடு நீர் இங்கேயே இரும். என்னை உமது சகோதரி எனக் கொள்ளும். இங்கு யாவரும் துன்புற்றிருக்கிறார்கள். நீரும் எங்கள் கூட இருந்து வாழ்க்கைத் துயரங்களை சகிக்கக் கற்கலாம்' என்றாள் ப்ளான்கா.

வீடு திரும்பும் சமயத்தில் எல்லோரும் ஒருவரோடொருவர் கைகுலுக்க வேண்டு மென்பது ப்ளான்காவின் உத்தேசம். ஆனால் யாரும் அதற்கிணங்கவில்லை.

'இபன் அஹமதை நான் வெறுக்கிறேன்' என்றான் கார்லோஸ்.

'அவரைக் காண எனக்குப் பொறுமையா யிருக்கிற தென்றான்' லோத்ரெக்.

'எனக்கோ கார்லோஸிடம் கௌரவமும், லோத்ரெக்கிடம் மன இரக்கமும் பிறக்கின்றது என்றாலும் எனக்கு அவர்களிடம் அன்பு பிறக்க வில்லை' என்றான் அஹமத்.

'சரி, ஒருவரை யொருவர் மதித்து வருகிறோமாகையால் அது கூடிய சீக்கிரத்தில் நம்முள் நட்பை உண்டாக்கும். இங்கு நடந்த சண்டை க்ரனடா நகரில் தெரிய வேண்டாம்' என்றாள் ப்ளான்கா.

௪

காதல் வளர வேண்டுமானால் அதற்கு நல்ல உரம் பராக்கிரமம் தான். சுத்த வீரனிடத்தில் ஒரு காதலிக்குண்டாகும் மனக் கவர்ச்சிக்கு எல்லையே யில்லை. ப்ளான்காவுக்கு இபன் அஹமத் மீதுள்ள மதிப்பு இப்பொழுது பெரிதும் வளர்ந்து விட்டது. அவள் கண்களில் அவன் மாசற்று விளங்கினான். சண்டையில் திறனுயிருந்ததோடு எதிரியிடம் தன் உதாரத்தையும் காட்டினான். கார்லோஸை காயப் படுத்தாது உயிரோடு விட்டது அவளுக்குப் பரம சந்தோஷம். அதற்காக அவனிடம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறாள். இவ்வளவு பெருமை வாய்ந்தவன் தன் மேல் ஆசை கொண்டிருப்பது

தனக்கும் பெருமையே எனக் கருதி னாள். மற்றவர்களிடத்தில் இரக்கங் கொண்டு அவள் தன் காதலனை இன்னும் சில காலம் வரை தன்னிடம் வாராமலிருக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதனால் அவர்கள் மனம் சற்று ஆறுதலடைய அவகாசமுமிருக்கும்.

எப்பொழுதும் அவளையே நினைத்திருந்த இபன் அஹமதுக்கு அவள் பிரிவினை கஷ்டமாக இருந்தது. தனது பாக்கியத்திற்கு மதப் பற்று குறுக்கிட்டு நிற்கிறதே என்று பல முறை துக்கிப்பான். ஒருநாள் பழைய மசூதியொன்று கிறிஸ்தவ மாதா கோயிலாக மாற்றப்பட்டிருந்ததைக் கண்டு அதற்குள் நுழைந்தான். பூஜை முடிந்திருந்த படியால் அங்கு ஜனக் கூட்டமிருக்க வில்லை. கோயில் கட்டிடமோ பிரம்மாண்டமாயிருந்தது. அராபிய சிற்பத் திறமையோடு உள் நாட்டுக் கை தேர்ச்சியும் அதில் கலந்து காணப் பட்டது. விளக்குகள் ஒரு சிலவே எரிந்து கொண்டிருந்தன. மூல ஸ்தானத்தில் பொருள்களெல்லாம் பொன்னாலும் இரத்தினங்களாலும் உயர்ந்த ஜரிகைப் பட்டுகளாலுமே செய்யப் பட்டிருந்தன. ஸ்பானியரின் தெய்வ பக்திக்கு இவை பெரிய அத்தாக்ஷிகளாயிருந்தன. அவர்கள் ஏழைகளாய் அணிய ஆபரணமின்றி, உடுக்க உடையின்றிக்கஷ்டப் பட்டு வந்தாலும் தாம் வணங்கும் தெய்வத்திற்கு அக்குறை இருப்பதைக்காணச் சகியார்கள்.

இபன் அஹமத் நாற் புறத்திலும் நோக்கினான். லோத்ரெக் தனியாக ஒரு தூணுக்கடியில் முழந்தாளிட்டு அசையாமல் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். தானும் அங்கு அவனைப் போல அந்த தெய்வத்தைத் தொழலாமா என்று எண்ணினான். சலவைக் கல் ஒன்றில் திருக்குரான் வாக்கியமொன்று பொறித்திருந்தது கண்ணில்பட்டது. தான் யாருக்கோ துரோகம்செய்ய எண்ணியது போலே மனம் குறு குறுத்தது. உடனே வெளியே வந்து விட்டான். எதிரில் ப்ளான்கா, கோயிலுக்கு வந்து கொண்டிருந்தாள். அவன் மனம் வேறு விதமாகத் தவிக்க ஆரம்பித்தது.

'லோத்ரெக்கைத் தேடி வந்தாயா?' என்று பொறாமை கொண்டு அவளைக் கேட்டான்.

'இந்த அற்ப சந்தேகங்கள் வேண்டாம். எனக்கு நீர் பிடிக்கவில்லையானால் அதை நேராகவே சொல்லிவிடுவேன். இப்போது நான் இங்கு வந்தது எனக்காக அன்று; உமக்காகத்தான். வேறு யாரையும் நான் காதலிக்க மறுப்பதனால் என் தந்தையும் தமயனும் மிக வருந்துகிறார்கள். நாளுக்கு நாள் நான் மெலிவுற்று வருவதை நீரே காணலாம். சீக்கிரத்தில் நீர் கிறிஸ்தவராக மாறாவிட்டால் இங்குள்ள கல்லறைகளில் நானும் கிடக்க வேண்டி யிருக்கும். என்னுள் கொழுந்து விட்டெரியும் காதல், என் இளைத்த உடலை வெகு காலம் வைத்திராது. எந்த நெருப்பு, தீவர்த்தியை ஒளி வீசச் செய்கிறதோ அதே நெருப்புத்தான் அத் தீவர்த்தியைச் சாம்பராக்கி விடுகிறது' என்று சொல்லித் துயருற்ற முகத்தோடு கோயிலுக்குள் நுழைந்தாள்.

இவளுடைய பெருந் தியாகத்தைக் கண்டு இபன் அஹமத் திகைக்கலானான். உற்றார் உறவினர் வருந்தும்படி முன்பின் தெரியாத ஒருவனைக் காதலிப்பதில் ஒரு மகத்தான தெய்வீகத் தன்மை இருக்க வேண்டும். இதற்குத் தான் எது செய்தாலும்

ஈடாகாது. ஆகையால் அவன் உயிரைக் காப்பாற்றத் தான் கிறிஸ்தவமதத்தைத் தழுவுவதென்று நிச்சயித்துக் கொண்டான். மறு தினமே தன் தீர்மானத்தை அவளிடம் வெளியிடுவதென்று புறப்பட்டான். மாளிகையில் அவள் இருக்கவில்லை. கோட்டை மாளிகையில் அவளுக்கு விருந்தளிக்க லோத்ரெக் அழைத்துச் சென்றதாகக் கேள்விப்பட்டான். மறுபடி சந்தேகங்கள் பிறக்கவே நேரில் கேட்டு விடுவதென்று அவர்களிடம் ஓடினான்.

அழைக்காதபடி இவன் வந்ததைக் கண்டு லோத்ரெக் சற்று வியந்தானாலும் இவனை இனிமையாகவே வரவேற்றான். விருந்தளித்த அறையில் மூர்களை வென்ற வீரர்களின் படங்கள் இருந்தன. அவர்களுடைய வீரத்தோற்றமும் கூரிய பார்வையும் பார்ப்போர் கண்களைக் கவர்ந்தன.

'ஐயோ, நாமும் இப்படி எழுதி வைக்காது போனோமே!' என்று இபன் அஹமத் வருந்தினான்.

'நீர் வருவது தெரிந்திருந்தால் நான் விருந்தை வேறு அறையில் நடத்தியிருப்பேன். உமக்கு மனம் நோகும்படி அங்கு ஏதும் இராது' என்றான் லோத்ரெக் மரியாதையாக.

விருந்து முடிந்து வருகையில் எல்லோரையும் உற்சாகப் படுத்த ஒவ்வொருவராகப் பாடுவதென்று நிச்சயித்தார்கள். லோத்ரெக் முதல் முதலில் தன் தாய் நாட்டின் வனப்பைப் பற்றிய தொரு பாட்டைப் பாடினான். அடுத்துப் பாட வேண்டியவன் இபன் அஹமத். தன் பாட்டுகள் கிறிஸ்தவர் மனதை புண் படுத்தக் கூடியவை; ஆகையால் தான் பாடாதிருப்பது நலம் என்றான்.

"எமது வெற்றிகளுக்காக் கிறிஸ்தவ மத விரோதிகள் ஓலமிடும் பாட்டுகளாயிருந்தால் அவைகளைப் பாடலாம். கண்ணீர் சொரிந்து குழமணி தூரம் பாடும் உரிமை தோல்வி யுற்றவர்க்குண்டு' என்று கார்லோஸ் இகழ்ச்சியுடன் கூறினான்.

ப்ளான்கா இக் கடுஞ் சொற்களைக் கேட்டுச் சகியாதவளாய்,

'ஆமாம், அதனால் தான் மூர்களால் தோற்கடிப்பட்ட நம் முன்னோர்கள் பாடிய குழமணி தூரப் பாட்டுகள் அநேகம் நம்மிடமிருக்கின்றன' என்றாள்.

இபன் அஹமத் கார்லோஸின் வசை மொழிகளைப் பொருட் படுத்தாது தான் சிறு வயதில் கற்ற இபன் ஸிராஜ் வம்சத்தைப் போற்றும் பாட்டுகளைப் பாடினான். கார்லோஸுக்கும் பாட இஷ்ட மிருக்க வில்லை. ஆனால் தன் நண்பனுக்கு வருத்த முண்டாகுமே என்று பயந்து தன் குடும்பத்தின் மூல புருஷனான 'ஸிட்'டின் பெருமையைப்பற்றி பாடினான்.

அதைக் கேட்டதும் இபன் அஹமதுக்கு முகம் சிவந்தது. 'கிறிஸ்தவ வீர சிகாமணி என்று போற்றும் இக் குதிரை வீரனை நாங்கள் வெகு கொடியவனாகக் கருதுகிறோம். அவனுடைய தைரியத்தளவு உதாரமும் இருந்திருந்தால்...........'

என்று அவன் சொல்லி வருகையில் கார்லோஸ் அவனைத் தடுத்து கோபத்தோடு, 'அவருடைய உதாரம் அவர் தைரியத்தையும் மீறியிருந்தது. எம் குடும்பத்தின் மூல புருஷரான இவரை மூர்கள்தான் வீணாகப் பழிக்கிறார்கள்' என்றான்.

இதைக் கேட்டதும் இபன் அஹமத் திடுக்கிட்டெழுந்தான். "என்ன

சொன்னாய்? 'ஸித்' உன் குடும்பத்தின் மூல புருஷனா?' என்று உடல் பதறக் கேட்டான்.

'எனது நாடிகளில் ஓடுகின்ற இவ்வுதிரம் அவருடையதே. எனக்கு மத விரோதிகள் மீதுள்ள இப் பகையும் அவர் பரம்பரையினால் பெற்றதே யாகும்' என்று பெருமையுடன் கார்லோஸ் பதில் சொன்னான்.

இபன் அஹமத் ப்ளான்கா புறமாகத் திரும்பி, 'நீயும் பீவார் வம்சத்தைச் சேர்ந்தவள் தானா! அவர்கள் க்ரனடாவைக் கைப் பற்றிய பின் இபன் ஸிராஜ் வம்சத்தினர் வீடுகளைத் தகர்த்து அங்குள்ள ஓர் கல்லறையைக் காத்து வந்த கிழ வீரரொருவரைக் கொன்று வீழ்த்தின குடும்பம் அது!' என்று கோபமும் துக்கமும் நிறைந்த குரலில் சொன்னான்.

கார்லோஸ் குறுக்கிட்டு, 'எங்களை அதைப்பற்றிக்கேட்க உனக் கென்ன அதிகாரம்? நாங்கள் பெற்ற இபன்ஸிராஜ் வம்ச சொத்துக்களை எம் முன்னோர் தம் இரத்தத்தைப் பெருக விட்டுச் சம்பாதித்தார்கள். தம் வாள் வலியையே தமக்குத் துணையாகக் கொண்டிருந்தார்கள்' என்று கோபம் தழல் விட்டெரியச் சொன்னான்.

'ஒரே ஒரு பேச்சு நான் பேச விரும்புகிறேன். நாங்கள் இந்நாட்டை விட்டு வெளியேறினதும் பீவார் குடும்பத்தாருக்கு 'ஸாந்தாபே' (புனிதத்தீ) என்ற பட்டத்தை வழங்கியது எனக்குத் தெரியாது' என்று மனப் பதட்டம் சிறிதும் குன்றாது இபன் அஹமத் சொன்னான்.

'ஆம், இபன்ஸிராஜ்களை வென்ற பீவார் குடும்பத்தாருக்குத் தான் பர்டினாண்ட் கத்தோலிக் அரசர் இப் பட்டத்தை வழங்கினார்' என்றான் கார்லோஸ்.

இபன் அஹமதுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவர்கள் முன்னிலையில் தலை குனிந்து சற்று நேரம் நின்றிருந்தான். கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகிற்று. பிறகு தன் மனதை திடப்படுத்திக் கொண்டு கண்களைத் துடைத்து,

'ப்ளான்கா, உன்மேல் எனக்குள்ள காதல் அராபியா காற்றுப் போலே அனல் வீசி எரிகிறது. நான் அதில் கட்டுப்பட்டுக் கிடக்கிறேன். உன்னை விட்டு என்னால் வாழ முடியாது. உன்னைப் பெறுவதற்காக கிறிஸ்தவ மதத்தை தழுவுவதென்று கூடத் தீர்மானித்தேன்...........'

ப்ளான்காவுக்கு மனம் பூரித்து முகம் மலர்ந்தது. லோத்ரெக் சற்று சோர்வுற்றவன் போல கண்களை மூடிக் கொண்டான்.

'லோத்ரெக், நீர் கவலைப்பட வேண்டாம். பொறும். ப்ளான்கா, இபன்ஸிராஜ் வம்சத்து அரசிளங்குமரன் நான். எங்கள் அரச முத்திரை கொண்ட பழைய கணையாழி என்னிடம் இதோ இருக்கிறது பார். நமக்குள் இனி விவாகம் சாத்தியமா? நீயேசொல்லு' என்று தன் கணையாழியை இபன் அஹமத் அங்கிருந்தவர்களுக்குக்காட்டினான்.

மூவரும் திடுக்கிட் டெழுந்தார்கள் 'அரசிளங் குமரனா?' என்று ஒரு குரலாய் மூவரும் வியப்படைந்து மௌனமாய் அவன் முகத்தையே பார்த்திருந்தார்கள். சற்று நேரம் கழிந்ததும் ப்ளான்கா,

'அருளுடைய தெய்வமே! என் செயல் குற்றமற்றதென நீ காட்டி

விட்டாய். வீர சந்ததியில் தோன்றி ஞரை யன்றி வேறு யாரையும் நான் காதலிப்பது முடியாது என்பதை விளக்கினாய்' என்று தன் இரு கரங் களையும் உயர்த்திவானை நோக்கிய வண்ணமாய்ச் சொன்னாள்.

'ப்ளான்கா, இங்கு லோத்ரெக் இருக்கும்போது நீ இப்படிக் கூறலா மா?' என்றான் கார்லோஸ்.

இபன் அஹமத் குறுக்கிட்டு கார் லோஸை சாந்தப்படுத்தி 'உங்கள் விவாகத்தைச் சரிப்படுத்த நான் வழிசெய்கிறேன்' என்று கூறி ப்ளான் காவைப்பார்த்து,

தெய்வலோக ஹூரியே! காதலும் அழகுமே உருவாகக் கொண்டவளே! இபன் அஹமத் சாகும் வரை உன தடிமையாகவே இருப்பான். அவனு டைய துரதிருஷ்டம் முழுதும் உனக் குத் தெரிய வேண்டிய தவசியம். உன் பாட்டனார் வாளுக்கிரையான கிழவ னார் எனது தந்தைக்குத் தந்தை. அவர் பொருட்டு உன் குடும்பத்தில் ஒருவன் மேல் பழி தீர்த்துக் கொள்வ தென்று தீர்மானித்துத் தான் நான் இங்கு முதல் முதலில் வந்தேன். உனது இரக்கமும் உதார குணமும், அழகும். என்னைப் பரவசமாக்கின. என் தீர்மானம் அதோடு அழிந்தது. நீ ராணியாக இருந்து என் மனதின் மேல் தனி அரசு செலுத்தி வந்தாய், இனி நான் மரிக்கும் வரை கூட செலுத்தி வருவாய்' என்றான்.

அவன் பேச்சைக் கேட்கக் கேட்க ப்ளான்காவின் மனம் பெருங் குழப் பத்தை அடைந்தது. அதை ஒரு வாறு திடப்படுத்திக் கொண்டு துய ருற்ற குரலில்,

'ஆனல் உமது உத்தேசம்தான் என்ன?' என்றாள்.

'ஒரே உத்தேசம்தான். உன்னைப் போற்றிக் கொண்டு, உன் பெருமைக் கழிவின்றி என் வாழ் நாட்களை தூரக் கழிப்ப தென்பதுதான். நீ என்னிடம் செய்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்து விடு. நமது மனம் ஒன்றுபட் டும் எத்தனையோ தடைகள் குறுக்கிட் டுள்ளன. இனி உன் கண்ணில் நான் படவே மாட்டேன். யாவற்றையும் அழிக்கும் கால சக்கரம் என துரு வத்தை உன் நெஞ்சி லிருந்து அகற்றி விடின்........(மேலே பேச எனக்கு நா எழவில்லை. அதற்காக மன்னிக் கவும்)........இதோ இருக்கிறார் இந்த ப்ரெஞ்சு குதிரை வீரர்........உன் தமயனாருக்காக இப் பெருந் தியா கத்தை நீ ஏற்கத்தான் வேண்டும்' என்று அஹமத் நெஞ்சு துடிதுடிக்க நாக்குழறச் சொன்னான்.

லோத்ரெக் சந்தோஷப் பெருக்கி னால் அம் மூரின் பெருந் தன்மைக் காக அவனைக் கட்டித் தழுவி,

'உமது உதார குணத்தைப் பெரி தும் மெச்சுகிறேன். நீர் இங்கு தங்கு வதானல் உமக்கே ப்ளான்காவைக் கொடுக்கும்படி என் நண்பன் கார் லோஸை மன்றாடிக் கேட்பேன். நீர் இங்கு தங்காது தூரதேசம் போவ தானல் உமது காதலியிடம் என் விஷயமாக ஒரு பேச்சுக்கூடப் பேச மாட்டேன். உமது கஷ்ட நிலையைப் பயன் படுத்தி சுகம்பெற விரும்பு பவன் நானன்று. நீர் இவ் விஷயத் தில் கவலையற் றிருக்கலாம்' என்றான்.

கார்லோஸும் இபன் அஹமதின் பெருமையைக் கண்டு வியந்து அவ னோடு கை குலுக்கி,

'உமது பெருந் தன்மையை உமது நடத்தையே காட்டுகிறது; இக் கணை யாழி உமது உயர் குலத்தையும்

விளக்குகிறது. அரச வம்சத்தைச் சேர்ந்த நீர் என் சகோதரியை மணக்க விரும்புவது எமது குலத்துக்கே ஒரு பெரியகௌரவம். நீர் எங்கள்மேல் பழி தீர்க்க எண்ணுவதில் தவறொன்றுமில்லை. நான் உமக்கு பதில் சொல்லக் காத்திருக்கிறேன். நாம் இருவரும் மறுபடி வாட்போர் செய்யலாம் வாரும். நான் தோல்வியுற்றால் முன்பு உங்கள் சொத்தாயிருந்து இப்பொழுது எங்களிடமுள்ளவை யாவும் உம்மையே சேரும். வாட் போருக்கு நீர் வரமறுப்பதானால் நீர் கிறிஸ்தவ மதம் தழுவி லோத்ரெக் கேட்டுக் கொண்டபடி என் சகோதரியை மணத்தல் வேண்டும்' என்றான்.

இபன் அஹமத் மறுபடி சஞ்சலமடைந்தான். தன் மனத்துக் கினிய ஒன்றைச் செய்யும் படி தான் கௌரவிக்கும் இரு நண்பர்கள் வேண்டும் போது அவர்கள் சொற்படி நடக்கலாமா என்று எண்ணினான். ஆனால் தனக்குள் சமயப்பற்றின் வேர் வெகு ஆழத்தில் பாய்ந்திருந்த படியால் அது மனதை குறுகுறுத்துக் கொண்டே தான் இருக்கும் என அஞ்சினான். தன்னால் ஒரு தீர்மானத்திற்கும் வர முடியவில்லை. அதனால் அவன் தன் காதலியைப் பார்த்து,

‘ப்ளான்கா, நீயோ ஒரு விலையில்லா மாணிக்கம்; உன்னை என்னால் பெறவும் கூடவில்லை; பெறாமல் விடவும் கூடவில்லை. இந்நிலையில் நீதான் எனக்கு ஒரு வழி காட்ட வேண்டும். இருவருடைய கௌரவமும் குன்றாதபடி எதை நான் செய்ய வேண்டுமோ அதைச்சொல் செய்கிறேன்' என்றான்.

ப்ளான்கா பெருமூச்செறிந்து தன் இரு கரங்களாலும் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு,

‘உமது பாலைவனத்திற்கே மறுபடி செல்லும்' என்று சொல்லிக் கொண்டே மூர்ச்சித்து விழுந்தாள்.

இபன் அஹமத் மறு பேச்சின்றி அப்படியே அவள் முன் பணிந்து ஸலாம் செய்து விட்டு, திரும்பிக் கூடப்பாராது துறைமுகம் சென்றான். அவன் ஏறின கப்பல் நேராக ஓரான் நகர் வந்து சேர்ந்தது. அங்கு ஹஜ் யாத்திரைக்காகப் பலர் காத்திருந்தனர். தானும் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டான். பிறகு அவன் கதி என்னவாயிற் றென்பது யாருக்கும் தெரியாது.

பாழடைந்த கார்த்தேஜ் நகர் வாயிலில் கடைசி இபன்ஸி ராஜின் கல்லறை என்று ஓரிடத்தைக் காட்டுகிறார்கள். அதில் ஆடம்பரமான எதுவுமில்லை. திறந்த வெளியில் ஒரு பனந் தோப்பில் ஒரு கருங்கல். அக்கல்லின் மத்தியிலுள்ள சிறு பள்ளத்தில் மழை நீர் வந்து தங்கும். பட்சிகள் இனிய குரலில் பாடிக் கொண்டு தமது நீர் வேட்கையை அதில் தீர்த்துக் கொள்கின்றன.

ஜோசப் மாஜினி

—ச. முனிஸ்வாமி பிள்ளை

ஜோசப் மாஜினி ஜினேவா என்னும் நகரத்தில் 1805-ம் வருஷத்தில் பிறந்தவர். இவர் தகப்பனர் ஒரு வைத்தியர். தாயோ புத்தி சாதுர்யத்திலும், பெருங் குணத்திலும், நல்லொழுக்கத்திலும் சிறந்தவள். தன் தாயிடமிருந்தே மாஜினி தமது நற்குண நற்செய்கைகளைக் கற்றுத் தேர்ந்து தமது புகழை உலகில் நாட்டினர். தாயானவள் பிள்ளையை எவ்வளவு புத்திசாலித்தனமாக வளர்க்கிருளோ, அவ்வளவுக் கவ்வளவு பிள்ளை பிற்காலத்தில் மேன்மையடைகிறதுஎன்பதற்கு இவர்சரித்திரம் சான்று பகர்கின்றது. 'விளையும் பயிர் முளையிலே தெரியு' மென்பது போல் இவர் சிறுவராயிருக்கும் போதே ஏழைகளின் கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டு மனஞ் சகியார். மாஜினியார் ஆறு வயதுள்ள பிள்ளையாய் இருக்கும் போது தன் தாயுடன் உலாவச் சென்ற ஒரு நாள் ஓர் ஏழை மனிதன் கோவில் வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு பசியால் வருந்துவதைக் கண்டார். அவ்வேழையைப் பார்த்துக் கொண்டே இவர் சற்று நேரம் அவ்விடத்தில் நிற்பதைப் பார்த்த தாய், தன் பிள்ளை, ஏழையைக் கண்டு பயப்படுகிருனென்று நினைத்துப் பிள்ளையைத் தூரத்தில் இழுத்துக் கொண்டு போனாள். கொஞ்ச தூரம் போகவே, குழந்தை தாயிடமிருந்து திமிறிக் கொண்டு ஓடிப்போய் அந்த ஏழையின் மடியில் உட்கார்ந்து கொண்டு தன் தாயைப் பார்த்து அவ்வேழைக்குக் காசு கொடுக்கும் படி சொல்ல, அப்படியே தாயும் கொடுக்கப் பிள்ளை தன் தாயுடன் நின்றது. இதைக் கண்ட தாயும் ஏழையும் ஆச்சரிய மடைந்து, பிள்ளையிடத்தில் மிக்க அன்பு கொண்டார்கள்.

அக்காலத்திய கிரமப்படி அப்போதுள்ள பள்ளிக்கூடத்திற்குத் தாய் தந்தையர் இவரை அனுப்பிப் பயிற்சி செய்விக்க, கல்வி கேள்விகளில் கற்றுத் தேர்ந்து வக்கீல் பரீட்சையும் கொடுத்தார். வக்கீல் வேலையிலமர்ந்து அதிக செல்வத்தைச் சம்பாதித்துப் பெண்டு பிள்ளைகளுடன் குதூகலமாகத் தங்கள் பிள்ளை ஜீவித்துக் கொண்டிருக்கத் தாங்கள் பார்ப்பதே சாயுஜ்ஜிய மென்று தாய் தந்தையரெண்ணினர். நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைக்கிற. தென்னும் பழமொழிக்கு ஓர் உதாரணமாக இவர்கள் நினைத்த காரியம் கை கூடவில்லை. ஏனெனில், மாஜினி தன் பதினரும் வயதில் ஒரு நாள் வழக்கம் போல் வெளியில் காற்றுடச் சென்ற போது, மிகவும் துக்ககரமான ஒரு காட்சியைக் கண்டார். அக் காலத்தில் கொடுங் கோன்மையான அரசாட்சிகளுக் கெல்லாம் கொடுங் கோன்மை கற்பிக்கக் கூடிய அரசாட்சி இட்டாலி தேசத்தின் வடபாகத்தில் நிலைபெற் றிருந்தது. இக் கொடுங் கோன்மையைத் தொலைப்பதற்கு, அந் நாட்டார் படையெடுத்து சண்டையில் அபஜயமடைய, தங்கள் தேசத்தை விட்டு அயல் தேசத்திற்கு ஓடிப் பிழைக்கும் உத்தேசத்துடன் சிலர் கடற் கரையில் கூடி இருந்தனர். இவர்களைக் கண்டவுடன் மாஜினிக்குத் தன் தேசத்தின் மீது, என்றுமுண்டாகாத ஓர் அவா உண்டா

யிற்று. அன்று அதே க்ஷணத்தில் தன் ஆயுள் நாளைத் தேசத்தின் மேம்பாட்டிற்காகவே கழிக்க வேண்டுமென்று ஆகாயவாணி, பூமாதேவி யறிய ஒரு பிரதிக்கினை செய்துகொண்டார். தான் வக்கீலாகித் தன் சுற்றத்தைச் சந்தோஷப் படுத்துவதைவிடத் தேச நன்மையை நாடுவதே முக்கிய காரியமென்று கருதி அது விஷயத்தில் முழு மனதுடன் உழைக்க ஆரம்பித்தார்.

அப்போது, கார்போனேரிஸ் என்பவர்கள் கொடுங் கோன்மையை வேரறுக்க ஓர் இரகசிய சங்கம் கூட்டினர். அச் சங்கத்தில் தானும் ஓர் அங்கத்தினராகச் சேர்ந்துழைத்தார். 1830ம் வருஷத்தில் அயலாருடைய உதவியை வேண்டக் கார்போனேரிஸரால் தூதனுப்பப் பட்டுப் போன இடத்தில் நம்பிக்கைத் துரோகத்தினால் எதிரி கையிலகப் பட்டுச் சவானே என்னும் கோட்டையிலடைக்கப் பட்டார். சிறையிலிருந்தும் தன் தேசத்தை மறவாமல், பிற்காலத்தில் தான் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி யோசித்து யோசித்துத் தனக்குள் ஒரு விதத் தீர்மானஞ் செய்தார். அத்தீர்மானமாவது, அயலாருடைய உதவியைத் தேடுவது பிரயோசன மற்றது: தன் தேச மேம் பாடு தன் தேசத்தாராலேயே உண்டாக்கப்பட வேண்டுமென்பதே.

இங்ஙனமிவர் சிறையிலிருக்கும் போதே இவரைத் துரைத்தனத்தார் தேசப் பிரஷ்டஞ் செய்து விட்டார்கள். இவர் எதற்கும் அஞ்சாதவராகையால் சற்றும் மனங் கலங்காமல் சிறையினின்று விடுபட்டவுடன் பிரான்சு தேசத்திலுள்ள மார்சேல்ஸ் என்ற நகரத்தில் வந்து தங்கி, அந்த நகரத்திலேயே 'இளைய இட்டாலி' என்னுமோர் இரகசிய சங்கத்தைக் கூட்டினார். அதன் முக்கிய நோக்கம்:—இட்டாலி கொடுங் கோன்மையினின்று நீங்கி, பல அரசாட்சிகளாயிருப்பன ஒரே ஐக்கியப்பட்ட தேசமாகி, தேச முழுதும் குடியரசு நிலையுற்றிருக்க வேண்டுமென்பதே. இச் சங்கத்தின் நோக்கத்தை தன் தேசத்தாருக்குப் பரவச் செய்வதற்கு மாஜினி ஒரு பத்திரிகை பிரசுரித்து வந்தார். ஆனால், இப்பத்திரிகையிலடங்கிய விஷயங்கள் கொடுங் கோன்மை யரசாட்சிகளுக்கு விரோதமாயிருந்தமையால், ராஜாங்கத்தார் பல நிபந்தனைகளின் பேரில் பத்திரிகை இட்டாலிக்குள் பரவச் செய்வதைத் தடுத்தார்கள். ஆனால் ஜனங்கள் ஒரு விஷயத்தில் ஒற்றுமையுடன் ஒரே மனத்தினராயிருக்கும்போது, கொடுங் கோலரசர்கள் யாது செய்யக்கூடும்? இப்பத்திரிகையை ஜனங்களை வாங்கி வாசிக்க ஆரம்பித்தார்கள். இதையறிந்து, ராஜாங்கத்தார் பிரான்சு அரசுக்குத் தெரிவித்து தங்களெல்லையில் இப் பத்திரிகை போடுவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, இனம் இனத்தோடு என்பது போல் அக் காலத்தில் கொடுங் கோன்மைகளிலொன்றாகிய பிரான்சும் மாஜினி பத்திரிகையைப் பதிப்பிக்காமல் நிபந்தனை செய்து அவரையும் ஊரைவிட்டுப் போகும்படிச் செய்தது. அங்கிருந்து ஸ்விட்சர்லாண்டு தேசத்தை 1834ம் வருஷத்தில் சேர்ந்து, அவ்விடத்தில் ஐரோப்பா முழுதும் குடியரசு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் 'இளைய ஐரோப்பா' வென்னும் ஒரு சபையைக் கூட்டினார். அத் தேசத்திலிருந்து டியூக் ஆப் சாவாயின் மேல் முதன் முதல் தானே

படையெடுத்துச் சென்றார். ஆனால் அதில் அபஜய மடைந்து போகவே, இவர் அத்தேசத்திலிருந்து துரத்தப் பட்டார். கடைசியாகச் சுய அரசாட்சிக்குத் தாயகமென்று எண்ணப் படும் இங்கிலாந்திற்கு 1837ம் வருஷத்தில் வந்தார். வந்தபோது தன்னுயுளில் தோன்றாத மன அதைரியங் கொண்டார். ஏனெனில், இவர் இது வரையில் ஏற்படுத்திய ஒரு காரியமாவது முடிவுபெறவில்லை; தன் வாழ்நாளை வீணிற் கழித்ததோடு தன்னை நம்பி அனேக ஜனங்கள் கொடுங்கோன்மைக்கு எதிரிகளாய்க் கிளம்பி, அதனால் அளவிறந்த சங்கடங் களுற்றும் தண்டனைகளடைந்து மிருக்கிறார்கள். இவையெல்லாம் யோசிக்குமளவில் மனக்கலக்க முண்டாகி ஒரு சமயம் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளவும் உத்தேசித்தார். ஆனால் இவருக்குத்தன் தேசத்தின் மீதுள்ள ஆர்வமும், கடவுளிடத்துள்ள முழு நம்பிக்கையும் உற்சாகத்தைக் கொடுத்தன. இப்படி இங்கிலாந்தில் வசித்துக் கொண்டிருக்கும் நாளில் இவருக்குத் தரித்திர திசை வந்துற்றது. இதற்கு முந்தித் தன் தகப்பனுக்குத் தெரியாமல், தன் தாய் அனுப்பிவந்த பணத்தைக் கொண்டுதான் ஜீவனஞ் செய்து வந்தார். இப்போது அப்பணத்தைக் கொண்டே தானும் தன் சிநேகிதர் மூன்று பேர்களும் ஜீவனஞ் செய்ய வேண்டி ஏற்பட்டது. ஒரு தடவை தன் சட்டைகளையும், ஜோடுகளையும் அடகு வைத்துத் தானும் தன் நேசர்களும் பசியாற வேண்டி யிருந்தது. இச்சங்கடத்தோடு, இவருக்கு வரும் கடிதங்களெல்லாம் சரிவர வந்துசேருவதில்லை. இதைப்பற்றிக் கவனிக்க ஆரம்பித்து ஒரு நாள் தன் சிநேகிதர்களை வைத்துக் கொண்டு தம் பேருக்கு ஒரு கடிதமெழுதி உள்ளே மணல் தூள்களை வைத்துக் கடிதத்தை மூடித் தபாலிற் போட்டார். அக்கடிதம் சரியான நேரத்தில் கிடைக்காமல் நேரஞ் சென்று வந்ததுடன் அதன் உள்ளே வைத்திருந்த மணல் தூள்கள் காணப் படவில்லை. இந்த விஷயத்தைக் காமன்ஸ் சபையாரிடம் முறையிட்டுக் கொள்ள, அவர்கள் ஒரு கமிட்டி ஏற்படுத்தி விசாரித்ததில், இவருடைய கடிதங்களை ராஜாங்க மந்திரிகளே பிரித்துப் பார்த்து அனுப்பியதாக ஒப்புக் கொண்டார்கள்.

இவ்வளவு இடருற்ற காலத்தும் தன் தேசத்தை மேன்மைப் படுத்தும் விஷயத்தில் இவர் பின் வாங்கவில்லை. 1848-ம் வருடத்தில் லம்பார்டி தேசம் கொடுங்கோன்மைக்கு விரோதமாகக் கிளம்ப, மற்ற மாகாணங்களும் கலகம் செய்ய ஆரம்பித்தன. இக் கலகத்தில் மாஜினி சம்பந்தப் பட்டிழைத்தார். 1859-ல் நேப்பிள்ஸ், காரிபால்டி என்னும் ஒரு தேசாபிமானியின் வசப்பட, அதை அவர் பீட்மாண்டு ராஜ்ஜியத்தோடு சேர்த்தார். 1886-ல் ஆஸ்திரியாவும், பிரஷியாவும் சண்டையிட்டுக் கொள்ள இட்டாலி, பிரான்சின் சிநேகமென்று ஆஸ்திரியாவோடு சண்டை போட்டு வடக்கேயுள்ள மாகாணங்களைத் தன் ஆளுகைக் குட்படுத்தியது. இவ்விதமாக அக்காலத்தில் இட்டாலியில் ரோமாபுரி போப்பும், பீட்மாண்டு அரசனும் அரசு புரிந்து வந்தனர். கடைசியாக 1870ல் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் போர் நடக்க, ரோமாபுரியின் போப்பு உதவிக்கு வைத்திருந்த தங்கள் சேனையைப் பிரான்சியர் தருவித்துக் கொள்ள, இட்டாலி தேசத்துச் சேனைகள் ரோமைப் பிடித்துக் கொண்டுபோப்பை ராஜ்பத்தினின்று நீக்கி, விக்டர் இமானுயலைத்

பர்மிய ஜாதியினர்

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc. (Hons.)

பர்மியர்கள் முதலாவது 'மிரம்மா' என்றழைக்கப் பட்டு வந்தனர். 'கியான்ஜித்தா என்ற பர்மிய (மூன்றாவது) அரசன் அரண்மனை யொன்று கட்டியபோது, பர்மிய, மான், பியு ஜாதிகள் சங்கீதங்கள் பாடினர் என்று மான் செதுக் கெழுத்துக்கள் கூறுவதில் பர்மியர்களை 'மிரம்மா' என்று குறிப்பிட் டிருக்கிறது. (1101–2). பர்மியர் பாஷையிலும் 'மிரம்மா' வென்று 1190 வருஷத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 'பர்மியர் தேசம்' என்பதற்கு 'மிரம்ம பிரான்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பர்மியர்கள் 'மிரம்ம' என்றழைக் கப் பட்டு வரும்போது இவர்கள் இந்தியர்களைக் 'கல்லா' வென் றழைத்து வந்தனர். பாலி அல்லது சமஸ்கிருதத்தில் 'குலா' வென்றால் 'குடும்பம்', 'வகுப்பு' வென அர்த்தப்படுகிறது. ஆகவே 'கல்லா' வென்றால் 'உயர்ந்த வகுப்பார்' என்று பொருள் படுகிறது. இந்தியர்கள், அக் காலத்தில் கல்வி, நாகரிகம், அரசாங்கம் முதலிய முன்னேற்றங்களுக்குக் காரணமா யிருந்ததால் இந்தியர்களைப் பர்மியர்கள் 'உயர்ந்த வகுப்பினர்' அல்லது 'கல்லா' வென் றழைத்து வந்தனர்.*

டாக்டர் பிளாக்டென் என்பார், பர்மியர்கள் பிறகு மேற்கிலிருந்து வருவோ ரனைவரையும் 'கல்லா' வென் றழைத்தனர் என்று கூறுகிறார். இதை வலியுறுத்தப் பர்மியர்கள் சில அடிமைகளை 'கலா ப்லூ' அதாவது 'வெள்ளைக் கல்லா' என் றழைத்திருக்கிறார்கள்.

இப்பொழுது பொதுவாக வெள்ளையர்களைப் 'போ (வ்)' என்றும், கருப்பான நிறமுடையவர்களை யெல்லாம் 'கல்லா' வென்றும் அழைக்கிறார்கள்.

கரீன் ஜாதியார்

கரீன் ஜாதியாருக்கும், பர்மியர்களுக்கும் மிகுந்த வித்தியாச முண்டு. கரீன்காரர்கள் சுமார் கி. பி. 6-ம் நூற்றாண்டில் சீன தேசத்திலிருந்து பர்மாவுக்குள் நுழைந்தனர். மற்ற இனங்களைப் போலவே இவர்களிட—

* G. H. Luce—Appendix F (P. 301) Burma Census Report 1931.

தங்கள் ஏகாதிபத்தியத்தின் ராஜ்னுக ஏற்படுத்தினார்கள். இக்கலகங்களி லெல்லாம் மாஜினி ஒரு தலைவராகி முழுமனதுடன் உழைத்தாரென்று சொல்லவும் வேண்டுமோ?

இவ்விதமாக, கொடுங் கோன்மை யரசாட்சிகள் வேரறுக்கப்பட்டு, இட்டாலி ஒரே ஐக்கியப்பட்ட நாடாகச் செய்யப்பட்டது. ஜோசப்மாஜினியின் கோரிக்கைகள் நிறைவேறின. இத்தகைய தேசாபிமானி 1872ம் வருடம் மார்ச்சு மாதம் 10வ தமது 67வது வயதில் கடவுளின் திருவடி யடைந்தார். இவ்வுலக முள்ளளவும் இவரது தேசத்தொண்டின் ஞாபகம் மானிடர் மனதில் நிலை பெற்றிருக்கு மென்பதற்கு ஐயமுண்டோ?

சுய சரித்திர மில்லா விட்டாலும் மிகுதியான பரம்பரைக் கதைகள் எழுதப் பட்டிருந்தன. அக்காலத்தில் ஏராளமான பேர் புத்தமதத்தைத் தழுவினர். மற்றவர்கள் தங்கள் மூதாதையர்களைப் போல மரம், மலை முதலியவைகளைத் தொழுது வந்தனர். இவர்கள் முதலாவது 'ஸ்காவ்' 'புவோ' 'ப்காய்' என மூன்று முக்கிய பிரிவாகத் தோன்றியிருந்தனர். இப்பிரிவுகளில் அநேக (பதினேழு) உட்பிரிவுகளு மிருந்தன.

கரீன் ஜாதியார்

இவர்கள் கண்டவை யாவற்றையும் உணவாகப் புசித்து வந்தனர். எலி, பல்லி, பாம்பு, புழுப் பூச்சிகள் யாவையும் வெகு பிரியத்துடனருந்தி வந்தனர். கழுத்தில் வெள்ளை நிறமுடைய கருப்புக் குரங்குகளை வெகு ஆசையுடன் புசித்து வந்தனராம்.* இம் முற்காலப் பழக்கங்கள் நாளடைவில் நாகரிகமடையக் கைவிடப்பட்டன.

இவர்கள் இறந்து போனவர்களை எரித்து அச்சாம்பலிலிருந்து ஓர் முதுகெலும்பை யெடுத்துச் சில மாதங்கள் வரை வைத்திருந்து ஓர் பெரும் விருந்து வெகு விமரிசையாக நடத்திப் பிறகு அவ்வெலும்பைப் புதைப்பார்கள். 'ஸ்காவ்' எனப்படுவோர்கள் 'பர்மியக் கரீன்' என்றழைக்கப்பட்டு, பெரும்பாலும் அங்குமிங்கும் காணப்படுகின்றனர். இவர்கள் முக்கியமாக விவசாயிகளாகத் திகழ்கின்றனர். 'புவோ' என்பவர்கள் அதிகமாக ஆற்றோரங்களில் குடிசைகளில் வசிப்பார்கள். இவர்கள் எல்லா ஜாதியினர்களையும் விட அதிகாரத்திலும் தேர்ந்தவர்கள். 'ப்காய்' என்பவர்கள் 'சிவப்புக்கரீன்' காரர்கள் எனப்படுவார்கள். இவர்கள் 'கரென்னி' யென்ற பீட பூமியில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பிரிட்டிஷாரோடு வெகு நேசமாகக் காலங் கழித்து வந்திருக்கிறார்கள்.

அக்காலத்தில் இப்பீட பூமி வாசிகள் தம்பூர் அடிப்பதில் அதிக ஆசை கொண்டவர்களாயிருந்தனர். ஒரு பக்கம் திறந்த ஓர் அகன்ற குழாயின் மறு பக்கத்தை உலோகத்தகட்டால் மூடிப் பறை சாற்றுவார்கள். சிற்சில சமயம் தங்கள் குழந்தைகளைக் கூட ஈடாகக் கொடுத்து தம்பூர் வாங்கியடிப்பதில் அவ்வளவு பிரிய முடையவர்களாயிருந்தனர். இதைப் பலமாய் அடித்தால் அச் சப்தத்தைக் கேட்டு அடுத்த மலைகளில் வசிக்கும் தேவதைகள் அவர்களுக்கு ஏற்படும்

* Dr. ·Mamis—Burma—Chapter on Ethnoloyg

இடையூறுகளை விலக்கி விடுவார்களென்று நம்பி வந்தார்கள். அப்பறைகளை அடிப்பதனா லுண்டான சப்தத்தின் எதிரொலிகளை வன தேவதைகள் ம்மதப் பட்டு ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறி யெனவும் நம்பினர்!

பர்மியர்களால் 'டவுங்து' அல்லது 'குன்று வாசிகள்' அல்லது 'தென் பகுதியினர்' என்றழைக்கப் பட்ட கரீன்காரர்கள், முக்கியமாக தாட்டூன் நகரைச் சுற்றியிருந்தனர். தாட்டூன் அப்பொழுது ஓர் துறை முகப் பட்டணமாயிருந்தது. இவர்கள் ஆடு மாடுகள் ஏராளமாக வைத்து அவைகளைத் தங்கள் குடும்பத்தோடு ஆங்காங்கு வெகு தூரம் கொண்டு மேய்த்து வெகு காலத்திற்குப் பிறகு வீடு திரும்புவார்கள். தாட்டூன் நகரத்திற்குச் சமீபத்தில் செம்பாறைக் கற்கள் மிகுதியாயிருந்தன. டவுங்து, கரீன்காரர்கள் பாஷையில் தா—டு என்றால் செம் பாறை யெனப் பெயராம். ஆகவே அவர்களின் முக்கிய பட்டணத்திற்குத் 'தாட்டூன்' எனப் பெயர் வைத்தனர். சுமார் கி. பி. 1080-ல் பர்மாவின் முதல் அரசன் அனோரட்டா இந் நகரைக் கொள்ளையடித்து நெருப்பு வைத்து அழித்ததின் பயனாய் அதன் பெருமை குன்றி மறுபடியும் தன்னிலை யடைய வெகு காலஞ் சென்றது.

கரீன் ஜாதிகளில் 'படாங்' என்றதோர் உட் பிரிவினர் மலை, குன்று முதலியவைகளி னோரங்களில் மண் குடிசைகளில் வசித்து வருகின்றனர். இவ் வர்க்கத்தினர்களின் பெண்கள் கழுத்துகளில் பருத்த கம்பி வளையல்களை ஒன்றன்மீ தொன்றாய் அமைத்துக் கழுத்தை எவ்வளவு தூரம் நீட்டக் கூடுமோ அவ்வளவுக் காசைப்படுவார்கள். அதனோடு கால்களிலும் முழங்கால்வரை அவ்வித வளையல்களை அணிந்து கொள்ளுவார்கள்.

கரீன்காரர்கள் பொதுவாய் யாரும் இழிவாகப் பேசி விட்டால் அதனைச் சகித்துக் கொள்ளக் கூடாத அவ்வளவு அவமான மடைவார்கள். இவர்களில் எவரேனும் ஓர் இழி தொழிலில் ஈடுபட்டவ ரெனப் பழிக்கப்பட்டால் உடனே அவர் தமது உயிரை

படாங் ஜாதியினர்

யும் மாய்த்துக் கொள்ளத் துணிவர். பர்மா தேசத்தின் சகல ஜாதிகளேயும் விட இவர்களே தற்சமயம் கிறிஸ்து மதத்தில் ஏராளமாகச் சேர்ந்துவிட்டனர்.

மலைவாசிகள்

மங்கோலியர் வம்சத்தைச் சேர்ந்த மலைவாசிகளில் முக்கியமானவர்கள் மணிப்பூர் ஜாதியார். இவர்கள் முக்கியமாக வடமேற்கு மலைப் பாகங்களில் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் கி. பி. 1750-ல் அவர்கள் அரசன் குரீப்நவாஜ் என்பவன் காலத்தில் இந்து மதத்தைத் தழுவினர். இதற்குப் பிறகே இவர்கள் தங்கள் உண்மைச் சரித்திரத்தை எழுதத் தொடங்கினர். இவர்கள் பொய்யாக, ஆதார மில்லாது இந்து மதப் பரம்பரையைச் சேர்ந்தவர்க ளென்று கூறிக் கொள்வது வழக்கம். இவர்களின் பாஷை, தேகக்கட்டு முதலிய தோற்றங்கள் மங்கோலியர் வம்சத்தை நன்கு உணர்த்துகின்றன. ஆனால் இவர்களின் மங்கோலியர் வம்சத்தின் அம்சங்கள், கச்சார், சில்லெட் ஜில்லாக்களின் வங்காள ஜாதியுடன் கலப்பு மணஞ் செய்து கொண்டு வந்ததால், மாறிக் கொண்டே வந்துவிட்டன. 1810-24ம் வருஷங்கள்வரை மணிப்பூர் பர்மிய அரசர்களின் ஆட்சியிலிருந்து வந்தது. ஆனால் பிரிட்டிஷார் பர்மியரோடு யுத்தம் புரிந்ததில் பர்மியர்களைத் துரத்திவிட்டு 1826-ல் யாண்டபூ உடன்படிக்கையில் மணிப்பூரை ஓர் தனி மாகாண மாக்கி வைத்தனர்.

இப்பொழுது ஆங்கிலேயர்கள் வெகு பிரியத்துடன் விளையாடும், 'போலோ' என்னும் குதிரைமேலேறி ஆடும் மட்டைப் பந்தாட்டம் முதலாவதாக மணிப்பூர் வாசிகளே ஆடிவந்தனர். இந்த ஆட்டத்தை மணிப்பூரை 1570ல் ஆண்ட வாங்குபா என்ற அரசன் முதலாவதாக ஆரம்பம் செய்ததாகக் கூறப்படுகிறது. இங்கிருந்த 6-வது 'லான்சர்ஸ்' என்ற ஆங்கில இராணுவக் கூட்டம் இங்கிலாந்து திரும்பிய போது இப் 'போலோ' ஆட்டத்தை இங்கிலாந்தில் முதன் முதல் ஆரம்பித்தனராம்.

மலைப் பிரதேசங்களில் வசிப்பவர்களில் முக்கியமானவர்கள் மேய்தேய், நாகா, கையெங், சின், கச்சின் முதலியோராவர். இவர்களில் பெரும்பாலோர் 'நாட்' என்னும் வன தேவதைகளையே பூஜித்து மகா மந்திரவாதிகளெனக் கருதப்பட்டு வருகின்றனர். இவர்கள் தங்கள் வன தேவதைகளுக்கு இரத்தம் படைப்பார்கள். அவ்வாறு செய்யாவிடில் அவர்கள்

கச்சின் ஜாதியார்.

உயிருக்கே ஆபத்து நேரிடுமென நம்பி வந்தனர். ஒருவன் மற்றவனால் கொலை யுண்டால் மேலுலகத்தில் கொலை யுண்டவனுக்குக்கொலைசெய்தவன் வேலைக் காரனாக அமைகிறானென்றும் நம்பி னர். இவ்விதமான குருட்டு நம்பிக் கைகள் இம் மலை வாசிகளிடம் ஏராள மாயிருந்து வருகின்றன.

சில மலை வாசிகள் தங்கள் தேவ தைகளுக்குக் கோழி, ஆடு முதலிய வைகளை அடிக்கடி பலி கொடுப்பார் கள். ஒரு கிராமத்தில், எல்லாரும் கூடி ஓர் ஆடும், ஒவ்வொரு வீட்டிலி ருந்து ஒன்று அல்லது அதிகமான கோழிகளையும் வாங்கி 'இனடின்' என்னும் அவர்கள் பூசாரி வீட்டில் சேர்ப்பார்கள். எல்லா இளைஞர்களும், முதியோர்களும் இப்பூசாரி வீட்டில் குழுமி, சேர்த்த ஆடு கோழிகளுக்கு முன்னிருந்து கொண்டு தங்களுக்கு நல்ல விளைவும், சுகமும் ஏற்பட வேண்டு மெனத் துதிப்பார்கள். பிறகு ஓர் ஆற்றோரத்தில் அமைந்திருக்கும் ஓர் மூங்கில் குடிசைக்கு ஆடு, கோழி கள் யாவையுங் கொண்டு போய் அவைகளை வெட்டி, அவித்த அரிசி யும், பூவும் நிறைந்த பெரிய மரக் கட்டில் இரத்தத்தைப் பிடிப்பார்கள். ஆட்டுக் தலையைத் தட்டில் வைத்துத் தங்கள் தேவதை 'நாட்' என்பதற் காக வைத்து விட்டு, மீதி யாவையும் சமைத்து அரிசி, மாமிசம் இவைகளை ஒவ்வொரு தட்டிலும் வைத்துப் படைப்பார்கள். மீதியான மாமிசம், அரிசிகளைத் தங்கள் பூசாரி வீட்டுக்கு எடுத்துச் சென்று கிராமத்தார் அனை வரும் அவைகளைச் சமைத்துப் புசி த்து உல்லாசமா யிருப்பார்கள்.

இம்மலைவாசிகள் பூகம்பம், சூரிய சந்திர கிரணங்கள் இவைகளைப் பற்றி விநோதமான காரணங்களை நம்பி வந்தனர். பூமியின் மத்தியில் ஏதோ ஒரு பிரமாண்டமான மனிதன் இருப் பதாகவும் அவன் சிற்சில சமயம் பூமியை ஆட்டி அதன் மேல் மனிதர் கள் இன்னும் வாசஞ் செய்கிறார் களாவென அறிந்து வருவானும். அவ் வாறு ஆடும் போது இம் மலை வாசி கள் எல்லோரும் ஒன்று கூடி பெருத்த சப்தங்கள் போட்டு ஜனங்கள் வசிப் பதை உணர்த்துவார்கள். அவ்வாறு சப்தங்கள் போடாவிட் டால் அப் பிரமாண்டமானவன் ஒரு வருமில்லை யென்று பூமியைக் கவிழ்த்து விடுவானும்.

சூரிய கிரகணம் உண்டாவதற்குக் கீழ் கண்ட கதையை மலை வாசிகளில் ஒரு பகுதியினர் காரணமாகக் கூறு கின்றனராம்.

ஒரு காலத்தில் அவர்கள் ஜாதிப் பெண் தகப்ப னில்லாமல் ஒரு மக னைப் பெற்றெடுத்தாள். பிறந்தவுடன் அப் பிள்ளை பூமியைத் தோண்டி எழு. எலிகளைப் பிடித்துத் தின்றான். பிறகு அவன் தன் தாயாரைப் பார்த்துத் தனது தந்தையைக் காட்டும்படி கேட்டான். தகப்பனில்லை யென்று கூற நாணி ஒரு புலி அவன் தந்தை யை அடித்துப் புசித்து விட்டதாகக் கூறினாள். ஆகவே அவன் காட்டுக்குப் போய் ஓர் புலியைக் கொன்று அதன் தலையைக் கொணர்ந்து தலைக்கு வைத்துப் படுத்துக் கொண்டு தன் தந்தையைக் காட்டும்படி புலியைக் கேட்டான். காலை வரை தன் தந்தை யைக் காணுமல் மறுபடியும் தன் தாயாரை வினவினான். அவள் ஒரு யானை அடித்துத் தின்று விட்டது என்றாள். அவன் முன்போலவே ஓர் யானைத் தலையை வைத்துப் படுத்தும் தன் தந்தையைக் காணுமல் மறுபடி யும் தன் தாயைக் கேட்டான். அவள்

திரும்பவும் அவன் தந்தை சூரிய வெப்பத்தால் இறந்து விட்டான் என்ருன். ஆகவே அவன் சூரியனேடு யுத்தம் புரியப் போவதால் எல்லா ஜனங்களும் அவனைப் பின் பற்றிவந்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று கூறிச் சென்ருனும். அவன் சூரியனை வெல்ல முடியாதது கண்டு சூரியனின் சகோதரி சந்திரனேடும் சென்று யுத்தஞ் செய்தானும். ஆதலால் சூரிய சந்திரர்களின் பிரகாசம் குன்றிப் போய் விடுவதென நம்பி அக்காலங்களில் ஒரே இரைச்சலாய்ச் சப்தம் போடுவார்கள்.

மின்னல், இடி முதலியவைகள், அவர்களின் தேவதை 'நாட்' என்பவைகளால் உண்டாக்கப் படுகின்றன வென்பார்கள். ஓர் மரம் மின்னலால் எரிக்கப் பட்டால் பெரிய தேவதை அம்மரத்தின் சிறிய தேவதையின் மீது மின்னலை எறிந்ததென நம்புகிறார்கள். மேலும் ஓர் மனிதன் தாக்கப் பட்டால், அவன் குற்றமுள்ளவன் வசிக்கக் கூடாதென, 'நாட்' மின்னலைக் கொண்டு எரித்து சாக அடித்ததெனவும் நம்புவார்கள்.

நாகா மலைவாசிகள் சிறிது நாகரிகமடைந்தவர்கள். இவர்களிடத்தும் மேல் குறித்த குருட்டு நம்பிக்கைகளிருந்தன. இவர்கள் கலியாணம் வெகு சாதாரணமாகவும், தங்கள் சொந்தக்காரர்களுக்குள்ளும் செய்து கொள்ளுவார்கள். இவர்கள் இரண்டு மனைவிகளுக்கு மேல் வைத்துக் கொள்ள மாட்டார்கள். கைம்பெண்களை அவர்களின் கணவர்களுக்குச் சொந்தக் காரர்கள் மனைவிகளாகச் சேர்த்துக் கொள்வார்கள். கலியாணஞ் செய்யுமுன் நேசமேற்படுவதால் கலியாணத்திற்கு முன் குழந்தைகள் பிறந்து விடுவது சர்வ சாதாரணம்.

உலகத்தின் ஜனத்தொகை

1937ம் வருஷக் கடைசியில்

ஆசியாவில்	...	1,162,000,00
ஐரோப்பாவில்	...	520,000,000
ஆப்ரிக்கா	...	151,000,000
அமெரிக்கா	...	266,000,000
ஆஸ்திரேலியா	...	11,000,000
மொத்தம்		2,110,000,000

ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

—ரா. வேங்கடராமன் B. A.

ஸ்ரீ ராமசாமி நாயக்கர் குஸ்திக்கென்றே பிறந்த யுத்த வீரர். அஞ்சா நெஞ்சுடையவர். கல்லுக்கும், கடவுளுக்கும், அபகீர்த்திக்கும், பொது ஜன வெறுப்புக்கும், சர்க்கார் சட்டங்களுக்கும் பயப்படாதவர். யுத்த களவாடத்தில் சேராததால் எப்பொழுதும் யாருடனாவது அரசியலிலும் சமூக விஷயத்திலும், வாய்ச் சண்டை, எழுத்துச் சண்டை போடுகிறார். தமது தோற்றத்திற்குப் படும் அநீதிகளை எதிர்த்துத் தனியாகவும், கூட்டம் கும்பலுடனும் போராடுவார். சில சமயங்களில் ஸ்பானியக் கதை டான் க்விக்ஸாட் (Don Quixote) மாதிரி, இல்லாத அநீதிகளை இருப்பதாக எண்ணிக் கிளர்ச்சி செய்வார். பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர் இவர் பிறந்திருத்தல் வேண்டும். இவரது கொள்கையும், பிரசாரமும், பேச்சும் அப்பொழுது பயன் பட்டிருக்கும்.

ஸ்ரீ நாயக்கர், வெளி நாடுகள் சென்றதிலும், தொண்டர் மூலமும், வாழ்க்கையின் அநுபவத்திலும் ஆங்கிலம் கற்றுள்ளார். தமிழ், பாமர நடையில் வெகு நேரம் இடைவிடாது, சளைக்காது பேசுவார். பத்திரிகை நடத்தி வருகிறார். புத்தகங்கள் பதிப்பித்துள்ளார்.

வைக்கம் சத்தியாக்கிரக வீரர் என்று சொன்னால் அது ஸ்ரீ நாயக்கரைத் தவிர வேறு யாரையும் குறிக்காது. இப்பொழுது வைக்கத்தில் ஹரிஜனங்கள் கோயிலுக்குள் போகலாம். அந்தப் பெருமையில் இவருக்குப் பெரும் பங்குண்டு. தாழ்த்தப்பட்டோரும், பிராமணரல்லாதாரும், முஸ்லீம்களும், எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையப் பாடுபடுகிறார். இவரது சமூக சீர்திருத்த வேலையில் அரசியலைக் கொண்டு புகுத்தாமலிருந்தால், இவர் புகழ் சொல்லொணாது.

ஸ்ரீ நாயக்கர், தனிப்பெரும் பேறுடையவர். இன்னும் கொஞ்சம் சீரிய நோக்கமும், உன்னத லட்சியமும் இருந்தால், ராஜாராம் மோகனராயாகவோ, 'ஸ்வாமி விவேகானந்தராகவோ போற்றப் படுவார். இவர் சிறந்த, பயப்படாத சமூக சீர்திருத்தவாதி. இவருடைய வெள்ளைத் தாடியும், கட்டு விடாத தேகமும் நம்மை ஆச்சரியப்படுத்துகின்றன. உண்மையில் இவர் என்றென்றும் இளைஞர். 'கடவுளில்லை. அவ்விருந்தாலும் நமக்கு அக்கரையில்லை. அப்படி அக்கரையிருந்தாலும் அவர் பொருட்டுச் செலவு செய்யலாகாது' என்பார். இந்த தோரணையிலே இவர் பேசுகிறபோது எல்லாரும் வயிறு குலுங்கச் சிரிப்பார்கள். இவரைப் பார்த்துச் சிரிக்கிறார்களா, அல்லது இவரைப்படைத்த கடவுளைப் பார்த்துச் சிரிக்கிறார்களா வென்பது தெரியாது. ஆனால் இவர் பேச்சிலே எல்லாரும் லயப்பட்டு விடுவார்கள். இந்தச் சாமர்த்தியம் இவருக்கு நிறைய இருக்கிறது. இந்த விஷயத்தில் இவருக்கு ஈடாகத் தமிழ் நாட்டில் வேறு யாரைச் சொல்வது?

ஸ்ரீ நாயக்கர், அரசியலில் சிலகாலம் காங்கிரஸிலிருந்தார். சிறை சென்றார். சுயராஜ்யக் கட்சி என்று காங்கிரஸுக்குள்ளேயே தனிக்கட்சி

ஒன்று ஏற்படக் கூடாதென்று தீவிரமாகப் பிரசாரம் செய்தார். பின்னர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தார். அதிலும் தீவிரமாக உழைத்தார். இவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அந்தக் கட்சியின் நன்மைக்காக இவர் உழைத்த உழைப்பில் யாருமே சந்தேகித்தது கிடையாது. பின்னர், ஜஸ்டிஸ் கட்சியின் ஒரு பிரிவாகச் சுயமரியாதைக் கட்சியைத் தோற்றுவித்தார். இது ஒரு சோஷலிஸ்ட் கட்சி என்று சொல்லலாம். இந்தக் கட்சி வளர்ச்சிக்காக இவர் வேலைசெய்து கொண்டு வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஆனால் காங்கிரஸிடம் துவேஷம் காட்டிப் பிரசாரம் செய்து வருவது தான், இவரும், இவருடைய கட்சியும் முன்னேற்ற மடைவதற்குத் தடையாயிருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களில் இவர் ஒருவர். இவர் தவிர, மற்றவர்களுக்கு ஞாபகச் சின்னங்களும், உயர் பதவிகளும் கிடைத்து விட்டன. ஆனால் இவருக்கு எதிர்ப்பும் துவேஷமும் கிடைத்திருக்கின்றன. இவரைக் கொண்டாடுவாரில்லை. இவர், ஆற்று வெள்ளத்துடனும், பாவும் தீயுடனும், காலச் சக்கரத்துடனும் ஒண்டியாக, உதவி ஊக்கமளிப்பாரின்றி, தன்னலங்கருதாது, ஓயாது போராடுகிறார். ஆனாலும் சோர்வும் களைப்பும் தெரியவில்லை. வயதோ ஆகிவிட்டது. நண்பர்களோ கைவிட்டனர். இவர் மாதிரி சிறந்த, இவருக்கு நண்பரான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், மந்திரிப் பதவி யேற்று ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கி விட்டார். ஸ்ரீ ராமசாமிக்குப்போர் துவங்க ஆசை. ஆனால் பேரரோ பெரிது. இவருக்குத் துணை இவருடைய ஊக்கந்தான். என்ன செய்யப்போகிறார்?

ஸ்ரீ ராமசாமி நாயக்கரிடம் வெகு நேரம் நன்றாக எங்கும் பேசக் கற்றவர் பலர். பயனடைந்தவர் எண்ணிலர். சீர் பெற்றவர் அநேகர். நன்றி கெட்டவர் கணக்கிலர். சில சீடர்கள், இவரைக் கைவிட்டு விட்டு காங்கிரஸில் புகுந்துள்ளனர். ஆனால், தமிழ் நாடு இவரை மறக்கவே முடியாது.

இங்கிலாந்தின் ஹைகோர்ட் என்கிற ராயல் கோர்ட் 1882ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவரையில் இங்கு 710,000 வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டு தீர்ப்பளிக்கப் பட்டிருக்கின்றன. சுமார் மூவாயிரம் பேர், இந்தக் கோர்ட்டுகளுக்கு தினசரி போக வர இருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

பாரிஸ் நகரத்தில் பிச்சைக்காரர்களுக்கென்று ஒரு பத்திரிகை நடைபெறுகிறது.

ஃ ஃ ஃ

மெக்ஸிகோவில் பிச்சைக்காரர்களுக் கென்று ஒரு சங்கம் இருக்கிறது. இதில் ஒரு லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு தேனீயானது, சுமார் கால் வீசைத் தேனைச் சேகரிக்க நாற்பதினாயிரம் மைல் சுற்றவேண்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே இந்தியாவின் மீது படையெடுத்து வந்த அலெக்ஸாந்தர் மன்னனுடைய தகப்பனார் பிலிப் மன்னனுடைய காலத்தில்தான், க்ஷவரம் செய்து கொள்கிற பழக்கம் ஏற்பட்டதாம். தனது போர் வீரர்களை, தாடி பிடித்துச் சத்துருக்கள் இழுத்துச் செல்வதைத் தடுப்பதற்காகவே, இங்ஙனம் க்ஷவரம் செய்து கொள்ள வேண்டு மென்று அவன் உத்திர விட்டானும்,

ஆஸ்திரியா எப்படி விழுங்கப்பட்டது?

—"அரசியல் மாணுக்கன்"

1918ம் வருடம் ஐரோப்பிய யுத்தம் முடிவு பெற்ற பிறகு ஆஸ்திரியாவின் சுதந்திரம் பல உடன் படிக்கைகளிலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இருபது வருஷங் கழித்து, ஆஸ்திரியா, ஜெர்மனியோடு ஐக்கியமாகி விட்டது. இந்த இருபது வருஷ காலத்திற்கு இடையே நடைபெற்றநிகழ்ச்சிகளைத்தொடர்ச்சியாக நேயர்கள் தெரிந்து கொள்வார்களானால், ராஜ தந்திரிகள் உடன் படிக்கைகளுக்கு எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பது நன்றாகப் புலப்படும்.

1. 8-1-1918ல் பிரசிடெண்ட் வில்ஸன் தமது பதினான்கு திட்டங்களை நிர்த்தாரணம் செய்து வெளியிட்டார். இதில் பத்தாவது திட்டம் பின்வருமாறு:—ஆஸ்திரியா ஹங்கேரியிலுள்ள ஜனங்கள், சுய அபிவிருத்தியடைய பூரண உரிமை கொடுக்கப் பட வேண்டும்.

2. 28-6-1919ல் வார்சேல் சமாதான உடன் படிக்கை கையெழுத்திடப் பெற்றது. இதில் 80-வது ஷரத்து பின் வருமாறு கூறுகிறது:—ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரிக்கிறது. சர்வ தேச சங்கத்தின். அங்கீகாரமின்றி இந்தச் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது.

3. 10-9-1919ல் நேசக் கட்சியினரும் ஆஸ்திரியாவும் செயிண்ட் ஜெர்மேனில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் 88-வது ஷரத்து, ஆஸ்திரியாவின் சுதந்திரம் பறிக்க முடியாதது என்று கூறுகிறது. தவிர, ஆஸ்திரியாவின் சுதந்திரம் பாதிக்கக் கூடிய விதமாக எந்த விதச் செய்கையையும், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எந்தத் தேசமும் செய்வதில்லை யென்று இந்த ஷரத்தின் கடைசி பாகம் கூறுகிறது.

4. 4-10-1922ல் ஜினீவாவில் ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டது. இதில் ஆஸ்திரியா, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், இத்தலி, ஜெக்கோ—ஸ்லோவேகியா, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன. இதில், ஆஸ்திரியாவின் பொருளாதார புனருத்தாரணவேலையைச் செய்யும் பொறுப்பை சர்வ தேச சங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறப் பட்டிருக்கிறது. செயிண்ட் ஜெர்மேன் உடன் படிக்கையிலுள்ள ஷரத்துக்களின்படி நடந்து கொள்ளச் சம்மதிப்பதாக ஆஸ்திரியாவும் இசைந்திருக்கிறது.

5. 19-3-1931ல் ஜெர்மன் அரசாங்கமும் ஆஸ்திரியா அரசாங்கமும் சர்வதேச நீதி ஸ்தலத்தை ஒன்று படுத்தி விட ஒரு சமரஸ ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றன. ஆனால் இப்படி ஐக்கியப் படுத்தி விடுவது, மேலே கூறப்பட்ட செயிண்ட் ஜெர்மேன் உடன் படிக்கைக்கும் ஜினீவா உடன் படிக்கைக்கும் முரண்பட்டதென்று சொல்லி மேற்படி முயற்சி கைவிடப் பட்டது.

6. 17-2-1934ல், பிரான்ஸ், இத்தலி, கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து, ஆஸ்திரியாவின்

சுதந்திரத்தைப் பாதுகாப்பது அவசியமென்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன.

7. 17-3-1934ல் ரோமா புரியில், ஆஸ்திரியா ஹங்கேரி நாடுகளும் இத்தலியும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதில், ஐரோப்பாவின் சமாதானத்தைக் காப்பாற்றுவதற்கும், சீர் கெட்டுப் போன பொருளாதார நிலைமையைச் சரிப்படுத்தி வைப்பதற்கும் மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் ஒத்துழைப்பதாகவும் ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகிற அஸ்திவாரத்தைக் கொண்டு தான் இந்த ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

8. 21-8-1934ல் முஸோலினியும் ஷுஷ்னிக்கும் சந்தித்துப் பேசினார்கள். இது சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில் பின் வரும் விவரங்கள் காணப்பட்டன :—ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதன் சம்பந்தமாக என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி ஒரேவிதமான அபிப்பிராயமே ஏற்பட்டிருக்கிறது. மத்திய ஐரோப்பாவில் சமாதானம் நிலை பெறுவதற்கு ஆஸ்திரியாவின் சுதந்திரம் அவசியமாயிருக்கிறது.

9. 27-9-1934ல் பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், இத்தலி ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து, ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதன் அவசியத்தை மீண்டும் வற்புறுத்தி ஓர் அறிக்கை வெளியிட்டன.

10. 6-10-1934ல் முஸோலினி, ஒரு பிரசங்கத்தில் பின் வருமாறு குறிப்பிட்டான் :—ஆஸ்திரியக் குடியரசின் சுதந்திரத்தை நாம் பாதுகாத்து வந்திருக்கிறோம். இனியும் பாது காப்போம். இந்தச் சுதந்திரத்திற்காக ஒரு சான்ஸலர் (டாக்டர் டால்பஸ்) தமது ரத்தத்தையே அர்ப்பணம் செய்திருக்கிறார். அவர் உருவத்திலே சிறியவராயிருக்கலாம். ஆனால் அவருடைய ஆத்மா பெரிது.

11. 7-1-1935ல் பிரான்ஸும் இத்தலியும் சேர்ந்து ரோமா புரியில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதில் ஒரு ஷரத்து, ஆஸ்திரியாவின் சுதந்திரத்திற்குப் பாதகம் ஏற்படுமானால், ஆஸ்திரியாவுடன் கலந்து அதற்கு என்னென்ன பரிகாரங்கள் செய்யப்படலாம் என்று தீர்மானிப்பதாகக் கூறுகிறது.

12. 3-2-1935ல் பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரெஞ்சு அரசாங்கமும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில், ஆஸ்திரியாவின் சுதந்திரம் பாதிக்கப்படும் பட்சத்தில், அதற்கு என்னென்ன பரிகாரங்கள் தேடலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்கக் கூடும் வல்லரசுகளில் கிரேட் பிரிட்டனும் ஒன்றாயிருக்கும் என்று உறுதி கூறப்பட்டது.

13. 14-4-1935ல் ஸ்ட்ரெஸாவில் கூடிய பிரான்ஸ், இத்தலி, கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் சேர்ந்து, 1934ம் வருஷம் பிப்ரவரி மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் கூறப்பட்ட வாக்குறுதிகளையும், 1935ம் வருஷத்து ரோமாபுரி, லண்டன் ஒப்பந்தங்களையும் மீண்டும் ஊர்ஜிதப்படுத்துவதாக ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

14 21-5-1935ல் ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில் பேசுகிறபோது பின் வருமாறு குறிப்பிட்டான் :-ஆஸ்

திரியாவின் உள் நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டுமென்பது ஜெர்மனியின் நோக்கமல்ல. அதனை ஜெர்மனியோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் அதற்கு இல்லை.

15. 11–7–1935ல் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இது சம்பந்தமாக, ஜெர்மன் பிரசார மந்திரி டாக்டர் கெப்பல்ஸ் வெளியிட்ட அறிக்கை பின் வருமாறு கூறியது:— (1) 21–5–36ல் ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில் கூறியபடி, ஆஸ்திரியாவின் பூரண சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரிக்கிறது. (2) ஒவ்வொரு நாடும், அந்தந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையை, உள் நாட்டு விவகாரமாகவே கருதும். (3) ஆஸ்திரியா, தன்னை ஒரு ராஜ்யமென்று கருதிக் கொண்டுதான், அதன் கொள்கையும், ஜெர்மனியிடத்தில் அது நடந்து கொள்கிற மாதிரியும் இருக்கும்.

16. 11–2–1938ல் மேற்படி நிலைமையை ஊர்ஜிதப்படுத்தி, ஹிட்லருக்கும் ஷுஸ்னிக்குக்கும் ஹிட்லரின் வாசஸ்தலமாகிய பெர்ச்டெஸ் காடனில் ஓர் ஒப்பந்தம் நிறைவேறியது.

17. 11–3–1938ல் ஆஸ்திரியா, ஜெர்மனியில் ஐக்கியமாகி விட்டது.

18. 14–3–1938ல் ஆஸ்திரியாவை ஜெர்மனிக்குள் அடக்கிக்கொண்டு விட்டதற்காக ஹிட்லரை முஸோலினி பாராட்டினன். பிரிட்டிஷ் அரசாங்கம் இதில் தலையிட முடியாதென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில், சேம்பர்லேன் கூறி விட்டார்.

19. 10–4–38ல் ஆஸ்திரியாவில் பொது ஜனவாக்கு. ஆஸ்திரியாவின் கபளீகரத்தை இது ஸ்திரப்படுத்தி விட்டது.

வார்ஸா என்னும் நகரத்தில் திருட்டுத் தொழிலைப் பழக்கிக் கொடுப்பதற்காக 'நமது வாழ்க்கை' என்ற பெயருடன் ஒரு பத்திரிகை நடக்கிறது.

ஃ ஃ ஃ

உலகத்தில் 21 நாடுகளில், பெண்களுக்கு பார்லிமெண்டரி ஓட்டுரிமை இருக்கிறது. 14 நாடுகளில் இந்த உரிமை இல்லை. இப்படி ஓட்டுரிமையை மறுத்துள்ள நாடுகளில் 9 நாடுகள் ஐரோப்பாவில் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத குருவான போப்பரசர் வசிப்பது ரோமாபுரிக்குச் சமீபத்தில். இதற்கு 'வாடிகன் சிடி' என்று பெயர். இதன் விஸ்தீரணம் 108 $\frac{3}{4}$ ஏக்கர். ஒரு தனி நாட்டுக்குரிய எல்லா உரிமைகளும் இந்த ராஜ்யத்துக்கு உண்டு. இதில் பூரண பிரஜா உரிமை பெற்று வசிக்கிறவர்கள் 716 பேர். ஆனால் இந்த ராஜ்யத்தில் 700க்கு மேற்பட்ட டெலிபோன்கள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

அரச குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு அதிலும் பட்டத்துக்கு வர வேண்டிய பிள்ளைகளுக்கு நீளமான பெயர்கள் வைப்பது சர்வ சாதாரண வழக்கம். இத்தலியின் அரசியல் குமாரனுடைய பெயரைக் கேளுங்கள்:— விட்டோரியோ, எமானியுலே, ஆல்பர்டோ, கார்லோ, தியாடோரோ, உம்பர்டோ, போனிபேஷியோ, அமேடியோ, டாமினியானோ, பெர்னுடினோ, வெனியுவாரா, மார்ஷிலோ. ஆக பன்னிரண்டு பெயர்கள். இவ்வளவு பெயர்களையுடைய குழந்தை, 31-5-37ல் இத்தலியின் இளவரச தம்பதிகளுக்குப் பிறந்தது.

ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா

—டாக்டர் ஹ. பெய்தான்

இந்த ஜெர்மானிய தமிழ்ப் பண்டிதர், தமது நாட்டுக்காகவும், தலைவனுக்காகவும் வக்காலத்து வாங்கிக் கொண்டு இந்தக் கட்டுரையில் பேசியிருக்கிறார். இந்தக் கட்டுரையில் கூறியுள்ள அனைத்தையும் அப்படியே நாம் அங்கீகரிக்க வேண்டுமென்பதில்லை. ஆனால், 'ஆஸ்திரியாவே ஸ்வாஹா'வைப் பற்றி ஜெர்மானியர்களுடைய கருத்தென்ன வென்பதை நாம் தெரிந்து கொள்ளலாமல்லவா? இரு தரத்து அபிப்பிராயங்களையும் நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதற்காகவே, ஆஸ்திரியா எப்படி விழுங்கப் பட்டதென்பதைப்பற்றித் தேதி வாரியாகத் தொகுத்து ஓர் "அரசியல் மாணுக்கன்" எழுதியுள்ள கட்டுரையையும் பிரசுரித்து, ஸ்ரீ பெய்தானுடைய இந்தக் கட்டுரையையும் அடுத்தாற் போலவே பிரசுரித்திருக்கிறோம்.

முதலிலே நாம் ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். அதாவது, ஜெர்மனியும் ஆஸ்திரியாவுமா? அல்லது ஜெர்மனிக்குள் ஆஸ்திரியாவா? சரித்திர பூர்வமாக நாம் பார்த்தோமானால் பின்னது தான் சரி. மேலேயுள்ள கேள்வி எப்படியிருக்கிறதென்றால், இந்தியாவும் வங்காளமுமா? இந்தியாவுக்குள் வங்காளமா? இந்தியாவிலும் ஜெர்மனியிலும் சரித்திரமானது ஒரே மாதிரியாகத் தான் வளர்ச்சி பெற்றிருக்கிறதென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது!

ரோம ஏகாதிபத்தியம் வீழ்ச்சியுற்ற பிறகு, ஷார்லமேன் என்ற அரசன், தற்போதைய ஐரோப்பாவுக்கு அடிகோலினன். இந்தப் பெரிய மன்னன் எல்லா ஜெர்மானியரையும்ஒன்று கூட்டி ஒரு ராஜாங்கத்துக்குட் படச் செய்தான். இந்த ராஜ்யம், மேற்கே பிரன்னீஸ் மலை முதல் கிழக்கே தற்போதுள்ள புடாபெஸ்ட் நகரம் வரையில் பரவியிருந்தது. இந்த ராஜ்ய எல்லைக்குள் அரசனுடைய ஆணை எவ்விதத் தடங்கலுமின்றிச் சென்று வந்தது. இந்த ஷார்லமேன் மன்னனுக்கப்பால் சுமார் நூறு வருஷங்களுக்குப் பிறகு, இந்த ராஜ்யம் இரண்டு கூறாகப் பிரிந்தது. மேற்குப் பாகம் பிரான்ஸ் என்று அழைக்கப் பட்டது. அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் இந்தப் பிரான்ஸின் எல்லைப்புறம் அடிக்கடி மாறி வந்திருக்கிறது. கடைசி முறையாக இந்த எல்லைப்புறம் மாறியது வார்சேல் சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர். இப்பொழுதும், தனது எல்லைப்புறம் ரைன் நதி வரையில் விஸ்தரித்திருக்க வேண்டு மென்பது அதன் விருப்பம். சென்ற சில நூற்றாண்டுகளாகவே, ஐரோப்பாவிலே ஏற்படுகிற தொந்திரவுகளுக்கு பிரான்சு காரணமாயிருந்திருக்கிறது. முக்கியமாக, அதன் கிழக்கு ராஜ்யமாகிய ஜெர்மனி வலுக்க வலுக்க, அதன்—பிரான்சின்—தொந்திரவுகள் அதிகப்படலாயின.

பிரான்சின் இந்தமனப்போக்குக்கு என்ன காரணம்? பிரான்சில், அரசன், தன் அதிகாரத்தைச் சில பிரபுக்களோடு பங்கிட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் பிரெஞ்சு மன்னர்கள், வரிசைக் கிரமமாக அநுஷ்டித்து வந்த முறைகளினால் இந்தப் பிரபுக்கள் ஒதுக்கப்பட்டு வந்தார்கள். அர

சன், பிரபுக்களின் மீது ஆதிக்கம் செலுத்தும்படியான நிலைமை ஏற்பட்டது. பதினுன்காவது லூயி மன்னன் தான், 'நான் தான் அரசன்' என்ற பிரயோகத்தை சிருஷ்டித்தவன்.

ஜெர்மனியில், இதற்கு முற்றிலும் மாறுகவே அபிவிருத்தி ஏற்பட்டு வந்தது. அரசருடைய அதிகாரம் பிரபுக்களின் மீது செல்லவில்லை. இந்தப் பிரபுக்களில் சிலர் நாளா வட்டத்தில் சுயேச்சையுள்ள அரசர்களாகத் தோன்றி விட்டார்கள். இதனுல் அரசராயிருக்கப்பட்டவர், அல்லது, சக்ரவர்த்தி என்ற பெயரால் அழைக்கப்பட்டவர், சுயேச்சையாக ஒன்றையுஞ் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு சிற்றரசரும் தன்னலத்தையே கவனித்து வந்தனர். பிரெஞ்சு அரசர்கள், தங்களுக் கேற்பட்ட பலத்தையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு பிரெஞ்சு ராஜ்யத்தின் எல்லையை விஸ்தரித்துக் கொண்டு வந்தனர். பிரெஞ்சு ராஜ்யத்தின் எல்லையை விஸ்தரிப்பது என்ருல் ஜெர்மன் எல்லைப் புறத்தைத் தாக்குவது என்பதாகும். இங்ஙனம் தாக்கிக் கொண்டு வந்தது பதினுன்காவது லூயி மன்னன் காலத்திலிருந்து வார்சேல் உடன் படிக்கை வரையில் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் பிளவுகளை உண்டு பண்ணுவது பிரெஞ்சு அரசாங்கத்தின் சிறந்த ராஜ தந்திரமாக இருந்தது. இந்தப் பிளவு ஏற்படுத்தும் முயற்சியைச் சமாளிக்க ஜெர்மனி ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமானுல் அது தனக்கு விரோதமாகச் செய்யப் படுகிற முயற்சி யென்று பிரான்ஸ் கருதி வந்தது. 1870-71ம் வருஷத்தில் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் நடைபெற்ற யுத்தத்திற்குக் காரணம் இத்தகைய முயற்சிகளுள் ஒன்றுதான்.

ஷார்லமேனுக்குப் பிறகு, இரு கூருக அவனுடைய ராஜ்யம் பிரிக்கப்பட்டதென்று சொன்ணேமல்லவா? இதில் மேற்கு ராஜ்யந்தான் பிரான்ஸ். கிழக்கு ராஜ்யம் ஜெர்மனி. ஆண்ட்வர்ப் நகரத்திலிருந்து வியன்னு நகரம் வரை, இந்த ஜெர்மன் ராஜ்யம் விஸ்தரித்திருந்தது. இந்த ராஜ்யத்துக்குள் ளடங்கியதுதான் ஆஸ்திரியாவும். இது ஒரு சிற்றரசர் பரம்பரையின் ஆளுகைக் குட்பட்டிருந்தது. இதனையாண்ட சிற்றரசர்கள், அநேக சந்தர்ப்பங்களில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் சிற்றரசர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். சென்ற நூற்றுண்டுகளில் அநேகந் தடவை இப்படி நடந்திருக்கிறது. இப்படி இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டாலும், இவர்கள் ராஜ்யத்தின் நன்மையை நாடவில்லை. ஆஸ்திரியாவை ஆண்ட சிற்றரசர் பரம்பரைக்கு ஹாப்ஸ்பர்க் (Habsburgs) என்று பெயர். இவர்கள், தங்கள் நாட்டு—ஆஸ்திரியா—நன்மையைத்தான் கவனித்தார்களே யொழிய ஏகாதிபத்தியத்தின் நன்மையை நாடவில்லை. இதற்குச் சமதையான உதாரணங்களை இந்தியாவில் மொகலாயர் ஆட்சியின் போது பார்க்கலாம். ஹாப்ஸ் ஸ்பர்க் மன்னர்களின் கவனக் குறைவு காரணமாக, ஜெர்மன் ராஜ்யத்தைச் சேர்ந்திருந்த ஸ்விட்ஜர்லாந்து, நெதர்லாண்ட்ஸ், பர்கண்டி, பால்டிக் பிரதேசங்கள் முதலியன கை நழுவிப் போயின. சிறப்பாக நெதர்லாண்ட்ஸ் பிரதேசங்கள் கை நழுவிப்போனது, பலவித பாதகங்களை உண்டுபண்ணி விட்டது. முக்கியமாக இந்தியாவுக்கும் இதனுல் பாதகமுண்டு. முதலாவது, இந்த நெதர்லாண்ட்ஸ் பிரதேசம் போய்விட்டதனுல், ஜெர்மனிக்கு கடல் சம்பந்தமான தொடர்பு இல்லாமல் போய்

விட்டது. இந்தியர்களுடைய நன்மைக்காகவோ, அவர்களுக்கு விரோதமாகவோ, இந்தியாவில் ஆதிக்கம் பெறுவதற்கு பிரான்சும் இங்கிலாந்தும் போராடிக் கொண்டிருந்த போது, வேறொரு அந்நிய அரசாங்கம் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருக்குமானால், இந்தியாவிலுள்ள சுதேச ராஜ்யங்கள், மேலே கூறப்பட்ட பிரெஞ்சு, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு வசப்படாமல், ஒதுங்கி நின்று, தங்களுக்கேற்பட்ட சங்கடங்களைத் தாண்டியிருக்கலாம். இந்தியாவும் இப்பொழுது சுதந்திரமாயிருந்திருக்கும்.

ஹாப்ஸ்பர்க் மன்னர்களுடைய ஆளுகையின் கீழ் ஜெர்மன் ராஜ்யம் வர வர பலஹீன மடைந்து கொண்டு வந்தது. ஆனால் இந்த ராஜ்யத்திற்குள்ளிருந்த சில பிரதேசங்கள் மட்டும் திறமையாக நிருவாகத்தை நடத்திக் காட்டின. இதனால் பலமும் பெற்றன. இவற்றில் முக்கியமானது ப்ரஷ்யா. இது, பல முறை ஹாப்ஸ்பர்க் அரச பரம்பரையோடு போராடி வெற்றி பெற்றிருக்கிறது. இதனால் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கட்டு குலைந்தது. பல சிறு சிறு ராஜ்யங்கள் கிளம்பின. நெப்போலியன் ஜெர்மனியின் மீது படை யெடுத்து வந்த போது, அநேக சிறிய ஜெர்மானிய ராஜ்யங்கள், ஹாப்ஸ்பர்க் மன்னருக்கு விரோதமாக நெப்போலிய னுடன் சேர்ந்து கொண்டன. இதனுடன் பழைய ஏகாதிபத்தியம் ஒருவாறு முடிந்து விட்டது. ஹாப்ஸ்பர்க். மன்னர், தன் முடியைக் கீழே இறக்கி விட்டார். அதுமுதல், தன்னை ஆஸ்திரியாவின் சக்ரவர்த்தி என்று சொல்லிக் கொண்டாரே தவிர, ஜெர்மன் ராஜ்யத்தின் சக்ரவர்த்தி என்று தன்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் நெப்போலியன் வீழ்ச்சியுற்ற பிறகு, ஜெர்மானியர்கள், பழையபெருமையில் மயக்கங் கொண்டு ஏகாதிபத்தியமாக அமையவில்லை. சிறிய ஜெர்மன் நாடுகள் பல ஒன்று சேர்ந்த, ஆனால் ஒரு தளர்ச்சியுற்ற ஐக்கிய ராஜ்யமாக அமைந்தது. பரஸ்பர சம்மதத்தின் பேரில், ஆஸ்திரியாவின் அரசர் இந்த ஐக்கிய ராஜ்யத்தின் தலைவராக இருந்தார். 1866ம் வருஷம் வரையில் இப்படியே இருந்தது. ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா என்ற நிலைமையே அதுவரை இருந்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் இந்த ஐக்கிய ராஜ்யத்தின் பல ஹீனம் அதிகமாகத் தென்பட்டது. 1858ம் வருஷத்தில் ஜெர்மனியில் ஒரு புரட்சி ஏற்பட்டது. சிறிய ராஜ்யங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு புதிய ஏகாதிபத்தியத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்பதே இந்தப் புரட்சி செய்தவர்களின் நோக்கம்.

இதற்காக ப்ராங்புர்ட் என்ற ஊரில் ஜெர்மனி தேசத்தைச் சேர்ந்த எல்லா அறிஞர்களும் ஒன்று கூடி ஆலோசித்தார்கள். ஆனால் இது எவ்வித பயனும் உண்டாக்கவில்லை. கடைசியில் பிஸ்மார்க்கின் தலைமையில் ப்ரஷ்யா ஹாப்ஸ்புர்க்குகளுக்கு விரோதமாகக் கிளம்பியது. 1866ம் வருஷம் நடைபெற்ற யுத்தத்தில் ஹாப்ஸ்புர்க்குகள் வீழ்த்தப்பட்டனர். எல்லா ஜெர்மன் ராஜ்யங்களும் ஒரு சமஷ்டி அரசாங்கமாக இணைக்கப்பட்டன. இதற்கே இரண்டாவது ஜெர்மன் ஏகாதிபத்தியம் என்று பெயர். இந்த இரண்டாவது ஏகாதிபத்தியத்தில் ஆஸ்திரியாவும் அதனைச் சேர்ந்த பிரதேசங்களும் விலக்கப்பட்டன. இப்பொழுது,

ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா என்று சொல்ல முடியாது. இங்ஙனம் ஆஸ்திரியாவை விலக்கி, இரண்டாவது ஜெர்மன் ஏகாதிபத்தியத்தைச் சிருஷ்டித்த பிஸ்மார்க்கைப் புகழ்ந்தனர் பலர். ஆஸ்திரியாவை விலக்கியது தவறு என்று கூறினவருமுண்டு. அது முதல், பிஸ்மார்க்கின் இந்த முடிவை ரத்து செய்யவேண்டுமென்று ஆஸ்திரியாவிலுள்ளவர்கள் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களுடைய ரத்தம் ஜெர்மானியருடைய ரத்தமே. இவர்களுடைய பாஷை, கலை முதலிய அனைத்தும் ஜெர்மானிய சம்பந்த முடையதே. ஜெர்மானியப் பெரும் புலவர்களிலும் கவிஞர்களிலும் பலர் இந்த ஆஸ்திரியாவில் உதித்தவர்கள் தான். ஹிட்லர் பிறந்ததுகூட ஆஸ்திரியாவில் தான். இவர்களை எப்படி, ஜெர்மன் ராஜபத்திலிருந்து விலக்கி வைக்கமுடியும்?

பின்னர் ஐரோப்பாவின் அரசியல் நிலை மாறுதலடைய ஆரம்பித்தது. ஹாப்ஸ்பர்க்குகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஆஸ்திரியா-ஹங்கேரி ராஜ்யத்தில் ஸ்லால் ஜாதியினர் வசிக்கும் பிரதேசங்களைத் தனக்குக்கொடுத்து விடவேண்டுமென்று ருஷ்யா விரும்பியது. இதற்காக செர்வியாவை ஒரு கருவியாகக் உபயோகித்தது. ஐரோப்பிய மகாயுத்தம் ஏற்பட்டது இந்த நிலைமையில் தான். ஆனால் ஜெர்மன் சக்ரவர்த்தியோ, ஹாப்ஸ்பர்க்குகளின் உண்மையான நண்பராயிருந்தார். இதற்கு அவர் பெற்ற பலன் தேசப்ரஷ்டம். 1914ம் வருஷத்து யுத்தம் ஏற்படுவதற்கு முன்னரேயே, ஆஸ்திரியாவைப் பங்கு போட்டுக் கொண்டு விடலாமென்று ருஷ்யா, ஜெர்மனிக்குக் கூறியது. ஆனால் ஜெர்மனி இதற்கு மறுத்தது. ஆஸ்திரியா-ஹங்கேரியின் பொருட்டு ஜெர்மனி, உலகத்தையே எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. இதன்விளைவாக இருபது லட்சம் பேரையும், தனது சொந்தப் பிரதேசங்கள் சிலவற்றையும், குடியேற்ற நாடுகளையும் அது இழந்தது. வார்சேல் ஒப்பந்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஹாப்ஸ்பர்க்குகளின் ராஜ்யம் என்னவாயிற்று? வார்சேல் சமாதான மகாநாட்டில்கூடிய நான்கு பிரமுகர்களும், ஆஸ்திரியா-ஹங்கேரியைத் துண்டு துணுக்குகளாக்கினார்கள். ஜெக்கோ - ஸ்லோவேகியா போன்ற சிறிய நாடுகளைச் சிருஷ்டித்தார்கள்.

எழுபது லட்சம் ஜனங்களைக் கொண்ட ஆஸ்திரியாவின் நிலைமை என்ன? ஆஸ்திரியர்கள், ஜெர்மன் ராஜ்யத்தோடு தங்களைச் சேர்த்துவிடவேண்டுமென்று கோரினார்கள். ஆனால் இவர்கள் மீது சுதந்திரம் திணிக்கப்பட்டது. என்ன கருணை வல்லரசுகளுக்கு! சுதந்திர ஆஸ்திரியாவின் பொருளாதார நிலைமை கேவலமாகிக் கொண்டு வந்தது. பொருளாதாரத் துறையிலேயாவது நாங்கள் ஜெர்மன் ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கிறோம் என்று ஆஸ்திரியர்கள் கூறினார்கள். ஆனால் பிரான்சும் கிரேட் பிரிட்டனும் இதனை மறுத்து விட்டன. ஜெர்மனியோடு ஆஸ்திரியா ஐக்கியமாகி விட்டால் ஜெர்மனியின் பலம் அதிகரிக்குமேயென்பது இந்த வல்லசுகளின் கவலை. இதனால், சுதந்தரத்தை வேண்டாத ஆஸ்திரியர்களின் மீது, கிரேட் பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து சுதந்திரத்தைத் திணித்தன.

ஆஸ்திரிய ஜனங்கள், சுகஜீவனம் நடத்தக்கூடியமாதிரி வசதிகள் ஆஸ்திரியாவில் இல்லை. அதனுடன் அவர்களுக்

கென்று ஒரு லட்சியமும் இல்லை. முன் ராஜ்யத்திலாவது, ஹாப்ஸ்பர்க் அரச குடும்பத்துக்கு விசுவாசம் காட்டுவதின் மூலமாக, ஆஸ்திரியாவிலுள்ள பல ஜாதியினரும் ஐக்கியப்பட்டிருந்தனர். ஹாப்ஸ்பர்க் அரச குடும்பம் வீழ்ந்துபடவே இந்த லட்சியமும் வீழ்ந்துபட்டது. டால்பஸ், ஷுஸ்நிக் போன்ற ஒரு சிலர், ஆஸ்திரிய சுதந்திரத்திற்காகச் சூழ்ச்சிகள் செய்தனரேனும், ஆஸ்திரியாவிலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் ஜெர்மனியோடு தங்களை ஐக்கியப்படுத்திவிட வேண்டுமென்றே கேட்டார்கள். ஹிட்லர், பிரபல மடைவதற்கு முன்னரேயே, டைரோலில் நடைபெற்ற ஒரு பொது ஜன வாக்கில் இந்த விஷயம் ஊர்ஜிதப்படுத்தப் பெற்றது. ஒரு சில நூறு பேர்தான், ஜெர்மனியோடு ஆஸ்திரியா சேரக்கூடாதென்று ஓட் செய்தார்கள். ஐக்கியப்பட்டுவிட வேண்டுமென்ற இந்த எண்ணத்தை, டால்பஸும், ஷுஸ்நிக்கும் பலாத்காரத்தினாலேயே அடக்கி வந்தார்கள். ஆனால் ஒரு சில இளைஞர்கள், இந்தச் சுதந்திர இயக்கத்திற்கு விரோதமாகக் கிளம்பினார்கள். டால்பஸ், இந்தக் கிளர்ச்சிக்கு இரையானார். ஷுஸ்நிக் வந்த பிறகு இரண்டாம் முறையும் ஒரு கலகம் நடைபெற்றது.

இப்பொழுது, ஜெர்மனி, இழந்துபோன தன் (ஆஸ்திரியக்) குழந்தையை மீண்டும் தன் வீட்டுக்குள் அழைத்திருக்கிறது. ஆஸ்திரியர்கள், தங்கள் தாய் நாட்டோடு சேர்ந்து கொண்டார்கள். இப்படித்தான் சொல்ல வேண்டும். இதை விடுத்து ஜெர்மனி ஆஸ்திரியாவை ஆக்ரமித்துக் கொண்டு விட்டதாகவோ, வெற்றி கொண்டு விட்டதாகவோ சொல்வது சரியில்லை.

10—4—1938ல் ஆஸ்திரியாவில் நடைபெற்ற பொதுஜன வாக்கு என்ன கூறியது? 100-க்கு 99 பேர், ஜெர்மனியோடு சேர்ந்துவிட வேண்டுமென்றே வாக்குக் கொடுத்தார்கள். ஐக்கியத்திற்கு விரோதமாக 100-க்கு ஒருவர் வீதம் ஓட் கொடுத்திருப்பார்களானால், மற்றவர்களும் ஏன் ஓட் கொடுத்திருக்கக் கூடாது? 100-க்கு 99 பேர், ஐக்கியத்திற்கு ஓட் செய்யும்படி வற்புறுத்தப்பட்டிருந்தால், இந்த ஒருவரை மட்டும் ஏன் விட்டுவிட வேண்டும்? ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா ஐக்கியப்படுத்தப் பெற்ற பிறகு, தான் பிறந்த நாட்டுக்கு ஹிட்லர் விஜயஞ் செய்தபோது எவ்வளவு உற்சாகமான வரவேற்பை ஜனங்கள் கொடுத்தார்கள்? வேறு யாருக்காவது கொடுத் திருப்பார்களா? 'கடவுள் தான், இந்த நாட்டிலிருந்து ஜெர்மனிக்கு என்னை அனுப்பினார். இப்பொழுது அதே கடவுள் தான், என்னுடைய ஜனங்களை அவர்களுடைய தாய் நாட்டிற்கு அழைத்துச் செல்ல அனுப்பி யிருக்கிறார்' என்று ஹிட்லர் வியன்னாவில் பேசிய போது ஜனங்கள் 'ஒரே சமூகம்; ஒரே ஏகாதிபத்தியம்; ஒரே தலைவர்' என்று முழக்கம் செய்தார்கள்.

ஆகாய விமானங்களிலிருந்து விழும் குண்டுகளினின்று தப்பித்துக் கொள்ள, ராணுவப் படையினர் இரும்புச் சட்டைகளை அணிந்து கொள்கின்றனர். இந்த இரும்புச் சட்டைகளையும் துளைக்கக் கூடிய மாதிரியான வெடி குண்டுகளை இப்பொழுது சீனாவில், ஜப்பானியர் உபயோகித்து வருகிறார்களாம். இந்த வெடி குண்டு சுமார் இருநூறு பவுண்டு எடையுள்ளது. சமீபத்தில் இத்தகைய வெடிகுண்டொன்று நாங்கிங் நகரத்தில் வெடித்து நூறு பேரைக் கொன்றது.

நேபாள தேசம்

—"ஒரு யாத்திரிகன்"

ஹிந்து மதத்தை அரசாங்க மதமாகக் கொண்டு சுதந்திரமாயிருக்கப்பட்ட நாடு, உலகத்திலேயே ஒரு நாடுதான். அதுதான் நேபாள தேசம். இந்த இந்தியாவின் வட கிழக்குக் கோடியில், இமய மலையை அடி வருடிக் கொண்டிருக்கிறது. இந்த இந்தியாவின் எல்லைக்குள் இருந்த போதிலும், இந்த நாட்டைச் சுலபமாகச் சென்று பார்ப்பதற்குப் போதுமான சாதனங்களில்லை. இந்தியாவின் சம வெளிப் பிரதேசத்திலிருந்து, டெரை என்ற ஒரு குறுகலான பிரதேசத்தின் வழியாகப் படிப்படியாக மேலேறிச் செல்ல வேண்டும் இந்த நேபாள தேசத்திற்கு.

இந்தச் சுதந்திர ராஜ்யத்தின் விஸ்தீரணம் சுமார் 56,000 மைல்; ஜனத்தொகை சுமார் 56 லட்சம்.

இமய மலையின் உயரமான சிகரத்தைச் சென்று பார்க்க வேண்டுமென்று பிரதிவருஷமும் வெளிநாடுகளிலிருந்து பல கோஷ்டியினர் வருகின்றனரல்லவா? இவர்கள், மேற்படி சிகரத்திற்கு ஏற, முதலில் நேபாள அரசாங்கத்தின் உத்திரவைப்பெற வேண்டும். ஏனென்றால் இமய மலையின் பெரும்பாகம் இவர்களுடைய ஆதிக்கத்தில்தான் இருக்கிறது. உலகத்திலுள்ள மலைச் சிகரங்களுள் மிக உயர்ந்ததான எவரெஸ்ட்டுக்குத் தாங்களே சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்வதில் ஓர் அரசாங்கத்திற்கு எவ்வளவு பெருமை இராது? இந்த நேபாள தேசத்தைச்சார்ந்தாற்போலுள்ள பூடான், சிக்கிம் முதலிய நாடுகளுக்கும், இமய மலையில் கொஞ்சம் பங்கு உண்டு. ஆனால் நேபாளத்திற்குத்தான் அதிகம்.

நேபாளத்திற்குச் செல்லவேண்டுமானால் பீஹார் மாகாணத்தின் வடக்கில் இருக்கிற ராக்ஸால் என்ற ஸ்டேஷன் வரை, வங்காள வட மேற்கு ரெயிலில் சென்று இறங்கிவிட வேண்டும். இதனுடன் பிரிட்டிஷ் இந்திய எல்லை முடிகிறது. பிரிட்டிஷ் இந்திய ரெயில்வேயும் இதனோடு நின்றுவிடுகிறது. நேபாள சமஸ்தானத்து ரெயில்வே தொடர் ஆரம்பிக்கிறது. இதில் ஏறி அம்லேக்கஞ்ச்என்ற ஊர் வரையில் செல்லவேண்டும். இதற்கு மேல் ரெயில் கிடையாது. இங்கு இறங்கி, சுமார் 28 மைல் தூரமுள்ள பீம்பேடி என்ற ஊருக்கு மோட்டாரிலோ, பஸ்ஸிலோ செல்லலாம். அழகான ரோட் இருக்கிறது. நேபாள அரசாங்கத்தார், ரோடுகள் அமைப்பதில் மகா கெட்டிக்காரர்கள். மலைகளைக் குடைந்தும், ஆழமான ஆறுகளைக் கடந்தும், அதிகச் செலவில்லாமல் பாலங்கள் அமைத்து அதன் மீது ரோடுகள் போடுகிற சாமர்த்தியத்திற்காக, நேபாளியர்களைப் பாராட்டவே வேண்டும். இந்த பீம்பேடி நகரத்தை இமய மலையின் அடிவாரம் என்று சொல்ல வேண்டும். இங்கிருந்து இனி ஏறு முகந்தான். குதிரைகள் மீதோ கோவேறு கழுதைகள் மீதோ ஏறிச் செல்ல வேண்டும். ஆனால் இதில் அதிக சிரமம் தெரிவதில்லை. பனி மலையின் தோற்றமும், அதிலிருந்து வீசும் குளிர் காற்றும் தேகத்திற்கு ஒரு உற்சாகத்தைக் கொடுப்பதோடு, மனதுக்கும் ஒரு சந்துஷ்டியைக்

கொடுக்கிறது. இதனுல் பிரயாணக் களைப்பு தெரிவதில்லை.

நேபாள ராஜ்யத்தின் தலை நகரம் காட்மண்டு. இஃது ஒரு கணவாயில் இருக்கிறது. ஆகாய விமானத்தில் ஏறிக் கொண்டு இந்தக் கணவாயை நோக்கும் ஒருவன், ஆங்காங்குச் சிறு சிறு கிராமங்கள் இருப்பதையும், சுற்றி, வெள்ளிப் பனிமலை கம்பீரமாகப் படுத்திருப்பதையும் பார்த்து பரவசமடைவான். காட்மண்டு நகரத்தையடைந்ததும், நமது பிரயாணக் களைப்பெல்லாம் பறந்தோடிப் போகிறது. வாழ்க்கையிலே நமது லட்சியத்தை அடைந்தது போன்ற ஓர் உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது.

காட்மண்டு நகரத்திற்குள் சென்றவுடன், அங்கு வீதிகளில் நடமாடும் ஜனங்களைப் பார்த்தால், வறுமை அவர்கள் முகத்தின் ஒரு புறத்தில் தாண்டவம் செய்து கொண்டிருந்த போதிலும், சுதந்திரக்களை தனியாக நமக்குக் காட்சியளிக்கிறது. 'நாமிருக்கு நாடு நமது' என்ற உணர்ச்சி அவர்கள் பால் நிரம்பியிருக்கிறது. நேபாளியர், அவ்வளவு திடகாத்திரமுடையவர் என்று சொல்ல முடியாது. ஆனுல், அவர்கள் பெருஞ் சுமைகளை அலட்சியமாகத் தூக்குகிற மாதிரியைப் பார்த்தால் இவர்களிடத்தில் அமானுஷீகமான சக்தி ஏதேனும் இருக்கிறதோ வென்று நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பெரிய சாமான்களை முதுகில் சார்த்திக் கொண்டு, அவற்றைப் பிணித்திருக்கும் கயிற்றை தலை மீது மாட்டிக் கொள்கிருர்கள். இந்த மாதிரி எத்தனை மைல் தூரம் வேண்டுமென்ருலும் இவர்கள் வழி நடந்து செல்கிருர்கள்.

காட் மண்டு, நாகரிகத்தினின்றும் ஒதுக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் இருந்த போதிலும் இங்கே மோட்டார்களும், மோட்டார் லாரிகளும்மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வளவு மோட்டார்கள் இந்த ஒதுக்கப்பட்ட நகரத்திற்குள் எப்படி இறக்குமதியாயின என்று சிலர் கேட்கலாம். இது தான் வேடிக்கை. இவை யாவும், ஆட்களினுல் சுமக்கப்பெற்றே, இந்த உயர்ந்த மலைப் பிரதேசத்தில் வந்திறங்கியிருக்கின்றன. மோட்டார்களின் சக்கரங்களைக் கழற்றி விட்டு, அப்படியே அலக்காகத் தூக்கிக் கொண்டு நூற்றுக் கணக்கான மைல் தூரம், மலையில் ஏறி, பின்னர் நேபாளக் கணவாயில் வந்து இறங்குகிருர்கள். இப்படி பெரிய பாரங்களைத் தூக்கிச் செல்வதில் பெண்கள் பின்னடைந்தவர்களல்ல. அவர்களும், ஆண்களுக்குச் சமமாகவே பாரங்களைச் சுமக்கிருர்கள்.

நேபாளத்தில் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு செல்வது இப்படித்தான்

புராதன இந்தியாவை காட்மண்டுவிலே பார்க்கலாம். வீடுகள், பல

சித்திர வேலைப்பாடுகளுடன் கட்டப் பட்டிருக்கின்றன. சிறப்பாக மர வேலை அதிகமாகக் காணப் படுகிறது. ரோடுகள், மற்ற நகரங்களில் உள்ளதுபோல் இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்கத்தார் வேண்டு மென்றே இப்படி வைத்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஏனென்றால், ரோடுகள் ஒழுங்காகச் செப்பனிடப்பட்டு இருந்தால், அந்நியர்கள் அதிகமாக வந்து குடியேறி விடுவார்களாம்!

மஹா சிவராத்திரியின் போது நேபாளத்திற்குச் செல்லும் ஜனங்கள் மிக அதிகம். காட்மண்டுக்கு அருகாமையில் பசுபதீசுவரர் ஆலயம் ஒன்றிருக்கிறது. இது மூர்த்தீகரம் நிறைந்தது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து இதற்குத் திரளான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். நேபாள வாசிகள் மதப் பற்று மிகவும் உடையவர்கள். இதனால்தான், இந்த ராஜ்யத்தில் மூலை முடுக்குகளி லெல்லாம் கோயில்கள் இருக்கின்றன.

நேபாளத்தை ஒரு சக்ரவர்த்தி ஆள்கிறார். ஆனால் இவருக்கு ராஜ்யநிருவாகத்தில் தலையிடும் உரிமை கிடையாது. பிரதம மந்திரியிடந்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. இந்தப் பிரதம மந்திரிப் பதவி, பரம்பரை பாத்திய முடையது. இப்பொழுதுள்ள பிரதம மந்திரியின் பெயர் மஹாராஜா ஸர் ஜுத்தா ஷம்ஷேர் ஜங் பஜதூர் ராணா அவர்கள். இவரேதான் சேனாதிபதி. கூட, ராஜ்ய நிருவாகத்தில் இவர் ஒரு சர்வாதிகாரி போல. இவரை மஹாராஜா என்று அழைப்பது சம்பிரதாயம்.

நேபாள ராஜ்யத்தைப் பல சிறு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஓர் அதிகாரி உண்டு. இவர், தம் வசத்தில் ஒப்புவிக்கப்பட் டிருக்கும் பிரதேசத்தில் சட்டம், அமைதி முதலியவைகளைப் பாதுகாக்க வேண்டும். வரிவசூலிக்கவனிக்கிறவரும் இவர்தான். நேபாள ராஜ்யத்திற்கு முக்கிய வருமானம் நிலவரிதான்.

நேபாளத்தில் வசிக்கிற ஜனங்கள் கூர்க்கர்கள் என் றழைக்கப் படுகிறார்கள். இவர்கள் யுத்த வீரர்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்து ராணுவத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் இந்த கூர்க்கர்கள். நேபாள அரசாங்கத்தாரே, நவீன முறையில் தங்கள் ராணுவத்தைப் பழக்கி வைத்திருக்கிறார்கள். சுமார் முப்பதினாயிரம் பேரடங்கிய ராணுவம் இருக்கிறது.

இந்தியாவிலே பிறந்து, இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்கிற நாம் நமது ஆயுளில் ஒரு முறையாவது காஷ்மீரத்து ஸ்ரீநகரையும், நேபாளத்துக் காட்மண்டுவையும் பார்க்க வேண்டாமா?

அமெரிக்காவிலுள்ள ஹாலிவுட்டிலிருந்து பிரதி ஞாயிற்றுக்கிழமையும் காலையில், ரேடியோ மூலமாக ஜாக் பென்னி என்பவன் 'ஜெல்-ஓ-அகெய்ன் என்று சொல்கிறான். இது சுமார் 70 லட்சம் வீடுகளிலுள்ள ரேடியோக்களில் கேட்கிறது. இந்த மூன்று வார்த்தைகளைக் கேட்டதும் எல்லாரும், இவனுடைய விகடப் பிரசங்கத்தைக் கேட்க தயாராவார்கள். மனிதர்களைச் சிரிக்கவைப்பதில் இவன் மகா கெட்டிக்காரன் என்று பெயர். இவனுக்கு வாரச் சம்பளம் சுமார் முப்பதினாயிரம் ரூபாய். இதை நீங்கள் நம்புவீர்களா?

ஒப்படி—ஒரு சிறு கதை

—"தேசிகன்"

'எஜமான்! எஜமான்! கொஞ்சம் எழுந்திருக்கணும்!'

பங்குனி மாதம். அமாவாசை சென்று போய் ஐந்தாறு நாட்கள் ஆகிவிட்டன. பின்னிரவு. விடிவதற்கு இன்னும் மூன்று மணி நேரமிருக்கும். ஆனால் நல்ல இருட்டு. இந்த நேரத்தைக் கிராம வாசிகள் 'குமரி இருட்டு' என்பார்கள். பட்சிகளெல்லாம் அயர்ந்த நித்திரையிலிருக்கின்றன. காவிரியுங்கூட நித்திரையில்தானிருக்கிறாள். தன்னுடைய கொள்கைக்காக யாவற்றையும் துறந்து தூக்கு மேடையில் நிற்கும் வீரனது இதயத்தைப் போன்ற அமைதி. கிழக்குத் திசையில் சுக்கிரன் உலகத்தை எட்டி எட்டிப்பார்க்கிறான். ஆகாய வெளியிலே நட்சத்திரக் கூட்டங்கள் சூரியன் வரவை கண் சிமிட்டிப் பார்க்கின்றன.

இருளாண்டிப் பிள்ளை போட்ட சப்தம் வீட்டினுள்ளே தூங்குபவரின் நித்திரையைப் பங்கப்படுத்திவிட்டது. அக்கம் பக்கத்துக் கிராம வாசிகள் உத்தியோகஸ்தர்களை, 'எஜமான்' என்றுதான் அழைப்பார்கள். இருளாண்டிப் பிள்ளையும் அதே வார்த்தையைத்தான் உபயோகித்தார். ஆனால் அதற்கு என்ன அர்த்தம் என்பதை அவர் அறியமாட்டார். வழக்கத்தைப் பொறுத்தது. எஜமான் கோபிப்பாரோ வென்ற பயத்துடன் லேசான குரலில்தான் கூப்பிட்டார். ஆனால் அந்தத்தொனியும் நித்திரையைக் கெடுத்து விட்டதே. அதுவும் விடியற்கால அயர்ந்த நித்திரையை.

ஒப்படி சூப்பரென்டென்ட் கந்தசாமி முதலியார் பத்தாவது பாஸ் செய்தவர். வருஷந்தவருது பரீட்சையில் தேறியவர். ஆனால் மேல் படிப்புக்குக் குடும்பத்தில் வசதியில்லை. பாவம், எவ்வளவு சிரமப்பட்டுப் பத்தாவதை முடித்தாரோ அதற்கு மேலும் கஷ்டப்பட்டுவிட்டார் இந்த ஒப்படி சூப்பரென்டென்ட் வேலையைப் பெறுவதற்கு. இதுவுங்கூடக் காயமில்லை. டெம்பரரி உத்தியோகந்தான். இதில் இவருடைய கெட்டித்தனத்தைப் பார்த்து வேறு உத்தியோகங் கொடுத்துக் காயமாக்கப் படுமோ என்னமோ தெரியாது. இவருக்கு இந்த உத்தியோகம் கிடைத்ததே ஒரு வரப்பிரசாதம் மாதிரி. தன்னுடைய லட்சியத்தின் முதற்படியிலே இப்போதுதான் காலை வைத்திருக்கிறார்! கடைசி வரை அடைந்துவிடுவதெனக் கங்கணங் கூடக் கட்டிக் கொண்டிருக்கிறார். நல்ல உழைப்பாளி. இதில் கல்யாணமாகாத பிரம்மச்சாரியுங் கூட.

கண்ணைத் துடைத்துக் கொண்டு கையில் லாந்தருடன் கதவைத் திறந்தார் கந்தசாமி முதலியார். இருளாண்டிப் பிள்ளை தன் கையிலிருந்த காகிதத்தை முதலியாரிடம் நீட்டினார். வாங்கிப் பார்த்தார் முதலியார். அவரால் கோபத்தை அடக்கிக்கொள்ள முடியவில்லை. உத்தியோகம் புருஷ லட்சணம். அதுவும், கிராமங்களில் இந்த லட்சணம் அதிகமாகச் சோபிக்க வேண்டாமா?

'என்னய்யா? பாக்கிப் பணம் வைத்திருக்கிறீரா?'

அது ஒப்படி விடுவதற்குரிய கங்காணச் சீட்டு. அதில் 120-11-11 ரூபாய் பாக்கி கட்டப்பட்டிருக்கிறது.

'எஜமான், இப்போது என்னிடத்தில் பணமில்லை. ஒப்படி முடியட்டும். பருத்தி இப்போதுதான் வந்துகொண்டிருக்கிறது. விலை கொஞ்சம் தூக்கலாகுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சித்திரை மாதம் கடைசிக்குள் விற்றுப் பாக்கியைச் செலுத்தி விடுகிறேன்' என்றார் இருளாண்டிப் பிள்ளை.

'முடியாது. எனக்கு ஹஜூர் ஆபீஸ் ஆர்டர், பழம் பாக்கி யிருந்தால் அதைப் பூராவும் வசூலித்துக் கொண்டுதான் ஒப்படி விட வேண்டுமென்று. பாக்கி பூராவையும் அம்பலகாரரிடம் செலுத்திவிட்டு இதில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வாரும். அப்பால் பதிந்துவிடுகிறேன். இதற்காகத்தானா இந்த நேரத்தில் வந்து கத்தி என் தூக்கத்தையுங் கெடுத்தீர்? போரும்'.

ஒப்படி சூப்ரென்டென்ட் கந்தசாமி முதலியாருக்கு இப்போது இருபது அல்லது மேல் கொண்டு ஒரு வயது கூட இருக்கும். ஆனால் எதிரே நிற்கும் இருளாண்டிப் பிள்ளை ஐம்பது வயதுக்கு மேல் பட்டவர். கிழத்தன்மையை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது அவருடைய பருவம். ஆயினும் வயதில் சிறியவர்களாயிருந்தாலுங்கூட கிராம விவசாயிகளிடத்திலே மரியாதையாக, 'வாருங்கள்—போங்கள்' என்று வார்த்தையாடுவது உத்தியோக ஸ்தானத்திற்கே பங்கமென்பது அந்த வர்க்கத்தின் எண்ணம். உத்தியோகத்தில் ஆரம்பமாயிருந்தாலும், இந்தப் பாடங்களையெல்லாம் சூப்ரென்டென்ட் எப்படியோ படித்துக்கொண்டு விட்டார். அது அந்த ஸ்தானத்தின் மகிமையோ என்னவோ!

பாக்கி பூராவும் செலுத்தாமல் ஒப்படி விட முடியாது என்ற வார்த்தை இருளாண்டிப் பிள்ளைக்கு வயிற்றலடித்த மாதிரி யிருந்தது. மாதிரி யென்ன? உண்மையிலேயே அது வயிற்றில் அடிதான்!

'ஐயா, கொஞ்சம் பெரிய மனசு பண்ணணும். இது ஊரோரத்துச் செய் என்பது உங்களுக்குத் தெரியும். அடுத்த வயலை முத்தப்பக் குடும்பன் நேற்றே அறுவடை செய்து விட்டான். ராத்திரி யெல்லாம் எங்களுக்குத் தூக்கமே யில்லை. ஆண் பெண் அடங்கலும், வரப்பிலே நின்றுகொண்டு வந்து விழும் மாடு கன்றுகளை விரட்டிக் கொண்டிருந்தோம். புள்ளி பார்த்ததே காலந்தவறி. புள்ளி பார்த்து முடிந்து இன்றோடு பதினைந்து நாட்களாகின்றன. இருபது நாட்களுக்கு முன் அறுத்து ஒப்படி செய்யவேண்டிய கதிர் இது. பட்டு நொறுங்கி விட்டது. கங்காணம் பதிவதற்குக் கணக்கப் பிள்ளையிடம் அலைந்தேன். அலைந்தேன் பதினைந்து நாள். புள்ளிக்கணக்கு எழுதி முடியவில்லையென்று சொல்லி விட்டார். அது முடிந்து சீட்டு வாங்கிக் கொண்டு வந்தால் நீங்கள் இப்போதே பாக்கி பூராவையும் போடு என்று சொல்கிறீர்கள். ஐயா, நான் என்ன செய்வேன்?' என்று தன்னுடைய நிலைமையையெல்லாம் வருணித்தார் பிள்ளை. அவருடைய வாய் மாத்திரம் இந்தச் சொற்களைத் தள்ளிக் கொண்டிருந்ததென நினைக்கிறீர்களா?

அவருடைய சரீர அங்கங்கள் ஒவ்வொன்றும் இந்தக் கெஞ்சுதலான வார்த்தைகளுக்குத் தகுந்தபடி இயற்கையாகவே குனிந்தும் வளைந்தும் வேலை செய்ததை நேரில் பார்த்தவர்கள்தான் அனுபவிக்க முடியும். ஆனால் சுப்ரென்டென்ட் முதலியாரை இந்த வார்த்தைகளோ, இந்தக் கெஞ்சுதலான நடிப்புகளோ அசைக்கவே முடியாது. இந்தக் கூக்குரல் அவருக்கு அனுதினமும், ஒவ்வொரு நேரமும் ஏற்படும் சம்பவம். 'இவர்களெல்லாம் திருடர்கள்; ராஜத் துரோகிகள்' என்பது அவருடைய அசைக்க முடியாத சித்தாந்தம். நல்ல வாலிப வயது. அதோடு நல்ல படிப்பாளி. அதுவும் ஆங்கிலப் படிப்பு பத்தாவது வரை! கிராம வாசிகளை அளப்பதற்கு இந்தப் படிப்பு அவருக்கு ஒரு அளவு கருவி மாதிரி!

'என்னங்காணும், பிராணனையெடுக்கிறீர்; பழம் பாக்கி வராமல் ஒப்படி விட முடியாது. கண்டிப்புத் தான்!'

இது வரை, வாரும் போரும் என்ற வார்த்தைகளோடு இப்போது 'காணும்' சேர்த்து ஒலிப்பது உங்களுக்கு வியப்பாய்த் தோன்றலாம். ஆனால் தங்களுடைய கோபத்தின் ஒரு சிறிய அம்சத்தை இந்த விதமாகத்தான் உத்தியோகஸ்தர்கள் வெளியே காண்பித்துக் கொள்வது கிராமங்களிலே வழக்கம்.

ஃ ஃ ஃ

வீரம்பட்டி, ஒரு சிறிய கிராமம். சுமார் 150 வீடுகள் இருக்கும். நாற்பது வருஷங்களுக்கு முன்னே இந்த ஊரில் ஒரே ஒரு காரைக் கட்டிடந்தான் உண்டு. அதை இப்போதும் 'கல்லு வீடு' என்பார்கள். ஆனால் இப்போது அதைப்போல காரைக் கட்டிடம் ஐந்து சேர்ந்திருக்கின்றன. பாக்கியெல்லாம் கூரை வீடுகள். ஓலையாலோ வைக்கோலாலோ வேய்ந்தவை. அவற்றை வீடுகள் என்று சொல்வதைப் பார்க்கிலும் கூரைக் குச்சுகள் என்று சொல்லாம். ஊருக்குத் தென் புறத்தில் ஒரு ரோட்டு. சென்றதாது வருடப் பஞ்சத்தில் அந்தப் பக்கத்து ஜனங்களின் கஞ்சிக் கவலையை மாற்றுவதற்குப் போடப்பட்டதாம் அது. இப்போது அறுபது வருடங்களாகின்றன. ஒரு லட்சிய புருஷனுக்கு இது ஒரு அறுபது யுகங்களாகக் கூடத் தோன்றலாம். ஆனால் இந்த அறுபது வருஷத்தில் அறுபது தடவைகளில் கட்டாயம் அந்த ரோட்டு சில சரளைக் கற்களையும், கொஞ்சம் செம்மண்ணையும் பார்த்திருக்கும். 'ரோட்டு வரி' யென்பதாகச் சிறிது தொகையுங் கூட அந்த விவசாயிகள் வருஷா வருஷம் செலுத்திக் கொண்டு தான் வருகிறார்கள். 'கிராமங்களைக் கடவுள் படைத்தார்; நகரங்களை மனிதர்கள் படைத்தார்கள்' என்கிறார் ஓர் ஆசிரியர். கிராம வாசிகளும் அவற்றைப் படைத்த கடவுளிடந்தான் முறை யிட வேண்டுமோ என்னவோ!

கலியாணக் குடி ஜமீன் என்றாலே 'எட்டுக் கண்ணும் விட்டெறியும்'. அவ்வளவு கீர்த்தி. கிழக்கே கடலிலிருந்து மேற்கே மலை வரை அந்த ஜமீன் பிரதேசந்தான். ஒரு காலத்தில் பல கவிஞர்களுக்கு அவர்களது கற்பனை பொக்கிஷத்தை வளர்ப்பதா யிருந்ததாம் அந்த ஜமீன். கொடையில் கர்ணனைப் பிரமாதமாகச் சொல்வார்கள். ஆனால் அவன் தன் செல்வத்தைத் கொடுக்கவில்லை. அந்தக் குறையும் இல்லாதது இந்த ஜமீன். ஆனால் அது

வெல்லாம் பழைய காலம். கனவு மாதிரி. நாகரிகத்தின் ஜோதி பரவி வரும் காலம் இது. அதுவும் வேகமாக. குதிரைப் பந்தயத் திடலிலே தன்னுடைய சொந்தக் குதிரையோடு நிற்பதுதான் இப்போது பெருமை. அலங்காரமான ஆடைகளே பிரபுத்துவத்தின் சின்னங்கள். பந்தயக் குதிரைகளின் காலடிச் சப்தமே இப்போதைய கவியாணைக் குடி ஜமீன்தாருக்கு தேவகானம்!

ஜமீனைச் சேர்ந்தது தான் வீரம்பட்டியும். வீரம்பட்டி, ஆங்கரை, புளியங்குளம், ஆவாரங்காடு என்ற நான்கு கிராமங்களும் அடுத்தடுத்து சுமார் 5 மைல் தூரங்களிலுள்ளவை. சிறிய கிராமங்கள். இந்த நான்கு கிராமங்களுக்கும் சேர்ந்து ஒரே கண்மாய். அந்த ஜமீனிலுள்ள பெரிய கண்மாய்களில் இது மூன்றாவது. சுமார் எட்டு மைல் நீளமிருக்கும். மேற்கிலும் வடக்கிலுமாக இரண்டு கால்வாய்களே உடையது. இந்தக் கண்மாய்த் தண்ணீர்தான் அந்த நான்கு கிராமத்து 1300 சொச்சம் ஏக்கர் நிலத்திற்கும் ஆதாரம்.

ஆடி மாதம் மேற்கே மலையடிவாரத்தில், மேகங்கள் கருத்து மழை பொழிய ஆரம்பித்தால் இந்தக் கண்மாய்க்குத் தண்ணீர் வந்து விடும். ஆடி மாதம் கடைசியில் விவசாயிகள் இந்தத் தண்ணீரைக் கொண்டு நாற்று விடுவார்கள். ஒரு மாதம், நாற்பது நாட்களில் நன்செய்கள் நடவு நட்டு முடியும். ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பெரு மழை பெய்வது வழக்கம். அந்தக் காலத்தில் விவசாயிகளெல்லாம் அலறிப் புடைத்துக் கொண்டு கண்மாய்க்கு ஓடுவார்கள். இரண்டு கால்வாய்களிலும் கரைபுரண்டுவரும் தண்ணீர். பேரிரைச்சலாயிருக்கும். எவ்வளவோ காவலாய்த் தானிருப்பார்கள். என்ன இருந்தென்ன? கரைபுரண்டு வரும் நீரைத்தாங்காது கண்மாயில் உடைப்பேற்பட்டு விடும். பெரியகண்மாய். அதில் உடைப்பேற்பட்டால் உடனே எப்படி அடைக்க முடியும்? இடிந்த உள்ளத்தை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு வீடு திரும்புவார்கள் விவசாயிகள். ஆனால் உடைப்பு இப்படியே கிடந்துவிடுவதில்லை. ஹுஜூருக்கு அர்ஜி போகும். காரணங்கேட்கப்படும். அது ஒரு பெரிய சடங்கு. ஆகக்கூடி அந்த வருஷக் கடைசி கோடை காலத்தில் உடைப்பு அடைபடும். அடைப்பதற்கு ஆயிர ரூபாய் ஆனதாக விவசாயிகள் கேள்விப் படுவார்கள். இந்தப் பத்து வருடங்களாக இந்தத் திருநாள் வருடந்தவறாது நடக்கும் சம்பவம்.

விவசாயிகள், பாவம்! தங்களுடைய கையிலிருந்த விதைகளைக் கொண்டு நாற்று விட்டார்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டு கடனும் வாங்கி நடவும் செய்தார்கள். ஆனால் அது விளைந்து வர மார்க்கமில்லை. நன்செய்கள்தான் அந்தக் கிராமவாசிகளுக்கு ஜீவாதாரம். அதுவும் இப்படியானால்? இது ஒரு வருடப் புதுமையாயுமில்லை. வருஷந் தவறாது நடக்கிறது. அந்தக் கண்மாய் செம்மையாக வெட்டப் பட்டது அந்தக் கிராமக் கிழங்களுக்குக் கூடத்தெரியாதாம். ஆனால் உடைப்புகள் மாத்திரம் வருஷா வருஷம் அடைக்கப்பட்டு விடும். நன்செய் வேளாண்மைக்குத் தண்ணீரில்லையானல் அதன் கதியென்னவாகிறது? சாவிதான். அது சாவிதான் என்பதை ருஜூச் செய்து அந்த விவசாயிகள் தங்களுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும்.

அதற்குச் சில தொகையுங்கூட அவர்கள் செலவு செய்வார்கள். அப்பொழுது தான் அந்தநிலங்கள் விளையவில்லையென்று சட்டப்படி உறுதிசெய்யப்படும்!

இந்த வருஷம் எப்படியோ கண்மாயில் தண்ணீர் தங்கி நெல் வேளாண்மை செய்யப் பட்டது. இதில் அந்த ஜனங்களுக் கெல்லாம் பரம சந்தோஷம். ஆனால் இன்பமும் துன்பமும்இணை பிரியாத் தோழர்களல்லவா? இருளாண்டிப்பிள்ளை சாகுபடி செய்து வந்த எல்லா நிலங்களின் ஏழெட்டுவருஷத்துப் பழம் பாக்கியும், ஊரோரத்துச்செய் ஒரே நிலத்தின் கங்காணச் சீட்டில் புள்ளி உருவமாகத் திகழ்கின்றது. பழம் பாக்கி செலுத்தாமல் ஒப்படி செய்ய முடியாது. சூப்ரன்டென்ட் முதலியாரோ, கண்டிப்புக்காரர். பாவம், இருளாண்டிப்பிள்ளை என்ன செய்வார்? ஆனால் அவருக்கு ஒரு நம்பிக்கை உண்டாயிற்று. தாசில்தார் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அதற்கு மேல் ஜமீன்தார் இருக்கிறார். அவர்கள் வரை போய் முறையிடுவோம். அனுமதி கிடைக்கும். கொஞ்சம் நாட்கள் செல்லும். இருந்தாலும் வேறு வழியில்லையே.

ஃ ஃ ஃ

வெள்ளிக்கிழமை அதி காலை. சூரியன் தோன்றுவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் செல்லும். சந்திரன் தனது சுருங்கிய வதனத்தோடு மேற்குத் திசையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் பூரணமான வெளிச்சமில்லை. ஏற்படப்போகும் இன்னலை எண்ணினாலே இதயமும், முகமும், கருகிவிடுவது இயற்கை யல்லவா? ஊரோரத்துச் செய் வரப்பில் ஆண்களும் பெண்களுமாக ஜனங்கள்கூடி நிற்கிறார்கள் அந்த நேரத்தில்.

'அந்த நிலத்திற்குரிய பாக்கிரூ 6யும் உடனே செலுத்தி விடவேண்டும். பாக்கியை ஒரு வாரத்திற்குள் பூராவாகச் செலுத்திவிட வேண்டும்' என்ற தாசில்தார் உத்திரவை இருளாண்டிப்பிள்ளை அலைந்துதிரிந்துபத்து நாட்களில் பெற்று விட்டார். தாசில்தாருக்கு இருளாண்டிப்பிள்ளை செலுத்திய வணக்கம் அனந்தம். தாசில்தாரும் 'போ, சீக்கிரம், பாக்கி ஞாபகமிருக்கட்டும்' என்ற ஆணித்தரமான வார்த்தைகளால் தன்னுடைய உள்ளத்தி லிருந்து ததும்பி வரும் கருணையின் சிறு அம்சத்தை வெளிப்படுத்திக் கொண்டது பரவசமா யிருந்தது. உத்தியோகப் பதவி உயர உயர கருணையும் தனது பூரணத்வ நிலைமையைப் பெறுமோ என்னவோ!

அந்தக் குளிர்ந்த நேரத்தில் அறுவடை செய்தால்தான் தான்யம் சேதமடையாது. வரப்பில் கூடி நிற்கும் கூலியாட்களுக்கு, ஒரு ஆள் இவ்வளவு விதம் அறுவடை செய்ய வேண்டும் என்ற எல்லை கட்டிப்பிரித்துக் கொடுப்பதற்கு இருளாண்டிப்பிள்ளை தனது வயலில் இறங்கினார். அவருடைய கால்கள் தாவித் தாவி எட்டுப் போடுகின்றன. கைகள், அடையாளந்தெரிவதற்காகக்கதிர்களை முடி போடுகின்றன. சீக்கிரம் அறுவடை செய்யவேண்டுமென்ற ஆசை. அதோடு தாசில்தார் அனுமதி கிடைத்ததோ பெரிய வரப்பிரசாதம். ராத்திரி சாப்பிடாதிருந்துங் கூட இந்தச் சந்தோஷத்தால் இருளாண்டிப் பிள்ளைக்குப் பசி யுணர்ச்சியே தோன்றவில்லை. தாவித் தாவி எட்டுப் போடுகிறார். அந்த நேரத்தில் காலில் ஏதோ சுறுக்கென்று உண்டான உணர்ச்சியை அவர் கவனிக்கவே

ஜெக்கோ-ஸ்லோவேகியாவில் ஜெர்மானியர்கள்

—எமிலி சோபோடா

போலந்து நாட்டில் எப்படி உக்ரேனியர்கள் முக்கியமான ஒரு சிறு பான்மைத் தொகுதியினராக இருக்கிறார்களோ அப்படியே, ஜெக்கோ—ஸ்லோவேகியாவில் ஜெர்மானியர்கள் முக்கியமான ஒரு சிறு பான்மைத் தொகுதியினராக இருக்கிறார்கள். 1930-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட ஜன கணிதப்படி, ஜெக்கோ—ஸ்லோவேகியாவில் 3,231,688 ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் மொத்த ஜனத்தொகை 1930ம் வருஷத்து ஜன கணிதப்படி 14,729,536.

ஜெர்மானியர்கள் இந்த நாட்டின் எல்லைப் புறமாகவுள்ள பிரதேசங்களிலேயே வசிக்கின்றனர். தவிர, இந்தப் பிரதேசங்களில், மற்றச் சமூகத்தாரின்றி, இவர்கள் மட்டுமே வாழ்கிறார்கள். இங்ஙனம் இவர்கள் வசிக்கும் ஜில்லாக்கள் மொத்தம் எட்டு. இவற்றில் முக்கியமான ஜில்லாவில் 2,067,705 ஜெர்மானியர்களும் சிறிய ஜில்லாவில், 11,011 ஜெர்மானியர்களும் வசிக்கிறார்கள். ஆக இந்த எட்டு ஜில்லாக்களிலுமுள்ள ஜெர்மானியர்களின் மொத்தத் தொகை 2,495,633. இது தவிர ஜெக் ஜாதியினரும், ஸ்லோவேக் ஜாதியினரும் பெரும் பான்மையோராகவுள்ள ஜில்லாக்களில், 736,025 ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். மேலே சொன்ன எட்டு ஜில்லாக்களில், பெரும்பான்மையோராகவுள்ள ஜெர்மானியர்களிடையே, 440,561, ஜெக்கோ-ஸ்லோவேகியர்களும், 10,458 பிற ஜாதியினரும்

இல்லை. கவனிக்கவும் முடியாதல்லவா?

ஃ ஃ ஃ

விடியற் காலை ஆறு மணியிருக்கும். சூரியன் தனது சிவந்த கிரணங்களைப் பரப்பிக் கொண்டுஉலகத்தை நிமிர்ந்து பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அவன் இயற்கையின் உருவானதால் தன்மையில் பேதமென்பதேயில்லை.

ஊரோரத்துச் செய்வரப்பில் ஜனங்கள் கூடிவிட்டார்கள். கூலிக்காரர்களுங்கூட எப்படித் தங்களது தொழிலைப் பார்க்க முடியும்? வைத்தியரைக் கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்கிறார்கள் சிலர். இல்லை, மந்திரவாதி வந்தால் போதும் என்கின்றனர் சில பேர். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனால் நல்லது என்கிறார்கள் இன்னுஞ்சிலர். ஆஸ்பத்திரியா? அந்தக்கிராமத்திலிருந்து 38 மைல்களுக்கப்பாலல்லவா இருக்கிறது. கொண்டு போவதற்கு வசதி உண்டா?

ஃ ஃ ஃ

இந்தக் காரியங்கள் நடைபெற்று இப்போது சுமார் ஒரு வருடமாகும். இருளாண்டிப் பிள்ளையின் ஆத்மா, இளம்பயிர்களையும், அவற்றின் பசுமைகளையும், பழுத்து முதிர்ந்த கதிர்களையும் நினைத்து அலைகின்றது—மகிழ்கின்றது. ஆனால் பாவம், தாசில்தார் பழம் பாக்கி ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்.

இருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன வென்றால் ஜெக்கோ-ஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்கள் தங்களை ஒரு தனி நாட்டினராகப் பிரித்துக் கொண்டு வாழ முடியாது என்பது. அல்லது ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் குடியரசுத் திட்டத்திற்குட்பட்டு தங்களுக்கு மட்டும் சில விசேஷ ராஜ்யாதிகார உரிமைகள் வேண்டுமென்று கேட்கவும் முடியாது. அதிகப்படியாக இவர்கள் செய்யக் கூடியது என்ன வென்றால், அடுத்தாற்போலுள்ள ஜெர்மன் ராஜ்யத்தோடு தங்களை இணைத்துவிடுமாறு பேச்சளவில் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் இது அனுபவ சாத்தியமாகாது. ஏனென்றால் ஜெர்மானியர்களைப் பெரும் பான்மையோராகக்கொண்ட இந்த எட்டு எல்லைப்புற ஜில்லாக்களையும், ஜெர்மன் ராஜ்யத்தோடு சேர்த்து விட்டால், அந்த எட்டு ஜில்லாக்களிலேயுள்ள 399,215 ஜெக் ஜாதியினரும் மேற்படி ஜெர்மன் ராஜ்யத்தோடு சேர்ந்து விட வேண்டுமல்லவா? அப்படியே சேர்ந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். மற்ற ஜில்லாக்களில் சிறு பான்மையோராகவுள்ள 909,841 ஜெர்மானியர்களின் நிலைமை யென்ன? அவர்கள் ஜெக்கோ-ஸ்லோவேகியா அரசாங்க ஆதிக்கத்திற்குட்பட் டிருக்க வேண்டியதுதானே. ஆக எப்படி நாம் பார்த்த போதிலும் ஜெக்கோ-ஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்கள் அனைவரும் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்டு விட முடியாது.

ஆஸ்திரியாவின் எல்லைப்புறத்தில் ஜெக்கோ-ஸ்லோவேக் ஜாதியினரைப் பெரும் பான்மையோராகக் கொண்ட பிரதேசங்க ளிருக்கின்றன. இவர்கள் ஆஸ்திரியா அரசாங்க நிருவாகத்திற்குட்பட் டிருக்கின்றனர். இவர்களுடைய நிலைமை யென்ன? இங்கும் ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களை ஜெக்கோ-ஸ்லோவேகியா அரசாங்கத்தோடு இணைத்துக் கொள்வதா? அல்லது ஜெர்மன் ராஜ்யத்தோடா?

இந்தப் பிரச்னையை நாம் எந்த முகமாக ஆராய்ந்து பார்த்தாலும் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடியும். அதாவது:—ஜெக்கோ ஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்களை ஜெர்மன் ராஜ்யத்தோடு சேர்த்து விடுவது என்றால் ஜெக்கோ-ஸ்லோவேகியாவையே சேர்த்து விடுவதுதான். இதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் சம்மதிக்குமா?

> ஜெர்மனி, ஆஸ்திரியாவைச் சேர்த்துக் கொண்டது, ஜன நாயக அரசாங்கங்களுக்கு பலத்த அடிதான். ஆனால் அதுவே சர்வாதிகாரிகளுக்கு வெற்றியாகாது. சுகமாக வாழ்க்கையைக் கடத்தி விடுவோம் என்று எண்ணுகிற அறுபது லட்சம் ஆஸ்திரியர்கள், அவர்களுடைய எண்ணிக்கைக்கு அதிகமான ஒரு செல்வாக்கை, ஜெர்மனியில் உபயோகிக்கலாம். ஏனென்றால், ஜெர்மானியர்கள் கூட, எத்தனை நாட்களுக்குத்தான் காய்ந்த வயிற்றையும் ஒழுங்கையும் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பார்கள்? ஆஸ்திரியர்களின் துன்பத்திற்குப் பரிகாரந்தேட வியன்னாவுக்கு வந்த ஜெர்மானிய சோல்ஜர், தனது சாப்பாட்டிலிருந்து பல வருஷங்களுக்கு முன்னேயே மறைந்து போன அநேக ருசிகரமான உணவுகள் இங்கே கிடைப்பதைக் கண்டு ஆச்சரியப் படுவான். தங்களுடைய ஜெர்மானிய சகோதரர்களைப் போலவே, ஆஸ்திரியர்களும் நாஜி வணக்கஞ் செலுத்துமாறு கூறப்படுவார்கள். ஆஸ்திரியர்களும் அப்படியே செய்யக் கூடும். ஆனால் உற்சாக மில்லாமல். இந்த உற்சாக மின்மை எங்கும் பரவலாமல்லவா? —**வெர்னன் பார்ட்லெட்**

ஜெக்கோ-ஸ்லோவேகியா படை யெடுக்கப் பட்டால்—?

—பி. டி. ஜே.

ஜெக்கோ-ஸ்லோவேகியா விஷயமாக பிரெஞ்சுக்காரர் கொண்டுள்ள கருத்தை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

ஐரோப்பாவின் பூகோள படத்தைச் சிறிது எடுத்துப் பாருங்கள். எவ்வளவு சில்லரை ராஜ்யங்கள்! வல்லரசுகள், இவைகளை எவ்வளவு அலட்சியப் பார்வையோடு பார்க்கின்றன!

போலந்து ஒரு காலத்தில் விஸ்தீரணமான ஒரு தேசமாயிருந்தது. 1792ம் வருஷத்தில் இதனை ருஷ்யா, ஆஸ்திரியா, ப்ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் பங்கு போட்டுக் கொண்டன.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஐரோப்பாவின் பூகோள படம் மறுபடியும் மாற்றமடைந்தது. துருக்கி ஏகாதிபத்தியமானது காலக் கிரமத்தில் சிதறிப் போய் விட்டது. இதிலிருந்து பல புதிய தேசங்கள் தோன்றின. ப்ரஷ்யாவுக்கு முன்னர் ஆஸ்திரியா வீழ்ச்சியுற்றது. 1870-ம் வருஷம் ஜெர்மானிய ஐக்கியம் ஏற்பட்டது.

ஐரோப்பாவின் தெற்குப் பாகத்திலேயுள்ள பால்கன் தீபகற்பத்துச் சிறிய நாடுகளின் மீது 1914ம் வருஷத்தில் கூட, ஜெர்மனியானது, தனது பொருளாதார ஆதிக்கத்தையும் நாகரிகத்தையும் புகுத்த ஆசை கொண்டிருந்தது. ஆனால் சமீபத்தில் ருஷ்யா இருந்ததனால், ஜெர்மனியின் செல்வாக்கு அதற்குமிஞ்சிப் போக முடியவில்லை. தவிர, ஜெர்மனிக்கும், பால்கன் நாடுகளுக்கும் இடையே, ஆஸ்திரியா-ஹங்கேரி ஒரு குறுக்குச் சுவர் மாதிரி இருந்தது. ஐரோப்பிய யுத்தம் தொடங்குவதற்கு முன் இந்த நிலை.

ஐரோப்பிய யுத்தம் முடிந்த பிறகு? ஆஸ்திரியா-ஹங்கேரி போய் விட்டது. ருஷ்யாவின் எல்லை, கிழக்கு நோக்கித் தள்ளப்பட்டது. ஜெர்மனிக்குக் கிழக்கிலும் தெற்கிலும் சிறிய சிறிய ராஜ்யங்கள் தோன்றின. பால்டிக் கடலிலிருந்து, தென் கிழக்கே, கருங் கடல், அட்ரியாடிக் கடல் வரை—மத்தியில் பதின் மூன்று ராஜ்யங்கள் உண்டாயின. இவற்றிலே முக்கியமானது போலந்து. இதற்கடுத்தவை ருமேனியா, ஜெக்கோ-ஸ்லோவேகியா, யூகோ-ஸ்லேவியா. போலந்தின் ஜனத் தொகை, ஜெர்மனியின் ஜனத் தொகையில் பாதிதான். பிற் கூறப்பட்ட மூன்று நாடுகளின் மொத்த ஜனத் தொகையைச் சேர்த்தால் கூட, ஜெர்மனியின் ஜனத் தொகைக்குச் சமமாயிராது. இதனால் என்ன நிலைமை ஏற்பட்டதென்றால், ஜெர்மனி முன்னர், நடுங்கக் கூடிய சிறிய ராஜ்யங்கள் அதனைச் சுற்றித் தோன்றின!

ஆனால், யுத்த முடிவில் இது தெரியவில்லை. ஏனென்றால் ஜெர்மனி, அப்பொழுது தோல்வியினால் வீழ்ந்து

பட்டுக் கிடந்தது. உள் நாட்டுக் குழப்பங்களும் இருந்தன. புதிதாகத் தோன்றின நாடுகளோ ஜீவதாது நிறைந்தன போல் காணப்பட்டன. போலந்து கூட, ஜெர்மனி மீது ஆதிக்கம் செலுத்தப் பார்த்தது. ஆனால் ஒரு பெரிய தேசம், இழந்து போன பலத்தை மீண்டும் பெற கொஞ்சம் நாள் பிடிக்கும். இப்பொழுது ஜெர்மனி பழைய பலம் பெற்று விட்டது. சில்லரை நாடுகள் பாடு கொஞ்சம் நடுக்கந்தானே.

மத்திய ஐரோப்பாவில் சென்ற இருபது வருஷங்களாக நடைபெற்று வந்த நாடகத்தைப் பார்த்தோமானால், சிறிய நாடுகளின் குறுகிய புத்தியும், ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்ட உள் நாட்டுச் சண்டைகளும் நிறைய இருப்பதைக் காணலாம். இவற்றில் முக்கியமாக ஒன்றுபட்டிருக்க வேண்டிய நாடுகள் போலந்தும் ஜெக்கோ-ஸ்லோவேகியாவும். ஜெர்மனியின் விழிப்பினால் பாதகமடையக் கூடிய நாடுகள் இவ்விரண்டுந்தான். ஆனால் இந்த இரண்டு நாடுகளும் ஆரம்பத்திலிருந்தே சண்டை போடத் தொடங்கி விட்டன. இரண்டு நாடுகளுக்கும் மத்தியில் இருந்த ஒரு சிறு பிரதேசத்தை யொட்டியே இவை சண்டையிட்டன. சுமார் நான்கு வருஷ காலம் இந்தத் தகராறு இருந்து கொண்டிருந்தது. சர்வ தேச சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் இதற்கு மத்தியஸ்தம் செய்யும்படியாயிற்று.

1920ம் வருஷம், போலந்தின் மீது போல்ஷ்விக்கர் படையெடுப்பதாக இருந்த சமயத்தில், ஜெக்கர்கள் சும்மா யிருந்து விட்டனர். இந்த மாதிரியாகச் சிறிய நாடுகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லாமலே இருந்து வருகின்றன. இவைகளினிடையே ஏற்பட்டுள்ள பரஸ்பரப் பிணக்குகளைப் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால் இந்தச் சில்லரை நாடுகள் சேர்ந்த ஒவ்வொரு தொகுதியையும் ஒவ்வொரு வல்லரசு, தன்னுடைய ஆடற் கருவியாக உபயோகித்துக் கொண்டு வந்தது. உதாரணமாக ருமேனியா, ஜெக்கோ-ஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளை பிரான்சும், ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா முதலியவற்றை இத்தலியும் தட்டிக் கொடுத்து வந்தன. இதனால் மத்திய ஐரோப்பாவில் இரண்டு கட்சிகள் ஏற்படலாயின.

போலந்தும், மேலே சொல்லப்பட்ட ருமேனியா முதலிய மூன்று நாடுகளும், இத்தலியும், பிரான்ஸோடு ஒன்றுபட்டிருந்திருக்குமானால், ஹிட்லர் இவ்வளவு துணிச்சலாக ஆஸ்திரியா மீது கை வைத்திருக்க முடியாது. சென்ற ஐந்து வருஷ காலமாகத்தான், மேலே கூறப்பட்ட நாடுகள் பிரான்ஸுடன் நட்புரிமை கொண்டாட ஆரம்பித்திருக்கின்றன. ஆனால் அது முதல் இவை, பிரான்ஸிடமிருந்து ஒதுங்கியே போகின்றன. ஹிட்லர், ஜெர்மனியில் ஆதிக்கம் பெற்றவுடனேயே, போலந்தைச் சேர்ந்த டான்ஸிக் பிரதேசத்தினர் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அவர்களை போலந்து எதிர்த்தபோது, பிரான்ஸின் ஆதரவை போலந்து பெறவில்லை. இதனால் ஜெர்மனியினால்தான் தாக்கப்பட்டால், பிரான்ஸின் உதவி தனக்குக் கிடைக்காதென்று போலந்து தீர்மானித்து விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், போலந்து மீது படையெடுப்பதில்லையென்று ஜெர்மனி நீட்டிய ஒப்பந்தத்தில் போலந்து சந்தோஷமாகக் கை

யெழுந்திட்டது. தவிர, பிரான்ஸும் சோவியத் அரசாங்கமும் சிநேக ஒப்பந்தம்செய்துகொண்டது போலந்துக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால் போலந்தும் ருஷ்யாவும் பரம்பரைச் சத்ருக்களல்லவா? தவிர, இப்பொழுது, போலந்தின் நிருவாக முறை, ஜெர்மன் நிருவாக முறையைத் தழுவியதாகவே இருக்கிறது. ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் மீது ஜெர்மனி கை வைக்குமானால், போலந்து சும்மா யிருக்கும். அல்லது ஜெர்மனிக்கு ஆதரவு கொடுக்கும். தவிர, ருமேனியாவும், யூகோஸ்லேவியாவுங் கூட, ஜெக்கோ—ஸ்லோவேகியாவுக்குத் துணை செய்யாமல் ஒதுங்கிவிடக் கூடும். யூகோஸ்லேவியா தலையிடுவதால் அஃது இத்தலியின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளும்படியாகும். ருமேனியாவும், ருஷ்யாவை மனதில் வைத்துக் கொண்டு ஒதுங்கியே நிற்கும். ஆனால் ருஷ்யா, ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் துணைக்கு வரலாம். அப்படி வருவதாயிருந்தால், ருஷ்யப் படைகள், போலந்து வழியாகவோ, ருமேனியா வழியாகவோதான் ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் எல்லையை வந்தடைய முடியும். இதற்கு போலந்தும் ருமேனியாவும் இடங்கொடுக்குமா? அப்படி தந்திரமாகவோ, பலாத்காரமாகவோ ருமேனியா வழியாக ருஷ்யத் துருப்புகள் வருகின்றனவென்று வைத்துக் கொள்வோம். ருமேனியாவின் எல்லைப் புறத்தைத் தாண்டுவதற்கு ஒரே ஒரு பாலந்தான் நீஸ்டர் நதியின் மீது இருக்கிறது. தவிர, ருமேனிய கார்ப்பேதியன் மலையைத் தாண்டி ஸ்லோவேகியாவுக்குள் செல்கிற ரெயில்வண்டி, மிக மெதுவாகச் செல்லக் கூடியது. தவிர குறுகலான பாதையுடையது. இதில் அதிகமான துருப்புகளை ஏற்றிக்கொண்டு செல்ல முடியாது. இதனால் ருஷ்யாவின் தலையீடும் ஜெக்கோ-ஸ்லோவேகியாவுக்கு நன்மையைத் தராது. இவ்வளவு சங்கடங்களுக்கிடையே அது உதவிசெய்யுமாவென்பதுஞ் சந்தேகம்.

ஆகவே, ஜெக்கோ-ஸ்லோவேகியாவுக்கு உதவி செய்யக் கூடியது பிரான்ஸ் தான். ஆனால் இது அனுபவத்தில் எப்படி நிறைவேறும்? இத்தலியின் சலுகைபெற்று அந்த நாட்டிலுள்ள பீட்மாண்ட் மாகாணத்தின் வழியாக பொஹிமியா சென்று அங்கிருந்து ஜெக்கோ-ஸ்லோவேகியா செல்லலாம். ஆனால் இவையெல்லாம் நடவாத காரியங்கள். எனவே, ஜெக்கோ-ஸ்லோவேகியாவுக்கு பிரான்ஸ் உதவி செய்ய வேண்டுமானால், அது ஜெர்மனியை எதிர்ப்பதனால் தான்முடியும். அதாவது 1870-ம் வருஷத்து யுத்தம் போலத் தான். இப்படி பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டு, பிரான்சின் கிழக்கு எல்லைப்புறத்திலேயே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்குமானால், ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் படையில் ஒரு ஆள் கூட சேதமடைய வேண்டியிராது!

ஆனாலும் ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் நிலைமை கவலைக்கிடமானது தான். இருபது வருஷங்களுக்கு முன்னர் தான் இந்த நாடு பூகோளப் படத்திலேயே தோன்றியது. அதற்குள்ளேயே இதன் வாழ்வு முடிந்துவிடுமா? ஜெக்கோ-ஸ்லோவேகியக் குடியரசின் தலைவரான டாக்டர் பெனெஸ் (Dr. Benes) உறுதியாக இருக்கிறார். ஆனால் அஃது அசட்டுத்தனமான உறுதியில்லை. இவர், எந்த லட்சியங்களுக்கு ஹிட்லர் பிரதிநிதி

ரஹிமதுல்லா

முகம்மத் ஸயானி

ஜனனம்—1847 மரணம்—1902

——"ஒரு காங்கிரஸ் வாதி"

பன்னிரண்டாவது இந்திய தேசீய காங்கிரஸ் 1896ம் வருஷம் டிசம்பர் மாதம் 28ந் தேதி கல்கத்தாவில் கூடியது. 790 பிரதிநிதிகள் ஆஜராயிருந்தார்கள். ஸர் ரோமேச சந்திர மித்திரர், வரவேற்புக் கழகத் தலைவராயிருந்தார். ஆனால் இவர் தேக அசௌக்கியங் காரணமாக காங்கிரஸுக்கு ஆஜராக முடியவில்லை. இவருக்குப் பதிலாக டாக்டர் ராஷ் விஹாரி கோஷ் இவருடைய பிரசங்கத்தைப் படித்தார்.

இந்தக் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர் ஸ்ரீ ரஹிமதுல்லா முகம்மது ஸயானி. இவர் இஸ்லாமிய கோஜா சமூகத்தைச் சேர்ந்தவர். சமூக நலனுக்காக மட்டுமல்ல, தேச நலனுக்காகப் பாடுபட்ட கோஜா சமூகத்தைச் சேர்ந்தவர் ஒரு சிலரே. அவரில் இவருக்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டும்.

இவர் 5-4-1847ல் பம்பாயில் ஜனித்தார். இவருடைய பாட்டனார் கச் பிரதேசத்தி லிருந்து பம்பாய்க்கு

யாக இருக்கிறாரோ அவற்றிற்கெல்லாம் பரம விரோதி.

ஜெக்கோ-ஸ்லோவேகியாவி லுள்ள எல்லா ஜெர்மானியர்களும், ஹிட்லரின் நாஜி கட்சியை ஆதரிக்கிறார்களென்று சொல்ல முடியாது. இவர்களில் நான்கு வித கட்சிகள் இருக்கின்றன. இவற்றில் கோன்ராட் ஹென்லைன் (Konrad Henlein) என்பவரைத் தலைவராகக் கொண்ட 'ஸுடேடென் ஜெர்மானியக்' கட்சி ஒன்றுதான் ஹிட்லருக்கு ஆதரவு கொடுப்பது. மற்ற மூன்று கட்சியினரையும், டாக்டர் பெனெஸ் தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளலாமல்லவா? ஆனால் சமீபத்தில், இந்த மூன்று ஜெர்மானியக் கட்சிகள் கூட மேற்படி ஹென்லைன் கட்சியோடு ஐக்கியமாகி விட்டதாகச் சொல்லப் படுகிறது.

இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால், ஜெக்கோ—ஸ்லோவேகியாவை நேரடியாகத் தாக்காமல் அந்த நாட்டிற்குள்ளேயே அரசியல் குழப்பங்களை உண்டு பண்ணி, அதனைப் பலஹீனப் படுத்தி விட்டால் மத்திய ஐரோப்பாவில், தான் கொண்டுள்ள எண்ணம் நிறைவேறும் என்று ஹிட்லர் வேலை செய்து வருவதாக நிச்சயிக்க வேண்டி யிருக்கிறது.

வியாபார நிமித்தம் வந்து குடியேறினார். ஸயானி, பிள்ளைப் பருவத்தில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பட்டார். அப்பொழுது கோஜா சமூகத்தில் படிப்புக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை. ஆங்கில முறையில் நடைபெறும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படிக்கிறவன் நாஸ்திகனாகி விடுவான் என்ற எண்ணம் வேரூன்றி யிருந்தது. நமது ஸயானி ஒரு சமயம், பள்ளிக்கூடம் சென்று கொண் டிருக்கிறபோது, இவர் மீது சிலர் கல்லைவிட்டெறிந்தார்களாம். பிறிதொரு சமயம், மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு போன இவர் வழி மறிக்கப் பட்டு தொந்திரவு விளைவிக்கப் பட்டார். இங்ஙனம், சமூகத்தாருடைய பலத்த எதிர்ப்புக்கிடையே, இவர், எலிபின்ஸ்டன் ஸ்கூலில் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும் பிறகு 1866ம் வருஷம் எம். ஏ. பரீட்சையிலும் தேறினார். இவர்தான், கோஜா சமூகத்தில் முதன் முதலாக எம். ஏ. பாஸ் செய்தவர். இவர் பாஸ் செய்த முப்பது வருஷங்களுக்குப் பிறகுகூட ஒருவரும், இந்தச் சமூகத்தில் எம்.ஏ. பாஸ் செய்ய வில்லை. இதனால் இவருக்குக் கல்வியிலே எவ்வளவு ஆர்வம் இருந்திருக்க வேண்டு மென்பது நன்கு புலனாகிறது. 1867ம் வருஷத்தில் இவர் வக்கீல் பரீட்சையில் தேறிவிட்டு வக்கீல் தொழில் நடத்த ஆரம்பித்தார். பின்னர் 1878ம் வருஷத்தில் சொலிஸிட்டரானார். இவர் பம்பாயிலிருந்த பிரபல கம்பெனிகளுக்கு சொலிஸிட்டராக இருந்தார். இதன் மூலமாக ஏராளமான பொருள் சம்பாதித்தார்.

இந்தப் பொருள் சம்பாதிப்பதோடு இவர் திருப்தி கொள்ளவில்லை. தமது ஓய்வு காலத்தைப் பொது நல சேவையில் செலவழித்தார். பொதுநலத் தொண்டர்களுக்கு ஓய்வேது? ஓய்வு உண்டாக்கிக் கொள்ள வேண்டியதுதான். 1866ம் வருஷம் இவர், பம்பாய் நகர சபையில் ஓர் அங்கத்தினரா யிருந்தார். இந்த வருஷம் முதல் ஆயுள் பரியந்தம் நகர சபை அங்கத்தினரா யிருந்து நகர வாசிகளின் நன்மைக்காகப் பல காரியங்களைச் செய்தனர். 1888ம் வருஷம் இவர் சேவையைப் பாராட்டி, இவரை, கார்ப்போரேஷன் தலைவராகத் தெரிந் தெடுத்தார்கள். அதே வருஷத்தில், இவர் பம்பாய் சட்ட சபையிலும் ஓர் அங்கத்தினராகத் தெரிந் தெடுக்கப் பட்டார். இது முதற் கொண்டு இவர் அகில இந்திய புருஷரானார். இவருடைய சேவையானது இந்தியா முழுவதும் விரிந்தது.

காங்கிரஸ் தோன்றின நாள் முதல் இவர், அதன் வேலையிலீடு பட்டார். அந்தக் காலத்தில், காங்கிரஸில் ஈடுபட்டிருந்த முஸல்மான்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. தவிர, முஸல்மான்களைக் காங்கிரஸினின்று பிரித்துவிடவும் அப்பொழுது சில சூழ்ச்சிகள் நடை பெற்றன. ஆனால் நமது ஸயானி, இவைகளை யெல்லாம் லட்சியம் செய்யவில்லை. காங்கிரஸில் தீவிரமாகக் கலந்து வேலை செய்தார். இதனால், இவருடைய சமூகத்தார் சிலருடைய வெறுப்பையும் பெற்றார். ஆனால் உண்மைத் தொண்டர்கள், பிறருடைய விருப்பு வெறுப்பைப் பொருட் படுத்துவ தில்லை யல்லவா! இவருடைய அரிய சேவையைப் பாராட்டித்தான் இவரைப் பன்னிரண்டாவது காங்கிரஸின் தலைவராகத் தெரிந் தெடுத்தார்கள். இவர் தமது தலைமை யுரையில், உலக வல்லரசுகளில் இந்தியாவின் நிலைமை மிகவும்

மட்டமாயிருக்கிறதென்றும், இந்தியர் சுயராஜ்யத்துக்காகத் தவிக்கிறார்களென்றுங் கூறினார்.

'அரசாங்க அமைப்பில் பல மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று இந்தியர்கள் கோருகிறார்கள். தாழ்ந்த நிலையிலுள்ள தங்கள் அரசியல் அந்தஸ்தைப்பற்றிப் பகிரங்கமாகத் தெரிவிக்கிறார்கள். இவர்களுடைய அறிவானது, அரசியல் அடிமைத்தனத்தோடு போராடுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குட்பட்ட ஓர் உயர்ந்த பிரஜா உரிமையை அவர்கள் கோருகிறார்கள். இந்த லட்சியத்தை ஆதரிக்கவேண்டாமா?'

இது ஸ்ரீ ஸயானி பேச்சில் ஒரு பாகம். சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன் காங்கிரஸின் லட்சியம் எதுவாக இருந்ததென்பது இதனின்று தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீ ஸயானி, தமது தலைமையுரையில் காங்கிரஸ்நடத்தும் தேசியப்போராட்டத்தில் முஸல்மான்களும் பெரும்பான்மையோராகச்சேர்ந்து உழைக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இந்தியா அரசாங்கத்தார் இவருடைய மகத்தான சேவையைப் பாராட்டி, இவரை இந்தியா சட்டசபைக்கு ஓர் அங்கத்தினராக நியமித்தனர். இவர் சட்டசபையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பல ஆதாரங்கள் நிறைந்ததையாகவும், எதிர்க் கட்சியினரும் அங்கீகரிக்கக் கூடியவையாகவும் இருக்கும்.

இவர், தேசத் தொண்டு செய்தாலும், தமது சமூக நலனை மறக்கவில்லை. கோஜா சமூகத்தினருடைய படிப்பு, வியாபாரம், பொருளாதார நிலை முதலியவற்றையெல்லாம் இவர் அபிவிருத்தி செய்தார்.

இவர் 4-6-1902ல் பரமபத மடைந்தார்.

நாம் இந்தியாவில், இந்தியா சட்டசபை அங்கத்தினர்களாக அநுமதிக்கப் படுகிறோம். இங்கிலாந்தில், காமன்ஸ் சபையில் கூட நமக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கிறது. ஆனால் தென்னாப்பிரிக்காவில், அநுமதிச் சீட்டின்றி நாம் வெளியே யாத்திரை செய்ய முடியாது. இரவில் வீதிகளில் நடந்து செல்ல முடியாது. குறிப்பிட்ட இடங்களில் தான் நாம் வசிக்க வேண்டும். ரெயில்வேயில் முதல் இரண்டாவது வகுப்புகளில் பிரயாணஞ் செய்யக் கூடாது. டிராம் வண்டிகளில் ஏறிச் செல்ல அநுமதியில்லை. நடை பாதைகளில் நடந்து செல்ல முடியாது. ஹோட்டல்களில் இடங் கிடைக்காது. நம் மீது காறித் துப்பப்படுகிறது. சாபம், திட்டு எல்லாம் நம் தலை மீது, எந்த மனிதனும் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்க முடியாத பல அவமானங்களுக்கு நாம் உட்படுகிறோம்.

—ஜி. பரமேசுவரம் பிள்ளை

பன்னிரண்டாவது காங்கிரஸில்

கடல்

—வித்வான் எஸ். உமைதாணுப் பிள்ளை

கடலே! கடலே! கருங் கடலே!
கவலை யில்லாப் பெருங் கடலே!
அல்லும் பகலும் அலைகடலே!
ஆழ முள்ள உவர்க் கடலே!

தெள்ளித் தெள்ளி மணல் கொழித்து;
தினமும் முத்தும் பலகொள் வாய்.
மழை பெய்வதும் உன் னாலே!
மண்ணோர் வாழ்வதும் உன் னாலே!

மழையாய்ப் பெய்த நீரெல் லாம்
மண்ணில் நீயே கொண்டிடு வாய்!
அல்லும் பகலும் அலைந்திடு வாய்!
ஆனந் தக்கூத்தாடிடு வாய்!

எல்லை யில்லா உருவுடை யாய்!
இன்ப வாழ்வே தினமுடை யாய்!
உன்னைக் காண வருபவரின்
உள்ளமெ ல்லாங் கொள்ளைகொண்டு

உவர்ந்து போகச் செய்திடு வாய்!
உன்னிற் சேரும் கழிபொருளை
உள்ளம் மகிழக் கொண்டிடு வாய்!
உயர்ந்த பொருளாய் மதித்திடு வாய்

உன்னைப் போல இவ்வுல கில்
உருவில் மாற்றம் அடையா மல்,
உள்ளத் தன்மை தன்று மல்
உண்டோ? உலகில் உவர்க் கடலே!

பத்திரிகா லட்சணம்

—ஆ. திருச்சிற்றம்பலம்

சொற்ப அறிவு வளர்ச்சியுடைய ஒவ்வொருவரும் பத்திரிகா லட்சணம் என்னவென்ற இந்தப் பிரச்னையில் ஈடுபடாதிரார். ஆகவே இப் பிரச்னையைக் கூடிய அளவு முடிவு செய்தல் நலம் என்று கருதி பேனாவைத் தூக்கினேன். பேனாவின் முனை உடனே மின்சார சக்தி போற் சென்று மூளையைத் திருகி சுறுசுறுப்பை ஊட்டியது. முதன்மையாக, பத்திரிகை என்பது என்ன என்று அறிவு கேட்டது. உடனே ஞானம் எழுந்து, 'பத்திரிகை என்பது பாமரர்களுக்கும், அறிவாளிகளுக்கும் உலகின் எல்லா விஷயங்களையும் போதிக்கும் ஒரு கருவி' என்று பதில் உரைத்தது. அறிவு சும்மாயிருக்குமா? உடனே 'சரி, அப்படியானால் இந்தப் பத்திரிகையென்னும் கருவியை விசை முடுக்கி ஓட்டுவிப்பவன் யார்? உலகில் எவ்வளவு கருவிகள் உள்ளன? எவ்வளவு விசை முடுக்கிகள் இருக்கின்றனர்? இவர்களுள் மேலானவர் யார்? தாழ்வானவர் யார்? இந்தக் கருவிகள் எத்தனை நாளைக்கு உழைக்கும்? இதற்கு மராமத்து ஏதேனும் ஏற்படுமோ? அப்போது எந்த இஞ்சினீயர் இதைச் சரி செய்ய முடியும்? ——————' என்றபடியெல்லாம் கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்து ஒரு வெற்றிக்களிப்புடன் ஓய்ந்தது.

ஞானம் சும்மாயிருந்து விடவில்லை. 'அப்பா, நீ கேட்ட கேள்விகட்கும் நீ இனி கேட்கப் போகிற கேள்விகட்கும் நான் ஒருங்கே பதில் விடுத்து விடுகிறேன்' என்று சொல்லிப் பின் வரும் பிரசங்கத்தைச் செய்தது:

'இந்தக் கருவிக்கு ஜீவன் கொடுத்து, விசை முடுக்கி, ஓட்டுவித்து, இடம் கொடுத்து, ஆயுளை நீடிக்கச் செய்யும் தெய்வம் 'ஆசிரியர்.' இம்மாதிரியான ஆசிரிய தேவர்கள் முப்பத்து முக்கோடியாவர். ஆனால் ஆசிரிய தெய்வம் ஒன்று தான். தேவர்கள் பலர். தெய்வம் ஒன்று தான். ஆனால் உண்மையிலேயே அறிவு வளர்ச்சி பெற்று, உலகத்திற்குத் தான் ஏதேனும் தொண்டு செய்ய வேண்டுமென்று கருதி, மேன்மையான தீவிரவாதிகளின் போஷணையினால் பத்திரிகையை ஆரம்பித்து, தேசத்தைத் தட்டி எழுப்பி, பாமரர்களுக்கும் அறிவாளிகளுக்கும் தக்கபடி போதித்து, உலகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் தன் பிரயாசையைச் செலவிட்டு நடுநிலைவகித்து உலகத்தைப் பற்றிப்பொது மக்கட்கு அறிவுறுத்தி, காலத்துக்குத் தக்கபடி விஷயங்களைச் சரியான படி பக்குவப்படுத்தி யாவர்க்கும் ஊட்டும் மகான்கள் சிலர். இவர்களோ உண்மையான ஆசிரியர்களாவர். உலகத்திலே பத்திரிகை ஜாப்தாவில் இடங் கிடைக்கும் பத்திரிகைகள் சொற்பம்.

பத்திரிகை என்பது தெய்வத்தன்மை பொருந்தியது. பாமரர்களை உணர்விப்பது. அறிவாளிகளைச் சரியான வழியில் செல்லுவிப்பது. உணர்ச்சியையும், ஆத்ம சக்தியையும் ஊட்டுவது. தீயவர்களைக் கண்டிப்பது. தேசிய வாதிகளைப் பலமுறுவிப்பது. இவ்வளவு பெருமை வாய்ந்த பத்திரிகைகளை நடத்துபவர்கள் உண்மையான உணர்ச்சியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். தேசாபிமானிகளாயிருத்தல் வேண்டும். பொது நலத்துக்குத் தம்மைத் தியாகம் செய்யும் நோக்கமுடையவர்களாயிருத்தல் வேண்டும். தன்னைத்தான் சீர்திருத்திக் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும். போதனா சக்தியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ஆத்ம சக்தியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். பண ஆசையில்லாதவர்களாயிருத்தல் வேண்டும். கல்விமான்களாயும் இருத்தல் வேண்டும். அரசாங்க பாஷையோ, பொதுப் பாஷையோ நன்கு அறிந்தவர்களாயிருத்தல் வேண்டும். நடுநிலை வகிக்கும் சக்தி பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்'.



எல்லோரும் ஓர் குலம்

ஆசிரியர்: ஸ்ரீ ப. ராமஸ்வாமி; வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜார்ஜ் டவுன், மதராஸ்; அளவு டபிள் பூல்ஸ் காப் 1 x 16; பக்கம்: 240; விலை: எட்டணா.

முதலில் ஸ்ரீ ராமஸ்வாமி, நமது மனப்பூர்வமான பாராட்டுதலைப் பெற்றுக் கொள்ளட்டும். பிறகு, அவர் எழுதிய இந்த அரிய நூலைப்பற்றி நமது கருத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவர் இந்தநூலின் 182-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, ‘இப்பொழுது பண்டித ஜவஹர்லாலும், வேறு பல தீவிர இளைஞர்களும் அபேதவாதப் பிரசாரம் செய்து வருவதால், பலவிடங்களிலும் அதைப் பற்றிப் பேச்சாக இருக்கிறது. ஆனால் அநேகம் பேர்கள், அதை ஆதரிப்பதானாலும், எதிர்ப்பதானாலும் அதைப் பற்றிய விஷயங்களைச் சிறிதாவது ஆராயாமலே அபிப்பிராயங்களைக் கொட்டி வருகிறார்கள். ஆதலால் விஷய ஞானத்தைப் பரப்பவேண்டியதே முதல் வேலையாய் இருக்கின்றது’. தமிழில் இந்த விஷய ஞானத்தை உண்டுபண்ணக் கூடிய நூல்கள் எதுவுமில்லை. அதற்கு ஸ்ரீ ராமஸ்வாமி அடிகோலியிருக்கிறார் என்றால் அவரை நாம் பாராட்டாமலிருக்க முடியுமா?

இந்தப் புஸ்தகத்தைப் படிப்பதன் மூலம், சென்ற அநேக நூற்றாண்டுகளிலிருந்து நாளது வரை, மனித சமூகம் எப்படி வளர்ச்சியடைந்து வந்திருக்கிறதென்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொண்டுவிடலாம். மனித சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றியும், அந்த வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரக் குழப்பங்களைப் பற்றியும் தெரிந்து கொள்வதே மிகவும் கஷ்டமான காரியம். அவைகளைப்பற்றிப் பிறருக்குப் புரியச் சொல்வது அதனிலும் மிகக் கடினமானது. ஆனால் அதனிலும் கஷ்டமானது, சரியான சொற்கள் கிடைக்காத நிலையில், சிக்கலான விஷயத்தைப் புரியாதவர்களுக்கு எளிய முறையில் சொல்வது. இந்தக் கடினமான வேலையைச் செய்திருக்கிறார் ஸ்ரீ ராமஸ்வாமி. மனிதனுடைய வளர்ச்சியைப் பற்றியும், அபேதவாதத்தைப் பற்றியும் இதை விடச் சுலபமாக எழுத முடியாது. வேறுவிதமாகவும் எழுத முடியாது. ஸ்ரீ ராமஸ்வாமி, விஷயத்தை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார். பிறர்க்குத் தெரியப்படுத்தும் சக்தியும் அவரிடத்தில் இருக்கிறது. தவிர ஸ்ரீ ராமஸ்வாமி, உணர்ச்சி வெள்ளத்திலே தம்மை மிதக்கவிட்டுவிடவில்லை. அறிவுத் துறையோடுதான்

அடங்கி நிற்கிறார். உதாரணமாக, நூலை முடிக்கிறபோது 'உலகின் விடிவு காலத்திற்கு இந்தியாவின் விடிவு காலம் இன்றியமையாதது' (பக்-199) என்று கூறுவது, அறிவுக்கு நிறைய வேலையை வைக்கிறது. ஆனால் உணர்ச்சிக்கு இடங்கொடுக்கவில்லை. அஃது இப்பொழுது தேவையுமில்லை. காச்சு மூச்சென்று கத்துவதால் சுயராஜ்யம் வந்து விடாது. 'பண்ணோனுக்கான பூசையெல்லாம்' என்று சொல்லி பாரத மாதாவின் படத்தைச் சுவற்றிலே மாட்டி அதன்கீழ் உட்கார்ந்துஓயாமல் அழுது கொண்டிருந்தால் சுதந்திரம் நம்மைப் பார்த்துச் சிரிக்கத் தான் செய்யுமே தவிர, நம்மண்டை வரவே வராது. நம்முடைய நிலைமை நாம் அறியவேண்டும். அதற்கான மார்க்கங்களைத் தேடவேண்டும். இதற்கு இந்த நூல் நல்ல உதவி. மேலெழுந்தவாரியாகப்பக்கத்தைப் புரட்டிக்கொண்டு செல்வோருக்கு இந்த நூல் ஒரு நன்மையும் கொடாது. இதில் கூறியுள்ள ஒவ்வொன்றையும் சிந்திக்க வேண்டும். உதாரணமாக, மனிதன் யார் என்ற கேள்விக்கு ஆசிரியர், என்ன அழகான வியாக்கியானம் கொடுத்திருக்கிறார் பாருங்கள். 'சுருங்கச் சொன்னால் அவனை (மனிதனை)ச் 'சமூகக் குஞ்சு' அல்லது 'குட்டிச் சமூகம்' என்று கூடச் சொல்லலாம். சமூக சாரத்தைப் பிழிந்தெடுத்து ஓர் உருவமாக்கினால் அதுவே மனிதன் என்று கூறலாம்' (பக்-142) என்று விவரித்திருப்பது எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதாக இருக்கிறது?

தமிழ் நாட்டிலே ஒரு விநோதம். அபேதவாதத்தை ஆதரிக்கிறவர்களும் அதனை எதிர்க்கிறவர்களும் ருஷ்யாவை உதா ரணமாக எடுத்துக் கொண்டு அதனைப் பூஷிக்கவோ, தூஷிக்கவோ செய்கிறார்கள். ஆனால் இருசாராரும் ருஷ்யாவின் உண்மையான நிலைமையையோ, அஃது, ஆட்சி முறையில் கொண்டு புகுத்தியிருக்கும் சமூக உடைமைத் தத்துவத்தைப் பற்றியோ எவ்வளவு தூரம் அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சந்தேகமான விஷயம். ஆசிரியர், ருஷ்யாவைப் பற்றிக் கூறியிருக்கிற அபிப்பிராயம்நமது பூரண அங்கீகாரத்தைப் பெறுகிறது. 'ருஷ்யாவின்முன்னேற்றம் மகத்தானதென்பதையும், வேறெந்த அரசியல் முறையிலும் இம்மாதிரி ஏற்பட்டிருக்க முடியாதென்பதையும் காணக் கூடும். ருஷ்யாவின் புதிய அரசியல் முறைகளையும், ஜனங்களின் வாழ்க்கையையும் பற்றி வெளியாயிருக்கும் சில நூல்களையாவது ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது மிகவும் அவசியம்? * * * எது எப்படி இருந்த போதிலும் அது உலக சமாதானத்திற்கு விரோதமாய் ஒன்றுஞ் செய்யவில்லை; தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அதன் முதற் கடமையாகின்றது'. (பக்-133-134) ருஷ்யாவைப் பற்றிச் சில நூல்களையாவது படிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று சிபார்சு செய்வதோடு ஸ்ரீ ராமஸ்வாமி திருப்தியடையமாட்டாரென்று நம்புகிறோம். ருஷ்யாவைப் பற்றி அவர் சில நூல்களைத் தமிழில் எழுதினால் நன்றாயிருக்கும்.

அபேதவாதத்தின் முக்கியமான அம்சங்களை பதின்மூன்று தொகுதிகளாகப் பிரித்து (பக்-117) ஆசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது மிகவும் நன்றாயிருக்கிறது. அப்படியே புதிய சமூகத்தை நிர்மாணிப்பதற்கு நான்கு படிகளைத் தாண்ட வேண்

இருப்பதுதான் யாது?

(கபீர் தாஸ்)

புண்ணிய தீர்த்தங்களில் இருப்பது
தண்ணீரன்றி வே றென்கொலோ:
அவற்றில் நீராடினேன்; பயனிலேன்.

கோயிலில் வைத்துக் கும்பிடும் கற்சிலைகளில்
உயிரில்லை; ஏன்? அவை பேசா.
உரத்துக் கூவினேன்; பயனிலேன்.

புராணமும் குரானும் வெறும் வார்த்தைகளே;
திரைதூக்கி நோக்கினேன்; பயனிலேன்.

கபீரின் வாக்கு அநுபவத்தை யொட்டியது;
பிறவெலாம் உண்மையற்ற
தென்பதை அந்த வாக்கு அறியும்.

(தழுவல்)

டியதைப் பற்றி ஆசிரியர் கூறியிருப்பது சிந்தனைக்கு எவ்வளவு வேலையை வைக்கிறது?

பொதுவாகத் தமிழ் நாட்டுத் தீவிர இளைஞர்களிடையே இந்த நூல், ஓர் ஆராய்ச்சி மனப்பான்மையை உண்டு பண்ணுமானால், அதுவே, தாம் பட்ட சிரமத்திற்குத் தகுந்த பரிசு என்று ஆசிரியர் நினைப்பார்.

மலர் வணக்கம்

ஆக்கியோன்; ஸ்ரீ ராம. செகநாதன்; (வெள்ளிக்குறிச்சி) சூமங்கை, மியாங் மியா ஜில்லா, பர்மா.

கடவுள் வழிபாட்டின் போது இப்பொழுது பொருள் விளங்காத மொழியிலே அர்ச்சனைசெய்கிறார்கள்; அதனால் நேரும் குற்றங்கள் பல என உணர்ந்து இச்சிறு நூலை நண்பர் வெளியிட்டிருக்கிறார்.

தமிழில் ஆசிரியப்பா முறையில் அமைந்துள்ள இந்நூலை, கடவுள் வழிபாடியற்றும் ஒவ்வொருவரும் அர்ச்சனை புரிய உபயோகித்துப் பயன் பெறவேண்டும் என்பது இதனை ஆக்கியோனின் நோக்கமும் 'நூல்முகம்' உதவியோர்களின் நோக்கமும் ஆகும்.

கடவுள் வழிபாட்டிலே கவனஞ் செலுத்தும் ஒவ்வொருவரும் இந்தப் புத்தகத்திலும் சிறிது கவனஞ் செலுத்துவார்களா?

'பரன்'

மின்சாரம் என்றால் என்ன?

—"விஞ்ஞான போதகர்"

நமது வாழ்க்கையில் மிகவும் அற்புதமானதாயும் அடிக்கடி கையாண்டு வரக் கூடியதாயும் உள்ள செய்கைகளைப் பற்றி அநேகமாய் நமக்கு அதிகம் தெரியாமற் போவது மிகவும் வியப்புறத் தக்கதாயிருக்கிறதல்லவா? மின்சாரசக்தியின் அபார வேலைகள் யாவற்றையும் கரை கண்டவரில்லை. மின்சார சக்தியோடு இது கால் பழகியும் மாந்தர் அதனிடத்திலுள்ள சக்தியால்விளையும் கொடிய பயனின் பயத்திலிருந்து தெளிந்தாரில்லை. ஆதி காலத்து மானிடர், பூமி, காற்று, நெருப்பு, தண்ணீர்என்னும் பதார்த்தங்களைக் கைவசப் படுத்தி யிருந்தார்கள். அவர்கள் உயர்ந்த கல்மலைகளின் உச்சியை ஏறிப் பார்த்தும், சுழல் காற்றோடு போர் புரிந்தும், சப்த சாகரங்களையும் பயமின்றிக் கடந்து சென்றும் இருந்தனர். ஆனால் மின்சார சக்தியாலுண்டாகும் கொடிய மின்னலைக் கண்டதும் மூலை முடுக்குகளுக்குள் சென்று பதுங்கி வந்தனர். அன்றுதான் அப்படி யென்றால் இன்றும் அப்படியே. மின்சார சாஸ்திரம் புதிது புதிதாக வளர்ந்து யாவரும் ஆச்சரியப் படத் தக்க காரியங்களைப் புரிந்து கொண்டே போகிறதே யொழிய ஒரு முடி

விற்கு வரவில்லை. ஆகவே 'மின்சாரம் என்றால் என்ன'? என்ற கேள்விக்குப் பூரணமான ஒன்றிரண்டு வரிகளில் விடையளிக்க முடியாது. மின்சார சக்தியின் விசித்திர வேலைப்பாடுகளால் தான் விளக்க வேண்டுமே யன்றி வேறு வழி கிடையாது. ஆனால் தற்சமயம் மின்சாரம் 'இயற்கையின் பரம ரகசியம் பொருந்தியதோர் சக்தி' என்று தான் கூற முடியும்.

மின்சார சக்தியைக் கண்ட விதம் யாது ?

கி. மு. 600 வருஷங்களுக்கு முன் ஆம்பர் (Amber) என்ற கல்லைத் தேய்த்தவுடன் அது சிறு துண்டுக் கடிதங்கள் போன்ற இலேசான பொருள்களைக் கவருந் தன்மையை அடைந்ததைக் கிரீக் தேசத்தார்கள் கண்டிருந்தனர். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின் (1600 கி. பி.) இங்கிலாந்து தேசத்தின் எலிஜபெத் இராணிக்கு வைத்தியரா யிருந்த கில்பேர்ட் என்பவர் பளிங்குத் தடி (Glass rod) யைப் பட்டுத் துணியில் தேய்த்தால் முன்பு ஆம்பர் என்ற கல்லுக்குண்டான சக்தி யுண்டானதைக் கண்டார். ஆம்பர் என்ற கல்லைக் கிரீக் பாஷையில் அழைக்கும் பெயரை இச் சக்திக்குக் கொடுத்து 'எலெக்ட்ரிசிட்டி' (மின்சாரம்) என்று அழைத்தனர். 1733-ல் பிரான்சு தேசத்து சாஸ்திரக்காரர் டூபே (Dufay) என்பவர் சாதாரண அரக்கைப் பூனைத் தோலில் தேய்த்தால் சிறிய பொருளை இழுக்கும் சக்தியடைந்ததைக் கண்டார்.

மின்சாரத்தை யடைந்த ஒரு பொருளை மேலே குறித்த பூனைத் தோலால் தேய்க்கப்பட்ட அரக்கு இழுக்கும் சக்தியை யுடையதாயிருந்தால் பட்டுத்துணியால் தேய்க்கப்பட்ட பளிங்குத் தடி அப்பொருளைத் தூரத் தள்ளும் சக்தியை யுடையதா யிருக்கிறது. இவ்விதமாக இருவித தன்மை வாய்ந்த மின்சார சக்திகளைக் கண்டு பிடித்தனர். இவ்வாறே ஆதியில் இருவிதப் பொருள்களை ஒன்றோ



அரக்குத்தடி பூனைத்தோலால் தேய்க்காதபோது கையிலுள்ள காகித நூலை இழுக்கும் சக்தியற்றிருக்கிறது.

அரக்குத்தடி பூனைத்தோலால் தேய்த்தபோது மின்சார சக்திவாய்ந்து காகித நூலைத் தன் வசம் இழுக்க முடிகிறது.

கை நூலை விட்டுவிட்டவுடன் அது அரக்குத்தடியில் சேர்ந்து கொள்ளுகிறது.

டொன்று தேய்ப்பதினால் மின் சார சக்தி கிடைக்கப் பெற்றனர். இதற்காக அக்காலங்களில் 18-ம் நூற்றாண்டில்— அநேக அரக்கு அல்லது பளிங்குத் தகடுகளை பூனைத்தோல் அல்லது பட்டுத் துணிகளில் உரசும்படியான இயந்திரங்களைச்செய்து அவைகளிலிருந்து இருபுறமாகப் பல பற்களைப் போலுள்ள ஊசிகளின் வழியாக மேற்கூறிய இரு தன்மை வாய்ந்த மின்சார சக்திகளைப் பெற்று வந்தனர். இவ்வாறு கிடைக்கப்பெறும் இரு தன்மையான மின்சார சக்திகள் வெகு சமீபத்திருந்தால் மின்சாரச் சுடர் ஒன்றிலிருந்து மற்றவையில் தாவிப் பாயும்;



பளிங்குத் தகடு உரசி மின்சாரம் கொடுக்கும் இயந்திரம்.

அல்லது ஒருவித மின்சார முண்டாகும் குண்டின் அருகில் நமது கையைக் கொண்டு சென்றால் நமது கையில் தாவிப் பாய்ந்து உடம்பின் வழியாகபூமியை நாடி ஓடும். இது பனிதனையோ, மரத்தையோ தாவி ஊடுருவிப் பூமியை நாடிச் செல்லும் மின்னலை ஒத்திருப்பது கவனிக்கக்கூடியது.



மின்சாரம் சுமத்தியுள்ள குண்டுக்கு வெகு சமீபத்தில் கை சென்றால் மின்சாரச் சுடர் நேர்கோடாகவும், கை தூரமா யிருந்தால் சுடர் மின்னலைப்போல் வளைந்து பாய்வதையும் காணலாம்.

இவ்விதமாக உரசுவதனாலேற்படும் மின்சார சக்திக்கு ஒரு கம்பியைத் தகித்துப் பிரகாசங் கொடுக்கவோ மற்றும் உஷ்ணப் படுத்தும் வேலைகளைச்

செய்யவோ சக்தி போதாது. உண்டாக்கிய விடத்தில் தங்கி நிற்கும் ஆற்றலுடையதாயிருந்ததை முன்னிட்டு இதை 'ஸ்டாடிக்' மின்சாரம் என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர்.



மின்சாரம் அதிகமாய் சுமத்தப்பட்டுள்ள ஓர் பெரிய குண்டிலிருந்து மின்சாரச் சுடர்கள் பக்கத்துக் கட்டட இரும்புப் பாலங்களைத் தாவுகின்றன.



கால்வானி என்பவர் 'கரண்ட்' மின்சாரம் கண்டு பிடித்த விதம்.

கம்பியில் ஓடும் மின்சாரம் (Current Electricity) கண்ட விதம் யாது ?

கால்வானி (Galvani) என்பவர் அகஸ்மாத்தாய் புதிதாக அறுத்த தவளையின் உடலில் ஒரு துத்தநாகக் கம்பியையும், காலில் ஒரு செம்புக் கம்பியையும் வைத்து இரண்டையும் சேர்த்தவுடன் தவளையின் கால் படபடவென்று ஆடினதைக் கண்டார். அதாவது இறந்த தவளையின் திராவகமும் உலோகக் கம்பிகளும் சம்பந்தப் பட்டவுடன் மின்சாரம் கம்பிகள் வழியாக ஓடி காலின் நரம்புகளை ஆடச் செய்தது. இதன் மூலமாக 1779ல் ஓல்டா (Volta) என்பவர் ஓடும் மின்சாரத்தைக் கண்டு பிடித்தார். இவர் ஒரு பாத்திரத்தில் அநேக உலோகத் தகடுகளை வைத்து ஒவ்வொன்றுக்கும் ஊடே 'ஆசிட்' திராவகத்தில் நனைத்த 'பிலானல்' துணி வைத்து ஒவ்வொரு தகட்டையும் சிறு கம்பிகளால் பொருத்திக்கடைசித் தகடுகளிரண்டையும் கம்பியால் சேர்த்தவுடன் மின்சாரம் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் ஓடிற்று. தற்காலத்தில் உலோகத்திராவகச் சேர்க்கையால் உண்டாகும் மின்சாரத்தை வெகு இலகுவில் வசப்படுத்துகின்றனர். ஒரு பளிங்குப் பாத்திரத்தில் கந்தகத் திராவகத்தை யூற்றி ஒரு செம்புத் தகட்டையும் துத்தநாகத் தகட்டையும் இருபுறமாக அதில் நிறுத்தி இரண்டையும் வெளியில் கம்பியால் இணைத்

தால் செம்புத் தகட்டிலிருந்து மின் சாரம் ஓடுவதைக் காணலாம். இந்த அமைப்பில் பலவித மாறுதல்களுடன் மின்சாரம் கொடுக்கும் பலவித மின் சாரப் பாத்திரங்களை அல்லது மின் சாரப் பெட்டிகளை (Batteries) அமைத்திருக்கின்றனர்.



1. பளிங்கு பாத்திரம்
2. துத்தநாகத் தடி
3. துவாரங்களையுடைய பாத்திரம்
4. அடுப்புக்கரித் தூள் முதலியன
5. கரித்தடி (Carbon)
6. கந்தகத் திராவகம்

'கரண்ட்' மின்சாரத்தின் முக்கிய குணங்கள் யாவை?

(அ) மின்சாரம், தான் செல்லக்கூடிய கம்பிகளைத் தகித்து உஷ்ணப்படுத்தி சில சமயம் பிரகாசிக்கச் செய்யும். இவ்வரிய குணத்தைக் கொண்டே வீடுகளிலும், தெருக்களிலும் மின்சார விளக்குகள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருக்கின்றன. அதன் தகிக்கும் குணத்தைக் கொண்டு மின்சார அடுப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன.

(ஆ) மின்சாரம் அநேக உலோகங்கள், திராவகங்களின் உட் சென்று அவைகளின் இயற்கையான கூட்டுப் பாகங்களை வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறது. தண்ணீரானது ஜலவாயு, பிராணவாயு இவைகளின் குறிப்பான அளவுடன் கூடி உண்டாகிறது. தண்ணீரில் மின்சாரத்தைச் செலுத்தினால் பிராண வாயுவையும் ஜல வாயுவையும் வெவ்வேறாகப் பிரித்து விடுகிறது. இதுபோலவே மற்றும் பல உலோக



மோட்டார் முதலிய வண்டிகளுக்கு உபயோகிக்கும் மின்சாரப் பொறியும் அதிலுள் வைக்கப்பட்டிருக்கும் இரு ஈயத் தகடுகளும் (Accumulator)

வகைகள் கலந்திருக்கும் ஜல பதார்த்தங்களை வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறது. இவ் வற்புதச் செய்கையால் கலப்பற்ற சுத்தமான உலோகங்கள் செய்யப்படுகின்றன. மேலும் 'எலெக்ட்ரோ பிளேட்டிங்' என்ற மலுங்கிய சாமான்களில் உலோகப் பூச்சு செய்து புத்தப் புதிதாக்குவதற்கு மின்சாரத்தின் இவ்வரிய செய்கை உதவிபுரியா நிற்கிறது. ஆனால் பலகை, ரப்பர், கந்தகம், 'எபொனைட்' (Ebonite) பீங்கான், முதலியபொருள்களினுள் பிரவேசிக்க முடியாது. இதனால் மின்சாரம் பாயாவண்ணம் செய்வதற்கு இப் பொருள்களைப் பெரும்பாலும் உபயோகிக்கின்றனர்.

(இ) மின்சாரத்தின் முக்கியமான பிறிதொரு குணம் காந்த சக்தி. காந்த சக்தியையுடைய ஒரு வஸ்து இரும்பு,

உருக்கு முதலிய சாமான்களைத் தன் வசம் இழுக்கும் சக்தி வாய்ந்தது. காந்த சக்தியையுடைய ஒரு இரும்பைத் தனியாக ஆகாயத்தில் நிறுத்தி அதை எப் பக்கம் திருப்பினாலும் வட தென் பக்கமாகவே வந்து நிற்கும். அதாவது ஒரு புறம் வட துருவத்தையும், மறுபுறம் தென் துருவத்தையே நோக்கி நிற்கும். ஆகவே இது மாலுமிகளுக்குத் திசைக் கருவியாக உதவி புரிகிறது. காந்த சக்தி வாய்ந்த கற்கள் பூமியி லிருந்தும் வெட்டி யெடுக்கப் படுகின்றன. இவைகளை வெகு காலத்திற்கு முன் சீன தேசத்தார்களோ முதலாவது அறிந்து திசை காட்டியாக உபயோகித் திருக்கின்றனர்.

இப்பொழுது மின்சார சக்தியால் காந்த சக்தியை அடைய முடிகிறது. மின்சாரம் ஓடும் நேர் வழியைச் சுற்றிலும் காந்த சக்தி தானாக உண்டாகிறது. இதனால் ஒரு இரும்பை உலோகக் கம்பியினால் சுற்றி மின்சாரத்தை ஓடச் செய்தால் அந்த இரும்பு, காந்த சக்தியை அடைந்து விடுகிறது. பெரிய இரும்புப் பாரங்களை இழுக்கக் கூடிய அவ்வளவு காந்த சக்தியையும் அடைய ஏதுவுண்டு. இவ்வரிய செய்கையால்தான் பெரும் பாரங்களை இலேசாகத் தூக்கிக் கப்பலிலோ அல்லது மற்றோரிடத்திற்கோ மாற்றிக் கொள்ளுகின்றனர்.

மின்சாரம் உண்டாக்கப்படும் இதர வகை யாவை ?

(அ) ஓடிக்கொண் டிருக்கும் மின்சாரம் தன் மார்க்கத்தின் பக்கங்களிலெல்லாம் காந்த சக்தியை விளைவிக்கிற தென்று மேலே கூறினோம். காந்த சக்தி நிறைந்த விடத்தில் உலோகக் கம்பி யொன்று ஊடுருவிச் சென்றால் அக் கம்பி தானாகவே மின்சாரத்தைப் பெறுகிறது. அல்லது உலோகக் கம்பியை நிறுத்தி அதனைக் காந்த சக்தி வெட்டி வெட்டிப் பாய்ந்தால் அக் கம்பி முன்போல மின்சாரத்தை யடைகிறது. மின்சாரம் பெறும் இவ்விரு வகையின் தத்துவத்தை பாரடே (Faraday) என்பவர் கண்டு பிடித்தார். தற்கால 'டைனமோ' என்ற மின்சாரம் பிறப்பிக்கும் இயந்திரத்தின் அமைப்பு மேற்கூறிய வகையில் தான். 'டைனமோ' இயந்திரத்தில் காந்த சக்தி வாய்ந்த இரும்பின் வட தென் துருவங்களினூடே அநேக செப்புக் கம்பிகளைக் கொண்ட சுருளை வெகு வேகமாக மற்றொரு இயந்திரத்தால் அல்லது நீர் வீழ்ச்சியினுதவியால் சுற்றினால் கம்பிகளில் மின்சாரம் தானாக உண்டாகிறது. ஆனால் ஒன்று. கம்பிச் சுருள் காந்தப் பொருளின் வட தென் துருவங்களுக்கு ஊடே சுற்றும் பொழுது மின்சாரமானது கம்பிச் சுருளின் ஒரு பாகத்தில் ஒரு பக்கம் செல்லக் கூடியதாகவும், அடுத்த பாகத்தில் மறு பக்கஞ் செல்லக் கூடியதாயும் உண்டாகிறது. ஆகவே 'டைனமோ'வில் கிடைக்கும் மின்சாரம் ஒரு புறம் விட்டு மறு புறம் மாறி மாறி உண்டாகக் கூடியதாயிருக்கிறது. இதற்கு 'புறம் மாறி மாறி' (Alternating) உண்டாகும் மின்சார மெனப் பெயர்.

இவ்விதமான மின்சாரத்தை இரங்கூன் போன்ற பல விடங்களில் மின்சார விளக்கு, விசிறி, அடுப்பு முதலியவைகளுக்கு உபயோகப் படுத்துகின்றனர். இவ்வித மின்சாரம் குறைந்தது ஒரு விநாடிக்குள் 50 தடவை மாறி மாறி யுண்டாவதால் (இதைவிட அதிகமாக மாறி யுண்டாகவும் செய்



குதிரை லாடம் போன்ற பெரிய காந்தம்.

'டைனமோ'

யலாம்) அதாவது மின்சாரம் மாறி மாறி யுண்டாகும் நேரம் வெகு வெகு அற்பமானதால் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு நம் கண்ணுக்கு விட்டு விட்டு எரிவதாகத் தோன்றுவதில்லை. ஆனால் உண்மையில் அது விட்டு விட்டுத் தான் எரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் சில வேலைகளுக்கு முக்கியமாக மின்சாரம் பெரும் திராவகப் பாத்திரங்களில் (Accumulators) மின்சார சக்தியைச் சுமத்துவதற்கு (To charge-batteries) அல்லது திராவகங்களின் இயற்கைப் பாகங்களைப் பிரிப்பதற்கு மாறி மாறி யுண்டாகும் மின்சாரம் உதவாது. இவ் வேலைகளுக்கு நேர்முகமாகவே யோடும் மின்சாரம் அத்யாவசியம். இதற்காக மேற்கூறிய 'டைனமோ'வில் ஓர் விதச் சாவியை அமைத்து மாறி மாறி உண்டாகும் மின்சாரத்தை ஒருமுகப் படுத்திக் கம்பியில் நேர்முகமாகவே ஓடும்படி செய்கின்றனர். இதற்கு 'நேர்முக' (Direct) மின்சாரம் எனப் பெயர்.

இது சம்பந்தத்தில் மின்சார 'மோட்டார்' (Electric Motor) என்பதைச் சிறிது விஸ்தரித்து விடுவோம். மேற் கூறிய 'டைனமோ'வில் கம்பிச் சுருளை வேகமாகக் காந்த சக்தி வாய்ந்த வஸ்துக்களின் இடையில் சுற்றினால் மின்சாரம் உண்டாகிறதென்று கூறினோமல்லவா? இப்பொழுது அதே இயந்திரத்தில் உலோகச் சுருளை வேறொரு உதவியால் சுற்றாமல் வெறும் மின்சாரத்தை அக்கம்பிகளில் ஓடும்படி செய்தால் அக்கம்பிச்சுருள் தானாகவே சுழலும். இவ்விதமாக மின்சாரத்தைச் செலுத்தி கம்பிச் சுருளைத் தானாகவே சுழலச் செய்யும் இயந்திரத்திற்கு மின்சார 'மோட்டார்' என்று பெயர். இவ்வியந்திரத்தின் தத்துவத்தைக் கொண்டே மின்சார விசிறி, 'ட்ராம்' வண்டி 'ட்ராலி பஸ்' வண்டி (Trolley Bus) முதலியவைகளை ஓடும்படி செய்கின்றனர். இவைகளைப்பற்றிப்பிறிதொரு சமயம் விவரிப்போம். 'டைனமோ' இயந்திர சக்தியை (Mechanical Energy) மின்சார சக்தியாக மாற்ற வல்லது, 'மோட்டார்' மின்சார சக்தியை இயந்திர சக்தியாக மாற்றக் கூடியது.

(ஆ) மின்சாரத்தை உஷ்ணத்தாலும் உண்டாக்கலாம். இருவித உலோகக் கம்பிகளை அவைகளின் நுனிப் பாகங்களில் இணைத்து வைத்து ஒரு இணைப்பில் உஷ்ணம் உண்டாக்கினால் அக் கம்பிகளில் மின்சாரம் தானாக ஓடும். இதில் ஒரு இணைப்பை விட மற்ற இணைப்பில் உஷ்ணம் அதிகமாக இருக்க வேண்டிய தவசியம். அவ்



இருவிதக் கம்பிகளைச் சேர்த்து அவைகளின் ஒருபுறத்தில் உஷ்ணப் படுத்தினால் மின்சாரம் தானாக ஏற்படும் வகை.

வாறு இல்லாவிடில் மின்சாரம் உண்டாகாது. இதனால் ஏற்படும் மின்சாரம் மிகக் கொஞ்சமானாலும் அதின் உபயோகம் வெகு அற்புதமானது. இதின் பல உபயோகங்களில் ஒன்றை கடந்த மதி 'ஜோதி'யில் குறிப்பிட்டுள்ளோம். இந்த மின்சாரத்தை 'உஷ்ணத்தாலுண்டான மின்சாரம்' (Thermal Electricity) என்று கூறப்படுகிறது.

(இ) மற்றொரு ஆச்சரியமான வகையில் உஷ்ணத்தைக் கொண்டு மின்சார அணுக்களை யுண்டாக்கி மின்சாரத்தைத் திரட்ட முடிகிறது. ஒரு கண்ணாடிக் கூட்டில் மின்சார விளக்கிலுள்ளவாறு ஒரு கம்பியை அமைத்து அக் கம்பியை ஒளிக்கச் செய்யாது சாதாரணமாக உஷ்ணம் அடைய மாத்திரம் செய்யக் கூடிய அவ்வளவு சொற்ப மின்சாரத்தை கம்பியில் செலுத்தினால் அக் கம்பியிலிருந்து மின்சார அணுக்கள் புற்றீசல்கள் போல் புறப்படுகின்றன. இவ்வாறு உண்டாக்கப்படும் மின்சாரத்தை 'உஷ்ணத்தாலுண்டாகும் மின்சார அணுக்கள்' (Thermionics) என்று கூறுகின்றனர், இதிலிருந்து மின்சாரம் பெறுவது துர்லபம், ஆனால் இம்மின்சார அணுக்கள் அதனுள் வேறு வழியில் வந்து சேர்க்கப்படும் மின்சார சக்தியை அதிகப்படுத்தவும், மின்சார அலைகளை நேர் வழிப் படுத்தவும் உபயோகமாகிறது. ஆகவே இது தற் காலம் 'வால்வ்' என்றழைக்கப்பட்டு ஆகாயத் தந்திக்கு உயிர் நாடியாக இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.



கண்ணாடிக் கூட்டிலுள்ள மெல்லிய கம்பியை மின்சாரத்தால் தகித்து மின்சார அணுக்கள் உண்டாக்கப்படும் 'வால்வ்' என்ற கருவி.

(ஈ) மின்சாரம் ஏற்படும் பிறிதொரு அற்புத வகையுமுளது. சாதாரண வெளிசம் ஏதாவதொரு பதார்த்தத்தின் மீது விழுந்தால் அப்பதார்த்தத்திலிருந்து மின்சார அணுக்கள் வெளிக்கிளம்புகின்றன வென்று வெகு காலத்திற்கு முன்னேயே அறிந்திருக்கிறார்கள். அதிலும் ஒளியானது உலோகத் தகடுகளிலும், சில வகை உப்புகள் பூசிய தகடுகளிலும் வீழ்ந்தால் அதிகமான மின்சார அணுக்கள் ஏராளமாகப் புறப்படுகின்றன. இச் செயலுக்கு 'ஒளி மின்சாரம்' (Photo Electricity) என்று கூறப்படுகிறது.

இவ்வாறு வெளிச்சம் தாக்கி மின்சாரம் உண்டாகும் தகடுகளை



ஒளியால் மின்சாரம் உண்டாக்கும் கண்ணாடிக் குழல் (Phote-electric cell)

யுடைய கருவிகள் ஒரு கண்ணாடிக் கூட்டில் அமைக்கப் படுகின்றன. வெளிச்சத்தைக் குழலின் ஒருபுறமாய்ச்சேர்த்து உள்ளிருக்கும் தகட்டின் மீது விழச் செய்கின்றனர். வெளிச்சம் விழுந்த மாத்திரத்தில் அணுக்கள் வெளிக் கிளம்புகின்றன. வெளிச்சம் தடைப்பட்ட மாத்திரத்தில் அணுக்களும் அடைபட்டு விடுகின்றன. தற்காலம் இக் கருவி செய்யும் அரிய காரியங்களைக் கேட்டதும் திடுக்கிட்டு ஆச்சரியப் படத்தக்கதாக அவ்வளவு அற்புதமானவைகளா யிருக்கின்றன.

மின்சாரத்திலும் அணுக்களா?

கொஞ்ச காலத்திற்கு முன் மின்சாரம் அணுவுக்கணுவான அவ்வளவு அற்பமான (Electrons) வஸ்துக்களடங்கிய தென்றும், இவைகள் சேர்ந்து ஓடுவதால் மின்சாரம் உண்டாகிற தென்றும், இச் சிறு அணுக்கள் உலகத்தில் சகலவித பதார்த்தங்களிலும் அமைந்த ஓர் அற்பமானதாய் ஒரே நிறையுடைய தென்றும் கண்டுபிடித் திருக்கின்றனர். இந்த மின்சார அணு ஜலவாயு அணுவின் $\frac{1}{1850}$ பாகக் கனத்தை யுடையதா யிருக்கிறது. ஆனால் ஜலவாயு அணுவின் கனமோ $\frac{1}{10^{24}}$ கிராம் அதாவது ஒன்றின் கீழ், ஒன்றோடு 24 பூச்சியங்கள் பெற்ற ஒரு அற்ப எண். இந்த அணுவின் நுட்பத்தை அறிய வேண்டுமானால் பின் வருமாறு கூறலாம். 16 மெழுகுவர்த்திப் பவரையுடைய மின்சார விளக்கை எடுத்துக் கொள்ளுவோம். இந்த விளக்கின் கம்பியில் ஒரு வினாடி நேரம் ஓடும் மின்சாரத்தில் நிறைந்திருக்கும் மின்சார அணுக்களை 2,500,000 ஜனங்கள் நிறுத்தாமலும், உண்ணாமலும், உறங்காமலும், இறக்காமலும் ஒவ்வொருவரும் ஒரு வினாடிக்கு 2 அணுக்கள் வீதம் எண்ணினால் எல்லா அணுக்களையும் எண்ணி முடிய சுமார் 20,000 வருஷங்கள் செல்லும். அப்படியானால் மின்சார அணுவின் அற்பத்தை அதிகம் கூறத் தேவையில்லை.

மின்சாரத்தில் அலைகளா?

பாரடே என்பவருக்குப் பின் மாக்ஸ்வெல் (Maxwell) என்பவர் தன்கணித வல்லமையால் மின்சாரம் ஆகாயத்தில் அலைகளாய்ச் செல்லும் என்றும், இந்த அலைகள் காந்த சம்பந்தத்தையுடையவை யென்றும், அவைகள் தண்ணீர் அலைகளைப் போல அலைந்து செல்லு மெனவும் வெளியிட்டார். இக் கோட்பாட்டை பரீக்ஷை செய்து பார்க்க முடியாமல் வெகு காலங் கழிந்தது. இரு கம்பிச் சுருள்களை ஒன்றை யொன்று தொடாமல் தூரத்தில் வைத்து ஒரு கம்பியில் மின்சாரத்தை செலுத்தவும், நிறுத்த

வுமாயிருந்தால் தூரத்திலுள்ள மற்றச் சுருளில்தானாக மின்சாரம் உண்டாகவும், நிற்கவுமாயிருக்கும். இவ்விதமாகவே மாறிமாறி யுண்டாக்கப் படும் மின்சாரத்தை ஆகாயத்தில் நீட்டியிருக்கும் கம்பியில் செலுத்தினால் இக் கம்பியிலிருந்து உண்டாகும் அளவுக்குத் தகுந்தவாறு சிறுசிறு மின்சார அலைகள் உண்டாகி அந்தரத்தில் நாலாபக்கமும் புறப்பட்டு தண்ணீரில் அலைகள் விரிந்தோடுவதுபோல ஓடும்.

மின்சாரத்தின் விநோதங்களைக் கண்டு அதிசயத்தால் வாயில் கை வையாத மானிடர் ஒருவரும் இலர். புகைப்படங்களைக் கம்பியில்லாத் தந்தியால் ஒரு ஊரிலிருந்து மற்றோரூருக்கு மின்சார அலைகளின் மூலம் அனுப்பி வருகின்றனர். மேலும் இதே மின்சார அலைகளின் மூலம் இருந்த இடத்திலிருந்து கொண்டே வெகு தூரத்தில் நடக்கும் சம்பவங்களை நடந்தது நடந்தவாறு காட்சியையும், பேச்சையும் ஒருங்கே சேர்த்துப் பார்த்து ஆனந்திக்க முடிகிறதென்றால் மின்சார சக்தியின் விசித்திர வேலைக்கு வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமோ? மின்சார அணுக்களையுடைய 'எக்ஸ்ரே' வெளிச்சக் கதிரின் அற்புதச் செய்கையும் (மூடப்பட்டிருப்பவைகளைக் கண்ணுக்குப் பிரத்தியட்சமாக உணர்த்தவும்) அபாய நிலைமையை வெகு தூரத்திலிருந்து கொண்டே கம்பியோடும், கம்பியில்லாமலும் நேருக்கு நேர் தெரிவித்துக் கொள்ளவும், புகைவண்டிகளை ஓடச் செய்யவும், படக்காட்சி சாலைகளில் படங்களைப் பேசச் செய்யவும், மழை வருஷிக்கவும், கள்வனைக் கையோடு பிடிக்கவும், கதவைத் தானே திறக்கவும், விளக்கேற்றவும் இன்னும் இது போன்ற கோடானு கோடி விநோதமான அரிய பெரிய செய்கைகளைப் பரமரகசியம் பொருந்திய மின்சார சக்தி செய்திருக்கிறது; இன்னும் அநேகம் செய்யப் போகிறது. இவை யாவும் "ஜோதி"யில் ஒவ்வொன்றாய் விளக்கிக் காட்டப்படும்.

வியாபாரப் புள்ளிகள்

இந்தியாவில் மொத்தம் 1935ம் வருஷம் வரை கணக்கெடுத்துப் பார்த்ததில் 10,226 கைத்தொழிற் சாலைகள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

1937ம் வருஷத்தில் இத்தலி தான், கப்பல் கட்டுந் தொழிலில் அதிக முன்னேற்றத்தைக் காட்டியிருக்கிறது. நூற்றுக்கு ஐம்பது விகிதம் அதிகப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

1937ம் வருஷத்தில் உலகத்திலுள்ள முக்கியமான பதினான்கு தேசங்களில் ஏற்றுமதியும் இறக்குமதியும் 1936ம் வருஷத்தை விடக் குறைந்திருக்கிறது. அர்ஜண்டைன், ஜெர்மனி, கானடா, கோல்ட் கோஸ்ட், பின் லாந்து, இந்தியா, ஐர்லாந்து, லாட்வியா, கிரேட் பிரிட்டன், ஸ்வீடன், நியூஜிலந்து, அமெரிக்கா ஐக்கிய மாகாணம், பெல்ஜியம், டென்மார்க் ஆகிய இந்த நாடுகளில் தான் ஏற்றுமதியும் இறக்குமதியும் குறைவு பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

1936ம் வருஷம் உலகத்தில் மொத்தம் 856,000 கிலோகிராம் தங்கம் உற்பத்தியாயிற்று. 1937ம் வருஷத்தில் 915,000 கிலோகிராம் தங்கம் உற்பத்தியாயிருக்கிறது. 60,000 கிலோகிராம் அதிகம். இதில் ஆஸ்திரேலியாவில்தான் நூற்றுக்கும் பதினாறு விகிதம் அதிக தங்கம் உற்பத்தியாயிருக்கிறது. 1929ம் வருஷத்திற்குப் பிறகு, ஜப்பானுடைய தங்க உற்பத்தி நான்கு மடங்கு அதிகமாயிருக்கிறது. 1937ம் வருஷத்தில் உற்பத்தியான தங்கத்தின் உத்தேச மதிப்பு 18,240 லட்சம் ரூபாய்.

நமது நிருபர்களுடன்—

முழுப் பெயர், விலாசம் முதலியன ஒன்றுமின்றி, வெறும் புனை பெயர்களை மட்டும் போட்டு எழுதியனுப்பப் பெறும் கடிதங்களுக்கும், சந்தேகம் என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு தனி நபர்களைத் தாக்கியோ தாக்கியோ எழுதி அதற்கு ஆசிரியருடைய சம்மதியைக் கேட்கிற கடிதங்களுக்கும் இந்தப் பகுதியில் இடமில்லை. தவிர அர்த்தமில்லாத கேள்விகளுக்கு இந்தப் பகுதி இடமளிக்காது. உதாரணமாக, 'நான் துறவறம் மேற்கொள்ளட்டுமா, அல்லது இல்லறத்திலே யிருக்கட்டுமா' என்கிருர் ஒருவர். இன்னொருவர், 'வெற்றிலை போடுவதால் நன்மையா தீமையா' என்கிருர். இந்த மாதிரியான சந்தேகங்களை நண்பர்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளல் நல்லது. பொதுவாக, உலக ஞானத்தை அபிவிருத்தி செய்துகொள்வதற்குச் சாதனமாயிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தப் பகுதி திறக்கப்பட்டிருக்கிற தென்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்,

—ஆசிரியர்

அஹிம்சையும் ராணுவமும்

ஆசிரியரவர்களே !

1. *இந்தியாவில் அஹிம்சா முறையை அநுஷ்டித்து உலகம் முன்னேற்றம் அடையலாம் என்றும், இராணுவம் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்றும் சிலர் அபிப்பிராயப் படுகிருர்கள். (2) அஹிம்சையினுல் உலகம் ஜெயம் பெற முடியாது. தற்கால நிலைமைக்கு இராணுவ பலத்தைக் கொண்டுதான் முன்னேற்றம் அடையலாம். அஹிம்சையைக் காட்டிலும் ராணுவம் அவசிய மென சிலர் வினவுகிருர்கள். வருங்கால பூரண காங்கிரஸ் அரசாட்சியில் இதில் எது அவசிய மென நம்பிக்கை கொள்ள தங்கள் அபிப்பிராயத்தைத் தயவுடன் எதிர் பார்க்கிறேன்.*

—கணேசன்

அஹிம்சையையும் ராணுவத்தையும் பிணைத்துப் போடுவது சரியல்ல. மக்களாய்ப் பிறந்தார் எல்லோருமே அஹிம்சையைப்பற்றி நன்ருக அறிந்திருக்கிருர்கள் என்று எண்ணிக் கொண்டு விட முடியாது. தவிர, அஹிம்சையை, ஓர் அரசாங்க தருமமாகவும் ஏற்றுக் கொண்டு விட முடியாது. அஹிம்சையைப்பற்றி உலகமெங்கும் பிரசாரம் செய்த அசோகமகாராஜன் கூட, தன் ராஜ்யத்தில் சேனைகளை வைத்துக் கொண்டிருந்தான். பொதுவாக, ராணுவமே தேவையில்லை யென்ருே, அல்லது ராணுவ பலத்தைக் கொண்டு தான் முன்னேற்றமடைய முடியும் என்ருே யாரும், ஒரு தலைப்பட்சமாகச் சொன்னதாக நமக்குத் தெரியவில்லை. ஆயுத பலம் மிகுந்த ஒரு ராணுவம், அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு காரியங்களைச் செய்ய முடியும். பூர்ண சுயராஜ்யம் பெற்ற இந்தியாவில் இப்படிப் பட்ட ராணுவந்தான் இருக்க வேண்டு மென்று நாம் விரும்புகிறோம்.

—ஆசிரியர்.

உபவாசம்

அன்புள்ள ஐயா,

உபவாசம் இருக்கவேண்டிய முறை எப்படி? சிலபேர் சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் போதும், சிலபேர் வாரந்தோறும் ஏதாவதொரு கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்கும் போதும் உபவாசம் இருக்கிறார்களே. விரதத்துக்கு உபவாச மிருக்க வேண்டியது அவசியமா? அப்படியானால் அது எந்த முறையில்? அதை நமது "ஜோதி" யில் விளக்கித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அது பற்றிய விபரங்கள் வேண்டுமானால் எந்தப் புத்தகம் பார்க்கவேண்டும் என்பதையும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—*அ. பழ.*

புதுக்கோட்டை ஸ்ரீ லட்சுமண சர்மா எழுதிய 'உபவாச தத்துவம்' என்ற நூலை அன்பருக்குச் சிபார்சு செய்ய விரும்புகிறோம். இதன் விலை **4** அணாதான்.

—*ஆசிரியர்.*

எதன் உதவி தேவை?

அன்புக்க ஆசிரியரவர்களே,

மனிதனின் அறிவு வளர்ச்சி யடைய வேண்டுமானால் எதன் உதவியினால் வளர்ச்சி யடையலாம்? தயவு செய்து அதை நமது "ஜோதி" யில் விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—*ராம சுப்ரமண்யம்*

இதுவொரு சிக்கலான பிரச்னை. ஒருவன் இராப் பகல் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவன் அறிவு வளர்ச்சி யடையாமலு மிருக்கலாம். இன்னொருவன் கை நாட்டுப் பேர்வழியாக இருக்கலாம். ஆனால் மகா கெட்டிக்காரனாகவும் இருக்கலாம். இதனால் அறிவு என்பதை ஒரு வரம்புக்குட்படுத்தி, இது தான் அறிவு என்று சொல்ல முடியாது. ஆனால் பொதுவாக உலகத்தில் அறிவு வளர்ச்சி என்பதற்கு என்ன பொருள் கொள்ளப்படுகிறதோ அதற்குத் துணையாயிருப்பது, சத் சங்கம். அதாவது அறிஞர்களுடைய கூட்டுறவு. இவர்களின் மத்தியில் எழுதப் படிக்கத் தெரியாதவன் கூட ஒரு சிறிது காலம் வாழ்ந்திருப்பானாயின், அவன் புத்திசாலி என்ற பெயரெடுக்கக் கூடிய நிலைமையை யடைவான்.

—*ஆசிரியர்.*

சீனாவிலுள்ள ஷாங்காய் நகரத்தில் உலகத்திலுள்ள எல்லா ஜாதியினரையும் காணலாம். சீன-ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்து ஒன்பது மாத மாகியும், இந்த நகரத்தில் அந்தந்த சமூகத்தாரும் தத்தமக்குரிய தொழிலை, எவ்விதக் கவலையுமின்றிச் செய்து வருகின்றனர். இங்கேயுள்ள சுமார் ஐயாயிரம் ருஷ்யர்களுடைய நிலைமை தான் திரிசங்கு ஸ்வர்க்கமாயிருக்கிறது. இவர்கள், ருஷ்யாவில் போல்ஷ்வெக்கர் ஆட்சி ஏற்பட்டபோது அவ்விடமிருந்து ஓடிவந்துவிட்டவர்கள். இவர்களுடைய ருஷ்யப் பிரஜாவுரிமை பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது, சீனப் பிரஜாவுரிமையும் இவர்களுக்கு இல்லை. இந்த இரண்டுங் கெட்ட நிலையிலே இவர்கள் இருக்கிறார்கள். இந்த ருஷ்யர்களில் பெரும்பாலோர், ஷாங்காய்க்கு வரும் போது, உடம்பில் போட்ட சட்டையோடு வந்தவர்கள். சென்ற இருபது வருஷங்களாக இதே நிலையில் தான் இருக்கிறார்கள் பலர். ஒரு சிலர் மட்டும், ஷாப்புகள் வைத்தும் ஹோட்டல்கள் நடத்தியும் காலட்சேபம் செய்கிறார்கள்.

கல்வி கற்பிப்பதன் லட்சியமென்ன?

—ரவீந்திரநாத் டாகூர்

இந்தியாவில் நாம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதன் லட்சியம் எதுவாக இருக்க வேண்டு மென்பதை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பத்திலேயே இதற்குப் பதில் கூறி விடுகிறேன். ஏனென்றால் வாசகர்களின் மனத்தில் இதைப்பற்றி ஒரு குழப்பத்தை உண்டு பண்ண நான் விரும்ப வில்லை. ஒவ்வொரு சமூகமும், உலகத்திலே ஞான வெளிச்சத்தைப் பரப்பும் பொருட்டு தன்னுடைய மன விளக்கை அணையாமல் பாது காத்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறது. ஒரு சமூகத்தாரின் இந்த மன விளக்கை உடைத்துப் போடுவது, உலகப் பொருட் காட்சி விழாவிலே அதற்குச் சரியான ஸ்தானம் கொடுக்க மறுப்பதாகும். வெளிச்ச மில்லாதவன் துரதிருஷ்ட புருஷன், ஆனால் அஃது இருந்தும் அதனை உபயோகிக்க மறுக்கப் பட்டவனோ அல்லது அதனை மறந்து விட்டவனோ அவனிலும் துரதிருஷ்டசாலி.

இந்தியா, தனக்கென்று சொந்த இதயம் உண்டு என்று நிரூபித்திருக்கிறது. இந்த மனத்தின் உதவி கொண்டு, அது, வாழ்க்கையைப்பற்றி சிந்தனை செய்திருக்கிறது. எப்படி வாழ வேண்டு மென்ற பிரச்னையையும் தீர்த்திருக்கிறது. இந்த மனமானது, உண்மையைக் காண வேண்டும். அதற்குத் துணை செய்யக் கூடியவிதமாக இருக்க வேண்டும் நமது கல்வி முறை. அப்படிக் கண்ட உண்மையை அது தன்னதாக்கிக் கொள்வதோடு, அதனைத் தனக்கியைபுரான முறையில் பிரசாரம் செய்யவும் இந்தக் கல்வி துணை செய்வதா யிருக்க வேண்டும்.

இதற்கு முதலில், இந்தியா தன்னைத் தான் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அது பிறரிடமிருந்து ஞானத்தைப் பெற முடியும். அப்படிப் பெற்ற ஞானத்தை அது தன் சிருஷ்டி சக்தியினால் பிறருக்கு உபயோகப்படுத்தவும் முடியும். ஒரு பொருளைப் பிறரிடமிருந்து வாங்குவதற்கோ அல்லது பிறருக்குக் கொடுப்பதற்கோ, கையிலுள்ள எல்லா விரல்களும் ஒன்று சேர வேண்டுமல்லவா? ஆகையினால், சிதறிக் கிடக்கிற இந்தியாவின் இருதயத்தை ஒன்று சேர்த்து ஒருமுகப் படுத்துவோமானால், பிறரிடமிருந்து ஞானத்தை வாங்கவும் முடியும். சிருஷ்டி செய்து பிறருக்குக் கொடுக்கவும் முடியும்.

நமது கல்வி முறையில் முக்கியமாகத் தேவைப்படுவது, மாணுக்கர்களிடையே சிருஷ்டி சக்தியை அதிகப் படுத்துவதாகும். ஆதலால், நமது சர்வகலாசாலைகளின் முக்கிய வேலை அறிவின் நிர்மாண சக்தியை அதிகப் படுத்துவதாகும். இதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு அதிகமான இடங் கொடுப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும்.

அடுத்தபடி, நமது கல்வி முறை, நமது வாழ்வோடு பிணைந்ததாய்

இருக்க வேண்டும். நமது பொருளாதாரம், சமூக நிலை, ஆன்மார்த்தம் முதலிய அனைத்தோடு கல்வி சம்பந்தப் பட்டதாய் இருக்க வேண்டும். அதாவது நமது கல்வி ஸ்தாபனங்கள், நம்து சமூகத்தின் இருதய ஸ்தானத்தில் இருக்க வேண்டியதுதான். நமது அறிவின் ஒவ்வொரு படியும், சமூகச் சூழலோடு எவ்வளவு தூரம் சமன் பட்டிருக்கிறதென்பதைப் பரிசீலனை செய்து பார்ப்பதுதான் உண்மையான கல்வியின் நோக்கம்.

தற்போதைய கல்வி முறையைப் பற்றி இந்தியா வெங்கணும் ஒருவித அதிருப்தி இருக்கிறது. ஒரு மாற்றம் வேண்டுமென்ற உணர்ச்சி ஜனங்களிடையே தீவிரமாக இருக்கிறது. நமது தேசத்தின் இருதயத்திலே ஒரு கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மனிதன், தான் நினைத்த காரியம் உடனே முடிய வேண்டுமென்று நினைக்கிறான். இதனால், தன்னுடைய எண்ணம் எதை லட்சியமாகக் கொண்டிருக்கிறதென்பதைக் கூட அவன் அறிந்துகொள்ள முடிவதில்லை. நமது படித்த சமூகத்தாரின் மன எல்லையானது, தற்காலக் கல்வி முறையளவிலே தான் இருக்கிறது. இந்தக் கல்வி முறையை மாற்ற முடியாதென்ற எண்ணமும் நமக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால் இதனை மாற்றியமைக்க வேண்டுமென்று வாயால் சொல்லக்கூடிய தைரியங்கூட நமக்கு வரவில்லை. ஏனென்றால், நம்முடைய அறிவு வாழ்க்கையானது அவ்வளவு பட்ச பாத முள்ளதாயிருக்கிறது. அதாவது அவ்வளவு ஆத்ம திருப்தி நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த ஆத்ம திருப்தியின் அடிவாரத்திலே, நம்மை நிம்மதியாகத் தூங்க விடாமல் குத்திக் கொண்டிருக்கிற ஒரு முள் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி நீண்ட காலம் முள் குத்திக் கொண்டிருக்குமானால், இதற்கு ஏதோ வெளிக்காரணங்கள் இருக்க வேண்டுமென்று நாம் எண்ணிவிடுகிறோம். ஆகவே, கல்வி இலாகா நமது நிருவாகத்திலில்லை; இதனால் தான் கல்வி முறையைச் சீர்திருத்தியமைக்க முடியவில்லை என்று எண்ணுகிறோம். படகென்னமோ சமுத்திரத்தில் செல்லக் கூடியதுதான். ஆனால் அதன் சுக்கான் நம் கையிலிருந்தால், அதனைப் பாறை மீது மோத விடாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதுகிறோம். சமீப காலத்திலிருந்து, தேசியப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துக் கொண்டு வருவதன் காரணங்கூட, இந்தப் புற உரிமை வேண்டுமென்ற எண்ணத்தினால்தான். ஆனால், இந்தப் புற உரிமையை நாம் பெற்று விட்டால் கூட, பிறரைப் பார்த்துக் காபியடிக்கிற சுபவம், அதாவது நமது குணத்தின் பலஹீனம் நம்மை விட்டு அகலாது. ஆகவே, இந்தப் புற உரிமையானது, பிறநாட்டுக் கல்வி ஸ்தாபனங்களைக் காபியடிக்கிற உரிமையாகவே முடியும். அதாவது இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபித்தவர்களாவோம்.

இரண்டு கட்சியினர் விளையாடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் ஒரு கட்சியினர் எப்படியும் தோற்றுப்போக வேண்டுமல்லவா? தோல்வியடைந்த கட்சியினர், தங்களுக்குள்ளேயே, 'உன்னால் தான் தோல்வி; அவனால்தான் தோல்வி' என்று பரஸ்பரம் குறை கூறிக் கொள்வதுண்டு. அதைப்போல,

நமது கல்வி முறையின் இரு கட்சியினரான அரசாங்கத்தாரும், நாமும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் குறை கூறிக் கொண் டிருக்கிறோம். ஆனால் இரு கட்சியினர் பேரிலும் குறை சொல்லலாம். அப்படிச் சொல் வதிலே என்ன பயன்? நம்முடைய குறைகளை நாம் முதலில் தெரிந்து கொண்டு அதற்குப் பரிகாரந் தேடிக் கொள்ள வேண்டும்.

முதலாவது, சர்வ கலாசாலை என்ற எண்ணம் நமது மனதில் தோன்றிய வுடனே கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்ட் முதலிய ஐரோப்பிய சர்வ கலாசாலைகளே நம் கண் முன்னர் வந்து நிற்கின்றன. நாம் என்ன நினைக்கிறோம், இந்தச் சர்வ கலாசாலை ஒவ்வொன்றிலு மிருந்து ஒவ்வோர் நல்ல அம்சத்தையும் பொறுக்கி ஒன்று சேர்த்து விட்டோமானால் அதுவே நமக்குகந்த கல்விமுறை என்று கருதி விடுகிறோம். ஆனால் ஐரோப்பிய சர்வ கலாசாலைகள், ஐரோப்பிய வாழ்க்கையோடு பிணைக்கப் பட்டவை யென்பதை நாம் அதே சமயத்தில் மறந்துவிடுகிறோம். இதனால்தான், கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றி நாம் செய்கிற முயற்சிகள் பயனிலவாகிப் போகின்றன. தேசிய சர்வ கலாசாலை என்றவுடனே மேனாட்டுச் சர்வ கலாசாலைக் கட்டிடங்கள், அதன் பாட முறைகள் முதலியவைதான் முன்னுக்கு வருகின்றன. இதனால் இந்தத் தேசிய சர்வ கலாசாலைகள், மண்ணால் செய்யப்பட்டுக் கொலுவிலே வைக்கப்படுகிற பழங்களைப்போ லிருக்கின்றன.

மனிதனுக்குச் சாப்பாடு தேவை. அதைச் சமைப்பதற்கு வேண்டிய பாத்திரமும் தேவை. ஆனால், சாப்பாடு குறைவாகக் கிடைக்கிறபோது, பாத்திரத்தை உபயோகிப்பதிலும் கொஞ்சம் சிக்கனம் செய்ய வேண்டாமா? அதைப்போல, நமது கல்விக்கு வேண்டிய புற சாதனங்களை அதிகப் படுத்திக் கொண்டு விட்டோம். இஃதெப்படி யிருக்கிற தென்றால், ஒருவன், தன்னிடத்திலே யுள்ள பணத்தை யெல்லாம், பணத்தை மூட்டை கட்டி வைப்பதற்காக வேண்டிய பைகளை வாங்கிக் குவிக்கச் செலவழித்தது போல் இருக்கிறது.

கீழ் நாட்டிலே யுள்ள நாம், நமது வாழ்க்கைப் பிரச்னையை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். உணவு விஷயத்திலும் உடை விஷயத்திலும் நாம் பரம்பரையாகவே சிக்கனமா யிருக்கப் பட்டவர்கள்; நமது தேசத்துச் சீதோஷ்ண நிலை, நமக்கு இந்தச் சௌகரியத்தைக் கொடுத்திருக்கிறது. காற்றும் வெளிச்சமும் நம்முடைய வாழ்க்கை அமைப்பில் முக்கிய பங்காளிகளா யிருக்கின்றன. இவையனைத்தையும், நமது கல்வி முறையைப் பற்றிக் கவனிக்கிற போது யோசிக்க வேண்டும்.

தற்போதைய நாகரிக உலகத்தில், உண்பது, கல்வி கற்பது, அரசியல் நிருவாகத்தை நடத்துவது முதலியன வெல்லாம் அவற்றிற்குரிய கவனத்தை விட அதிகமான கவனத்தைப் பெறுகின்றன. இந்தச் சுமைகள் நமக்கு அநாவசியம். இந்தச் சுமைகளை ஏற்றிக் கொண்டிருப்பதன் மூலமாக மனிதன் தன்னைப் பலசாலி யென்று காட்டிக் கொள்ளலாம். ஆனால் திறமை சாலியா யிருக்க முடியாது. பூரணத்துவத்திலே இருக்கிற எளிமையை மேனாட்டார் எப்பொழுது அறிந்து கொள்வார்களோ தெரியாது. அது வரையில் உயர்ந்த கட்டிடங்களில்தான் சிறந்த கல்வியைக் கற்றுக்கொள்ள முடியும் என்ற அவர்களுடைய போதனையை நாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

லெனினும் காந்தியும்

—"சரித்திரக்காரன்"

லெனினும் காந்தியும் ஒரு புதிய யுகத்தைச் சிருஷ்டித்தவர்கள். இரண்டு பேருடைய லட்சியமும் மனித சமுகத்தின் விடுதலைதான். இந்த லட்சியத்திற் காகக் கையாளப் படுகிற முறைகளிலே சில வித்தியாசங்கள் இருக்கலாம். இந்த இரண்டு பேருடைய தத்துவங்களும் சரியான முறையில் இன்னும் தமிழில் விளக்கப் படுத்தப் பெறவில்லை யென்று கருது கிறோம். இந்தத் தொண்டைச் செய்ய வேண்டுமென்ற ஆவல் "ஜோதி"க்கு உண்டு. அதற்குச் சோபானமாக, இங்கு லெனின் எழுதிய சில கடிதங்களையும் காந்தி எழுதிய சில கடிதங் களையும் "சரித்திரக்காரன்" மொழி பெயர்த்த படி வெளியிட்டிருக்கிறோம். இந்தக் கடிதங்கள் றேனே புலோப் மில்லர் எழுதிய "லெனினும் காந்தியும்" என்ற நூலி லிருந்து எடுக்கப் பட்டவை யென்று "சரித்திரக்காரன்" தெரிவிக்கிறார்.

லெனின் கடிதங்கள்

I

தேதியில்லை

அன்புள்ள ஏ. எம்.

அருமை நண்ப, உனக்கென்ன நேர்ந்து விட்டது? அதிக வேலை, அதிக களைப்பு, ஒற்றைத் தலைவலி இவற்றினால் அவஸ்தைப் படுகிறாயா? நிரம்ப நன்றாயிருக்கிறது! காப்ரி (ஊர்) யில் நீ ஒழுங்கான வாழ்க்கையை நடத்த வேண்டும். அதுவும் குளிர் காலத்தில் உன்னைப்பார்க்க வருகிறவர்கள் குறைவாக இருக்கிற சமயத்தில் நீ ஒழுங்காக இருக்கலாமே. உன்னை ஒருவரும் கவனிப்பாரில்லை யென்பதற்காக நீ இந்த நிலைமைக்கு வந்து விட்டாயா? உண்மையில் இது நிரம்பத்தவறு. உன்னைத் திடப்படுத்திக் கொள். வேளா வேளையில் காரியங்களைச் செய்து கொண்டுவா, நீ அப்படித்தான்செய்ய வேண்டும். இந்தக் காலத்தில் நீ நோயரய்ப்படுக்க நான் அநுமதிக்க முடியாது. இரவில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறாயா? நான் காப்ரிக்கு வந்து தங்கியிருந்தபோது, நான்தான் உனக்குச் சங்கடத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னீர்களே. நான் அங்கு வருவதற்கு முன், நீ சரியான நேரத்தில் படுக்கைக்குப் போய்க் கொண்டிருந்தாயாமே. நீ இனி ஒழுங்காக வாழ்க்கையை நடத்த ஆரம்பிக்க வேண்டும்.

'ஜடப் பொருளும் அதன் அமைப்பும்' என்பதுபற்றி நீ எழுத வேண்டுமென்று கூறியிருப்பதை நான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன். ருஷ்யாவின் ஆத்மாவிலே புகுத்தப்படுகிற விஷத்திற்கு இது நல்ல மருந்து. ஆனால் இந்த விஷத்தை ஜடசாஸ்திரம் என்று நீ கூறுவது தவறு. இதனைச் சூனிய வாதம் என்று சொல்லவேண்டும். * *

பியாட் நிட்ஸ்கி விஷயத்தில் நான் கோர்ட்டுக்குப் போகப் போகிறேன். இங்கே கஷ்டங்களை உண்ணுபண்ணிக் கொள்வதில் அர்த்தமில்லை. தாட்சண்யம் பார்ப்பது முதலியன வெல்லாம் இங்கே முடியாது. அபேதவாதிகள், கோர்ட்டுக்குப் போவதை எதிர்க்கவில்லை. நாம் சட்டமுறைகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். மார்க்ஸூம், பெபலும், அபேதவாதக் கட்சியில் தங்களுக்கு

விரோதமாயிருந்தவர்கள் மீது கோர்ட்டு மூலமாக நடவடிக்கை யெடுத்துக் கொண்டார்கள். ஒருவனுக்கு என்ன செய்ய வேண்டுமென்பது தெரிய வேண்டும். ஆனால் அதை எப்படியும் செய்தேயாக வேண்டும். பியாட்னிட்ஸ்கி, எவ்விதத்திலும் கண்டிக்கப்படவேண்டும். இதைப்பற்றி உன்னை யாராவது கடிந்து கொண்டால் அவனுடைய முகத்திலே காரி உமிழ். நடவஞ்சகர்கள்தான் உன்னை இது விஷயத்தில் தாக்கக்கூடும். கோர்ட்டுக்குப் பயந்து பியாட்னிட்ஸ்கியை தண்டிக்காமல் விட்டால் அது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

நல்லது, இன்று நிரம்ப வாயைக் கொட்டி விட்டேன். உன் தேக நலத்தைப்பற்றி எனக்கு எழுதவும்.

உன்னுடைய

லெனின்.

II

அன்புள்ள ஏ. எம்.

தேதியில்லை

நீ என்ன இப்படி ஆகிவிட்டாய்? சகிக்கக் கூடவில்லையே. 'லிக்விடேடர்' என்ற பத்திரிகையில் நீ எழுதியுள்ள ஒரு கட்டுரையை இன்று பார்த்தேன். அதில் நீ பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறாய்:—

> கடவுளைத் தேடுவது அல்லது கடவுளை அடைவது என்பதைக் கொஞ்ச காலத்திற்குத் தள்ளி வைக்கவேண்டும். அது பிரயோஜனமற்ற வேலை. இல்லாத ஒன்றைத் தேடுவதில் அர்த்தமேயில்லை. எவன் அறுவடை செய்யவில்லையோ அவன் நாற்று நடவும் இல்லை. கடவுள் இல்லை. அந்தக் கடவுளை நாம் இன்னும் சிருஷ்டி செய்ய வில்லை. உலகம், கடவுள்களை நாடிச் செல்வதில்லை; கடவுள்களைச் சிருஷ்டி செய்கிறது. வாழ்க்கையை நாம் நினைப்பதில்லை; அதனைச் சமைக்கிறோம்.

இதனால், தற்காலிகமாகத்தான் கடவுளை அடைவதை நீ எதிர்க்கிறாய் என்று தெரிகிறது. தவிர, கடவுளைச் சிருஷ்டிக்க வேண்டுமென்பதற்காக நீ, கடவுளை அடைவதை எதிர்க்கிறாய். இல்லையா?

உன்னுடைய இந்த வழி எந்த இடத்தில் கொண்டு போய் விடும் என்று நினைக்கிற போது எவ்வளவு பயமாயிருக்கிறது?

கடவுளை அடைவதற்கும் கடவுளைச் சிருஷ்டி செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்றால், மஞ்சள் பிசாசுக்கும் நீலப்பிசாசுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசந்தான். * * * * *

கடவுளைச் சிருஷ்டி செய்கிற தொழில் இருக்கிறதே, அது தன்னைத்தானே இழிவு படுத்திக் கொள்கிற வேலையில்லையா? எவனொருவன் கடவுளை நிர்மாணிக்கிற வேலையில் இறங்கியிருக்கிறானோ அவன் தன் மானத்தை மறைத்துக் கொள்பவனாகிறான். ஏனென்றால் அவன் வேலை செய்வதில்லை. தன்னைப் பற்றியே சிந்தனை செய்து கொள்ள ஆரம்பிக்கிறான். இதனால் தன்னிடத்திலேயுள்ள அசுத்தமான, மூடத்தனமான, சிறுமை எண்ணங்களுக் கெல்லாம் தெய்வத்தன்மை புகுத்தினவனாகிறான். இந்தக் கடவுளை நிர்மாணிக்கிற வேலையிருக்கிறதே, இது வியாபாரிகளின் மந்த புத்தியிலிருந்தெழுந்த ஒரு சமூக விஷமாகப் பரவியிருக்கிறது.

நான் மீண்டும் மீண்டும் உன் கட்டுரையைப் படித்து, நீ எப்படி இந்

தத் தவறான வழியில் சென்று விட்டாய் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் * * *

உன்னுடைய

வி. உலியனவ்

(லெனின்)

காந்தியின் கடிதங்கள்.

I

எரவாடா சிறை,

14-4-1922.

ஹகீம் அஜ்மல்கானுக்கு

அன்புள்ள ஹகீம்ஜி,

* * * நான் சிறையிலே தனியாக வைக்கப்பட்டிருக்கிறேன் என்று சொன்னேனே அது ஏதோ குறையாகச் சொல்லிக்கொண்டேனில்லை. நான் இங்கே சந்தோஷமாகவே இருக்கிறேன். என்னுடைய சுபாவம் தனிமையையே விரும்புகிறது. அமைதியை நான் விழைகிறேன். இப்பொழுது எனக்குப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

என்னுடைய சிறை வாழ்க்கையில் நான் ஒவ்வொரு நாளும் என்ன செய்கிறேன் என்பதைச் சொல்லி இக்கடிதத்தை முடித்து விடுகிறேன். எனது அறை சுத்தமாகவும், காற்றோட்டமுள்ளதாகவும் இருக்கிறது. திறந்த வெளியில் படுக்க எனக்கு அனுமதி கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதம் போல. காலை நான்கு மணிக்குப் பிரார்த்தனைக்கு எழுந்து விடுகிறேன். நான் இங்கே கூடப் பிரார்த்தனையைக் கைவிட்டு விடவில்லை யென்பதை அறிய சத்தியாக்கிரக ஆச்சிரமவாசிகள் சந்தோஷப்படுவார்கள். பிறகு ஆறரை மணிக்குப் படிக்க ஆரம்பிக்கிறேன். விளக்கு வைத்துக் கொள்ள எனக்கு அனுமதி கிடையாது. அதனால்தான் வெளிச்சம் ஏற்பட்டவுடனே என் வேலையை ஆரம்பிக்க முடிகிறது. மாலை ஏழு மணிக்கு இருள் சூழ்ந்தவுடன் என் வேலையையும் முடித்துக் கொள்கிறேன். இரவு எட்டு மணிக்குப் பிரார்த்தனை செய்து விட்டுப் படுக்கை. தினம் ஆறு மணி நேரம் படிக்கிறேன். நான்கு மணி நேரம் ராட்டை சுற்றுவதிலும், பஞ்சடிப்பதிலும் கழிகிறது. * * *

அன்றாட வேலையை ஒழுங்காகச் செய்வதற்கு அனுகூலமாக மூன்று வேளைச் சாப்பாட்டை இரண்டு வேளையாகக் குறைத்துக் கொண்டிருக்கிறேன். இது எனக்குச் சௌகர்யமாகவே இருக்கிறது. சிறையதிகாரி ஆகார விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறார். சென்ற மூன்று நாட்களாக ஆட்டுப் பாலும்வெண்ணெயும் கிடைக்கின்றன. இன்னும் சில நாட்களில் எனக்கு வேண்டிய ரொட்டியை நானே தயாரித்துக் கொள்வேன்.

இரண்டு கம்பளிகளும், ஒரு பாயும், இரண்டு துப்பட்டிகளும் என் வசத்தில் ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது ஒரு தலையணையும் வந்து சேர்ந்திருக்கின்றது. அஃதில்லாமலே நான் தூங்க முடியும். புஸ்தகங்களையோ, துணிகளைச் சுருட்டியோ இதுவரையில் என் தலைமாட்டுக்கு வைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ராஜகோபாலாச்சாரியார் எனக்கு ஒரு தலையணை கிடைக்குமாறு தனது செல்வாக்கை யெல்லாம் உபயோகித்தார். என்னுடைய உபயோகத்திற் கென்று தனியாக ஒரு ஸ்நான அறையும் கொடுக்கப்பட்

டிருக்கிறது. அதற்குப் பூட்டுச் சாவியும் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய உபயோகத்திற்கென்று தனியாக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் உபயோகப்படுத்தாத சமயத்தில் நான் அதை உபயோகித்துக் கொள்ளலாம். சுகாதார ஏற்பாடுகளும் இப்பொழுது விருத்தியடைந்திருக்கின்றன.

ஆகையால் என் நண்பர்கள் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் ஒரு பறவையைப்போல் சந்தோஷமாயிருக்கிறேன். சிறைக்கு வெளியே யிருந்ததைக் காட்டிலும் இங்கே குறைவான வேலையைச் செய்கிறேன் என்று நான் நினைக்கவில்லை. இந்தச் சிறைவாசம் எனக்கு ஒரு பள்ளிக்கூடம் மாதிரி. என் சகோதரத் தொண்டர்களிடமிருந்து என்னைத் தனியாகப் பிரித்திருப்பது, நமது இயக்கம்,தானே இயங்கும்சக்தியுடையதா? அல்லது ஒரு தனிப்பட்ட மனிதனைப் பொறுத்துத்தான் அது நடக்கிறதா என்பதை நிரூபித்து விடும். என்னைப் பொறுத்தமட்டில் எவ்வித அச்சமுமில்லை. ஆகையால் வெளியுலகத்திலே என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ள நான் ஆவலுள்ளவனாயில்லை. என்னுடைய பிரார்த்தனை உண்மையானதாயிருக்குமானால், நிர்மலமான மனதிலிருந்து வெளி வருமானால் அது வெளியிலே தடபுடலாகத் தோன்றும் காரியங்களைவிடச் சிறந்தது. இது விஷயத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு.

ஆனால் நமது நண்பர் தாஸினுடைய தேகாரோக்கியத்தைப் பற்றி எனக்குக் கவலையேற்பட்டிருக்கிறது. அவருடைய தேக நிலையைப் பற்றி எனக்குச் சரியாகத் தெரிவிக்காமற்போன காரணத்தினால் அவருடைய பத்தினியை நான் கடிந்து கொள்ளவே வேண்டியிருக்கிறது. மோதிலால் ஜிக்கு காச நோய் கொஞ்சம் குணமடைந்திருக்கிறதென்று நம்புகிறேன்.

என்னுடைய மனைவிக்குச் சொல்லவும், என்னை அடிக்கடி வந்து பார்க்க வேண்டாமென்று. தேவதாஸ் இங்கே வந்திருந்த போது அழுது ஆர்ப்பாட்டம் செய்து விட்டான். அவன் வந்திருந்த போது நான் ஜெயில் சூப்பிரண்டென்டிற்கு எதிரே நின்று கொண்டிருந்தேன். அதைப் பார்த்து அவனால் சகிக்க முடியவில்லை. தன்மதிப்பும், உணர்ச்சியுமிருந்த அந்தப் பையன் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்து விட்டான். அவனை அடக்குவது எனக்கு நிரம்பச் சிரமமாகப் போய் விட்டது. நான் ஒரு கைதி யென்பதை அவன் முன்னரே தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படியிருக்க ஜெயில் சூப்பிரண்டென்டிற்கு எதிரே உட்கார எனக்கு என்ன உரிமையிருக்கிறது? ராஜகோபாலாச்சாரிக்கும் தேவதாசுக்கும் ஆசனங்கள் கொடுத்திருக்கலாம். அப்படிக் கொடுக்காமல் போனது மரியாதைக் குறைவினாலல்ல. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் ஆஜராயிருந்து சூப்பிரண்டென்டுக்குப் பழக்கமில்லை. ஆசனங்கள் கொடுக்கலாமா கூடாதா என்ற விஷயத்தில் எவ்வித ஆபத்தையும் ஏற்றுக்கொள்ள அவர் தயாராயில்லை. என் மனைவி இங்கே வரவும் திரும்ப இந்தக் காட்சி நடைபெறவும் நான் விரும்பவில்லை. எனக்கு நாற்காலி கொடுக்க வேண்டும் என்ற விஷயத்தில் விசேஷ சலுகை பெறவும் நான் விரும்பவில்லை. எனது கௌரவத்தை நான் நின்று கொண்டே காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆங்கி

லேயர்கள், இந்தியர்களாகிய நம் விஷயத்தில் பலாத்காரமில்லாத ஒரு அன்பைச் செலுத்துகிற வரையில் நாம் பொறுமையோடுதான் இருக்க வேண்டும். ஆகையால் நண்பர்களும் உறவினர்களும் அடிக்கடி என்னை வந்து பார்க்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் காரியார்த்தமாக யாரும் என்னிடம் வரலாம். அப்படி வருவதற்குப் புற நிகழ்ச்சிகள் சாதகமாயிருக்கின்றனவா, பாதகமாயிருக்கின்றனவா என்பதைப் பற்றிய கவலையே வேண்டுவதில்லை.

சோட்டாமியான், பஞ்சமஹால், காண்டேஷ், ஆக்ரா முதலிய பிரதேசங்களிலுள்ள ஏழை முகம்மதிய ஸ்திரீகளுக்குக் கைராட்டினங்களை விநியோகித்து விட்டார் என்று நினைக்கிறேன். ஆக்ராவிலிருந்து எனக்குக் கடிதம் எழுதிய பாதிரி அம்மையாரின் பெயரை மறந்து விட்டேன். என்ன துரதிருஷ்டம்! கிறிஸ்தோதாசுக்கு ஞாபகமிருக்கலாம்.

உருது பாடத்தை முடித்து விட்டேன். ஓர் உருது அகராதி வாங்கி அனுப்பினால் மிகவும் நன்றியுள்ளவனாயிருப்பேன். தாங்களோ, டாக்டர் அன்சாரியோ வேறு எந்தப் புஸ்தகங்களைப் பொறுக்கி அனுப்பினாலும் சரி.

நீங்கள் சௌக்கியமாயிருக்கிறீர்களென நம்புகிறேன். அதிகமாக வேலை செய்ய வேண்டாமென்று உங்களை நான் கேட்டுக் கொள்வது நடவாத காரியத்தை நடத்தும்படியாகச் சொல்வதாகும். உங்களுடைய வேலைக்குப் பலத்தையும் உங்களுக்கு ஆரோக்கியத்தையும் கடவுள் கொடுத்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

சகோதரத் தொண்டர்களுக்கு என் அன்பு.

தங்கள்,

மோ. க. காந்தி.

II

ஏர்வாடா மத்திய சிறை

1-5-1923

ஏர்வாடா ஜெயில் அதிகாரிக்கு,

வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தனியான ஜாகையில் வைக்கப்படுவார்கள் என்று வந்துள்ள உத்திரவைத் தாங்கள் அன்பு கூர்ந்து எனக்குக் காண்பித்து என்னை அந்தப் பகுதியில் சேர்த்திருப்பதாகக் கூறினீர்கள். கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஸ்ரீமான்கள் கௌஜால்ஜி, ஜெயராம்தாஸ், பன்சாலி முதலியோர் என்னைவிடக் கேவலமான குற்றவாளிகள் அல்லர் என்பது எனது அபிப்பிராயம். தவிர என்னை விட அவர்களுடைய அந்தஸ்து உயர்ந்தது. என்னைப் பார்க்கிலும் அவர்கள் சுகமான வாழ்க்கை நடத்தியவர்கள். அப்படிப்பட்ட கைதிகள், விசேஷப் பகுதியில் சேர்க்கப்படாதிருக்கும் வரையில் சிறை உத்திரவினால் ஏற்பட்டிருக்கிற விசேஷ சாதகத்தை நான் அடைய விரும்பவில்லை. விசேஷப் பகுதியினரின் ஜாப்தாவிலிருந்து என் பெயரை நீக்கி விட்டால் நன்றியுள்ளவனாயிருப்பேன்.

தங்கள் கீழ்ப்படிதலுள்ள

மோ. க. காந்தி

ஓய்வு கொள்வதா?

—வ. பார்த்தசாரதி

அப்பா! ஒரு நாள் பூராவும் வேலை செய்து விட்டு நீ என்ன நினைக்கிறாய்? இனி ஓய்வு கொள்ளலாமென்று நிம்மதியாகத் தூங்கி விடத் தொடங்குகிறாய். உன் தேகத்திற்கு ஓய்வு வேண்டியது தான். ஏனென்றால், குனிந்தும் நிமிர்ந்தும் வேலை செய்கிற போது, உன் நரம்புகள் அதிக தளர்ச்சி பெற்றிருக்கும். அவற்றிற்குச் சற்று ஓய்வு கொடுத்தால்தான், மறு நாள் அவை மறுபடியும் வேலை செய்வதற்குச் சாத்தியமாகும். ஆகையால் உன் தேகத்திற்கு நீ ஓய்வு கொடுக்க வேண்டியதுதான். ஆனால் மனதிற்கு ஓய்வு கொடுத்து விடாதே. அஃது ஆபத்து. நாளா வட்டத்தில் அது துருப்பிடித்துப் போகும். அதனால் உனக்கு மட்டும் ஆபத்தில்லை. நீ பிறந்துள்ள சமூகம், நீ வாழ்கிற நாடு எல்லாவற்றிற்குமே ஆபத்து தான். உன்னால் நன்மை ஏற்படாமல் போனாலும் தீமையாவது ஏற்படாமலிருக்க வேண்டாமா?

அதிகமாக வேலை செய்வதனால் சீக்கிரத்தில் கிழப் பருவம் அடைந்து விடுவாய், என்றோ அல்லது விரைவிலே யமதேவனுடைய வாயிற் படியிலே போய் நிற்க வேண்டுமென்றோ யாராவது சொன்னால் அந்த வார்த்தையைக் கொஞ்சங் கூட நம்பாதே. உழைப்பினால் யாராவது சாவானா? உழைப்பினால் களைப்பு ஏற்படலாம். மரணம் ஏற்படுமா? இப்படிச் சொல்வது எந்த மாதிரியிருக்கிறதென்றால் ஒரு செடி வளர்ந்து கொண்டு வருமானால் அது சீக்கிரத்தில் பட்டுப் போய் விடுமென்று சொல்வதைப் போல் இருக்கிறது. இப்பொழுது காந்திக்கு வயதென்ன? எழுபது. இருபத்து நான்கு மணி நேரத்தில், எத்தனை மணி நேரம் நிம்மதியாகத் தூங்குகிறார்? கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒரு மணி நேரம் கூட இராதே. பண்டித மதன் மோஹன் மாளவியாவுக்கு வயது என்ன? எண்பது. இன்னும் அதிகமாக வேலை செய்ய வேண்டுமென்பதற்காக, காய கல்ப சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார். உழைக்க வேண்டு மென்பதிலே எவ்வளவு ஆசை? பெஸண்டம்மையார், எண்பது வயது வரை காற்றாடி போல் சுற்றவில்லையா? எவ்வளவு பேச்சு? எழுத்து? எத்தனை மைல் சுற்றுப் பிரயாணம்? இவர்களுக்கெல்லாம் ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாறுவது தான் ஓய்வு. இவர்களால் சும்மாயிருக்க முடியாது. சில சமயங்களில், மேற் பார்வைக்கு இவர்கள் சும்மாயிருப்பது போலத் தோன்றும். ஆனால் இவர்கள் மனம் எங்கெங்கேயோ சுற்றிக் கொண்டிருக்கும். எத்தனையோ உலகங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்?

சில பேருக்கு வேலை செய்யாமல் இருக்கவே முடியாது. சாப்பாட்டுக்கு வழி இராது. அதைப் பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். ஆனால் வேலை செய்ய வேண்டுமென்ற ஆவல் மட்டும் இவர்களை, அக்கினி போல் தகித்துக் கொண்டிருக்கும்.

மேனாட்டுச் சரித்திரங்களிலிருந்து சில உதாரணங்களை உனக்கு எடுத்துச் சொல்கிறேன் கேள்.

பதினைந்தாவது நூற்றாண்டில் இத்தலியில் லியோனார்டோ-டா-வின்ஷி என்ற ஒரு சித்திரக்காரன் இருந்தான். இவனுடைய சித்திரங்கள், உலகத்து அழகுப் பொக்கிஷத்திலே முக்கியமானவை. இவன், பூகோள படம் வரைவான்; பிளான் போட்டுக் கொடுப்பான்; கற்பதுமைகள் செய்வான்; வர்ணப் படங்கள் எழுதுவான்; இயந்திரங்களை ஓட்டுவான்; ரசாயன சாஸ்திரி; ஒரு நூலாசிரியன்; ஓர் இஞ்சினீர்; இன்னும் என்னென்னவோ? இவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. இவனுக்கு 89வது வயது நடக்கிறது. அப்பொழுது ஒரு நாள் வஸாரி என்ற நண்பன் இவனைப் போய்ப் பார்த்தான். வின்ஷி என்ன செய்து கொண்டிருந்தான்? பென்சிலும் கையுமாக ஒரு சித்திரம் வரைந்து கொண்டிருந்தான். இதற்குப் பிறகு பத்து வருஷம் வரையில்—அதாவது 99 வயது வரையில்-இவன் வாழ்ந்து கொண்டிருந்தான்.

மார்ட்டின் லூதர் என்பவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? இவன் ஐரோப்பாவில் கிறிஸ்தவ மதத்தில் சீர்திருத்தத்தை உண்டாக்கினவன். ஜெர்மானியன். மதச் சீர்திருத்தத்தில் இறங்கியதால் இவனுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் சொல்ல முடியாது. ஆனாலும் ஒரு கணங்கூட இவன் சோர்வு கொண்டிருந்தது கிடையாது. ஓய்ந்திருந்ததும் கிடையாது. இவன் பல பாஷைகள் தெரிந்தவன்; தர்க்கவாதி; நாவலன்; அரசியல்வாதி. இவன் காலத்திலே தோன்றிய முக்கிய இயக்கங்கள் அனைத்தும் இவனைச் சுற்றியே இருந்தன. இவன், பைபிளின் பழைய ஆகமத்தையும் புதிய ஆகமத்தையும் மொழி பெயர்த்தான். மதாநுஷ்டானத்திலே மனிதர்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்பதைப்பற்றிப் பத்திரிகைகளுக்கு ஓயாமல் எழுதிக் கொண்டு வந்தான்; துண்டுப் பிரசுரங்கள் கணக்கின்றி வெளியிட்டான். இவனுடைய கடிதப்போக்குவரத்துக்களைக் கவனிப்பதற்கென்று இவன் இரண்டு காரியதரிசிகளை வைத்துக் கொண்டிருந்தான். பதினொரு பாதிரி மடங்களுக்குத் தலைவனாயிருந்து அவற்றின் நிருவாகத்தைக் கவனித்து வந்தான். முப்பத்தைந்து வயதுக்கு மேலே, சுமார் மூன்று வருஷத்திற்குள் 346 நூல்கள் எழுதி வெளியிட்டான். இந்த நூல்களிலே வரும் சித்திரங்கள் யாவும் இவனாலேயே வரையப்பட்டவை. தவிர சிதாரும் புல்லாங்குழலும் இவனுக்கு நன்றாக வாசிக்கத் தெரியும். கொஞ்சம் ஓய்வு கிடைக்கிறபோது, கடிகாரங்களைப் பழுது பார்க்க உட்கார்ந்து விடுவான். மனத்திற்குள் ஏதேனும் சஞ்சலம் ஏற்பட்டால், தனியாக உட்கார்ந்து தலைமேல் கை வைத்துக் கொண்டிருக்கமாட்டான். கையிலே கழி எடுத்துக் கொண்டு தன்னுடைய பாதுகாப்பின் கீழிருக்கும் பன்றிகளை மேய்க்க ஆரம்பித்துவிடுவான். இவ்வையெல்லாம் போக, பாமர ஜனங்களிடையே கல்வி ஞானத்தைப் பரப்ப வேண்டுமென்று இவன் எடுத்துக் கொண்ட பிரயாசை அபாரம்.

கிறிஸ்தவ மதத்திலேயே பல கிளைகளைக்கண்ட அநேக பாதிரி மார்கள் இப்படித்தான் உழைத்திருக்கிறார்கள். கால்வின் என்ன, ஜான் வெஸ்லி என்ன, நாக்ஸ் என்ன இவர்களெல்லாரும் மகா உழைப்பாளிகள்!

ஒரு சில நூலாசிரியர்கள் எவ்வளவு உழைத்திருக்கிறார்கள் என்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஒரு நூல் எழுதுவதென்றால்

அது லேசான காரியமல்ல. அதற்கு எவ்வளவோ சிந்தனா சக்தியைச் செலவழிக்க வேண்டி யிருக்கிறது. தவிர, அவைகளை அச்சுவாகன மேற்றுவதும் இவர்கள் கடமையா யிருந்தது. அப்படி யிருந்தும், ஒவ்வொருவரும் எவ்வளவு நூல்களை எழுதியிருக்கிறார்கள் என்பதை நினைக்கிறபோது, நமக்குப் பிரமிப்பு ஏற்படுகிறது.

ரிச்சார்ட் பாக்ஸ்டர் (Richard Baxter) என்ற ஒருவன் எத்தனையோ ஜோலிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். இவைகளுக்கிடையில் இவன் 145 நூல்களை எழுதி யிருக்கிறான். ப்ரின்னே (Prynne) என்ற ஒரு நூலாசிரியன் இருந்தான். இவன் தினந்தோறும் எட்டுப் பக்கங்களுக்குக்கு தானே விஷயங்கள் எழுதுவான். தானே அதை அச்சடிப்பான். இவனுடைய எழுத்துக்கு ஒரு காலத்தில் எவ்வளவு மகிமை இருந்தது ! டாக்டர் காம்ப்பெல் என்ற ஒரு நூலாசிரியன். இவனை ஒரு நாள் சந்தித்து, 'உங்களுடைய நூல்களில் ஒவ்வொரு பிரதி தேவை' என்று சொன்னான். மறு நாள் அந்த நண்பனுடைய வீட்டுக்கு ஒரு வண்டி வந்து நின்றது. அந்த வண்டி நிறைய டாக்டர் காம்பெல்லின் நூல்கள் இருந்தன! கூடவே ஓர் ஆள், எழுபது பவுனுக்கு புஸ்தகக் கிரய பில்லையும் நீட்டினான் ! கால்டெரான் (Calderon) என்ற ஒரு நாடகாசிரியன் நானூறு நாடகங்களுக்கு மேல் எழுதி யிருக்கிறான். லோபே-டி-வேகா (Lope-de-Vega) என்ற ஒரு ஸ்பானிஷ் நூலா சிரியன் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி யிருக்கிறான் ! ஸர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்ற பிரபல ஆங்கில ஆசிரியனைப் பற்றி நீ படித்திருக்கலாமே. ஆங்கில இலக்கியத்திலே இவனுக்கு ஒரு நிரந்தரமான ஸ்தானம் உண்டல்லவா ? இவன் எவ்வளவு உழைப்பாளி தெரியுமா ? இவன் மொத்தம் 74 நாவல்களும், 21 காவியங்களும், 30 சரித்திர நூல்களும் எழுதி யிருக்கிறான். இவை தவிர, 'க்வார்டர்லி ரெவ்யு' என்ற பத்திரிகைக்குத் தொடர்ந்து வியாசங்கள் எழுதிக் கொண்டு வந்தான். இவன் ஒரு நூலாசிரியனாக மட்டும் இல்லை. இவன் வசித்த நகரத்தின் ஷெரிப்பாகவும், செஷன்ஸ் கோர்ட் குமாஸ்தாவாகவும், ஓர் அச்சாபீஸில் டைரெக்டராகவும், உலகத்தின் நானு பக்கங்களிலும் உள்ள நண்பர்களிடமிருந்து கிடைக்கும் கடிதங்களுக்குத் தவறாமல் பதிலெழுதக் கூடியவனாகவும் இருந்தான்.

இது போகட்டும். மானிட சமூகத்தின் நன்மைக்காக எவ்வளவோ அற்புதமான சிருஷ்டிகளைச் செய்த மேதாவிகள் ஓய்வென்பதையே அறியமாட்டார்கள். ரெயில் இஞ்சின் ஓடுவதற்குக் காரணமாயிருந்த ஜேம்ஸ்வாட் (James Watt) என்பவன் தனது 90 வது வயதில் ஜெர்மன் பாஷையைக் கற்றுக் கொண்டு அதில் பெரும் புலவனானான். மின்சார சிருஷ்டி கர்த்தனாகஇருந்த தாமஸ்எடிஸன், சராசரி தினம் பதினெட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்து வந்திருக்கிறான். இவன் புதிதாகக் கண்டு பிடித்தவை சுமார் ஆயிரத்து முந்நூறுக்கு மேற்பட்டனவென்று சொன்னால் நீ ஆச்சரியப் படமாட்டாயா ?

இந்த உதாரணங்களை யெல்லாம் கேட்ட பிறகு, மகனே ! நீ ஓய்ந்திருக்கலாமா ?

சமாதான தேவதையின் உலக யாத்திரை

—வி. எம். ராமதாஸ்

திடீரென்று ஒரு வெளிச்சம் தோன்றியது. கண்ணை விழித்துப் பார்த்தேன். ஒரு சுந்தர வடிவம் என் முன்னே வந்து நின்றது. பூமியில் அதன் கால் பதியவில்லை. முகத்தில் இயற்கைச்சிரிப்பும் இல்லை. ஆனால் 'அட பைத்தியக்கார மனிதர்களே' என்று பரிகசிப்பது போன்ற ஓர் அலட்சியச் சிரிப்பு. முதலில் அதனோடு பேசக்கூட எனக்குத் துணிவேற்படவில்லை. சிறிது நேரம் அந்த வடிவம் என்னை உற்றுப்பார்த்தது. அந்தப் பார்வை 'என்னோடு தைரியமாகப் பேசு' என்று எனக்குச்சொல்வதுபோல் இருந்தது. 'நமக்குக் காரியத்திலேதான் ஒன்றும் முடியவில்லை. 'பேசித்தான் தீர்ப்போமே' என்று நிச்சயித்தேன். உடனே தைரியமாக 'நீ யார்?' என்றேன். 'நான்தான் சமாதான தேவதை. என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா? என் கையிலே என்ன வைத்துக் கொண்டிருக்கிறேன் பார்! அமர் ஜோதி. அணையாத விளக்கு. எங்கெங்கு மனிதனுடைய துராசைகளினாலும் கீழான எண்ணங்களினாலும் போராட்டங்களும் குழப்பங்களும் ஏற்படுகின்றனவோ, அங்கெல்லாம் நான் சென்று இந்த விளக்கைக் காட்டி ஜனங்களிடத்திலே அமைதியை உண்டாக்குவேன். ஹிந்துக்கள் நாரதர் என்ற ஒரு பேர்வழியைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்வதுண்டு. அவர் திரிலோக சஞ்சாரி என்றும், ஒருவருக்கொருவர் நன்றாகத் தெரிந்து கொள்ளும்படி அவர் காரியங்களைச் செய்வாரென்றும் சொல்வார்கள். ஆனால் நான் இப்பொழுது—இந்த இருபதாவது நூற்றாண்டின் முற்பாகத்தில்—ஐந்து கண்டங்களையும் ஐந்து சமுத்திரங்களையும் ஒரு நிமிஷத்தில் சுற்றிப்பார்த்து வந்து விட்டேன். நாரதரைவிட நான் எவ்வளவு சாமார்த்தியசாலி! ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. நாரதர் சென்றவிடமெல்லாம் அவருக்கு உபசரணை நடந்தது. நான் போன விடத்தில் 'எனக்கு வேண்டாம் பூஷணிக்காய், உனக்கு வேண்டாம் பூஷணிக்காய்' என்று எல்லாரும் விரட்டி யடித்தார்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அந்த உருவம் கண்ணீர் விட ஆரம்பித்துவிட்டது. எனக்கும் பார்ப்பதற்கு மிகவும் கண்ட்ராவியாக இருந்தது. 'சரி, நீ எங்கெங்கே போனாய்? சொல் பார்ப்போம்' என்று நான் கேட்டேன்.

அது ஆரம்பித்து விட்டது தன் கதையை.

'நான் முதலில், புராதன நாகரிகம் வாய்ந்ததென்றும், உலகத்திற்கெல்லாம் ஒரு காலத்தில் அறிவுப்பசியைத் தணித்ததென்றும் சொல்கிறார்களே அந்தப் பாரத நாட்டுக்கு—ஹிந்துஸ்தானத்திற்குச் சென்றேன். அங்கே, ஜனாப் ஜின்னா, அபேதவாதக் கட்சித் தலைவர் ஜயப்பிரகாச நாராயண், ஹிந்து மகா சபையின் தலைவர் பாய் பரமானந்தர், கிஸான் கட்சித் தலைவர் ஸ்வாமி சகஜானந்தர் முதலிய பலரும் ஒருங்கே கூடியிருக்கும் ஓர் இடத்தை யதேச்சையாய்ப் போ

யடைந்தேன். அவர்கள் என்னைப் பார்த்து மிரள மிரள விழித்தார்கள். நான் உடனே, ஆசீர்வாதம் செய்கிற பாவனையில் இரண்டு கைகளையும் நீட்டிக் கொண்டு பின் வருமாறு சொல்ல ஆரம்பித்தேன்:—

சகோதரர்களே, நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திருப்பது எனக்கு அதிக சந்தோஷத்தைத் தருகிறது. இதைப்போலவே, நீங்கள் காங்கிரஸுடனும் மகாத்மா காந்தியுடனும் ஏன்சேர்ந்து உழைக்கலாகாது? உங்களுக்குள்ளேயே சண்டைபோட்டுக் கொண்டால், மற்றவர்களுடைய பரிகாசத்திற்கன்றோ ஆளாவீர்கள். எல்லாரிடத்திலும் குறைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றையெல்லாம் சரிக்கட்டிக் கொண்டு போகவேண்டாமா? காங்கிரஸானது, பலபேருடைய முயற்சியால் ஏற்பட்ட ஓர் அகில இந்திய ஸ்தாபனமல்லவா?'

இப்படி நான் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே, பாய் பரமானந்தர் என்னைக் கடுகடுத்துப் பார்த்தார். 'காங்கிரஸாவது, அகில இந்திய ஸ்தாபனமாவது? சுத்தப்பிசகு. நீ யார் இந்தமாதிரி கண்டதையும் கேட்டதையும் உளறுவதற்கு?' என்றார்.

'இல்லை; தாதாபாய் நௌரோஜி, கோகலே, திலகர், தாஸ், காந்தி முதலிய தலைவர்கள் வளர்த்த காங்கிரஸ்' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கிறபோதே, ஜனுப் ஜின்னு, பல்லை நறநற வென்று கடித்துக் கொண்டு, 'இங்கே உட்கார்ந்திருக்கும் இத்தனை பேரும் உனக்குத் தலைவர்களாகத் தோன்றவில்லையோ? என்னை ஒரு தலைவர் என்ற ஹோதாவில் வைத்துத்தானே, காந்தி என்னோடு சமரஸம் பேச வந்திருக்கிறார்' என்று சொல்லிக் கொண்டே கையை ஓங்கினர். அடி, உதை விழப் போகிறதே யென்று பயந்து வெளியே வந்து விட்டேன்.

இங்கிருந்து நேரே, 'சீனுவுக்குச் சென்று, அங்கே ஜப்பானியப் படைகளின் தளகர்த்தராயிருக்கும் மாட்ஸுமோடோ கோஷீரோவின் கூடாரத்திற்குச் சென்று என் வழக்கமான ஆசீர்வாதத்தை ஆரம்பித்தேன்:—

தளபதி அவர்களே! இனிச் சீனர்கள் உங்களைத் துவேஷிக்க மாட்டார்கள். நீங்கள் இரு நாட்டாரும் புத்தரைத் தானே வணங்குகிறீர்கள். பின் ஏன் சண்டை? சீனுவும் ஜப்பானும் பரஸ்பர சுதந்திரத்தை மதித்து அந்நியோந்நிய பாவத்துடன் நீண்ட நாட்கள் வாழக் கடவது!

இந்த ஆசீர்வாதத்திற்கு அந்தத் தளபதி என்ன செய்தார் தெரியுமா? தமது அருகாமையில் வைக்கப்பட்டிருந்த இயந்திர பீரங்கியை என் பக்கம் திருப்பச் சொன்னுர்.

அட, நல்லதைச்சொல்லப் போனால் இப்படியா அதைக் கேட்பது என்று சொல்லிக் கொண்டு, அங்கிருந்து நேரே ருஷ்யாவுக்குள் சென்று மாஸ்கோ நகரத்தை யடைந்தேன். அங்கே யுள்ள ஒரு பெரிய சதுக்கத்தில் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடம் போய் என் வழக்கமான ஆசீர்வாதத்தைச் சில மாறுதலுடன் சொல்ல ஆரம்பித்தேன். அந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். அவர்களிலே ஒருவன் எழுந்து சொன்னுன்:—

உன்னைப்பார்த்தால் யாரோ தேவதை மாதிரியிருக்கிறது. நீ சொல்

வதெல்லாம் எங்களுக்கும் நிரம்பப் பிடித்திருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் சகோதரர்கள் போல் வாழ வேண்டுமென்று சொல்கிறாய். வாஸ்தவம். ஆனால் இந்தத் தத்துவத்தில், அந்தத் துரோகி யிருக்கிறானே ட்ரோட்ஸ்கி, அவனுடைய வாசனையல்லவோ வீசுகிறது? சரி, பேசின மட்டிலும் போதும். இனி எங்களோடு பேசுவதாயிருந்தால், தோழர் ஸ்டாலினுடைய உத்திரவை நீ பெற வேண்டும். இல்லா விட்டால், (2-3-1938ல் விசாரிக்கப்பட்ட) புகாரின், யகோடா, ரிகோவ் முதலியவர்களுடைய கதிதான் எங்களுக்கு ஏற்படும். நாங்கள் இன்னும் கொஞ்ச காலம் உயிர் வாழ்ந்திருப்பதில் உனக்கு விருப்ப மில்லையா? தயை செய்து சீக்கிரம் திரும்பிப் போய் விடு' என்றார்கள்.

'நான் சமாதான தேவதையாயிற்றே. அன்பு மயமாயிருக்கப் பட்ட ஆண்டவனிடமிருந்து வந்தவளல்லவா?' என்றேன் நான்.

'இருக்கலாம். ஆனால் தோழர் ஸ்டாலினுடைய சமாதான தேவதைதானே இங்கே வரக்கூடும். நீ கடவுளின் சமாதான தேவதையானால் உனக்கு இங்கே இடமேது?' என்றார்கள் அவர்கள்.

'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்' என்று சொல்லி நான் விர்ரென்று பறந்து வந்து ஜெர்மனிக்குள் புகுந்தேன். எல்லைப்புறத்தில் காலடி எடுத்து வைத்தேனோ இல்லையோ, ஜெர்மனியின் மூன்றாவது ஏகாதிபத்தியம் சென்ற ஐந்து வருஷ காலமாகச் செய்திருக்கிற அபாரமான வேலைகளைப்பற்றிப் புகழ்ந்து பிரசார மந்திரி டாக்டர் கோயப்பெல்ஸ், ரேடியோவில் பேசிக்கொண்டிருந்தது என் செவியில் படார் படார் என்று அறைந்து கொண்டிருந்தது. நேரே அந்தச் சப்தம் வருகிற திசையை நோக்கிப் போனேன். கோயப்பெல்ஸ் இருக்கும் ஆபீஸ் அறையை அடைந்தேன். அங்கே ஹிட்லர், கோயரிங், கோயப்பெல்ஸ் ஆகிய மூன்று பேரும் ஒருவருக்கொருவர், தோள்மேல் கைபோட்ட வண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். எதையோ நினைத்துக் கொண்டு உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரே ஐரோப்பாவின் பூகோளபடம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது.

நான் உள்ளே நுழைந்ததும் என்னைப் பார்த்து, இன்னும் அதிக உரத்துச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். கொஞ்ச நேரம் பொறுத்து, 'யாராவது யூதர்கள் உன்னைத் துப்பறிய அனுப்பினார்களோ?' என்று ஏளனமாகக் கேட்டார் அந்தப் பூதாகாரமாயுள்ள கோயரிங். 'இப்படிக் கூடவா நான் அவமானப்பட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டு அவர்களை ஏறெடுத்துக் கூடப் பாராமல் நேரே தெற்கு நோக்கி இத்தலி வந்து சேர்ந்தேன்.

ரோமாபுரிக்கு வந்து 'பலாஸோ—டி—வெனிஸியோ' என்ற கட்டிடத்திற்குள் நுழைந்தேன். அங்கே ஓர் அறைக்குள் முஸோலினி 'வாத்து நடை' பழகிக் கொண் டிருந்தார். இவரை, 1915ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் நடந்து கொண் டிருக்கிற போது பார்த்தேன். அப்பொழுது இவர் அடிக்கடி என்னை உபாசித்துக் கொண் டிருப்பார். அந்தக் காலத்தில், இப்பொழுதுள்ள பருமன் இல்லாவிட்டாலும், இவருடைய தலையில் நிறைய

மயிர் இருந்தது. இப்பொழுது தேகம் நன்றாக ஊதி யிருக்கிறது. தலையும் வழுக்கை விழுந்திருக்கிறது. என்னைப் பார்த்ததும், தன் வாத்து நடையை நிறுத்திக் கொண்டு, என்னை உற்றுப் பார்த்தார். 'அடையாளந் தெரிய வில்லையோ?' என்றேன். 'எங்கேயோ பார்த்தமாதிரி யிருக்கிறது' என்று தலையைத் தடவினார். 'நான்தான் தங்கள் உபாசனை தெய்வம்; சமாதான—' என்று சொல்லி முடிப்பதற்குள் 'சரி, சரி, எதியோப்பியாவிலும், ஸ்பெயினிலும் உனக்குக் கோயில் கட்டி வைத்திருக்கிறேன். அங்கே போய்ச் சுகமாக இரு. ஏன் இப்படி வீணாக அலைகிறாய்? வேண்டுமானால் உன் பக்கத்திலேயே சர்வ தேச சங்கத்திற்கும் ஒரு கோயில் கட்டி வைக்கிறேன்' என்றார்.

என் முகத்திலே அடித்ததுபோ லிருந்தது இந்தப் பேச்சு. இங்கிருந்து நேரே ஸ்பெயினுக்குள் நுழைந்தேன். அங்கே, புன் சிரிப்போடு நின்று கொண் டிருந்த தளபதி பிராங்கோவைப் பார்த்து, என்னுடைய வாழ்த்தைத் தெரிவிப்பதற்காக, என் கைகளை உயரத் தூக்கினேன். 'நிறுத்து; நிறுத்து. உன் உபதேச மெல்லாம் எனக்கு வேண்டாம். இந்தப் பொது வுடமைப் பிசாசை ஸ்பெயினிலிருந்து விரட்டி யடிக்கிற வரையில் நான் சும்மா யிருக்கப் போவதில்லை. ஏறக்குறைய ஸ்பெயினில் மூன்றில் இரண்டு பாகம் என் வசம் வந்து விட்டது. இன்னும் கொஞ்ச நஞ்சத்துக்கும் ஹிட்லருடையவும் முஸோலினியினுடையவும் ஆதரவு இருக்கிறது. பார்த்து விடுகிறேன் ஒரு கை' என்று ஜம்பம் பேச ஆரம்பித்தார். ஒரு காலத்தில் தென்னமெரிக்கா வாசிகளை அழித்து ஸ்பானிஷ் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்த பாவ மெல்லாம் இப்பொழுது ஸ்பெயினைச் சூழ்ந்து கொண் டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, அப்படியே பிரன்னீஸ் மலையைத் தாண்டி பிரான்ஸுக்குள் புகுந்தேன்.

புகுந்து கொஞ்சதூரம் சென்றிருப்பேன். மந்திரிச் சபை விழுந்து விட்டதென்று சொன்னார்கள். எங்கேயென்று அவசரமாக நடக்கிறபோது, புதிய மந்திரிச் சபை வந்துவிட்டதென்று கேள்விப் பட்டேன். சரி, பாரிஸுக்குச் சென்று அரசாங்கக் காரியாலயத்தில் வீற்றிருக்கும் புதிய மந்திரிச் சபை அமைத்த ப்ளம்மை ஆசிர்வதிப்போம் என்று எண்ணிப் போனேன். கட்டிடத்திற்குள் நுழைந்து ப்ளம்மைப் பார்த்தேன். அவர் முகத்தில் வழக்கமான சிரிப்பில்லை. ஏதோ கவலையா யிருக்கும் என்று சொல்லி, என் சமாதான ஆசிர்வாதத்தைச் சொல்லக் கைகளைத் தூக்கினேன். 'ஐயோ, என்னை ஆசிர்வாதம் செய்துவிட வேண்டாம். இப்பொழுது என் மந்திரிச் சபை கலைந்து விட்டது. டலாடீர் மந்திரிச் சபை அமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். நீ இப்பொழுது ஆசிர்வாதம் செய்தால், மறுபடியும் மந்திரிச் சபை அமைக்கிற 'சான்ஸே' எனக்கு இல்லாமல் போய் விடும்' என்றார்.

'பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு கூடவா உங்களுக்குப் புத்தி வரவில்லை' யென்று கொஞ்சம் ஆத்திரத்துடன் கேட்டேன்.

'புத்தியிருந்தால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று சொல்லிக் கொண்டே, செனெட் சபையில் ஒருவர்க்கொருவர் அழுகிப்

போன கோழி முட்டைகளை எறிந்து கொள்வோமா? அல்லது ஜெர்மனிக்குப் பயந்து ரைன் நதி எல்லையிலே கோட்டை கொத்தளங்களைக் கட்டி வைத்துக் கொண்டிருப்போமா? அல்லது பிரிட்டிஷ் கிழச் சிங்கத்தின் வாலைத் தான் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்போமா?' என்று அடுக்க ஆரம்பித்தார்.

இந்தத் தலை வேதனை நமக்கேன் என்று சொல்லி, இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மண்ணை மிதித்தேன். நேரே டௌனிங் தெரு பத்தாவது எண்ணுள்ள மாளிகைக்குள் சென்றேன். அங்கே நெவில்லி சேம்பர்லேன், தலை மீது கை வைத்துக் கொண்டு ஏதோ தீர்க்க யோசனையிலிருந்தார். நான் ஓசைப் படாமல் உள்ளே நுழைந்து, 'மாஜினிக்கும், காரிபால்டிக்கும் அடைக்கலங் கொடுத்த இங்கிலாந்தின் பிரதம மந்திரியே' என்று என் ஆசீர்வாதத்தைத் தொடங்கினேன்.

'காரிபால்டிக்குப் பக்கத்தில் ஹெயிலி செலாஸிக்கு அடைக்கலம் கொடுத்த இங்கிலாந்தே' என்றுசேர்த்துக்கொள் என்றார் சேம்பர்லேன் தலை நிமிர்ந்து. 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட் பட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் பூர்ண சுயராஜ்யம் கொடுத்து விடுங்கள். எல்லாரும் சகோதரர்கள் போல் வாழ்ந்தால் உலகத்திற்கு நல்லது' என்று என் ஆசீர்வாதத்தை ஒருவாறு முடித்தேன்.

'நாங்கள் எல்லாருக்குந்தானே சுயராஜ்யம் கொடுத்திருக்கிறோம். தனி மனிதர்களுக்குக் கூட நாங்கள் கட்டுப் பாடு ஏற்படுத்த வில்லையே. விண்ட்ஸர் கோமகனைப் போய்க் கேள், அவர் எவ்வளவு சுதந்திரமாயிருக்கிறார் என்று. இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கவில்லையா? காங்கிரஸ்காரர்கள்கூட மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே. நாங்கள், யாருடைய சுதந்திரத்திலும் தலையிடுவதில்லை யென்பது உனக்குத் தெரியாதா? ஸ்பெயினிலே, ஒருவர்க்கொருவர் அடித்துக் கொள்கிறார்கள். நாங்கள் தலையிடுகிறோமா? அபிசீனியாவில், தன் பலம் தெரியாமல் முஸோலினியுடன் முட்டிக் கொண்ட ஹெயிலி செலாஸி விஷயத்தில் நாங்கள் தலையிட்டோமா? சீனாவிலே, அந்த நாட்டு ஜனங்களுக்குப் புத்தி கற்பிக்கும் பொருட்டு, ஜப்பானியர் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிகிறார்களே அதில் தலையிட்டோமா? அல்லது, ஆஸ்திரியாவை ஹிட்லர் விழுங்கிய போது, நாங்கள் ஏதேனும் தடுத்தோமா?' என்று பாடம் ஒப்புவிப்பதுபோல் வரிசையாகத் தட்டுத்தடங்க லில்லாமல் சொல்ல ஆரம்பித்தார். 'சரி, எதிரிகளை வாயடக்கி ஓயாமல் பேசுவதில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் மிகவும் கெட்டிக்காரர்கள்' என்று முணுமுணுத்துக் கொண்டே நேரே அமெரிக்கா போய்ச் சேர்ந்தேன்.

'இது புதிய உலகமாயிற்றே. நான் சொல்வதை ஜனங்கள் கேட்பார்கள்' என்று நினைத்து, ரூஸ்வெல்டைப் பார்க்கலாமென்று 'வெள்ளை மாளிகை'யைப் போயடைந்தேன். அவர் தமது மனைவியுடன் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தார். ஒரே ஒரு வாக்கியம் மட்டும் என் காதில் பட்டது. 'நமக்குச் சமாதானமும் வேண்டாம்; சண்டையும் வேண்டாம். எல்லாம் அத்லாந்திக்

மகா சமுத்திரத்திற் கப்பாலேயே இருக்கட்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தார். இங்கு நமக்கு வரவேற்பு இல்லை யென்று கருதி நேரே தெற்குப் பக்கம் திரும்பினேன்.

மெக்ஸிகோவுக்கு வந்தேன். அங்கு ஒரே ஆர்ப்பாட்டம். நாஜிகள், இங்கே சாசுவதமாக நிலைத்துவிட வேண்டுமென்று ஏராளமான ஆயுதங்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். மற்றும், காடு மேடுகளாயுள்ள இடங்களில்கூட ஆகாய விமான நிலையங்களை ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்கள். தவிர, இத்தலியும் இங்கே மிகவும் சுறு சுறுப்பாயிருக்கிறது. ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்திற்கு, மெக்ஸிகோவிலிருந்து எவ்வித ஆயுத உதவியும் போகக்கூடாதென்று தடைகள் செய்து கொண்டு வருகிறது. இந்த இரண்டு நாடுகளுக்குத் துணையாக ஜப்பானும் சேர்ந்து கொண்டு, நனக்கு வேண்டிய சாதகங்களைத் தேடிக் கொள்ளத் தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சரி, தமக்கு இங்கே இடமில்லை. நம்மைத் தலை தூக்கிக்கூட ஒருவரும் பார்க்க மாட்டார்கள் என்று சொல்லி தென்னமெரிக்காவுக்குச் சென்றேன்.

இங்கே, சமாதானம் என்று ஒரு வார்த்தை இருப்பதாகக் கூட அநேகம் பேருக்குத் தெரியாது போலிருக்கிறது. ப்ரேஜில், க்யுபெக், பெரு, அர்ஜண்டைனா முதலிய எந்த நாட்டைப் பார்த்தாலும், அங்கங்கே, பாசிஸத்திற்கும் ஜனநாயகத்திற்கும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. எங்கேயாவது கொஞ்சம் தலை நீட்டலாமென்று பார்த்தேன். நம்மீது விஷப் புகையைப் பிரயோகித்து விட்டால் என்ன செய்வதென்று அச்சம் ஏற்பட்டது. ஆனால், சிறிது துணிந்துதான் பார்ப்போமா என்ற எண்ணமும் உடனே வந்தது. அதற்குள் ஒரு பெரிய குரலொலி கேட்டது. என்னவென்று திரும்பிப் பார்த்தேன்.

'ஏ பைத்தியக்கார சமாதான தேவதையே, திரும்பிப் போ உன்னிருப்பிடத்திற்கு. உன்னைச் சிந்துவார் யாருமில்லை. பேசாமல் போய் சமாதியிரு' என்றது அந்தக்கர்ண கடூரமான குரல்.

அந்தக் குரல் யாருடைய குரல்? யுத்த தேவனுடையது!'

விண்ட்ஸர் கோமகனுக்குச் சுமார் பதினெட்டு வருஷகாலம் மோட்டார் டிரைவராயிருந்த லார்ட் ப்ருச் என்பவன், இப்பொழுது லண்டனிலுள்ள ஒரு ஹோட்டலின் வாசலில் நின்று கொண்டு அங்கு வரும் மோட்டார், குதிரை வண்டி இவற்றின் கதவுகளைத் திறந்து விடுவதும் போகும் போது அவற்றை மூடுவதுமான வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். சக்ரவர்த்திக்கே இவன் மோட்டார் டிரைவராக இருந்தான். இப்பொழுது இவனுக்குச் சரியான வேலையில்லை. இதற்குத்தான் அதிருஷ்டம் என்பது!

ஹிட்லருக்கு 1923ம் வருஷம் முதல் சமையல் செய்து போட்டுக் கொண்டிருக்கிறவன் பெயர் ஸெப் கானென்புர்க். இவன், ஹிட்லருக்குப் பிடித்தமான ஆகாரங்களைச் சைவ முறையில் தயாரித்து முதலில் தான் ருசி பார்த்துப் பிறகு தன் எஜமானனுக்குப் பரிமாறுகிறான். இன்னின்ன சமயத்தில் இன்னின்னது ஹிட்லருக்குப் பிடிக்கும் என்பது இவனுக்கு நன்றாகத் தெரியும்.

ஜோதி

நன்றாகச் சாகிறார்கள்!

—இ. எச்.

சென்ற இரண்டு வருஷ காலமாக இரவில்லை, பகலில்லை, ஓயாமல் வெடி குண்டு சப்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. எங்கே? ஸ்பெயினிலே. அங்கே, யுத்தம் என்று சொன்னால் ஜனங்கள் யாருமே பயப்படுவதில்லை. அவர்களுடைய தினசரி வாழ்க்கையிலே இது ஒரு சகஜமான விஷயமாகி விட்டது. ஸ்பெயின் யுத்தத்தைப் பற்றிப் பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்புகிற நிருபர்கள் கூட சலித்துப் போய் விட்டார்கள். அந்த நகரத்தின் மீது இத்தனை ஆகாய விமானங்கள் வந்து குண்டு போட்டன; இத்தனை பேர் செத்தார்கள் என்று ஒரு நாளைக்குச் செய்தியனுப்பலாம்; ஒரு மாதத்திற்குஅனுப்பலாம்; இரண்டு வருஷ காலமாக இதே செய்தியை மாற்றி மாற்றி யனுப்புவதென்றால் யாருக்குத் தான் சலிப்பு வராது?

இந்தக் கட்டுரை சம்பந்தமான இரண்டு படங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அதில் கீழ்ப் பாகத்திலேயுள்ள படத்தில் ஒரு பையன் இறந்து கிடக்கிறான். இவன் இத்தலியிருந்து வந்து போர் புரிந்தவன். இவன் காம்தாரத்தில் வெடி குண்டு பாய்ந்து இறந்து கிடக்கிறான். இவன், பாசிஸம் ஸ்பெயினில் வேரூன்ற வேண்டுமென்று போர் முனைக்கு வந்தானா? இல்லை. ஆனால் அப்படித்தான் இத்தலியில் பிரசாரம் செய்யப்படுகிறது. இத்தலியிலிருந்து ஸ்பெயின் யுத்த களத்திற்கு அனுப்பப்படுகிறவர்களில் எத்தனைபேர், பாசிஸத்தின் தத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்?

அடுத்த பக்கம் மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். இவன் ஓர் ஆகாய விமானக் குண்டினால் தாக்கப்பட்டவன். முகத்திலே பாதி போய் விட்டது. இவனைப் பார்த்ததும், யுத்தத்தின் கோரம் எவ்வளவு அகாதமானது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோமில்லையா? இவனைப் பார்த்தால் யாருக்குத்தான் அடையாளந்தெரியும்? இதற்காக,இவனுடைய சட்டைப்பைகளையெல்லாம் தடவிப் பார்த்தார்கள் இவனுடைய சகோதரப் போர் வீரர்கள். இவன் ஜேபியிலே ஒரு காகிதம் இருந்தது. அஃது இவனுடைய மனைவியினிடமிருந்து வந்த கடிதம். அதிலே அவள் எழுதியிருக்கிறாள்:—

'நம்முடைய கிராமத்தின் நிலைமை எவ்வளவு சீர்கெட்டு விட்டது? என்ன செய்யலாம்? உங்களுடைய சம்பளம் எனக்கு ஒழுங்காகப் பட்டு வாடா செய்யப் படுகிறது. அது எனக்கு ஒரு விதத்தில் நிம்மதியைத் தருகிறது. ஆனால் என் நாயகரே! ஒவ்வொரு நாளும் எனக்கு ஒவ்வொரு யுகம் போலிருக்கிறது. ஒரு ராத்திரியாவது நான் தூங்கினதே கிடையாது. அழுத கண்ணோடு தான் படுத்துக் கொள்கிறேன். உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தினம் எத்தனை முறை பிரார்த்தனை செய்வேன்? தங்களைப் போன்ற உத்தமமான கணவர் எனக்கு வாய்த்ததற்காக என் குரு நாதனை நான் வழி படாத நாளில்லை.'

இந்தக் கடிதம் ஜேபியிலே இருக்கிறது. ஆனால் இவன், அங்க அடை-

யாளங் கூடத் தெரியாமல் இறந்து கிடக்கிறான்!

ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் மீது ஒரு பாசிஸ்ட் படையெடுப்பு நடைபெறுகிறது. அதிலே சாகிற மனிதர்களின் போட்டோக்கள் தான் இவை!

சரி, இது தான் இப்படி. தங்கள் சொந்த நாட்டிலேயே, மூர்கள், இத்தாலியர்கள், ஜெர்மானியர்கள், முதலியோரை எதிர்த்துப் போராடுகிற ஸ்பானியர்களுடைய நிலைமை என்ன? இவர்களும் இப்படித்தான் கோர மரணத்தை யடைகிறார்கள். ஆனால் ஒரு வித்தியாச முண்டு. இந்த ஸ்பானியர்கள், நாம் ஏன் சாகிறோம் என்பதை அறிந்து சாகிறார்கள். தங்கள் நாட்டுக்காக இவர்கள் சாகிறார்கள். இப்பொழுது பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடா விட்டால், பின்னால் அவர்களை எதிர்த்து லேசிலே போராட முடியாது என்று கருதி, தீவிரமாக இப்பொழுது போராடுகிறார்கள். இப்படிப் போராடுகிற ஸ்பானியர் கூட்டத்தின் நடுவே, அந்நிய தேசத்தினர் பலரும் இருக்கிறார்கள். இவர்கள், உலகத்தில் ஜனநாயகத் தத்துவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே வந்து போராடுகிறார்களே தவிர, ஏதோ பண லாபத்தை உத்தேசித்தோ, அல்லது வேடிக்கைக்காகவோ சண்டை போடுகிறார்களில்லை.

இப்படி இரு சாராரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய வல்லரசுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? 1938ம் வருஷ ஆரம்பத்தில் இந்த வல்லரசுகளுக்கு இடையே ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்தின்படி, ஸ்பெயினிலேயுள்ள அந்நிய நாட்டுத் தொண்டர் படைகளை யெல்லாம் வாபீஸ் பெற்றுக் கொண்டுவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் 1938ம் வருஷம் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இத்தலி, ஐம்பதினாயிரம் துருப்புகளை ஸ்பெயினுக்கு அனுப்பி யிருக்கிறது. தவிர மூன்று பீரங்கிப் படைகளையும் அனுப்பி யிருக்கிறது. ஜெர்மனியோ, சுமார் நானூறு ஆகாய விமானங்களுக்கு மேல் அனுப்பியிருக்கிறது. என்ன ஆச்சரியம்!

ஸ்பெயினிலேயுள்ள குடியரசு அரசாங்கம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, வெளி நாடுகளி லிருந்து ஆயுதங்கள் வாங்குவதை ஜனநாயக அரசாங்கங்கள் தடை செய்து கொண்டு வருவதன் காரணமாக, ஸ்பெயின், பாசிஸ்ட் ஆக்ரமிப்புக்கு உட்படுமானால், இந்த ஜனநாயக அரசாங்கங்கள் சாபத்திற்குட்பட வேண்டியதுதான். இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய அரசாங்கங்களிலுள்ள ராஜதந்திரிகள் பெரும்பாலும் பாசிஸ்டுகளே. இதனால்தான் இவர்கள் பிராங்கோ கட்சியை ஆதரிக்கின்றனர்போலும். எது எப்படி யிருந்த போதிலும், 1936, 1937ம் வருஷத்தில், ஜனநாயக அரசாங்கங்கள் ஸ்பெயின் விஷயத்தில் நடந்துகொண்டது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

ஆனால் இரவும் பகலும் ஸ்பெயினில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்பெயின் அரசாங்கத்தார், நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சண்டை போடுகின்றனர். இங்கே—ஸ்பெயினிலே—இத்தலி தோற்றுவிடுமானால், பெர்லின்—ரோம் அச்சு முறிந்துவிடும். அது பயமுறுத்துகிற உலக யுத்தமும் வாராதொழியும்.

நட்புக்காகப் பன்னிரண்டரை லட்சம் ஏகராக்கள்

— தி. வேங்கடாசலம்

மோட்டார் வண்டிகளில் போர்ட் மோட்டாரைப் பற்றிக் கேள்விப் படாதவர் யாருமே இருக்க மாட்டார். இந்த மோட்டார் தொழிற் சாலையின் அதிபரும், உலகத்துப் பணக்காரர் என்று தற்போது போற்றப்படுகிற வருமான ஹென்ரி போர்டும், பிரபல விஞ்ஞான சாஸ்திரியும் 18-10-1931ல் காலமாகி விட்டவருமான தாமஸ் ஆல்வா எடிஸனும், நெருங்கிய நண்பர்கள். எடிஸனுடைய பிற்கால ஆராய்ச்சிக்கு போர்டின் உதவி நிரம்ப இருந்திருக்கிறது. இவர்கள் இரண்டுபேரும் மனம் விட்டுப் பேசக் கூடியவர்கள். இருவருக்கும் இடையே நடைபெற்ற ஒரு ருசிகரமான சம்பவத்தைக் கீழே குறிப்பிடுகிறேன். இதை "ஜோதி" வாசகர்கள் ருசிப்பார்கள் என்றே நம்புகிறேன்.

ஒரு சமயம், அமெரிக்கா ப்ளாரிடா மாகாணத்தி லுள்ள போர்ட் மையர்ஸ் (Port Myers) என்ற இடத்தில் ஹென்ரி போர்ட் தங்கியிருந்தார். இது அவருடைய சுகவாசஸ்தலம். ஒரு நாள் தாமஸ் எடிஸன், இவர் இருப்பிடத்திற்கு வந்தார். எதிர்பாராத எடிஸனுடைய வருகை, போர்டுக்கு ஆச்சரிய முண்டாக்கியது. வந்ததும், சிறிது நேரம் இருவரும் குசலப்ரச்னம் செய்து கொண்டார்கள். பிறகு இருவரும் பின் வருமாறு சம்பாஷித்துக் கொண்டார்கள்:—

எடிஸன்: ஹென்ரி, எனக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்று இதுவரையில் உன்னை நான் கேட்டிருக்கிறேனா? எப்பொழுதாவது?

போர்ட்: இல்லையே; எப்பொழுதும் இல்லையே.

எடிஸன்: நல்லது; இப்பொழுது ஓர் உபகாரம் செய்யும்படி உன்னைக் கேட்கப் போகிறேன். உன்னைக் கேட்பது இதுவே முதல் தடவை; கடைசி தடவையுங்கூட.

போர்ட்: என்ன பீடிகை இவையெல்லாம்? தாராளமாகக் கேள். என்ன வேண்டும் உனக்கு?

எடிஸன்: என்னுடைய நண்பன் ஒருவன் இருக்கிறான். பழைய சிநேகிதன். இந்த ப்ளாரிடா மாகாணத்தில் ஏராளமான நிலத்தை வாங்கிப் போட்டு விட்டான். நிரம்ப நல்ல மனிதன்; மதியூகி; நிதானஸ்தன். ஆனால் ஒரு காலத்தில் இந்த ப்ளாரிடா பிரதேசங்களுக்கு அதிக கிராக்கியிருந்ததல்லவா? அதிலே அகப்பட்டுக் கொண்டு விட்டான்.

போர்ட்: என்ன செய்தான் அவன்?

எடிஸன்: இந்த போர்ட் மையர்ஸ் பிரதேசத்திற்கும் பண்டா கோர்டா பிரதேசத்திற்கும் இடையே சுமார் பன்னிரண்டரை லட்சம் ஏகராக்களை வாங்கிவிட்டான். இதை ஒரு பிரம்மாண்டமான பண்ணையாக்க வேண்டுமென்பது அவன் எண்ணம்.

ஆனால் காலம் கெட்டுவிட்டது. ஒரு நாள் என்னிடம் வந்து, தான் அடியோடு அழிந்து போய் விட்டதாகக் கூறினான். தன்னால் இவ்வளவு விஸ்தீரணமான பிரதேசத்தை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியவில்லையென்றும், தன்னுடைய பணமனைத்தையும் அதில் போட்டு விட்டதாகவும், தவிர, தன் கழுத்து வரையில் கடன் வாங்கியிருப்பதாகவும் சொன்னான்.

போர்ட்: அதற்காக நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?

எடிஸன்: அந்தப் பன்னிரண்டரை லட்சம் ஏகராக்களுக்கு அசல் விலையென்னவோ அதைக் கொடுத்து அந்த நிலம் பூராவையும் நீ வாங்கி விட வேண்டும்; பிறகு அந்த விஷயத்தை மறந்துவிட வேண்டும்.

போர்ட்: ரொம்ப சரி எடிஸன்; என்னுடைய எஸ்டேட் மானேஜரைக் கூப்பிடுகிறேன்.

உடனே போர்ட், கொஞ்சம் கூட யோசிக்காமல் டெலிபோனண்டை சென்று தன் எஸ்டேட் மானேஜரைக் கூப்பிட்டான். டெலிபோனிலேயே, மேற்கண்ட பன்னிரண்டரை லட்சம் ஏகராக்களையும், எடிஸன் சொல்கிற விலை கொடுத்து வாங்கி விடு என்று உத்திரவு செய்தான். மானேஜரும் அப்படியே வாங்கி விட்டான். கிரய பத்திரங்கள் யாவும் எழுதி முடித்து, பூராத்தொகையும் எடிஸனுடைய நண்பனுக்குக் கொடுக்கப் பட்டு விட்டது. சில நாட்கள் சென்றன. எஸ்டேட் மானேஜர் போர்டினிடம் வந்து, அந்த நிலங்களை என்ன செய்வதென்று கேட்டான். 'நிலக்கிரயத் தொகையை நஷ்டக் கணக்கில் எழுதி விட்டு, இதைப் பற்றி மறந்து விடு' என்றான் போர்ட்.

இந்த விசாலமான பிரதேசம் நாளது வரை விருத்தி செய்யப் படாமல் இருப்பதற்கு இதுதான் காரணம். இப்படி தரிசாக இருப்பதனால், ஜனங்கள் இதைப்பற்றி என்னென்னவோ கட்டுக் கதைகளெல்லாம் கட்டி விடுகிறார்கள். 'போர்ட் ஒரு ரப்பர் தோட்டம் இங்கே ஆரம்பிக்கப் போகின்றார்' என்பர் ஒரு சிலர். 'இங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை ஸ்தாபிக்கப் போகிறாராம்' என்பர் வேறு சிலர். ஆனால், போர்ட் இதைப் பற்றி மறந்தே விட்டார். எடிஸனுக்கு அவர் செய்த முதல் உபகாரமும் கடைசி உபகாரமும் இதுதான்.

> 'உடுக்கை யிழந்தவன் கை போல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு'

என்ற பொய்யா மொழி இந்த இடத்தில் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது?

சீனாவிலுள்ள ஹாங்கோ நகரத்தில் சீன ஆசிரியர்கள், கவிஞர்கள் முதலிய பலரும் சேர்ந்துஒரு சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவர்களுடைய நோக்கமென்ன வென்றால் ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடும் சீனர்களுக்கு உற்சாக மூட்டும் பொருட்டு, உணர்ச்சி ததும்பும் நாடகங்கள், கவிகள், கதைகள் முதலியன எழுதி உதவ வேண்டுமென்பதே.

ஃ ஃ ஃ

1937-ம் வருஷம், இந்தியாவிலும் பர்மாவிலும் மொத்தம் 82 தடவை பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன.

எதற்கெடுத்தாலும் சத்தியாக்கிரகமா?

——"மும்முனித் தோன்றல்"

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பெயருக்குச் சுக்கிர தசையடிக்கிறது. பணஞ் சம்பாதிப்பதிலேயே குறியாயிருக்கிற வியாபாரிகள், ஜனங்களுடைய மூடத் தனத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பெயரை எவ்வளவு எவ்வளவு சாமர்த்தியமாக மார்க்கெட்டுகளுக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள்?

கும்பகோணம் பாலாமணி என்ற ஓர் அம்மையாரின் பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஒரு காலத்தில் இந்த பாலாமணி பெயர் எவ்வளவு அடி பட்டது? எதற்கெடுத்தாலும் பாலாமணி பெயர். உங்கள் வீட்டிலே கேளுங்கள் பாலாமணி சேலையைப் பார்த்திருக்கிறாயா என்று? உங்கள் தகப்பனார் பொடி போடுகிற சுபாவமுடையவராக இருந்தால், பாலாம்மணி பொடி போட்டிருக்கிறாரா? உங்களுடைய உறவினர் யாரோ பெரிய உத்தியோகத்திலிருப்பதாகச் சொன்னீர்களே, அவருடைய பங்களா பெயர் 'பாலாமணி விலாஸ்' தானே. இந்த அம்மையார் காலமாகி விட்டாள். இவள் பெயரும் மறைந்து விட்டது.

பிறகு கிட்டப்பா பெயருக்கு ஒரு தசை யடித்தது. சென்னையிலே பஜாருக்குப் போங்கள். இப்பொழுதில்லை; பத்து வருஷங்களுக்கு முந்தி. கிட்டப்பா சாந்து; கிட்டப்பா பாக்குப் பொடி; கிட்டப்பா நடை கூட. எல்லாம் கிட்டப்பா மயந்தான். மேலே சிவப்பு உருமால் துண்டும், கையிலே 'ரிஸ்ட் வாட்சும்' வெள்ளிப் பூண்போட்ட தடியும், நெற்றியிலே கிட்டப்பா சாந்தும்; இந்த வரிசையில் போனால்தான் நாடகக்கொட்டகைக்குள் உங்களுக்கு எல்லாரும் ஒதுங்கி வழி விடுவார்கள். இஃதொரு காலம். இந்தக் காலமும் மலை யேறி விட்டது.

ஜிண்டான் மாத்திரையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாமே. நாகரிக சமூகத்தின் மத்தியிலே இதற்கு ஒரு பெரிய 'மோஸ்' இருந்தது. 'ஜிட்டான், ஜிட்டான் ஜினுக்கு ஜிட்டான்' என்று பாட்டுக் கூட இதற்கு ஏற்பட்டு விட்டது. யார் வீட்டிற்காவது சென்றால், உங்கள் எதிரில் தாம்பூலத் தட்டோடு, ஜிண்டான் மாத்திரைகளடங்கிய ஒரு சிறு புட்டியும் கூடவே கொண்டு வந்து வைக்கப்படும். இந்தச் சிவப்பு மாத்திரைக்கு இருந்த மகிமைதான் என்ன? எப்படி இப்பொழுது 'காபி சாப்பிட கொஞ்சம் நேரமாகி விட்டால் தலை நோய் எடுத்து விடுகிறது' என்று சொல்வது ஒரு நாகரிகமாயிருக்கிறதோ, அப்படிப் போல் அப்பொழுது, 'ஜிண்டான் மாத்திரையில்லா விட்டால் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்ட ருசியே இல்லாமற் போய் விடுகிறது' என்று சொல்வது நாகரிகமாயிருந்தது. இப்பொழுது 'ஜிண்டான் மாத்திரை' யென்றொரு மாத்திரை இருந்ததா வென்று கேட்கக் கூடிய காலம் ஏற்பட்டு விட்டது.

'ஒயிட் ரோஸ் விஜோலியா' சோப்பை நீங்கள் தேய்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இதற்கேற்பட்ட மகிமை தான் என்ன? கடைகளிலே சென்று வேறெந்த சோப்பைக் கேட்

டாலும் 'விஞோலியா' சோப்பைத் தான் அக்கரையோடு சிபார்சு செய் வார்கள். ஆனால் இதற்கு முன் பிரபல மடைந்திருந்த 'பியர்ஸ்' சோப் மாதிரி தான், இதன் மீதிருந்த மயக்கமும் ஜனங்களுக்குக் குறைந்து விட்டது.

சமீப காலந்தொட்டு காந்தி யென்ற பெயர் அகப்பட்டுக் கொண்டு திண் டாட ஆரம்பித்திருக்கிறது. 'காந்தி கள்ளுக் கடை'க்குச் சென்று கள் குடித்தால் பாவமில்லை. காந்தி சிக ரெட்டைப் பிடித்தால், அது தப் பில்லை. ஜெர்மனியிலோ, ஜப்பானிலோ அச்சிட்டு இந்தியாவுக்கு அனுப்பப் பெறுகிற காந்தி பட மொன்றை வாங்கி வீட்டிலே மாட்டிக் கொண்டு விட்டால், ஒரு நாளைக்கு எத்தனை பொய்கள் வேண்டுமானாலும் சொல்ல லாமே. நீங்கள் வசிக்கிற தெருவுக்கு 'காந்தி தெரு' என்று பெயர் வைக்கு மாறு தீர்மானங் கொண்டு வரும்படி, உங்கள் பிரதிநிதியாக நகர சபை யிலே வீற்றிருக்கும் கனவானைக் கேளுங்கள். இல்லா விட்டால், அடுத்த எலெக்ஷனில் அவருக்கு ஓட் கிடை யாது என்று கட்டாயம் சொல்லி விடுங்கள். பய முறுத்தியாவது, காந்தி பெயரிலுள்ள மகத்துவத்தை அவ ருக்கு நீங்கள் தெரிவிக்க வேண் டாமா? ஆனால், நீங்கள் வசிக்கிற வீட்டிற்குத் தெருப்பக்கமே குப்பை யைக் கொட்டுமாறு உங்கள் பெண்டு களுக்குச் சொல்லுங்கள். உங்கள் குழந்தைகளை, தெருவிலேயே மலங் கழிக்குமாறு செய்யுங்கள். காந்தி தெருவிலே எதை வேண்டுமானாலும் செய்யலா மல்லவா?

இப்பொழுது காந்தி பெயர் கூட கொஞ்சம் பிரகாசம் குன்றியிருப்பதா கத் தெரிகிறது. அதன் ஸ்தானத்தில் 'சத்தியாக்கிரகம்' என்ற பெயர் ஏறிக் கொண்டு இல்லாத ஆர்ப்பாட் டங்களெல்லாம் செய்கிறது. எதற் கெடுத்தாலும் சத்தியாக்கிரகந்தான்!

ஃ ஃ ஃ

எனக்கு எழுதப் படிக்கத் தெரி யுமோ இல்லையோ? அதைப்பற்றி இந்தக்காங்கிரஸ் மந்திரிகளுக்குஎன்ன கவலை? எனக்கு மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் ஓர் உத்தியோகம் போட்டுக் கொடு என்றால் கொடுக்க வேண்டியதுதானே இவர்கள்? எங்களைப் போன்றவர்களுக்கு உத்தியோ கம் செய்து வைக்கக் கூட முடியா விட்டால், இவர்களால் தேசத்திற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? எனக்கு உத்தியோகம் தயார் செய்து வைத்துக் கொள்ளாமல் என்னை ஏன் ஜெயிலிலிருந்து விடுதலை செய்ய வேண்டும்? அதற்காகத்தான், இந்த மந்திரியின் வீட்டிலேயே சத்தியாக் கிரகம் செய்கிறேன். பட்டினியாகக் கிடந்து சாகிறேன் பார் இங்கேயே.

நான் எப்பொழுதோ சிறையி லிருந்த காலத்தில் ஒரு போலீஸ் அதி காரி என்னைக் கஷ்டப் படுத்தினான். அவனை ஏன் வேறு ஜில்லாவுக்கு மாற்றக் கூடாது இந்த மந்திரி? இந்த மந்திரியின் ஆபீஸ் அறைக்கு எதி ரேயே, பாயை விரித்து அதன் மீது படுத்துக் கொண்டு பட்டினியாக்க் கிடந்து சாகிறேன் பார்! சத்தியாக் கிரகம் செய்ய எனக்குத் தெரியாதா?

~~இந்த ராஜகோபாலாச்சாரியார் இருக்கிறாரே இவர் பெரிய போக்கிரி.~~ ஹிந்தி பாஷைக்குச் செல்வாக்குத் தேடும் பொருட்டு அதனைக் கட்டாய பாடமாக்கி விட்டார். ~~இதனால் தமிழ்~~ மொழியின் கதி என்னாவது? நாமெல் லாரும் இருக்கிற பொழுது, இந்தத் ~~தமிழ்~~ மொழிக்கு இப்படி அவமானம்

ஏற்படலாமா? இதற்குப் பழைய பெருமையைத் தேடித் தருவது எப்படி? சத்தியாக்கிரகத்தின் மூலமாகத்தான்! ஹிந்தியைக் கட்டாயபாடமாக்குவதில்லை யென்று அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பிக்கிற வரை, அல்லது நான் சாகிறவரை, பட்டினி கிடக்கப் போகிறேன். அப்படிக் கிடக்கப் போவதாகப் பத்திரிகைகளில் படித்துக் கூட இந்தப் பிரதம மந்திரி, பயப்படவில்லை யென்றால், பின்னால், நண்பர்கள், உறவினர்கள் முதலியவர்களின் வேண்டுகோளுக்கும் வற்புறுத்தலுக்கும் இணங்கி சத்தியாக்கிரகத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டால் போகிறது. சத்தியாக்கிரகம் என்பது என்ன? அவ்வளவு பெரிய விஷயமா? கிள்ளுக்கீரை மாதிரி, அதை எப்பொழுது வேண்டுமானாலும் உபயோகப் படுத்தலாம்; எப்பொழுது வேண்டுமானாலும் வாபீஸ் வாங்கிக் கொள்ளலாமே. இல்லா விட்டால், காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் சாதாரண கூலி ஜனங்களிடத்தில் இந்தச் சத்தியாக்கிரகத்தை உபயோகித்துப் பார்த்திருப்பாரா?

இந்த ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து தமிழ்த்தாய் கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கலாம். ஏனென்றால் அன்றைய தினத்திலிருந்து, ஹிந்திக்கு விரோதமாகச் சத்தியாக்கிரகம் செய்ய ஏற்பாடாகியிருக்கிறதே. இனி தமிழ்த் தாய்க்கு என்ன கவலை? ஏற்கனவே, இருநூறு தொண்டர்கள் தயாரா யிருக்கிறார்கள். தொண்டர்களின் செலவுக்கென்று பன்னீராயிரம் ரூபாய் தேவையென்று வேண்டுகோளும் விடப்பட்டிருக்கிறது. சென்னைப் பிரதம மந்திரியின் வீட்டிலேயும் அவருடைய காரியாலயத்திலேயும் சத்தியாக்கிரகமாம்! பிரதம மந்திரி என்ன செய்வார் பாவம்! அவரும் வீட்டிலேயே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்வாரோ? ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். அதாவது இந்த ராஜகோபாலாச்சாரியார், சத்தியாக்கிரகத் தமிழ்த் தொண்டர்களைப் பார்த்து 'தமிழுக்காக நீங்கள் சத்தியாக்கிரகம் செய்வதாகச் சொல்கிறீர்களே; 'சத்தியாக்கிரகம்' என்ற சொல்லே தனித்தமிழல்லவே. தனித் தமிழிலே இதற்கு ஒரு பிரயோகம் கண்டு பிடித்துக் கொண்டு, பிறகு நீங்கள் சத்தியாக்கிரகம் செய்ய வாருங்கள்' என்று சொல்லி விட்டால் என்ன செய்வது? ஆனால் இவர்கள் 'உண்மை கண்டுபிடி இயக்கம்' என்று பதில் சொல்வார்களோ, என்னவோ?

ஜூன் மாதம் முதல் தேதி தமிழ் நாட்டிலே என்ன புரட்சி ஏற்படப் போகிறதென்று பார்ப்போம்.

ஒரு விஷயம் இங்கே ஸ்பஷ்டமாகச் சொல்லி விட விரும்புகிறேன். எனக்குத் தமிழிலே ரொம்பப் பற்று உண்டு. தமிழர் நாகரிகத்திலும் தமிழர் இலக்கியப் போக்கிலும் நான் மிகுந்த பிரமை கொண்டவன். என் பெயரைக் கூடப் பாருங்கள். 'மும்முனித் தோன்றல்' என்று தனித்தமிழிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன்.

உபதேசம்—ஒரு சிறு கதை

——"புதுமைப்பித்தன்"

டாக்டர் விசுவநாதன், கூரிய ஆப்பரேஷன் கத்தியை பேசினில் வைத்துவிட்டு, கத்தரிக்கோலால் குடலின் கெட்டுப் போன பகுதியைக் கத்தரித்தார். விண்டை வைத்து ரணமும் சீழுமான பகுதியைத் துடைத்துத் தொட்டியில் போட்டார். 'நர்ஸ், ஊசி' என்றார். பக்கத்தில் ஸ்டெரிலைஸ் செய்த நூல் கோர்த்து வைத்த ஊசியை நர்ஸ் கொடுக்க, டாக்டர் கை மட மடவென்று சக்கிலியத் தையல் போட ஆரம்பித்தது................

கிளாஸ் மேஜையில் கிடத்தப்பட்டிருக்கிற வியாதியஸ்தன் சிறிது முனகினான்;—பிரக்ஞை வருவதின் முன்னணி சமிக்ஞை.

'டாக்டர் வில்கின்ஸன், இன்னும் கொஞ்சம் குளோரோபாரம்........ஒரு நிமிஷம் போதும்........ஹூம், வெற்றிதான் என்று நினைக்கிறேன்' என்று பேசினில் ஊசியைப் போட்டுவிட்டு, கை உறைகளையும் முக மூடியையும் கழற்றிவிட்டுக் கை கழுவ பேசினிடம் சென்றார் விசுவநாதன். 'வியாதியஸ்தனுக்கு பிரக்ஞை வந்து விட்டது; ஆனால் அளவு கடந்த முயற்சி. ஒரு மணி நேரம் கழித்துக் கொஞ்சம் குளுகோஸ் கொடுங்கள்........' என்று சொல்லிக் கொண்டே வாயில் சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு, ஆப்பரேஷன் தியேட்டரை விட்டு, டாக்டர் வில்கின்ஸன் தொடர இறங்கி நடந்தார். இவரது நரைத்தலையில் சூர்ய ஒளிப் பிரகாசம் விழுந்தது இவர் முகத்திற்கு ஒரு விபரீதமான தேஜஸைக் கொடுத்தது.

விசுவநாதுக்குப் பல மேல் நாட்டுச் சர்வகலாசாலைகளின் பட்டம். நிறபேதம் பாராட்டும் பிரிட்டிஷ் வைத்ய கௌன்ஸில், இந்திய வைத்ய கௌன்ஸில்கள் இவரது அபாரமான கல்பனை முறைகளைக் கண்டு பிரமிக்கும். ரண சிகிச்சை என்றால் டாக்டர் விசுவநாத் என்ற அர்த்தம் சென்னை வாசிகள் அகராதிக்கு மட்டுமல்ல. யூகோஸ்லாவிய இளவரசருக்கு வந்த விசித்திரமான வீக்கத்திற்குச் சிகிச்சை செய்த நிபுணர்களில் இவரும் ஒருவர்.......மண்டையில் வீக்கம். மற்றவர்கள் கத்தி எடுத்தால் பிராணஹானி ஏற்படுமோ என்று பயப்பட்டார்கள். ஏனென்றால் ஆப்பரேஷன் வெற்றி யடைவது, அதைச் சீக்கிரம் செய்து முடிப்பதைப் பொறுத்தது. ஒரு வினாடி அதிகமானால், இளவரசருக்குப் பிரேதப் பெட்டியை ஆர்டர் செய்ய வேண்டியதுதான்........ஆனால் விசுவநாத் கைகள், வேலையை குறைந்த பட்ச நேரத்திற்கும் பாதியளவிலேயே செய்து முடித்தன. இப்பொழுது அவர் சௌகர்யமாகப் பள்ளிக் கூடத்தில் வாசித்துக் கொண்டிருப்பதற்கு டாக்டர் விசுவநாத் தான் காரணம்...........

சென்ற ஜெர்மன் சண்டையில், பேஸ்காம்புகளில் உழைத்ததினால், ஆப்பரேஷன் கத்தியை வைத்துக் கொண்டு யமன் வரவைத்தடுக்க, டாக்டர்கள் தப்பு வழி என்று சொல்லக் கூடிய முறைகளில் எல்லாம் பரிசீலனை செய்ய இவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

டாக்டர் வில்கின்ஸன், இவரது சகா. அவரது அந்தரங்க அபிப்பிராயம், மற்ற இந்தியர்களைப் பற்றி என்னவாக இருந்தாலும், டாக்டர் விசுவநாதுடன் கருப்பன் என்ற பிரக்ஞையில்லாமலே பழகி வந்தார். நாஸ்திகத்தின் பேரில் இருவருக்கும் இருந்த அபார பக்தி இந்த நெருக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம்....... முப்பத்து முக்கோடி கருப்பு தேவாதி தேவர்களும், மூன்றே மூன்று வெள்ளைத் தெய்வங்களும் இவர்களது கிண்டல்களை இரண்டு நாட்கள் கூட இருந்து கேட்டுக் கொண்டிருந்தால், இவர்கள் கண் எதிரிலேயே தூக்குப் போட்டுக் கொள்ளும்.......ரூபமற்ற தெய்வங்களுக்கு அப்படிப்பட்ட அடி........

அன்று ஆப்பரேஷன் தியேட்டருக்குக் கொண்டுவரப் பட்டவன் ஒரு ஹடயோகி. விஷங்களையும் கண்ணாடிச் சில்லுகளையும் கண் எதிரிலும் தின்று சாகாதவன். சித்தாந்தச்சாமி என்ற அவன், இந்த இரு டாக்டர்கள் முன்னிலையில் கூடத் தன் திறமையைக் காட்டியிருக்கிறான்........

அவன் ஏதோ திடீரென்று பிரக்ஞையற்றுக் கிடக்கிறான் என்ற தகவல் கிடைத்ததும், ஆம்புலன்ஸ் காரை அனுப்பி சத்திரத்திலிருந்து அவனை எடுத்து வரச் செய்ததும் இவர்தான். ஹடயோகியின் உட்புறம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க இருவருக்கும் இருந்த ஆசை அளவில்லை. எக்ஸ்ரே பரீட்சையில் குடலில் ஒரு பகுதி பழுத்து அழுகி விட்டது என்று கண்டனர். காரணம் குடல் சதையில் ஒரு கண்ணாடிச் சில் குத்திக் கொண்டிருந்தது. ஹடயோகி ஏதோ முறை தப்பிச் செய்ததின் விளைவு........

சித்தாந்தச்சாமிக்கு இரண்டு ஸ்பெஷல் நர்ஸுகள்; மூன்று மணி நேரத்திற்கொருதரம் டாக்டர் பரிசோதனை எல்லாம்........

மறுநாட் காலையில் டாக்டர் வில்கின்ஸன் கேட்ட செய்திகள் அவரைத் திடுக்கிட வைத்தது. ஒன்று ஆஸ்பத்திரியில் கிடத்தப்பட்டிருந்த சித்தாந்தச்சாமியைக் காணோம் என்பது. மற்றொன்று டாக்டர் விசுவநாத் காஷாயம் வாங்கிக் கொண்டார் என்பது. முதல் விஷயத்தில் டாக்டர் வில்கின்ஸனுக்கு அவ்வளவு சிரத்தையில்லை; அது போலீஸ் கேஸ். டாக்டர் விசுவநாத்திற்கு மூளைக்கோளாறு தான் ஏற்பட்டிருக்கும் என்று முதலில் நம்பி அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

உடனே தமது மோட்டார் காரில் டாக்டர் விசுவநாத் பங்களாவிற்குச் சென்றார். தலை மொட்டை; இடையில் ஒரு காவி வேஷ்டி; காலில் குப்பிப் பூண் பாதக் குறடு;—இந்த அலங்காரத்தைக் கண்டதும் டாக்டர் வில்கின்ஸனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'எப்படியானாலும் இந்தியர்கள் இந்தியர்கள்தான்' என்று நினைத்துக் கொண்டார்.

'என்ன டாக்டர், இதென்ன ஜோக்? என்றைக்கு உமது தெய்வங்கள் உம்மைப் பேட்டி கண்டன? தவடையில் கொடுத்து ஏன் அனுப்பவில்லை?' என்று சிரித்தார்.

'வில்கின்ஸன், சிரிக்காதே. இது ஒரு புதிய பரிசீலனை. எனது சித்தாந்தம் ஒரு முடிவு கட்டப் படவில்லை; பரிசீலனை செய்துதான் பார்க்க வேண்டும்' என்றார் டாக்டர் விசுவநாத். இவர்களிடத்தில்,பாசறை ஆஸ்பத்திரி வாழ்க்கையில் தோன்றிய வெறி காணப்பட்டது........

டாக்டர் வில்கின்ஸனுக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. 'வெல், குட் லக்' என்று சொல்லி விட்டுத் தான் திரும்ப முடிந்தது.

ஃ ஃ ஃ

ஐந்து வருஷங்கள் கழித்து கைலாச பர்வத சிகர யாத்திரைக் கோஷ்டியில் டாக்டர் வில்கின்ஸனும் ஒருவராகச் சென்றார். அப்பொழுது பிளான் போடப் பட்ட பாதையே புதிது. இது வரை யாரும் அந்த வழியில் சென்றதில்லை. திபேத்திய சர்க்கார் கொஞ்சம் தில்லு மில்லு செய்ததால் யாத்திரைக் கோஷ்டித்தலைவர் கடைசி நேரத்தில் வகுத்தது. கோஷ்டியில் பலத்த எதிர்ப்பு இருந்தாலும், யாத்திரைக் காரர்கள் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் ஒத்துக் கொண்டனர்.

யாத்திரை ஆரம்பித்து இருபதாவது நாள். ஒன்றும் முளைக்காத உறை பனி பாலைவனத்தின் வழியாகச் செல்லுகின்றனர். மணல் பாதை தான். அருகில் அரை மைல் தூரத்தில் பனிச் சிகரம்.

கோஷ்டியின் நடுவில் நடந்து சென்று கொண்டிருந்த டாக்டர் வில்கின்ஸனுக்குச் சித்தாந்தச் சாமியாரின் அடையாளங்களுடன் ஒரு மனிதன், பனிக் கட்டி உச்சியில் நிற்பது போலத் தெரிந்தது.

'அதோ பாருங்கள் அந்த மனிதனை! அவனை எனக்குத் தெரியும். அவன் ஒரு சாமியார்' என்று தனக்கு முன்னே செல்லுபவரிடம் சொன்னார்.

முன்னே சென்ற ஜேக் ஆல்பர்ட்ஸன், ஆல்ப்ஸ் கிளப் நிரந்தர அங்கத்தினர். தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் திருப்பி வைத்துப் பார்த்து, 'மனிதன் மாதிரிதான் தெரிகிறது............ஆனால் ....'. இவர் பேசி முடிக்குமுன் வில்கின்ஸன், பக்கத்திருந்த பாறையில் தாவி, பனிச் சிகரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ஜேக் ஆல்பர்ட்ஸனும் துணிந்தவர்; அவரைப் பின் பற்ற முயற்சிக்கையில், கோஷ்டித் தலைவர் தடுத்து 'இருட்டி விட்டது; அங்குப் போய்த் திரும்புவதென்றால் காம்புக்குப் போய்ச் சேர முடியாது' என்றார்.

'அந்த மனிதன் தனியாகப் போகிறான்; அவனைச்சாக அனுப்புவதா?' என்று கோபித்துக் கொண்டார் ஆல்பர்ட்ஸன். அப்பொழுதுதான் வில்கின்ஸன் கோஷ்டித் தலைவருக்குத் தெரிந்தது. வேறு வழியின்றி, 'அடையாளத்திற்கு தீ வளர்த்து வைக்கிறோம்; சீக்கிரம் வாருங்கள்' என்று சொல்லி விட்டு கோஷ்டியை அழைத்துச் சென்றார் தலைவர்.

ஜேக் ஆல்பர்ட்ஸனும் பாறைகளில் தாவித் தாவி, வில்கின்ஸனைத் தொடர்ந்து சென்றார். பனிப் பாறை நெட்ட நெடுகலாக செங்குத்தாக இருந்ததால் அவர்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும் பொழுது உச்சி தெரியாது. இரண்டு பாறைகளின் இடுக்கு. அதைத்தாண்டி, எதிரில் நீட்டிக் கொண்டிருக்கும் உறை பனிக் கட்டி மீது கால் வழுக்காது எட்டி வைத்து நின்று கொண்டால், அதன் வழியாகவே பனிச் சிகரத்தின் உச்சியை அடைய முடியும். ஜேக் ஆல்பர்ட்ஸனும், வில்கின்ஸனும் ஒருவர் பின் ஒருவராக இடுக்கு வழியாக நுழைந்தனர். அந்த இடுக்குக் கப்புறம் பாதாளம். ஒரே குதியில் தான் பனிப் பாறை மீது குதிக்க வேண்டும். வில்கின்ஸன் மூச்செடுத்துத் தாவினார். கால் வழுக்கப் பார்த்தது. நல்ல காலம். ஐஸ்—கோடரியை ஊன்றிக் கொண்டார்.



1938

ஏப்ரல்

28 ஆங்கிலோ—பிரெஞ்சு உடன்படிக்கை சம்பந்தமாக இன்று பிரெஞ்சு மந்திரிகளும் பிரிட்டிஷ் மந்திரிகளும் கலந்து பேசினார்கள். பிற நாட்டுப்படை எடுப்பினின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இரு அரசாங்கத்தாரும் ஒன்று பட்ட முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

தென்னமெரிக்காவிலுள்ள அர்ஜன்டைனாவில் நாஜி ஸ்தாபனங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று, மேற்படி அர்ஜன்டைனா அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இருக்கிற

'நாரோ ஷெவ்' என்று சொல்லிக் கொண்டு ('மயிரிழை தவறினால்........' என்று அர்த்தம்.) ஜேக் பின் தொடர்ந்தார்.

இருவரும் பனித் தளத்தின் மீது வளைந்து செல்லும் பாதையில் நடக்கலாயினர். பனிக் கட்டிக் கிடையில் செங்குத்தாகக்கருங்கல் லிங்கம்போல் செதுக்கியிருந்தது. அதன் தலையில் காஷாய வஸ்திர மூட்டை. ஜேக்,அதை எடுத்துப் பிரிக்கையில், 'வில்கின்ஸன், இங்கே பாரும்?' என்று கூவினார்.

வில்கின்ஸன் திரும்பிப் பார்த்தார். செங்குத்தாகச் சுவர்போல நிற்கும் உறை பனிக் கட்டிக்குள் மனித உருவம்........டாக்டர் விசுவநாத். பத்மாசனமிட்டு நிஷ்டையில் உட்கார்ந்த பாவனையில்.

'ஐயோ பாவம், இவருக்கு இந்த முடிவா! பெரிய டாக்டர்' என்று தலையைக் குனிந்து வணங்கினார்.

பின்பு மூட்டையைப் பிரித்தார். அதில் ஒரு தோல் பர்ஸ்—டைரி. அதைத் திறந்ததும்........

நண்பன் வில்கின்ஸனுக்கு,

நீ இங்கு வருவாய் என்று எனக்குத் தெரியும். நான் சாகவில்லை; நீ என்னை எந்த நிலையில் பார்த்தாலும் சாகவில்லைஎன்று நம்பு. நமது உயிர் நூல் சாஸ்திரங்களைக் கிழித்தெறிந்துவிட்டு வேறு மாதிரியாக எழுத வேண்டும். அஸ்திவாரமே தப்பு.

இப்பொழுது வெளியில் சொல்லாதே. நீ பைத்தியக்காரனாக்கப்படுவாய்........அந்தச் சாமியார் லேசானஆசாமியல்ல........

என்றிருந்தது. மூட்டையைக் கட்டிப் பழையபடி வைத்து விட்டு 'ஜேக், திரும்புவோமா' என்றார் டாக்டர் வில்கின்ஸன்.

'பின் வேறு என்ன செய்வது' என்றார் ஜேக்.

மனஸ்தாபங்களைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு ஒரு சமரஸம் ஏற்பட வேண்டுமென்று இரண்டு அரசாங்கத்தாருக்குள்ளும் கடிதப் போக்குவரத்து தொடங்கியது.

ஹிந்து—முஸ்லீம் சமரஸத்தைப் பற்றி ஜனாப் ஜின்னாவும் மகாத்மா காந்தியும் இன்று பம்பாயில் கலந்து பேசினார்கள். மீண்டும் இந்தச் சம்பாஷணை தொடங்குமென்று அறிவிக்கப்பட்டது.

29 மகாத்மா காந்தி, மஹாதேவ தேசாய் பியாரி லால், சுசீலா நாயர் முதலியோருடன் எல்லைப் புற மாகாணத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்ய பம்பாயிலிருந்து புறப்பட்டார்.

எதியோப்பியா, சர்வ தேச சங்கத்திற்கு வருஷ சந்தாவாக 57,000 பிராங்குகள் செலுத்த வேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டிருந்ததில் ஒரு தொகை பாக்கியாகப் போய் விட்டது. இந்தத் தொகையை இன்று ஹெய்லி செலாஸி, சர்வ தேச சங்கத்திற்கு அனுப்பி விட்டார்.

30 பம்பாயில் ஏற்பட்ட ஹிந்து முஸ்லீம் கலவர சம்பந்தமாக, சுமார் மூன்று லட்ச ரூபாய் வரை நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று, பம்பாய் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பலர் வழக்குகள் தொடுத்திருக்கின்றனர்.

இத்தலியின் எதியோப்பிய ஆக்ரமிப்பை இந்தியா அங்கீகரிக்கக் கூடாதென்று பண்டித ஜவஹர்லால் நேரு ஓர் அறிக்கை விடுத் திருக்கிறார்.

ஐரோப்பாவிலே எந்த விதமான யுத்தம் ஏற்பட்டாலும், அதில் நடுநிலை வகிக்கும் படியான உரிமை தனக்குக் கொடுக்கப் பட வேண்டுமென்று ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கம், சர்வதேச சங்கத்திற்கு ஒரு வேண்டுகோளை அனுப்பியிருக்கிறது.

மைசூரில் விதுரஸ்வதம் என்ற ஊரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்க மைசூர் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

சீன—ஜப்பானிய யுத்தத்தில், ஜப்பானியர்களால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்ட டாங்க்சென் என்ற ஊரை சீனர்கள் மீண்டும் பிடித்துக் கொண்டு விட்டனர்.

பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவர்களை வெளியேற்றி விடும் அதிகாரம் போலீஸ் கமிஷனருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கண்டுள்ள ஒரு மசோதா, பம்பாயில் அஸெம்பிளியில் சட்டமாக நிறைவேறியது.

மே

1 இன்று உலகமெங்கும் மே தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. லண்டனில் இந்தியர்கள் ஒன்று சேர்ந்து, இது சம்பந்தமாக ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். ஜெர்மனியில் ஹிட்லர், ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார்.

மகாத்மா காந்தி தமது பரிவாரங்களுடன் பிஷாவர் வந்து சேர்ந்தார். நௌஷீரா ஸ்டேஷனிலிருந்து பிஷாவர் வரை-27 மைல் தூரம்—செஞ்சட்டைப் படையினர் அணிவகுத்து நின்று மகாத்மாவுக்கு மரியாதை செலுத்தினர்.

2 ஆங்கிலோ-இத்தாலிய ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் சேம்பர்லேன் நீண்ட பிரசங்கம் ஒன்று செய்தார்.

ஷாங்காய் நகரத்தில், சர்வ தேசப் பிரதேசம் என்ற ஒரு தனியிடம் இருக்கிறது. இதில் எல்லா நாட்டவரும் வசிக்கின்றனர். இதில் ஜப்பானியப் படைகள் புகுந்து ஆர்ப்பாட்டஞ் செய்தன. இதனை ஆட்சேபித்து, ஜப்பானிய அரசாங்கத்திற்கு எல்லா ஸ்தானீகர்களும் எழுதியிருக்கிறார்கள்.

இந்தியாவில் பாஷை வாரியாக மாகாணங்களைப் பிரிக்கிற யோசனை இப்பொழுது இல்லையென்று பார்லிமெண்டில் லார்ட் ஸ்டான்லி கூறினார்.

தமது எல்லைப்புறச் சுற்றுப் பிரயாணத்தின் போது, ஜனங்கள் மிக அமைதியாக நடந்து கொள்வதை மகாத்மா காந்தி பாராட்டினார். பிஷாவரில் அவருடைய பிரார்த்தனைகளின் போது பதினையாயிரம் ஜனங்கள் கூடி அமைதியாகப் பிரார்த்தனை நடத்தினார்கள்.

3 ரோமாபுரிக்கு இன்று ஹிட்லர் விஜயஞ் செய்தார். இத்தலியின் எல்லைப்புறமாகிய ப்ரென்னரிலிருந்து ரோமாபுரிக்கு 480 மைல் தூரம். இந்த வழி நெடுக

முப்பது லட்சம் ஜனங்கள் அணிவகுத்து நிற்கும்படி செய்யப்பட்டார்கள்.

காங்கிரஸ் கொடியைப் பறக்க விடுவதில் தங்களுக்கு ஆட்சேபமில்லை யென்றும், ஆனால் சமஸ்தானக் கொடிக்கும் மரியாதை செலுத்த வேண்டுமென்பதே தங்கள் விருப்பமென்றும், மைசூர் திவான் கூறினார்.

சென்னைச் சிறைச்சாலையிலிருந்து முப்பத்தைந்து கைதிகள் விடுதலை செய்யப் பட்டார்கள்.

4 தங்களுக்குக் கீழ்ப் பட்ட ஓர் உத்தியோகஸ்தரை கவர்னராக நியமிப்பதை ஆட்சேபித்து ஒரிஸா மாகாண காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்வதாயிருந்தார்கள். இதனால் பெரிய அரசியல் நெருக்கடி ஏற்படும் போலிருந்தது. கடைசியில், ஏற்கனவே கவர்னராயிருந்த ஸர் ஜான் ஹப்பாக், தமது ரஜாவை ரத்து செய்து விட்டார். இதனால் நெருக்கடி ஏற்படாமல் தீர்ந்து விட்டது.

மகாத்மா காந்தி, எல்லைப் புற மாகாண கவர்னரைப் பேட்டி கண்டு 55 நிமிஷ நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

கிராம்பு ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாக ஜான்ஸிபாரிலுள்ள இந்தியர்களுக்கும் அந்த அரசாங்கத்திற்கும் ஒரு சமரஸம் ஏற்பட்டு விட்டதாக ராய்ட்டர் செய்தி கூறுகிறது.

பாலஸ்தீனத்திலே இன்னும் குழப்பம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இன்று ஓர் அராபியர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

ஹிட்லரும் முஸோலினியும் நீண்ட நேரம் ரோமாபுரியில் கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

5 இன்று மகாத்மா காந்தி தமது பரிவாரங்களுடன் இந்தியாவின் எல்லைப்புறமாகிய கைபர் கணவாயைப்போய்ப் பார்த்து விட்டுத் திரும்பினார்.

சென்னை மாகாணத்திலுள்ள 53 நகரசபைகளில் 38 நகர சபைகளுக்கு காங்கிரஸ் கட்சியினர் பெரும் பான்மையோராக வந்திருக்கின்றனர்.

ஒத்துழையாமைக் காலத்திலேயோ சட்ட மறுப்புக் காலத்திலேயோ தண்டிக்கப் பட்டவர்கள் அரசாங்க உத்தியோகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் என்று இருந்த விதியை ரத்துசெய்து விட்டதாக மத்திய மாகாண அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

ஆங்கிலோ—ஐரிஷ் ஒப்பந்த மசோதாவை இன்று பார்லிமெண்டில் சேம்பர்லேன் பிரேரித்தார்.

6 மைசூர் சமஸ்தானத்தில் ஏற்பட்ட கொடித் தகராறு விஷயமாக இன்று சர்தார் படேலும் ஆச்சாரியா கிருபளானியும் பெங்களூர் வந்து திவானுடன் கலந்து பேசினார்கள்.

பஞ்சாப் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான டாக்டர் சத்தியபால், இந்தியா சட்ட சபைக்குப் பெரும் பான்மையான வாக்குகளால் தெரிந்தெடுக்கப் பட்டார். இவருக்கு எதிரிடையாக நின்ற டாக்டர் பேக்சந்துக்கு ஏழு ஓட்டுகளும் ஹரிதேவ சிங் என்பவருக்கு நான்கு ஓட்டுகளும் கிடைத்தன.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பம்பாய் பிரதம மந்திரி, ஆங்கிலோ—இந்தியர் கூட்டத்தில் பேசினார்.

7 கவிஞர் ரவீந்திர நாத் டாகூரின் 78வது பிறந்த தினக்கொண்டாட்டம் இன்று இந்தியா வெங்கணும் கொண்டாடப் பட்டது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியா களைப் பின் தள்ளிக் கொண்டு சீனர்கள் ஜிங் நகரம் வரை சென்று விட்டார்கள். இப்படிப் பின்னடைந்து போனது, ஜப்பானியர்களுக்குப் பெரிய சேதம்.

ருமேனியாவின் பிரதம மந்திரியாயிருந்தவரும், யூதர்களை விரட்டியடித்தவருமான எம். கோகா என்பவா இறந்து விட்டார்.

ஆகாய விமானத்திலிருந்து குண்டுகள் போட்டு எப்படி ஓர் ஆகாய விமான நிலையத்தை அழிக்கலாமென்பதை, முஸோலினி, இன்று ஹிட்லருக்குக் காட்டினார்.

8 ஒரிஸா மந்திரிச் சபை நெருக்கடியை சமரஸமாகத் தீர்த்ததற்காக, ஒரிஸா பிரதம மந்திரியை ரவீந்திர நாத் டாகூர் பாராட்டி யிருக்கிறார்.

மைசூர் சமஸ்தான காங்கிரசுக்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் இன்று சமரஸம் ஏற்பட்டு விட்டது.

சர்வதேச சமாதானச் சங்கத்தின் நிருவாகக் கமிட்டியார் இன்று ஜினீவாவில் கூடி, இத்தலியின் எதியோப்பிய ஆக்ரமிப்பைக் கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

எல்லைப் புற மாகாணச் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியினர் இன்று கூடி, மந்திரிகளின் மீது பூரண நம்பிக்கை உண்டென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். மகாத்மா காந்தியும் தமது எல்லைப் புறச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பி விட்டார்.

9 ஒரிஸா மந்திரிச் சபை நெருக்கடியைப் பற்றிப் பார்லிமெண்டில் கேள்வி கேட்கப் பட்டபோது, லார்ட் ஸ்டான்லி பதிலளிக்கையில், ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் கவர்னர்களாக உயர்த்தப்படுவது எவ்விதத்திலும் பாதக மடையவில்லையென்று கூறினார்.

சென்னை அஸெம்பிளி தலைவரான புலுசு சாம்பமூர்த்தி, தமது பதவியை ராஜீநாமா செய்யப்போவதாக வதந்தி.

ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தார் எவ்வித நிபந்தனையுமின்றி சரணாகதி யடைகிற வரையில் தாம் யுத்தம் நடத்தப் போவதாக தளபதி பிராங்கோ கூறினார்.

ஹரிபுரா காங்கிரஸ் சமயத்தில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்த, லார்ட் சாமியல், லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது, இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து அளித்து அதனைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று கூறினார்.

தமக்கு அதிகமான வேலையில்லையென்று சொல்லி, சென்னை பார்லிமெண்டரி காரியதரிசியான கே. ஆர். கரந்த் தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டார்.

பிரெஞ்சு அரசாங்கத்தார் தங்களுக்கு எவ்வித சௌகரியங்களும் செய்து கொடுக்கவில்லை யென்று புதுச் சேரியிலுள்ள எல்லா வியாபாரிகளும் ஹார்த்தால் நடத்தினர்.

10 சிந்து மாகாணக் கவர்னரின் ராணுவக் காரியதரிசியான தளபதி காஸ் என்பவர் இராத்திரி படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ ஒருவரால் தாக்கப் பட்டார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி, பிரதம மந்திரிகள் மகாநாடு இவற்றை முன்னிட்டு இன்று காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் பம்பாய் வந்து சேர்ந்தார்.

இங்கிலாந்திலுள்ள இரண்டு நிலக்கரிச் சுரங்கங்களில் வெடி விபத்து ஏற்பட்டு 14 பேர் மரண மடைந்தனர்; 49 பேர் காயமடைந்தனர்; 60 பேர் பூமியிலே புதைந்து விட்டனர்.

பாட்னா ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியாயிருந்த ஸர் கோர்ட்னி டெர்ரெல் லண்டனில் மரணமடைந்தார்.

சிறையிலுள்ள கைதிகள் சர்க்கார் சலாம் செய்ய வேண்டுமென்பது; அரசியல் கைதிகளை மூன்று வகுப்பினராகப் பிரித்து வைப்பது முதலியவைகளை ஒழித்து விட வேண்டுமென்று ஒரிஸா அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

ஆஸ்திரியா, ஜெர்மனியின் ஆதிக்கத்திற்கு வந்த பிறகு, அங்கிருந்து ஆயிரக் கணக்கான யூதர்கள் ஹாலந்துக்குள் வந்து விட்டார்களென்றும், இன்னும் இதை அநுமதித்துக் கொண்டிருத்தல் சாத்தியமாகாதென்றும், சொல்லி ஹாலந்து அரசாங்கம் தடையுத்திரவு பிறப்பித்திருக்கிறது.

எல்லைப் புற மாகாணத்துச் செஞ்சட்டைப் படையினர், இனி காங்கிரஸின் உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று, மேற்படி மாகாண காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானிக்கப் பட்டது.

11 பம்பாயில் சுபாஷ் சந்திர போஸும் ஜின்னாவும், ஹிந்து முஸ்லீம் சமரஸம் சம்பந்தமாக ஐந்து மணி நேரம் கலந்து பேசினார்கள்.

மத்திய மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்த நான்கு மந்திரிமார்கள், பிரதம மந்திரியுடன் கொண்ட அபிப்பிராய வேற்றுமை காரணமாக ராஜீநாமா செய்து விட்டார்கள்.

தென்னமெரிக்காவிலுள்ள ப்ரேஜில் நாட்டில் பாஸிஸக் கட்சியினர் ஆயுதப் புரட்சி ஆரம்பித்தனர்.

ஏ. பாட்லிவாலா என்பவர் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து, அந்தக் கட்சி நிருவாக சபையினரால் விலக்கப் பட்டார்.

கல்கத்தாவில் ஒரு பிரபலஸ்தர் குடும்பத்தில் விவாகம் நடைபெற்றது. இதன் செலவு 25 ரூபாய்தான்.

12 இன்றிரவு பன்னிரண்டரை மணி வரையில் போஸ்—ஜின்னா சம்பாஷணை நடைபெற்றது. ஜின்னா, போஸுக்கு ஒரு விருந்து நடத்தினார்.

பம்பாயில் புலாபாய் தேசாயின் பங்களாவில், ஏழு மாகாணப் பிரதம மந்திரிகளின் மகாநாடு கூடியது.

சர்வதேச சங்கக் கவுன்சிலின் கூட்டம் இன்று ஜினீவாவில் கூடியது. ஹெயிலி செலாஸி பிரசன்னமாயிருந்தார். எதியோப்பியப் பிரதிநிதி, தமது நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று உருக்கமாகப் பேசினார். ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் பிரதிநிதி, வெளிநாடுகளில் தங்களுக்கு வேண்டிய யுத்த தளவாடங்களை வாங்கிக் கொள்ள உரிமையுண்டென்று மன்றாடிப்பேசினார். பிரிட்டிஷ் பிரதிநிதியான லார்ட் ஹாலிபாக்ஸ், உலக சமாதானத்தை முன்னிட்டு, இத்தலியின் எதியோப்பிய ஆக்ரமிப்பை அங்கீகரிக்கவேண்டுமென்று கூறினார்.

பம்பாயில் பதின் மூன்றாயிரம் பார்சி குடும்பங்கள் இருக்கின்றன வென்றும், இவற்றில் இரண்டாயிரத்தைந்நூறு குடும்பங்கள், பிறருடைய தயவிலே வாழ வேண்டியிருக்கிறதென்றும், பார்சி இளைஞர் மகா நாட்டில், டாக்டர் மேத்தா என்பவர் கூறினார்.

ப்ரேஜிலில் ஏற்பட்ட நாஜி கலகத்தில் இரண்டு ராணுவ உத்தியோகஸ்தர்கள் கைதி செய்யப் பட்டார்கள்.

13 பெல்ஜியத்தின மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

மகாத்மா காந்தி பம்பாய் கவர்னருடன் ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

பம்பாய்க்கு விஜயஞ் செய்திருந்த எல்லாப் பிரதம மந்திரிகளும் இன்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். சுபாஷ் சந்திர போஸ் தலைமை வகித்தார். ஒரு லட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

ஜெக்கோ-ஸ்லோவேகியாவிலுள்ள ஸுடேடன் ஜெர்மானியக் கட்சியைச் சேர்ந்த ஹெர் ஹென்லீன் என்பவர் திடீரென்று இன்று லண்டனில் ஆகாய விமானத்தில் வந்திறங்கினார்.

ஹங்கேரிய அரசாங்கத்தின் மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

விவசாயிகளுக்குத் தக்க பரிகாரம் தேடித்தர வேண்டுமென்று பம்பாயில் கூடிய பிரதம மந்திரிகள் மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

போஸ்-ஜின்னா சம்பாஷணை விடியற்காலை இரண்டு மணியோடு முடிவுற்றது.

ஜினேவாவிலே இன்று முஸோலினி பேசுகையில் 'அபிசீனிய யுத்தத்தின் போது, நம்மீது தடையுத்திரவுகள் பிறப்பித்தார்களே அவர்களை நாம் மறக்கவில்லை' என்று கூறினார்.

எதியோப்பியாவின் இத்தாலிய ஆக்ரமிப்பை நார்வே தேசம் அங்கீகரித்துக் கொண்டுவிட்டது.

இந்தியா சட்டசபையின் ஆயுட் காலம் 1939ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி வரை நீடிக்கப்பட் டிருக்கிறதென்று இந்தியா அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.

14 ஸ்பெயின் சண்டையில், குடியரசு அரசாங்கத்தின் படையினர், அதிக நஷ்டத்தையடைந்தனர்.

தென்னமெரிக்காவிலுள்ள சிலி தேசம், சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டு விட்டது.

15 ஏப்ரல் மாதம் இருபத்தேழாந்தேதி வரையில் பிராங்கோ கட்சியினர், அரசாங்கக் கட்சியிலிருந்து 80644 பேர் கைதியாக்கி யிருக்கின்றனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

பெல்ஜியத்தில் ஸ்பாக் என்பவர் புதிய மந்திரிச் சபையை அமைத்து விட்டார்.

மைசூர் பட்டத்திற் குரியவரான சாமராஜேந்திர உடையாருக்கும் சர்க்காரி சமஸ்தான மன்னரின் புதல்விக்கும் இன்று

மைசூரில் விவாகம் நடைபெற்றது. இது சம்பந்தமாகப் பல கைதிகள் விடுதலை செய்யப் பட்டனர்.

ஹொர்ஹென்லீன், பிரிட்டிஷ் மந்திரிகளைக் கண்டு பேசிவிட்டு, இன்று ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் தலை நகரமாகிய ப்ரேக் வந்து சேர்ந்தார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி பம்பாயில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் கூடியது.

16 பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனி லார்ட் ஸ்டான்லி, குடியேற்ற நாடுகளின் மந்திரியாகவும், மால்கோம் மாக்டோனல்ட், காலனிகள் மந்திரியாகவும், ஸர் கிங்ஸ்லிவுட் ஆகாயப் படை மந்திரியாகவும் இருப்பார்கள்.

17 பழைய இரும்புச் சாமான்களை ஆஸ்திரேலியர், ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து கொண்டு வந்தனர். ஆனால் மெல்போர்ன் நகரத்துத் துறைமுகத் தொழிலாளர்கள், இந்த வேலையைத் தாங்கள் செய்ய முடியாதென்று ஆட்சேபித்தார்கள்.

ஜப்பானியப் படை இன்று சௌஷீன் என்ற நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டது.

ஆங்கிலோ—ஐரிஷ் ஒப்பந்தம் இன்று மன்னர்பிரானுடைய அங்கீகாரத்தைப் பெற்று விட்டது.

1940ம் வருஷத்தில் நடைபெற வேண்டிய ஒலிம்பிக் விளையாட்டுகள், 1940ம் வருஷம் செப்டம்பர் மாதம் 21ந் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 8ந் தேதி வரை நடைபெறுமென்று அறிவிக்கப் பட்டது.

கான்பூரில் மில் தொழிலாளர் வேலைநிறுத்தம். சுமார் 33000 பேர் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

ஐக்கிய மாகாண கவர்னர் பதவியை ஸர் மாரிஸ் ஹாலெட் ஏற்றுக்கொண்டார்.

18 சீன-ஜப்பானிய யுத்தத்தில், சூசௌ நகரத்திலிருந்து ஒரு லட்சம் சீனத் துருப்புகள் பின்னடைய ஆரம்பித்திருக்கின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கத்து அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி லார்ட்ஸ் சபையில் வாதம் நடைபெற்றது. இத்தலியின் ஆதிக்கத்தின் கீழ், எதியோப்பியாவில் ஒரு பாகத்தை ஹெயிலி செலாஸிக்குக் கொடுக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சிபார்சு செய்யலாமென்று லார்ட் ஹுகார்ட் கூறினார்.

19 ஜப்பானியப் படைகள் சூசௌ நகரத்தைக் கைப்பற்றி விட்டதாகச் சொல்லப் பட்டது.

தென்னாப்பிரிக்கா யூனியன் பார்லிமெண்டுக்குத் தேர்தல் நடை பெற்றது. அரசாங்கக் கட்சியினர் பெரும்பான்மையோராக வந்தனர். தளபதி ஸ்மட்ஸ் மீண்டும் தெரிந் தெடுக்கப் பட்டிருக்கிறார்.

அமெரிக்கா ஐக்கிய மாகாண அரசாங்கத்தார், கப்பல் படை விஸ்தரிப்புக்காக 231,000,000 பவுன் அதிகச் செலவு செய்யத் தீர்மானித் திருக்கின்றனர்.

சிந்து மாகாணச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு மாதம் 75 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

சமஷ்டியை உடைத்தெறிவதே காங்கிரஸின் நோக்கமென்று பம்பாயில் சுபாஷ் சந்திர போஸ் ஓர் ஐரோப்பியர் கூட்டத்தில் கூறினார்.

20 ஜெர்மனியின் எல்லையும் ஜெக்கோ ஸ்லோவேகியாவின் எல்லையும் சந்திக்கிற இடத்தில் இரண்டு நாட்டுப் படைகளும் திரட்டப் பட்டு வருகின்றன. 'எங்கள் நாட்டு உரிமையை நாங்கள் பாது காத்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்' என்று ஜெக்கோ ஸ்லோவேகியாவின் பிரதம மந்திரி கூறினார்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையை வெகு சீக்கிரத்தில் பெருக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் சுறு சுறுப்புக் காட்டுகின்றனர். லார்ட் நப்பீல்ட், அரசாங்கத்திற்குத் தமது தொழிற் சாலைகளின் பூரண ஒத்துழைப்பைத் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

கமிஷனர்களும் கலெக்டர்களும் இனி தர்பார்கள் நடத்தக் கூடாதென்று சிந்து மாகாண அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

சிவனும் விஷ்ணுவும் ஒரே இடத்தில் வைக்கப்பட்டு, எல்லா ஜாதியார்களும் வந்து சுவாமி தரிசனம் செய்து போகக் கூடிய கோயில் ஒன்று காரைக்குடியில் சென்னைத் தொழில் மந்திரி கிரியினால் திறக்கப் பட்டது.

நாணய மாற்று விகிதம்

—ரா. பத்மநாப ராஜு

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் சரித்திரத்தில் மிகவும் மோசமான அதிகாரம் நாணய மாற்றைக் குறித்தது. உலகத்தில் வேறு எந்த 'டிரஸ்டி'யும் இவ்வளவு பாதகமாய் நடந்து கொண்டிருக்க முடியாது. வியாபார அபிவிர்த்தியைக் குறிக்கோளாகக் கொண்ட பிரிட்டன் நலனுக்கு இந்திய மக்களின் பொருளாதார க்ஷேமம் பலியிடப் பட்டுவந்திருக்கிறது. இந்திய மத்திய சர்க்காரின் பொக்கிஷ மந்திரிகளின் பிடிவாத குணத்தினாலே—'குரங்கு'ப் பிடியினாலே—இந்தியா பல கோடி ரூபாய் நஷ்ட மடைந்திருக்கிறது. மனச் சாக்ஷிக்குக் கொஞ்சம் இடம் கொடுக்கும் பொக்கிஷ மந்திரி அதிர்ஷ்ட வசமாக ஒரு கால்' கிடைத்தாலுங் கூட, லண்டனிலிருக்கும் இந்தியா மந்திரி சொல்வதற்கு ஏற்க அவர் நடிக்கா விட்டால் மரியாதையாக அவர் தமது உத்தியோகத்தை ராஜீநாமா செய்து விட்டு வந்த வழியைப் பார்த்துப் போக வேண்டியது தான்!

அதனால் தான் தேசத் தலைவர்கள்

---

21 துருக்கி அரசாங்கத்தார், தங்கள் தேசப் பாதுகாப்புக்காக 210 லட்சம் பவுன் செலவழிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர்.

ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் பல ஊர்களிலும் சில்லரைக் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மத்திய மாகாண மந்திரி எம். ஒய். ஷரீப் ராஜீநாமா செய்து விட்டார்.

மகாத்மா காந்தி ஷேகான் கிராமம் போய்ச் சேர்ந்தார்.

மெக்ஸிகோவில் குழப்பம். குழப்பம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

22 ஜப்பல்பூர் ஜில்லாவிலுள்ள திரிபுரி என்ற கிராமத்திற்கு அருகாமையிலுள்ள விசாலமான மைதானத்தில் அடுத்த காங்கிரஸ் கூடும்.

புலாபாய் தேசாய்க்கு லண்டனிலுள்ள இந்தியர்கள் உபசார விருந்தொன்று நடத்தினர்.

ஹங்கேரிக்கும் ஜெக்கோ—ஸ்லோவேகியாவுக்கும் இடையேயுள்ள எல்லைப்புறம் பந்தோபஸ்து செய்யப்பட்டுவிட்டது.

ஆஸ்திரியாவிலுள்ள மூர் நதியில் வெள்ளப் பெருக்கெடுத்ததன் காரணமாக பலர் மரண மடைந்தனர். ஐயாயிரம் பேர் வீடில்லாமல் தவிக்கின்றனர்.

23 ஜப்பானின் வற்புறுத்தலுக் கிணங்க, சீனாவுக்கு உதவி செய்வதை ஜெர்மனி நிறுத்திக் கொண்டு விட்டது.

ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் எல்லைப்புறத்திலுள்ள நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறதென்று அறிவிக்கப்படுகிறது.

இந்தோ பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்த சம்பந்தமாக சிம்லாவில் நடை பெற்ற சமரஸப் பேச்சுக்கள் முறிந்துவிட்டன.

24 சீனாவிலுள்ள க்வாண்டாங் மாகாணத்தில் ஜப்பானியர் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கின்றனர்.

சென்னை நகரத்தில் வீதிகளிலும் பொது ஸ்தலங்களிலும் காற்றாடிகள் பறக்கவிடக் கூடாதென்றும், இது போலீஸ் சட்டத்தின்படி குற்றமாகுமென்றும் சென்னை அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

25 மத்திய மாகாண சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் கூட்டம் இன்று பஞ்ச் மாரியில் கூடியது. மந்திரிகளுக்குள் ஏற்பட்டிருந்த அபிப்பிராய வேற்றுமைகள் சமரஸமாகத் தீர்ந்து விட்டன.

ஸ்பெயின் யுத்தத்தில் வாலென்ஷியா துறை முகத்தில் தங்கியிருந்த ஒரு பிரிட்டிஷ் கப்பல், ஆகாய விமானக் குண்டுகளால் தாக்கப் பட்டன. இந்த ஆகாய விமானங்கள் யாருடையவை யென்று தெரிய வில்லை.

நாணயமாற்று விஷயத்தில் அதிக கவலை செலுத்தி வந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகளும்—சுதந்திரத்தின் சாராம்சமாக உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளியிட்ட பதினொரு கோரிக்கைகளில், நாணய மாற்று விகிதத்தை நம் நாட்டின் நிலைமைகளுக் கேற்ப மாற்றியமைக்கும் உரிமை வேண்டுமென்பதையும் சேர்த்திருந்தார். இன்று ராஷ்ட்ரபதி சுபாஷ் சந்திர போசும், காங்கிரஸும், காங்கிரஸ் மாகாணங்களும், இப்பிரச்னையில் அக்கரை காட்டத்துவங்கி யிருக்கின்றன. ஆகலால் பொது மக்கள் இப்பிரச்னையில் கொஞ்சமாவது தெரிந்து கொள்ளுவது அவசிய மல்லவா?

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான நாணயம் வழங்கி வருகிறது. ஒரு தேசத்தில் வழங்கும் நாணயங்களை மற்றொரு தேசப் பொது மக்கள் பொதுவாக ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் இன்றைய உலகத்திலோ ஒவ்வொரு தேசமும் இதர தேசங்களோடு வியாபாரத்தில் சம்பந்த முடையதாயிருக்கிறது. அவ்விதம் வியாபாரம் செய்யுங் காலத்து, ஒரு தேசத்து நாணயத்தை மற்றொரு தேச நாணயத்திற்கு மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவ்விதம் மாற்றுவதற்குத் தான் 'நாணய மாற்று' என்று பெயர்.

நம்முடைய தேசத்தை எடுத்துக் கொள்வோம். இயற்கைப் பொருள்களை—மூலப் பொருள்களை—நாம் அதிகமாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். பஞ்சு, சணல், சாக்கு, தேயிலை, நவ தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், தோல், அரக்கு, தேக்கு, காப்பி, கனி வகைகள் (சுரங்கச் சாமான்கள்) இவ்விதமாகப் பல சாமான்களை ஏற்றுமதி செய்கிறோம். இவைகளெல்லாம் விவசாயப் பொருள்கள் என்பதையும், கைத்தொழில்களுக்கு ஆதாரமான மூலப் பொருள்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

நாம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில் முக்கியமானவை, பருத்தித் துணிமணிகள், மெஷின் வகையரா, உலோகங்கள், எண்ணெய் வகையரா, வாகனங்கள், பல்வித ஆயுதங்கள், இரும்புச்சாமான்கள், செயற்கைப் பட்டுத் துணி, ரசாயனப் பொருள்கள் (கெமிகல்ஸ்), தாள் வகையரா, பட்டு, குடி வகையரா, வாசனைத்திரவியங்கள், கண்ணாடிச்சாமான்கள்;......................; போதும்; நிறுத்திக் கொள்வோம். இச்சாமான்களில் பெரும் பாலானவை கைத்தொழிற் சாமான்கள் என்பதையும், நாம் விற்ற மூலப் பொருள்களைக் கொண்டே செய்யப் பட்டவை என்பதையும் கவனிக்க வேண்டும்.

இனி கடந்த ஏழெட்டு வருடங்களாக நாம் எவ்வளவு தொகை பெறுமானமுள்ள சாமான்கள் ஏற்றுமதி செய்திருக்கிறோம், எவ்வளவு இறக்குமதி செய்திருக்கிறோம் என்கிற புள்ளி விபரங்களைக் கவனிப்போம். பின்னர், இறக்குமதித் தொகைக்கு அதிகமாக மேலே எவ்வளவு ஏற்றுமதி செய்திருக்கிறோம் என்பதையும் கணக்கெடுப்போம். இறக்குமதிக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடு பணக்கார நாடு என்பது பொது விதி. அது நம்முடைய நாட்டுக்குப் பொருத்தமில்லை. ஏனெனில் ஏற்றுமதியில் வரும் லாபம் பெரும்பாலும் வெளி நாட்டு வியாபாரிகள் கைக்குப் போகின்றன. விவசாயிகட்குக்கிடைப்பதில்லை. இடையிலுள்ள மனிதர்கள் அநுபவிக்கிறார்கள். அத்துடன் வெளி நாடுகட்கு

நம்முடைய நாடு பலவகையில் கடன் பட்டிருக்கிறது. அவைகளைப் பின்னால் ஆராய்ந்து பார்ப்போம். கீழுள்ள புள்ளிகள் கோடிக் கணக்கில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

வருடம்	ஏற்றுமதி	இறக்குமதி	இறக்குமதி தொகை போக ஏற்றுமதியில் அதிகம்
1931-32	161	126	35
1932-33	135	132	3
1933-34	151	115	36
1934-35	155	132	23
1935-36	165	134	31
1936-37	....	....	78
1937-38	....	....	16

மேற்சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து நம் நாட்டிற்கும் வெளி நாடுகளுக்கு முள்ள வியாபார சம்பந்தத்தின் அளவை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். நாம் அன்னிய நாடுகளுக்கு சரக்குகள் விற்கும் காலத்து அந்தந்த தேசத்து வெளி நாட்டு நாணயங்களைப் பெற்று நம் நாட்டு நாணயங்களாக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் சரக்குகளை இறக்குமதி செய்யுங் காலத்து நாம் கொடுக்கும் இந்திய நாணயங்களை அவர்கள் தேசத்து நாணயங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வித நாணயப் பரிவர்த்தனைக்கு பேங்குகளும், நாணய மாற்றுத் தரகர்களும் துணைக் கருவிகளாயிருக்கிறார்கள்.

நாணய மாற்றுக்கு அநுசரணை செய்வதாக சர்க்காரில் 18 பென்ஸ் விகிதத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். அதாவது ஒரு ரூபாய்க்கு 18 பென்ஸ் என்று அர்த்தம். ஒரு பவுனுக்கு 20 ஷில்லிங் என்றும், 1 ஷில்லிங் 12 பென்ஸ் என்றும் ஆகவே ஒரு பவுனுக்கு 240 பென்ஸ் என்றும் நமக்கு பள்ளிக்கூடத்திலேயே உபாத்தியாயர் கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆகவே 18 பென்ஸ் ஒரு ரூபாய் என்றால் 240 பென்ஸ் அல்லது ஒரு பவுனுக்கு $\frac{240}{18} = 13\frac{1}{3}$ = ரூ. 13-5-4 ஆகிறது.

உதாரணமாக இங்கிலாந்துக்கு 100 பவுனுக்கு 100 கட்டு பஞ்சு விற்கிறோம். 18 பென்ஸ் நாணய மாற்று விகிதப்படி நமக்கு 100 பவுனுக்கு ரூ. 1333-5-4 கிடைக்கும். 100 பவுன் மதிப்புள்ள ஒரு கார் வரவழைக்கிறோம். நாம் ரூ. 1333-5-4 தரவேண்டும்.

இங்கு வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம். பஜாரில் பவுன் விலை 22 ரூபாயாக இருக்கிறதே. இங்குபவுன் நாணயமாற்றுரூ. 13-5-4 தானே சொல்கிறார். இதென்ன விபரீதம் என்று தோன்றலாம். ஆம்; விபரீதந்தான்! நம்முடைய ரூபாயைப் பிணைத்திருப்பது அசல் தங்கப் பவுனோடு அல்ல; பவுன் நோட்டோடு தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. அதாவது மேலே சொன்ன உதாரணத்தை எடுத்துக் கொண்டால் நாம் விற்ற 100 கட்டு பஞ்சுக்கு ஆங்கில நாட்டு நாணயத்தையே பெற்றுக் கொள்கிறோம் என்று சொன்னால் நமக்கு 100 பவுன் நாணயத்தைத் தரமாட்டார்கள். நூறு பவுன் நோட்டைத் தான் தருவார்கள். இதற்குத் தான் பவுன் நோட்டுத் திட்டம் (ஸ்டர்லிங் எக்ஸ் சேஞ்) என்று பெயர். இது தங்கத் திட்டத்திலிருந்து மாறுபட்டது. தங்கத் திட்டத்தில் நமக்கு 100 பவுன் நாணயமே கிடைக்கும். அல்லது அதற்குள்ள தங்கமே கிடைக்கும்.

இந்த ஸ்டர்லிங் நாணய மாற்றுத் திட்டம் 1931ஆு செப்டம்பர் மாதம் 21உ யன்று அமுலுக்கு வந்தது.

அதே சமயம் இரண்டாவது வட்ட மேஜை மகா நாடு லண்டனில் நடந்து கொண்டிருந்தது. பொருளாதார விற்பன்னர்களான சர் புருஷோத்தம தாஸ் தாக்கூர்தாஸ், பாபு கன்ஷியாம் தாஸ் பிர்லா, ஸ்ரீமான் அ. ரங்கசாமி ஐயங்கார் முதலியவர்கள் சீமையிலிருந்தார்கள். மகாத்மா காந்தியடிகளும் அங்கிருந்தார். இவர்களனைவரும் ஸ்டர்லிங்கோடு ரூபாயைப் பிணைப்பதையும் பதினெட்டு பென்ஸ் விகிதம் ஏற்படுத்துவதையும் எதிர்த்தனர். சர்க்காரில் நாணய மாற்று விகிதம் ஒன்றும் ஏற்படுத்த வேண்டாம்; ரூபாயை இயற்கையாகவே விட்டு விடுவோம் என்பது நம்மவர்கள் அபிப்பிராயம். அல்லது பவுன் நோட்டோடு ரூபாயைப் பிணைப்பதாயிருந்தால் 16 பென்ஸ் விகிதந்தான் ஏற்படுத்த வேண்டும் என்பது தேசீய இந்தியாவின் ஏகோபித்த எண்ணம். இதற்கு இந்தியா மந்திரி இணங்கவில்லை. பின்னர் ரிசர்வ் பேங்க் ஏற்பட்டதும் 18 பென்ஸ் விகிதத்தை மாற்றியமைப்பதற்கு ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அது காலை இந்தியப் பொக்கிஷ மந்திரி சர் ஜேம்ஸ் கிரிக், நாணய மாற்று விஷயத்தில் 'குரங்குத்தனம்' ஒன்றும் செய்ய மாட்டோம் என்று சொல்லி விட்டார்.

16 பென்ஸ் விகிதம் ஆங்கிலேயர்களுக்குக் கசப்பானேன்? இந்தியர்கள் விடாப் பிடியாய் அதனையே கேட்பானேன்? கொஞ்சம் ஆராய்வோம். 16 பென்ஸ் ஒரு ரூபாய் என்றால், ஒரு பவுன் 240 பென்ஸுக்கு 15 ரூபாய் ஆகிறது. முன்னரே 18 பென்ஸ் விகிதத்தில் ஒரு பவுன் ரூ. 13–5–4 வரும் என்று கூறியிருக்கிறோம்.

நாம் முன் சொன்ன உதாரணத்தின்படி ஒரு பொதி பஞ்சு ஒரு பவுனுக்கு விற்றால் 16 பென்ஸ் விகிதப்படி 15 ரூபாய் கிடைக்கிறது. 18 பென்ஸ் விகிதப்படி ரூ. 13–5–4 கிடைக்கிறது. வாங்குகிறவன் இரண்டு விகிதத்திலும் ஒரு பவுன்தான் கொடுக்கிறான். நாணய மாற்று விகிதத்தில் தான் வித்தியாசம் கிடைக்கிறது. நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு, 16 பென்ஸ் விகிதம் ஏற்பட்டால் ஒவ்வொரு பவுன் சாமான் விற்பனைக்கும் இப்பொழுது கிடைப்பதை விட ரூ. 1–10–8 அதிகமாகக் கிடைக்கும். நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்களெல்லாம் விவசாயப் பொருள்களாகையினாலே, விவசாயிகளுக்கு இப்பொழுது கிடைக்கிற விலையைவிட 100க்கு 12½ மடங்கு அதிகம் விலை கிடைக்கும். விவசாயப் பொருள்களெல்லாம் விலை இறங்கி நமது நாட்டு விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருந்த காலத்தில் இந்த நாணயமாற்று விகிதத்தை ஒழுங்காக யமைத்திருந்தால்-18 பென்ஸுக்குப் பதிலாக இந்தியத் தலைவர்கள் கேட்டுக் கொண்டவாறு 16 பென்ஸ் ஏற்படுத்தியிருந்தால்—விவசாயிகளின் கஷ்டம் ஒருவாறு குறைந்திருக்கும். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும், குபேர நாடுகள் என்று கருதப்படுகிற நாடுகளுங் கூட, இம் முறையைக் கையாண்டுள்ளன. அரசியல் சுதந்திர மிழந்து நிற்கும் இந்தியாதான் இதாரனைவரும் கையாண்ட ஓர் முறையை அனுசரிக்கச் சக்தியற்றிருந்தது.

ஏற்றுமதியின் நிலை இவ்வாறாயின், இறக்குமதியின் நிலை என்னவென்று சிந்தித்துப் பார்ப்போம். நாம் எவ்வித சாமான்களை இறக்குமதி செய்கிறோம் என்பதை முன்னரே சொல்லியிருக்கிறோம். வெண்

ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுகிற கதையைப்போல, பஞ்சை ஏற்றுமதி செய்துவிட்டு, துணியை இறக்குமதி செய்து தேசத்தில் வேலை கிடைக்கவில்லை யென்றும், உண்ண உணவில்லையென்றும், உடுக்க உடையில்லை யென்றும், அழுகிறவர்களல்லவா நாம்? நாம் இறக்குமதி செய்வதில் முதல் ஸ்தானம் வகிப்பது துணி மணிகள் தான். சீமையிலிருந்து ஒரு பீஸ் துணி பவுனுக்கு வாங்கினால் தற்சமயமுள்ள நாணய மாற்று விகிதப்படி ரூ. 13-5-4 கொடுக்கிறோம். ஆனால் 16 பென்ஸ் விகிதம் ஏற்பட்டால் 15 ரூபாய் கொடுக்க நேரும். அதாவது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களின் விலை 100-க்கு 12½ விகிதம் ஏறுகிறது. அதனால் ஆங்கிலேயர்களின் வியாபாரம் பாதிக்கப்படும். ஆங்கிலேயர்கள் உற்பத்தி செய்யும் துணிமணிகளின் விலை ஏறினால், நம்நாட்டிலேயே அவைகளை உற்பத்தி செய்து கொள்வதற்குத் தூண்டு கோலேற்படுகிறது. அவைகளின் இறக்குமதியும் குறைகிறது. இதற்குப் பிரிட்டன் சம்மதிக்குமா?

ஆகவே ஆங்கிலேயர்களின் வியாபாரம் அபிவிர்த்தி ஆவதற்கும், நம்முடைய விவசாயிகள் க்ஷீணிப்பதற்கும் ஆங்கிலேயர்கள் கையிலிருந்த அரசியல் அதிகாரத்தை நாணய மாற்று விஷயத்தில் நன்கு உபயோகித்துக் கொண்டார்கள் என்பது இதனால் விளங்குகிறது.

நாம் இதுவரை ஏற்றுமதி இறக்குமதியை மாத்திரம் விஸ்தரித்துக் கொண்டு வந்தோம். நம் நாட்டிற்கும் இங்கிலாந்திற்கும் இதர பொருளாதார சம்பந்தங்களிருக்கின்றன. இந் நாட்டில் உத்தியோகம் செய்துவிட்டு சீமைக்குச் சென்று காலங் கழிப்பவர்கட்கு கோடிக்கணக்கான ரூபாய் பென்ஷன் வருஷந்தோறும் அனுப்ப வேண்டியதிருக்கிறது. அதற்கு 18 பென்ஸ் விகிதம், சாதகமாயிருக்கிற தென்பது சர்க்காரின் வாதங்களில் ஒன்று. 16 பென்ஸ் விகிதத்தால் ஏற்படும் எல்லா லாபங்களையும் சீர்தூக்கிப்பார்க்கும் பொழுது பென்ஷன் அனுப்புவதில் ஏற்படும் நஷ்டம் பெரியதல்ல என்பது நமது பதில்.

ஆங்கிலேயர்கள் அதிகமான மூலதனத்தை இந் நாட்டில் போட்டிருக்கிறார்கள். வருடந்தோறும் அத்தொகைகளுக்கு வட்டியாகவும், லாபமாகவும், கோடிக்கணக்கான ரூபாய்கள் அனுப்பவேண்டிய திருக்கிறது. அதற்கு 16 பென்ஸ் விகிதம் ஏற்றதல்லவல்லவா? அதற்குப் பதில், ஆங்கிலேயர்களின் நன்மைக்காக இந்திய ஏழைகளின் க்ஷேமத்தைப் பலியிடமுடியாது.

கட்டுரை வளர்ந்து கொண்டு போகிறது. 16 பென்ஸ் விகிதந்தான் ஏற்றதுஎன்று எப்படிச் சொல்லலாம்? 12 பென்ஸ் விகிதம் இன்னும் நல்லதல்லவா? நாணயமாற்று விகிதம் நிச்சயிப்பதற்கு சாஸ்திரீகக் கொள்கைகளென்ன? தங்க ஏற்றுமதிக்கும், நாணய மாற்று விகிதத்திற்கும் என்ன சம்பந்தம்? இதர தேசங்கள் தங்கள் நாணய மதிப்பை எவ்வளவு தூரம் குறைத்திருக்கின்றன? 16 பென்ஸ் விகிதத்தை இந்திய சர்க்கார் கொண்டு செலுத்த முடியுமா? அப்படிக் கொண்டுசெலுத்தினால் தேசத்திற்கு எந்தெந்த விதத்தில் நஷ்டங்களேற்படும்? இவைகளை யெல்லாம் பரிசீலனை செய்தால்தான் நாணய மாற்று விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாவோம்.

இந்தியன் குளோப்
இன்ஸ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்:—பம்பாய்.

தந்தி விலாசம் "COMPINE" — டெலிபோன் நி-ர் 183.

தொழில்கள்:- நெருப்பு, கப்பல், மோட்டார் வண்டிகளும், இதர விதமான விபத்துகள் சம்பந்தமான தொழில்களும் செய்யப்படுகின்றன.

இ. ராமநாதன்,
சீப் ஏஜண்டு, 50, 46-வது கல்லி, ரங்கூன்.

பிராஞ்சு ஆபீஸ்,
ரண்டேரியா பில்டிங், 62, பேயர் வீதி, ரங்கூன்.

ஜில்லாக்கள் தோறும் ஏஜண்டுகள் தேவை.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது
பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது
கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது
} எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர்:— 'மணிக் கொடி' ஆபீஸ்,
55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதருஸ்.